

# ஜெகஜீவிதம்

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்

மணிவிழா மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகஜீவிதம்
# Jegajeevitham

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் மணிவிழா மலர்

*The Manivizha Malar of*
*Mr. Jegatheeswaran Iyathurai*

மணிவிழாக்குழு


*Manivizha Committe*

ரொரன்ரோ, கனடா

*Toronto, Canada*

2012.10.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெகா மோகனா இணையர்களை பெற்றோராகப் பெருமைப்படுத்திய மழலைச் செல்வங்கள்
அஜந்தன் - ஆஷ்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணங்கி வரவேற்கிறோம்

மாணிக்க மைந்தனை
மலர் கொண்டு வாழ்த்த
மனம் கொண்ட பெரியவரே
மண்ணின் மகனென
மனதால் கதை பேசி
மனங்களை நிறைத்த உறவுகளே
மனமுந்தி வந்தோர்க்கு
மகிழ்வான எம் வணக்கம்
மங்களமான நும்வருகை

எங்களுக்கெல்லாம் பேருவகை!

குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ்வரன் மணி விழா குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் 75ஆவது பிறந்தநாளில் வெளியிடப் பெற்ற "மாணிக்கப்பரல்கள்" கவிதைத் தொகுதியின் சிறப்புப் பிரதிகளை தாயார் திருமதி. மா. ஐயாத்துரை வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் ஆசியோடு





மனதுறை ஆசைத்தந்தையும்
மனங்கொள் மாரியம்மையும்
மனம்நெகிழ் உறவோடிணைந்து நின்
மணிவிழா காணுமிவ்வேளையென்
மனம் பெரிதுவக்க - மகனே
மண்ணிடை வந்த வாழ்வின்
மகத்துவம் பெற்றேனீண்டு
மகவுனைப்பெற்ற மகராசியான்
மனம் நிறைய வாழ்த்துகிறேன்
மண்ணில் நல்லவண்ணம் வாழிநீ
மனைவி மக்கள் நட்பு சுற்றம்
மனம் மகிழ வாழி நீ - மேலும்
மகா உன்னதம் பெற்று வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாலயங்களின் அனுசரணையில்....

குரும்பசிட்டி - பொன். பரமானந்தர் மகாவித்தியாலயம்


தெல்லிப்பளை - யூனியன் கல்லூரி

தெல்லிப்பளை - மகாஜனக்கல்லூரி

Montreal - Mc Gill University

Toronto - Humber College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பெருந்தகைகளின் அரவணைப்பில்....



அமரர் சி. சிவலிங்கம்
யூனியன் கல்லூரி

Grade 5 இலிருந்து சமய பாடப்பரீட்சைகளுக்கு
தமதில்லத்தில் வைத்து
இலவசமாகப் பாடம் பயிற்றுவித்த ஆசான்



அமரர் மு. இராமலிங்கம்
குரும்பசிட்டி
பொன்.பரமானந்தர் ம.வி

ஜெகாவின் முழுக் குடும்பத்திற்கும் கல்வி போதித்த ஆசான்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கருதி கற்பித்த
ஒழுக்கமே உயிர் மூச்சென வாழ்ந்த ஆசான்



அமரர் சாரதாதேவி நடராஜா
(மனோரஞ்சிதம்)

அமரர் ஐயாத்துரை அவர்கள் வைத்தியசாலையில் இருந்த பொழுது
தினந்தோறும் அங்கு சென்று கவனித்து உதவியவர்.
ஜெகா G.C.E (A/L) கற்றவேளையில் அவரின் சுகயீனம் கருதி அவரை
தொழில் வாய்ப்பினை நாட ஆலோசனை கூறி நெறிப்படுத்தியவர்.




திருமதி செல்வரத்தினம்
(தேவி ரீச்சர்)
யூனியன் கல்லூரி

அன்பும், கனிவும் கலந்த தமது வார்த்தைளால் ஜெகாவை
ஆட்படுத்தி தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளுக்கு
பயிற்றுவித்து பரிசில்களும், பாராட்டுகளும் பெற உதவியவர்.



அமரர் கே. குணசிங்கம்
யூனியன் கல்லூரி


G.C.E(O/L) படித்த பொழுதுகளில் தமது இல்லத்தில் இலவசமாக
கணித பாடம் கற்பித்த ஆசிரியர்.



திரு. க. பரிபூரணானந்தன்
குரும்பசிட்டி

G.C.E(O/L) கற்ற காலங்களில் தமதில்லத்திற்கு
அழைத்து இலவசமாக கணிதபாடம்
புகட்டிய ஆசான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெகாவும், அவரது நண்பரான மைத்துணரும் தமது இளைமைக் காலங்களில்
மைத்துணரின் தயாரின் உணர்வு பூர்வமான அரவணைப்பில் இருந்த பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRIME MINISTER · PREMIER MINISTRE



September 26, 2012

Dear Mr. Iyathurai:

*It is with great pleasure that I extend my warmest greetings to you as you are honoured for your years of service to the community through your involvement with Kurumbasiddy Nalanpuri Sabai-Canada.*

*This special recognition pays tribute to your generous spirit and represents the community's deep appreciation of your dedicated efforts. You have earned the respect of countless individuals, and your commitment to the betterment of society has had enduring benefits.*

*Please accept my best wishes for every happiness and success in the years to come.*

Yours sincerely,

The Rt. Hon. Stephen Harper, P.C., M.P.

Mr. Jega Iyathurai

The War of 1812
La guerre de 1812
1812.gc.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கொலுவீற்றிருந்த குரும்பைநகர்" நூல் வெளியீட்டு விழாவிற்கு
வருகைதந்திருந்த பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ontario

Premier of Ontario - Premier ministre de l'Ontario



October 8, 2012

## A PERSONAL MESSAGE FROM THE PREMIER

On behalf of the Government of Ontario, I am delighted to offer my congratulations to Jega Iyathurai on the occasion of his $60^{th}$ birthday.

Mr. Iyathurai, this is a time to celebrate not only your numerous personal achievements, but also your dedication to your community and the province of Ontario. This occasion is also an opportunity for your loved ones to express their appreciation for the positive and lasting difference you have made in their lives.

I am confident that this milestone birthday will reflect what it means to turn 60 in this day and age — that your exemplary contributions can only be succeeded by achievements yet to come.

Please accept my sincere best wishes for a wonderful birthday — and may you continue to enjoy a rich measure of life's blessings.

**Dalton McGuinty**
**Premier**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் "கொலுவீற்றிருந்த குரும்பைநகர்" அறிமுக விழாவின் போது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கச் செயலாளர் நாயகம் துரை. கணேசலிங்கம், குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவர், சுப்பையா சிவபாதம் B.A., LLB, ஆகியோருடன் விழா நாயகர் ஜெகாவும் மங்கலவாத்தியம் முழங்க மண்டபத்திற்கு அழைத்து வரப்படுகின்ற காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

House of Commons



**Rathika Sitsabaiesan**
Member of Parliament for Scarborough-Rouge River

## A Personal Message from MP Rathika Sitsabaiesan

Dear Jega,

I send my warmest greetings to you on your 60th birthday. I am happy to hear that your outstanding contributions to the community are being celebrated on this memorable occasion.

Your involvement with Kurumbasiddy Nalanpuri Sabai-Canada for the last 20 years has been inspirational. I admire the tireless work you have done to encourage and support youth in our community and in your neighbourhood of the Morningside Heights/Staines area. From the annual cultural shows, award ceremonies, and tutoring service, you have encouraged youth to develop a strong sense of self and helped first-generation Canadians make the adjustment to post-secondary school.

As a woman of Tamil descent, I am proud to see you recognized for your achievements.

I wish to thank you for all your hard work.

Happy Birthday!

Sincerely,

Rathika Sitsabaiesan, MP
Scarborough-Rouge River

**House of Commons**
719 Confederation Building
House of Commons
Ottawa ON
K1A 0A6
Tel: 613-996-9681
Fax: 613-996-6643

**Constituency**
8130 Sheppard Ave. E,
Suite 104
Toronto, ON
M1B 3W3
Tel: 416-298-4224
Fax: 416-298-6035
Toll Free: 1-866-871-4676

**Rathika.Sitsabaieasan@parl.gc.ca**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## A Personal Message from MPP Bas Balkissoon

Ontario

As the member of the Legislative Assembly of Ontario representing the riding of Scarborough – Rouge River, I am pleased to congratulate Mr. Jega Iyathurai on his sixtieth birthday for his dedication to serving the community and contributing to the vibrant cultural fabric of this area.

Through his tireless efforts on behalf of Kurumbasiddy Nalanpuri Sabai-Canada to organize and promote shows, contests and awards ceremonies, Mr. Iyathurai has helped Tamil-Canadian youth recognize and celebrate their heritage. Additionally, his active involvement in the Morningside Heights / Staines neighbourhood association and in initiating a tutoring service for students further displays his commitment towards building and improving the community as a whole.

Birthdays represent an opportunity to reflect on one's life and to celebrate the accomplishments made through hard work and determination. It is also a chance to recognize the impact one individual can make to improve the lives of many others. Once again, I hope that Mr. Iyathurai will have a happy sixtieth birthday and many more years of happiness to come.

Sincerely,

Bas Balkissoon

Bas Balkissoon, MPP
Scarborough – Rouge River

Queen's Park, Toronto
October 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனக் கல்லூரி முத்தமிழ் விழாவில் ஜெகா பரிசு வழங்கிய வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TORONTO**

**Councillor Raymond Cho**

**Scarborough-Rouge River, Ward 42**



October 8, 2012

On behalf of the residents of Ward 42, Scarborough Rouge-River, I am delighted to extend my sincere appreciation to Jega Iyathurai for his exceptional and ongoing dedication to community service.

Jega is a tremendous individual who has already received various distinctions, including an award presented by Former Mayor Mel Lastman from the City of Toronto. Jega has become invaluable in my ward for his years of selfless volunteerism and active leadership within the Morningside Heights and Malvern communities. As an accomplished author and long-serving member of the Kurumbasiddy Nalanpuri Sabai – Canada, Jega's words and actions have touched and inspired countless lives within my ward and in the City of Toronto.

I am proud to recognize Jega for all his accomplishments and wish him success in all his future endeavours.

Yours truly,

Raymond Cho

Dr. Raymond Cho
Toronto City Councillor
Scarborough–Rouge River, Ward 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கட்டுவன் பால ஞானோதய மன்றச் செயலாளர் திருமதி. ரஞ்சன் ஜெகாவின் தாயாரிடம் நூலைப் பெற்ற பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARKHAM



Jun 7th, 2012.

**Logan Kanapathi**
*Councillor, Ward 7*

# *MESSAGE FROM MARKHAM*

On behalf of Markham City Council, I am pleased to extend my congratulations and well wishes on the occasion of Mr. Jega Iyathurai's 60th birthday celebrations.

Mr. Iyathurai has been a longstanding pillar of the Scarborough Tamil Community, and an important member of the Tamil Canadian community at large. His charitable endeavours, including working with children and youth through the performing arts and academic activities, are an invaluable contribution to the growth and success of Tamil youth in Canada. Through his tutoring service and annual cultural shows, he has given many children the opportunity to showcase their talents to the world and find their own niche within the fabric of Canadian life. This is an invaluable gift that will reap nothing but positive benefits for the community in the years to come.

His contributions to Tamil-Canadian literature must also be commended, as his poetry and historical anthology about the village from which he hails offers audiences a glimpse into the rich history of Tamils and traditions in Sri Lanka. It is difficult, especially for the youths, to connect personally with their past and it is literature such as those offered by Mr. Iyathurai that will help them discover their own identity and the history.

Today we gather together to honour the achievements of someone who devoted many years in the service of his community. Congratulations for 60 well-lived years, and I look forward to hearing about many more of your accomplishments in the future.

With well wishes for joy, health and success in the years to come,

**Logan Kanapathi**

**Councillor, City of Markham**

**The Corporation of the Town of Markham** · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. நிருஷிகா யசோக்குமார் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜெகா அவர்கள் அவருக்கு வாழ்த்துமடல் வழங்கிக் கௌரவித்த வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"Gratitude is not only the greatest of virtues, but the parent of all others."***

For the past twelve years, Mr. Jegatheeswaran Ilyathurai (Jega) has worked within our Operations team in varying capacities. His commitment to quality of work, unprecedented work ethic, his work knowledge and a strong sense of pride and ownership has made him one of our successful and respected Senior Associates. It is qualities like these that make us feel honoured to have someone like Jega on our team.

I have had an opportunity to work with Jega over the past six years; he embodies a calm presence and quiet demeanor. I have only recently learned about his personal commitments to charity work. It is by that kind of work, what we ourselves have done, and not by what others have done for us, that we shall be remembered for ever.

With gratitude, and with pleasure, your DST Family wishes you many happy returns on your milestone – your 60th birthday.

**Valentina Karacic, PMP | Director, Toronto Operations**
**DST Output Canada Inc.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*Jega and some of co - workers at DST Annual Dinner*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரும்பசிட்டி

அருள்மிகு
சித்தி விநாயகர் தேவஸ்தானம்

அருள்மிகு
முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## பிரதம குரு சிவத்திரு. தி. இரத்தினசாமிக் குருக்கள்

# வழங்கிய ஆசியுரை

மணிவிழாக்காணும் திரு. ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்களையும், அவரது குடும்பத்தையும் குரும்பசிட்டி சித்தி விநாயகப் பெருமானதும், குரும்பசிட்டி முத்துமாரி அம்பாளினதும் திருவருள் முன்வைத்து வாழ்த்துவதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

மனிதர்களாகப் பிறந்த நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றுக்கேற்ப வாழ்வதுதான் நியதி. இந் நியதிகளுக்கேற்ப வாழ்ந்துகொண்டிருக்கும் திரு. ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் மணிவிழாக் காண்பது அவர்கள் செய்த புண்ணியமும், தர்மங்களும், முத்துமாரி அம்பாளின் திருவருளுமே.

சிறப்பு வாய்ந்த நல்ல குடும்பத்தில் பிறந்து கல்வி செல்வம் முதலிய இன்னோரன்ன சிறப்புக்கள் பெற்று ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் பேணுதல் போன்ற நற்பண்புகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரித்தாயினதும், குரும்பசிட்டி அருள்மிரு சித்தி விநாயகப் பெருமானினதும் திருவருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ எமது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# வாழ்க அரனார் சடையாறாய்!



பாவரசர், கவிநாயகர்,
வி. கந்தவனம் அவர்கள்
காப்பாளர்,
கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
60 நூல்களின் ஆசிரியர்

ஐயன் னாஜெக தீசுவரன்
அகவை அறுபதைஅடைந்ததனனோ
மெய்நண் பர்பலர் சேர்ந்ததனை
விழாவாய்க்கொண்டாடவிழைந்தனரோ?

கொண்டா டத்தான் வேண்டுமுயர்
கொள்கை கொண்ட குணவாளன்
தொண்டை உலகத் தவர்க்குநன்கு
துலக்கிக் காட்ட வேண்டுமையா!

தொண்டும் இரண்டு வகையாகும்
சொந்த ஊருக் குழைத்ததொன்று
கண்ட சமூகக் குறைபாட்டைக்
களைய முயன்றமை மற்றொன்று.

யார்தனும் தூண்டித் தொண்டுகளை
ஐஜெக தீஸ்வரன் ஆற்றவில்லை
பேர்பகழ் பெறவும் செய்யவில்லை
பிறவிக் குணநலத் தொண்டரிவர்.

ஆற்றலும் அறிவும் தோழமையாம்
அடக்கம் இவரது ஆளுமையாம்
போற்றும் ஒழுக்கம் உயிர்மூச்சாம்
புன்மையும் போலியும் விழிவீச்சாம்!

சித்தி விநாயகர் ஆலயத்தின்
திருவிழாக் காலத்தில் தினந்தோறும்
பத்தி யுடன்பல தொண்டுகளைப்
பணிவுடன் செய்வது இவர்நியமம்.

நன்றே இங்கும் குரும்பசிட்டி
நலன்புரி சங்கப் பணிகளினாற்
குன்றிய குரும்ப சிட்டிபுகழ்
கொலுவினில் மீண்டும் எற்றியவர்.

பொன்வயல் என்று நம்மூரைப்
புதுப்பெய ராலே அழைத்தவரும்
நன்மகன் ஜெகதீஸ் வரனாவார்
நமக்கிவர் நல்ல உரனாவார்!

மங்காத கதைகளாற் சமுதாய
மாசுகள் கடிந்த நக்கீரன்
இங்கேயும் மனிதர்கள் எனுந்தொகுதி
இவரது இலட்சிய மனத்தகுதி.

கவிதையும் இவருக் கியல்பாகும்
கனவுகள் அதிலும் புயலாகும்
சவியுற மாணிக்கப் பரல்களினைத்
தந்துதன் தகைமையை நாட்டினரே!

ஐயாத் துரைமனை மாணிக்கம்
அன்புடன் பெற்ற அருமகனை
வையம் போற்றும் வகையிந்த
மணிவிழா நடக்க வாழ்த்துகிறேன்!

வாழ்க தம்பி ஜெகதீஸ்வரன்
மனைவி மோகனா மக்களுடன்
வாழ்க அரனார் சடையாறாய்
வாழ்க பவளம் முத்தாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில் மலர்ந்தவர்கள்

**ரவி. அமிர்தவாசகம்**

பொ. கனகசபாபதி
மோகனா ஜெகதீஸ்வரன்
மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்
மனோ ஶ்ரீதரன்
வ. சத்தியசீலன்
இளவாலை எஸ். ஜெகதீசன்

**இரா. சம்பந்தன்**

சி. கனகசுந்தரம்
வ. கிருஷ்ணசாமி
கு. இராசநாயகம்
நா. சாந்திநாதன்
ராஜினி விமலகாந்தன்
சிவபாதம் சுப்பையா

**இளவாலை இராசநாயகம்**

Sunanthan Shanmugalingam
Anpalakan Kanthasamiyar
Mathi Thuraisingham
Sayi Parameswaran
Umang Deasai
Keshani Uthayakumaran
Gopina Nagarajah
Ajitha Thavarajah
Ashley Jegatheeswaran

**யசோதா அரவிந்தன்**

இ. பாலசுந்தரம்
ஜோசப் சந்திரகாந்தன்
கோதை அமுதன்
எஸ். திருச்செல்வம்
ஆறுமுகக் குருக்கள்
குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம்

**து. சண்முகவடிவேல்**

இளையதம்பி வரதராஜா
லீலா சிவானந்தன்
சகுந்தலா அருளானந்தம்
டாக்டர். எஸ். முருகையா
வாமதேவன் வெற்றிவேல்
கோபிநாத் கந்தையா

**இராஜன் திருமேனி**

க. நவம்
அனலைஆறு இராசேந்திரம்
தம்பித்துரை இங்கரன்
யூஜின் டொமினிக்
கே. ரி. சண்முகராஜா
புலந்திரன் மகேசன்

**எஸ். பத்மநாதன்**

பாலேஸ்வரி இரவீந்திரன்
அன்னராஜி சுரேஷ்குமார்
நாகதாசன் நவரத்தினம்
இ. செல்வராஜா
த. தயாநிதி
சியாமளா விஸ்வகுமார்

**சா.வே. பஞ்சாட்சரம்**

குருநாதர் கதிரேசு
திகம்பரலிங்கம் அப்பாப்பிள்ளை
அல்வை கோ. தர்மகுலசிங்கம்
சக்திவேல் அருணாசலம்
குரு அரவிந்தன்
குயின்ரஸ் துரைசிங்கம்
ஶ்ரீரஞ்சினி விஜயேந்திரா

**அகல்யா கோபால்**

வீரகேசரி மூர்த்தி
சிவபாதம் கணபதிப்பிள்ளை
சுப்பிரமணியம் முருகேசு
அ. மங்களேஸ்வரி
சிவலிங்கம் இளையதம்பி
கௌரி இராஜன்

**த. சிவலிங்கம்**

அ. கணபதிப்பிள்ளை
த. சிவபாலு
இளையபாரதி
திருமாவளவன்
திலீபன் யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெந்தியடி நக்கீரன்



"மாணிக்கப்பரல்கள்" நூல்வெளியீட்டு விழாவின் போது தலைமை தாங்கி கவிஞர் எஸ். இராசநாயகம் அவர்கள் உரையாற்றுகிறார்.

பொன்னின் நிறத்தினனாய் பொலிந்த அருட்குமரன்
எண்ண அலைநடுவே இதயம் கனத்திருக்க
தொண்ணூறுகளிலே தொடர்போரும் தாக்கிவிட,
துணை தமிழ் நாடென்று துணைவியோடே அடைந்தேன்.
எண்ணாதபோதும் ஏதோ நல்விதி ஒன்றே
இருவரையும் அங்கேதான் இழுத்ததைப் பின் உணர்ந்தேன்.

வேளச்சேரியிலே வதிந்த அவ்வேளையிலே
வெள்ளை அணியுடையும் வெண்மையே உள்ளமுமாய்
கோலத்தாய் ஒருவர் கூட இருமக்களொடு
பக்கலிலே வாழ்கின்ற பாக்கியத்தைப் பெற்றிட்டோம்.
தாய், சோதரர் இருவர் தமைப் பாசத்துடன் தேடி
தலைமகன் வந்திருக்கும் செய்தியை நாம் அறிந்தோம்.

ஓயாது எம்மை முற்றும் உள்ளன்புடன் இணைக்கும்
ஓர் இளம்குமரனே எனும் உண்மை ஓராது
சென்றோம், கண்டோம், தேடி பின் பழகினோம்.
நேர்சீர்ச்சிந்தையும் நிறைகூர் நுண்மதியும்
நெருங்க இழுக்கின்ற நேயச் சுவைப் பேச்சும்
என்னைக் கவர்ந்ததனால் இதயத்தில் இடம்கொடுத்தேன்.

எண்ணில் இருதிங்களே எம்மோடு பழகிடினும்
தன்னை என் பாசத் தனயனாய் தந்துவிட
திறனாய்வின் ஆற்றலே திகழ்முத்தாய் பெற்றிட்டேன்.
ஒத்த உணர்வொன்றே உண்மை உறவு என
ஓப்பில் வள்ளுவர்தாம் உரைத்த இலக்கணத்தின்
மொத்த இலக்கியமாய் மாறியதை பின் உணர்ந்தேன்.

இளவாலை இராசநாயகம்.
ஓய்வுநிலை ஆசிரியர்,
கவிஞர், நாடக இயக்குநர்.
தலைவர்,
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்
மணிவிழாக் குழு
ரொரன்றோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிந்த உரையாடலிலே தெளிந்த வரலாறு இது.
தமிழும் கலைநிதியும் தேர்ந்திட்ட கல்வியதும்
தழைத்துத் திகழ்ந்ததனால் தனக்குத் தானே நிகராய்
கமழ் செம்மண்ணுடைத்தாம் குரும்பசிட்டி தனில்
கருத்தாய் வர்த்தகத்தைக் காத்து நிதிசேர்த்த
ஐயாத்துரை பெயரில் அமைந்த அருந்தலைவன்

அரும்பொன் நிறத்தினொடு அகமும் பொன்னாக
மொய்சீர் திலகம் மாணிக்கம் ஆம் திருவை
மனையாளாய்க் கொண்டு மனம் ஒன்றும் இல்லறத்தில்
பெருங்கொடையாய்ப் பெற்ற பிள்ளைக்கனி நான்கில்
பேர்மரபு விளக்கப் பிறந்திட்ட முதல்மகனாய்
வருஜெகதீஸ்வரனின் வரலாற்றைத் தெளிந்திட்டேன்.

வாழ்க்கை வளம் துய்க்க வாய்த்திட்ட தந்தையனே
உண்மைக்கு குரலெழுப்பி உயிர் அதற்கே ஈந்ததனால்
உற்ற கடன் ஏற்க உள்ளான் என குடும்பம்
எண்ண, தயங்காது ஏற்றிட்ட இளந்தலைவன்,
இலங்கை வானொலியில் இணைந்து பின் அரசு
ஒருசிறு கைத்தொழிலை ஏற்றபின் கதியின்றி
கலங்குநெசவாளர்குடி காக்கும் நிதிபெறற்கு
கருத்தாய் கணக்கியலில் கடமை ஏற்றிருந்தோன்

கனன்ற சினப்பகையில் கருகாது உயிர்காக்க
பொருத்தமெனக் கண்ட பிரான்சு நாடடைந்து,
பொருந்தாக் கொள்கைகளால் புகுந்த அந்நாட்டிலும்
இணைய மறுத்திருந்த இயக்க இளைஞர்களை
இணைய வைத்தே ஓர் இமயப்பணி புரிந்தோன்.

கனடாத்திருநாடு கடமை பல காட்டிக்
கவர்ந்து இழுத்திடவே காலூன்றி மொன்றியலில்
இனமே தலைநிமிர்த்த எழுந்த தமிழர் ஒளி
பொதிகை இதழ்களிலே புதுமைக் கருத்துகளைப்
புகுத்தி கதைபடைத்த புதிய புதுமைப்பித்தன்,

ஆசிரிய நற்பணியில் அகத்தாளர் இல்லறத்தில்
ஆண்டகை கதிரேசரொடு அமைதங்கரத்தினமும்
பேசரிய பொன்மகளாய்ப் பெறு மோகனா தேவியை
பிரியமருமகளாகப் பேணியே மாணிக்கத்தாய்
காட்டு பெண்கொடியையே கருத்தொத்த துணையாக்கி
காண்மரபை விளக்க, கனிகள் அஜந்தன், அஸ்லி
தேட்டம் இருமக்களாய் தந்த குடும்பத்தலைவன்

சமுதாயத்துள் துருவித் தேடி அதனுள்ளே
தலைமறைவாயுள்ள தீமைகளை நேரில் நாம்
இமையாது காணுதற்கு இங்கேயும் மனிதர்கள்
தமைப்பெற்ற பாசத் தாய் பிறந்த பொன்னாளில்

தருகாணிக்கையாய் திகழ் மாணிக்கப் பரல்கள்
குரும்பசிட்டித்தாயே கொள்ளைகொண்ட நெஞ்சனாய்
கொலுவீற்றிருந்த குரும்பைநகர் தந்த மகன்.

கருக்கொண்டு இன்னும் காட்டவுள ஆக்கங்கள்
தரவல்ல சிந்தனையின் செல்வனையே பார்க்கின்றேன்.
சிந்தனைச் செழிப்பினிலே திரண்டகன்ற நெற்றி,
சலுகைகட்கு விலைபோகா சன்மார்க்க நெறிநெஞ்சம்
வந்தனையோ, நிந்தனையோ வளையாத உறுதிகளை
வெளிக்காட்டுகின்ற விறைப்பான வாய்இதழ்கள்
நிதர்சனத்தைத் தேடுகின்ற நிதானமிகு நன்னடை

உள்ளன்புக்கு ஒன்று, ஒவ்வாமைக்கு இன்னொன்று
கள்ளன்மை பொய்மையை கண்டிக்க இன்னொன்று
கலையின் சுவைமாற்றி களித்தமைக்கு வேறொன்று
குலைவில் உறுதியுறு கொள்கைக்கு இன்னொன்று
தக்காரைக் காணின் தலைசாய்த்துத் தனித்தொன்று
எக்காளமாக ஏய்ப்போர் முன் இன்னொன்றாய்
சிரிப்பாலே நவரசத்தைத் தெரியத் தரும் செல்வன்
கவிதை நயத்தமிழ்த்தேன் கனிகின்ற நாவண்ணன்
குற்றமது கண்டுவிடின் நெற்றியடி நக்கீரன்...

\- எனக்கோ

முற்பிறப்பில் நான்பெற்ற மூத்தமகன் என்பேனோ?
முதுஅன்பின் சுவையூட்ட முந்து நண்பன் என்பேனோ?
ஒப்புயர்வில்லா மதியின் மந்திரியே என்பேனோ?
உற்றிடுபல்தேவைகளில் உடன்காப்போன் என்பேனோ?
தோள்வலிமைசேர்க்கின்ற துணைஇளவல் என்பேனோ?
தவப்பயனாய் பலவடிவம் தாங்கி, எனதுளத்தை
ஆளுகின்ற ஓர்உறவாய் அருமருந்தாய் வாய்த்தவனே!
நின்னை நான் பெற்றிடவே என்னதவம் செய்தனனோ?
தெய்வத்தாய் அன்பை தினம் ஊட்டும் நின்மனையாள்
பொய்யாப் புகழ்சேர்க்கப் பெற்றிட்ட இருமக்கள்
பாசத்தில் நின்னோடு பக்கல் இணை சோதரங்கள்
நேசத்தில் சூழ்ந்திருக்கும் நல்லிதய ஆர்வலர்கள்

எல்லோரும் கூடிஒன்றாய் இதயத்தால் வாழ்த்துகிறோம்
வல்லோன் இறைவனிடம்வரம்வேண்டி வாழ்த்துகிறோம்.
அறுபது அகவைதனை அணைக்கும் இப்பொன்னாளில்
பெறுவதாம் பலவளங்கள் பெருக நீடாயுள் வேண்டும்

உளம் மகிழ் மருகர்பேரர்உம்மோடு இணையவேண்டும்
இளமையோடுளத்திலிருந்த இலக்கியம்பெருகவேண்டும்.
மணிவிழா மணியின்ஓசை மென்மேலும் தொடர்ந்தொலித்து
அணிவிழா பவளமாகி அதுசதவிழாவாய் நீண்டு
நிறைவுறவேண்டும் என்றே நெஞ்சாரவாழ்த்துகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்தவர்



1984.08.24இல் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த திருமணத்தின் பின்னர் ஜெகா மனைவியுடன்

1984 ஆகஸ்ட் 19 காலை. அன்று தான் எனது கணவரை தமிழ்நாட்டில், மதுரையில் முதன்முதலாகச் சந்தித்தேன். 1984 ஆகஸ்ட் 24, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மிக மிக எளிமையாக எங்கள் திருமணம் நடந்தேறியது.

1984 செப்ரெம்பர் 19 மொன்றியல் நகரை வந்தடைந்தோம். பெரிய குடும்பமொன்றில் பிறந்து தனியாக எனது கணவருடன் இங்கு வந்து சேர்ந்த பொழுதுகளை இப்போதும் என்னுடைய மனத்திரையில் இருந்து அகற்ற முடியவில்லை.

சின்னச்சின்ன விடயங்களைக் கூட எனக்குச் சொல்லிக் கொடுத்து உற்சாகப்படுத்துவார். சிக்கலான அல்லது பாரதூரமான விடயங்களை உடனடியாக எனக்குச் சொல்லாமல் சிரித்துச்சமாளிக்கும் இவர் அந்த விடயங்கள் சுமுகமான முறையில் தீர்ந்த பின்னால் காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துவார்.

மிகுந்த நகைச்சுவையாளர். இவரிடம் எனக்கு மிகவும் பிடித்த ஒரு விடயம், உறவினர்கள் என்று வரும் போது தன்னைச் சார்ந்தவர்கள், என்னைச் சார்ந்தவர்கள் என எள்ளளவும் பக்கச்சார்பு காட்ட மாட்டார். எனக்குத் தெரிந்தளவில் பொது விடயங்களிலும் மிகவும் நடு நிலைமையோடு நடப்பார். பெரியவர்களுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுப்பார். அதே நேரம் தன்மனதிற்குப் பிழையென்று தெரியும் விடயங்களை அதே இடத்திலேயே போட்டுடைத்து விட்டு வருவார். இதனால் எதிர்ப்புக்களையும் சம்பாதித்துக் கொள்வார்.

பொதுவிடயங்களில் தன்னை மறந்து, தன் குடும்பத்தை மறந்து ஈடுபடுகின்ற வேளைகளில் நான் கண்டித்த பொழுதுகளும் உண்டு. இவ்வாறான விடயங்களில் நான் சொல்கின்ற நியாயங்களின் அடிப்படையில் சரி, பிழையை ஏற்றுக் கொள்கின்ற பக்குவமும் இவரிடம் நிறையவே உண்டு. ஒரு விடயத்தைச் செய்வதற்கு ஆரம்பித்தால், அந்த விடயம் நிறைவேறும் வரை வேறு எதைப்பற்றியும் சிந்திக்க மாட்டார்.

இருபத்து எட்டு ஆண்டுகள் கடந்து விட்ட எங்கள் குடும்ப வாழ்வில் பல்வேறு சிக்கல்கள், சவால்களை எதிர்கொண்டிருந்தாலும், எதுவித சிரமத்தையும் எமக்குத் தராது தங்கள் எதிர்காலத்தைத் தாமே ஒழுங்கமைத்து செயற்பட்டுக் கொண்டு வரும் எங்கள் இரு புத்திரச் செல்வங்களுடனும் எமது வாழ்க்கை சிறப்பாகவே நடந்துவருகின்றதென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மனநிறைவோடு கூறி வைக்க விரும்புகிறேன்.

எங்கள் இரு பிள்ளைகளையும் ஆலோசனைகள் கூறியும், நட்புடன் உரையாடியும் இன்றைய நிலைக்குக் கொண்டு வந்ததில் எனது கணவரின் பங்கை என்னால் வார்த்தைகளுக்குள் மட்டுப்படுத்த இயலவில்லை.

எனது கணவரைப் பற்றி இதற்கு மேலும் எழுதுவது ஏற்புடையதல்ல என்ற காரணத்தினால் இத்தோடு நிறுத்திக் கொண்டு, இவரைப் பற்றி இவரது உறவினர்கள், நண்பர்கள், பெரியவர்கள் சொல்பவற்றை உங்களோடு சேர்ந்து நானும் கேட்டு மகிழ்வதே உண்மையான மனநிறைவு எனக் கூறி நிறைவு செய்கிறேன். ★★★

மோகனா ஜெகதீஸ்வரன்
கடந்த 28 ஆண்டுகளாக உணர்வொத்த வாழ்க்கைத் துணையாக இருந்து வருபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்கு உரியவர்



*1994இல் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களுடன் ஜெகா கியூபெக் நகரத்தில்*

**திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்**
**இலங்கைத்தீவின் ஒரே தமிழ் எதிர்க்கட்சித் தலைவரின் பாரியார்.**
**தமிழரசுக்கட்சி மாதர் முன்னணி முன்னாள் தலைவி**

எனது பெறாமகன் ஜெகதீஸ்வரனுடைய அறுபதாவது பிறந்த நாள் ஒக்டோபர் 08, 2012இல் வருகிறது. இதனையொட்டி வெளியிடப்படுகின்ற விழா மலருக்கு என்னையும் ஒரு கட்டுரை தரும்படி கௌரி கேட்ட போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. மிகுந்த மனநிறைவுடனேயே இதனை நான் எழுதுகிறேன்.

எனது அக்கா திருமதி. ஐயாத்துரையின் தந்தையார் மு. கந்தையா அவர்கள் நல்ல விவசாயி. நல்ல நடிகர். நல்ல பாடகர். தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் வேளைகளில் துலாவில் பாடியபடியே மேலும் கீழுமாக அவர் நடப்பது இப்போதும் என் கண்முன்னே நிழலாடுகிறது.

எனது அக்காவும் மகாதேவா வித்தியாசாலையில் கல்வி கற்ற காலங்களில் பாடிக்கொண்டே நாடகங்களில் நடித்திருக்கிறா. இளமைக் காலத்தில் எங்கள் தந்தையார் வல்லிபுரம் அவர்களின் அரவணைப்பில் எங்களோடு இருந்து வளர்ந்தவர். எங்கள் தந்தையாரின் விருப்பப்படியே அக்கா திருமணமும் செய்து கொண்டார்.

எனது அக்காவிற்கு மகனாகப் பிறந்த காரணத்தினால் இவரிடம் நான் கூட உரிமை எடுத்துக் கொள்வேன். சில சமயங்களில் அது தர்க்கரீதியாகவும் முடிந்து விடும். ஜெகதீஸ்வரன் கதை, கவிதை எழுதும் ஆற்றலும் பேச்சுத்திறனும் மிக்கவராக விளங்குகிறார். தன் மனதிற்குள்ளே அன்பை வைத்திருந்தாலும் வெளியில் அதிகம் காட்டிக் கொள்வதில்லை.

தான் பிறந்து வளர்ந்த குரும்பசிட்டிக் கிராமத்தின் வரலாற்றினை கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற பெயரில் 2008 ஜூன் மாதத்தில் ஒரு நூலாக வெளியிட்டிருந்தார். இவ்வெளியீட்டு விழாவில் நானும் கலந்து கொண்டு உரையாற்றியமையும், மண்டபம் நிறைந்த பார்வையாளர்களோடு விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியமையும் இன்னமும் என் நினைவிலிருக்கின்றன.

கற்றவர்களும், கலை வல்லாளர்களும் நிறைந்த குரும்பசிட்டிக் கிராமத்தில் 1981 ஜனவரியில் நிகழ்ந்த நகை அடைவுக் கடைக் கொள்ளையும் அதனைத் தடுக்க முயன்ற எனது அக்காவின் கணவர் துப்பாக்கிச் சூட்டினாற் கொல்லப்பட்டதும் மிகவும் துயரம் நிறைந்த ஆற்ற முடியாத ரணங்களாகும். எனது அக்காவின் கணவர் கொலைசெய்யப்பட்ட வேளையில் பிள்ளைகள் எல்லோரும் சிறியவர்களாக இருந்தார்கள். அவர்களை ஆளாக்கி வளர்த்தெடுத்த பெருமை என் அக்காவிற்குத்தான் உரியது. அந்த நேரங்களில் என் அக்காவின் கண்களில் கண்ணீர் ஆறாக ஓடுவதைப் பார்த்திருக்கிறேன். அவருடைய துயரங்களுக்கு எங்களால் ஆறுதல் கூற முடிந்ததே தவிர ஆதரவு கொடுக்க முடியவில்லை.

எனினும் அவருடைய குழந்தைகளை ஊக்கப்படுத்தி பெருமைக்குரியவர்களாக கல்வி அறிவிற் சிறந்தவர்களாக வளர்த்தெடுத்த பெருமை என் அக்காவையே சாரும். அவர் பட்ட கஷ்டங்களுக்கு பிள்ளைகள் திறமையுள்ளவர்களாக, நல்லவர்களாக, பண்பாட்டையும், குலப்பெருமையையும் காத்து வளர்ந்திருப்பதைக் காண நாமனைவரும் பெருமைப்படுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் என அக்காவின் மூத்த மகனான ஜெகதீஸ் வரன் பல்துறை ஆற்றல் மிக்க ஒரு மனிதனாகப் பலராலும் பாராட்டப்படுவது எமக்கெல்லாம் பெருமை யையும் மனநிறைவையும் தருகிறது. அரசியல் ஆர்வம் இருந்தாலும் தனது ஆர்வத்தை எழுத்திலே செலுத்துகின்ற நிலைமையைப் பார்க்கும் போது தன் குடும்பநிலையும் தாயின் தவிப்பும்தான் அவருக்குத் தன் எல்லையைக் கோடிட்டு காட்டியிருக்கிறதென நினைக்கிறேன்.

நல்ல மனமும், திறமையும் படைத்த ஒருவராக இன்றும் இளமைத் துடிப்புடன் செயற்படுவது பாராட்டுதலுக் குரியது. எப்பொழுதும் எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பதிழுக்கு என்ற வள்ளுவன் வாய் மொழிக்கு இணங்க செயற்படுத்தி நடக்கின்ற ஒரு இளைஞனாய்க் காணும் போது நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

என்னுடைய கணவர் இன்று இருந்திருந்தால், என் பெறா மகனுக்கு நல்லதொரு பாராட்டுக் கட்டுரையை வடித்துத் தந்திருப்பார். என் மகன், ஜெகதீஸ்வரன் தன் குடும்பத்தோடு தன் தாயாரின் ஆசீர்வாதத்துடனும், பெரியோர் உற்றார், உறவினர்களின் வாழ்த்துக்க ளோடும், சகோதரங்களின் அன்பு ஆதரவோடும் என் றென்றும் சிறப்புடன் வாழ குரும்பசிட்டி மாரி அம்மன் அருள் வேண்டி வணங்குகிறேன்.



"கொலுவீற்றிருந்த குரும்பை நகர்" நூல் வெளியீட்டு விழாவின் போது திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், "ஈழநாடு" ஆசிரியர் ரி. கே. பரமேஸ்வரன் ஆகியோருடன் நூலாசிரியர் ஜெகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் பெருமைக்கு உரிய பெறா மகன்



சென்னை மரீனாக்கடற்கரையில் பாரதிதாசன் சிலையருகில் ஜெகா

மிகவும் பண்பாடான ஆன்மீகப் பெற்றோருக்கு கிடைத்த அற்புதமான குழந்தைதான் "தம்பி" ஜெகதீஸ்வரன்.

இவரின் வளர்ச்சியை அயல் வீட்டிலிருந்து பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எக்காரணம் கொண்டும் அந்த வீட்டில் சண்டைச் சத்தம் கேட்டதே இல்லை. மாறாக "தம்பி" என்று அன்பாக அழைக்கும் தாயின் குரலையும் அதற்கு அமைதியான பதிலையும் தான் கேட்க முடியும்.

குரும்பசிட்டி சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து ஒலித்த இவரது தெய்வீகக்குரல் இவரது பேச்சு ஆற்றலையும், தெய்வீகப்பற்றையும் எமது ஊர் மக்களின் மனங்களில் நிலைகொள்ள வைத்த நிகழ்வுகளாகும். சிறப்பாகக் கணிதபாடத்தில் திறமையான இவரது கல்வி அறிவு பல மாணவர்களை இப்பாடத்தில் சித்தியடைச் செய்ததுடன் இவர் ஓர் சிறந்த ஆசிரியராகவும் விளங்கியவர். இவரது கல்வி அறிவு கனடா வரை சென்று எழுத்துறையிலும் இலக்கியத்துறையிலும் சமூகத்தொண்டிலும் தனி முத்திரை பதித்திருக்கின்றார் என அறியும் பொழுது மனம் பூரிப்படைகின்றது.

இவரது சிறுகதைப் புத்தகங்கள் அனைத்தையும் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சில வரிகளை மீண்டும் மீண்டும் வாசிக்கத் தோன்றும். "மாணிக்கப்பேழை" எனும் அழகான கவிதை இவரது தாய்ப்பாசத்தைக் காட்டி நிற்பதோடு எல்லா மகன்களிற்கும் இவர் ஓர் முன் உதாரணமாக நிற்பதை நான் காண்கின்றேன்.

என் பழைய நினைவை மீட்டிப் பார்த்த பொழுது அயல் வீட்டில் இவர் சிறு பராயத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது தாயார் மாணிக்கம், "தம்பி காலில் இருக்கும் செம்மண்ணை தட்டிவிட்டு உள்ளே வா!" எனக் கேட்ட பொழுது மண்தானே அப்படியே இருக்கட்டும் என்ற வார்த்தையை இப்பொழுது நினைக்கின்றேன். அந்த மண்ணை அப்படியே சுமந்து கனடா சென்று தன் மண்ணை, மண்ணிலுள்ளோரை மறக்காமல் எந்நேரமும் ஊரின் சிந்தனையில் இருக்கும் இவர் எமது ஊர்த்தாய்குலம் எல்லோர்க்கும் கிடைத்த ஒரு "பெறாத மகன்" பெருமைக்குரிய மைந்தன். இவரது தந்தையார் அடித்தளத்தலிருந்து ஊரிற்கு தொண்டு செய்த பெருந்தகை. சிறியவர்களோ பெரியவர்களோ யாரைக் கண்டாலும் தலை சாய்த்து அன்புடன் கதைக்கும் பண்புடையவர். தன்னலமற்ற சேவையே அவரது மூச்சு. தந்தையின் வழியில் பயணிக்கும் தம்பிக்கு எமது அறுபதாவது பிறந்த தின வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

திரு. மனோ. சிறீதரன்
இளைப்பாறிய நீதிபதியும்,
வீடமைப்பு ஆணையாளரும்,
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பைநகரின் மைந்தன்

சைவமும் தமிழும் ஒருங்கே அமையப்பெற்ற ஈழமண்ணின் வடபால் தொன்மைக்குடிகள் தொன்றுதொட்டு வாழும் வலிகாமம் வடக்கில் இலக்கியவாதிகளையும், ஆற்றல்மிக்க எழுத்தாளர்களையும் கொண்ட குரும்பசிட்டி கிராமம் கலை, கலாச்சாரத்தையும் பேணிக் காத்து வளர்த்து வந்தது. இக் கிராமத்தின் ஆதிதொட்டு அரும்பணியாற்றிவந்த "சன்மார்க்க சபை" சைவத்திற்கும், தமிழிற்கும் பெரும்பணி ஆற்றிய மன்றம். இவ்வளம் பெற்ற கிராமத்திற்கும், தமிழுக்கும் பெரும்பணி ஆற்றிய மன்றம். இவ் வளம் பெற்ற கிராமத்தில் திரு.ஐயாத்துரை மாணிக்கம் தம்பதிகளுக்கு தலை மகனாகப் பிறந்து சிறப்புக் கல்வி கற்று இளமையிலேயே இலங்கை வானொலியில் சிறிது காலமும் பின்னர் அரச பதவியிலும் கடமையாற்றி வந்தார். நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் மத்தியில் தந்தையைப் பறி கொடுத்த நிலையில் குடும்பப் பொறுப்பைத் தாங்கிக் கொண்டு அரச பதவியையும் விட்டு வெளிநாடு சென்றார்.



வெளிநாடு சென்றவர் தனக்காக, தனது குடும்பத்தவர்களுக்காக வாழாது தன் பிறந்த மண்ணில் நிகழ்ந்த நிகழ்வுகளை கண்முன்னே படம்பிடித்து காட்டும் முயற்சியில், அயராது உழைத்து வரும் எழுத்தாற்றல்மிக்க படைப்பாளி.

பாரதி பாடிய "நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனுமாய்" - என்ற அற்புதமான வரி களுக்கு பொருத்தமான குணாம்சங்களைக் கொண்டவராக வாழ்ந்து வரு கின்றார். இவர் ஆற்றிய பொதுப்பணிகள் அவரது பன்முக ஆளுமையைக் காட்டுகின்றன.

குரும்பசிட்டிக் கிராமம் எத்தனையோ கலைஞர்களை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, அறிஞர்களை, அறிவியற்துறைசர் நிபுணர்களை, கல்விமான் களை தமிழுக்கு அளித்த பெருமையுடையது. திரு.ஜெகதீஸ்வரன் அவர் களும் இந்த மண்ணின் பெருமைக்கு மெருகும், மேன்மையும் வழங்கிய இரண்டாம் தலைமுறையின் மணிவிழா நாயகன்.

2008 ஆம் ஆண்டு "கொலு வீற்றிருந்த குரும்பைநகர்" என்ற வரலாற்றுத் தொகுப்பு ஆவணம் ஆசிரியரின் ஊர்ப்பற்றினை வெளிப்படுத்துகிறது. அவர் நிகழ்வுகளை மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முறையில் வரலாற்று சுவடியாக அதனை வெளியிட்டமையால் இச் சாதனையாளருக்கு மணி விழா எடுப்பது குரும்பசிட்டி மக்களின் சமூகக் கடமையாகும்.

சொல், செயல், உள்ளம் என்பவற்றினால் சமூகத்திற்கு பணி செய்தவர் களைச் சமூகம் வாழ்த்தி நினைவுகூரும், அத்தகைய பணி செய்தவர் களில் திரு.ஜெகதீஸ்வரனும் ஒருவர். எனவேதான் சமூகம் அவரைக் கௌரவித்து நினைவு கூர்ந்து நிற்கின்றது.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

- என்ற வள்ளுவனின் வாக்கியத்திற்கு அமைய வாழ்ந்து வருபவர். குடும்பத்தவர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், சமூகத்தவர்களுக் கும், பெருமை சேர்க்க வேண்டி, தொடர்க உங்கள் சமூக நற்பணி என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க, வளம் பெறுக!

வயவைநகர் வ.சத்தியசீலன்
இலங்கைத் திட்டமிடல் சேவை
ஓய்வுநிலை பிரதித் திட்டமிடல்
பணிப்பாளர் ~ நேர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜதார்த்தவாதி

குரும்பசிட்டி கிராமத்தை எனக்கு என் பால்ய வயதில் முதன்முதல் அறிமுகப்படுத்தியது அங்கிருந்து இளவாலைக்கு இராசவள்ளிக் கிழங்குகளை சுமந்து வந்த கூடை வியாபாரிகள் தான்.

இனியதமிழ் உச்சரிப்பால் இளவாலை மக்களை அப்பொழுது அவர்கள் அகழ்ந்தார்கள். ஈழநாடு ஆசிரிய பகுதியில் பணிபுரிந்த வேளை இரஸிகமணி கனக செந்திநாதன், கவிநாயகர் கந்தவனம், கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஆகியோருடன் ஏற்பட்ட நெருக்கத்தில் குரும்பசிட்டி யில் வீறார்ந்த கலைஞர்கள் இல்லாத வீடே கிடையாதோ என்ற பிரேமை இதயத்தின் சந்தோஷமான பரப்புகளில் சஞ்சரிக்கத் தொடங்கியது.

அதன் பின்னர் அக் கிராமத்தின் ஊடாகப் பயணித்தால் அங்கு வீசும் காற்றில் கூட கவிதையின் சுகந்தம் கலந்துள்ளதாகவே ஒரு பிரமை உணர்வுகளுடன் ஒன்றிப்போகும். கனடாவிற்கு வந்த புதிதில் எங்கெல் லாம் தமிழ்க் கூட்டங்கள் நடை பெறுகின்றனவோ அங்கெல்லாம் சுடச்சுட கேள்வி கேட்பவராகவே குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் எனக்கு அறிமுகமானார்.



இளவாலை எஸ். ஜெகதீசன் விழா நாயகருடன்

தனது குடும்ப நிலவரங்கள் குறித்துக் கவலைப்படுவதோடு முடங்கிவிடாது பொது விஷயங்களில் ஆர்வம் காட்டும் ஆற்றல் மிக்கவராக தைரியமாக உண்மையை எங்கும் எடுத்துரைக்கத் தயங்காதவராக அலாதியான எழுத்துக்களால் ஊரைக் கூட்டி கிறங்கடிக்க வைக்கும் வல்லமை பெற்ற வராக பின்னாளில் பரிச்சயமானார்.

டீ.பி.எஸ்.ஜெயராஜின் செந்தாமரையில் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் எழுதி வந்த சிறுகதைகள் மனதளவில் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தின. முதலாவது பொதிகை இதழுக்கு குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் தந்த முதன்மையான விமர்சனம் இரண்டாவது இதழில் அவரை சிறுகதை எழுத வைத்ததுடன் ஊமையாயிருந்த எமது உள்ளங்களைப் பேசவும் வைத்தது.

கனடாவின் இலவச தொலைபேசி சேவை அன்றாடம் பேசிக்கொள்ளும் நட்பை எமக்குள் விரைந்து இணைத்தது. குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் தொலைபேசியில் கதைக்கும் பாணி சுவாரஸியமானது. முன்பின் பழக்க மில்லாதவர்களைக் கூட சில நொடிகளுக்குள்ளாகவே பல வருட நெருக் கத்தை அனுபவிக்க வைப்பது அவரது தனிக்கலை.

மற்றவர்களது கருத்துகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் மதிப்பு கொடுக்கும் நல்லவர் என்ற அபிப்பிராயத்தை எடுத்த எடுப்பிலேயே உருவாக்கி விடுவதில் சமர்த்தர். சக மனிதர்களையும் அவர்களின் உணர்வுகளையும் மிகவும் நுணுக்கமாக புரிந்து கொண்டவர் போல மென்மையாகவும் மிகவும் பவ்யமாகவும் பேசுவார்.

இளவாலை எஸ்.ஜெகதீசன்
இலண்டன் முரசு,
பொதிகை சஞ்சிகை
ஆகியவற்றின் ஆசிரியர்

தான் அழைக்கக் கூடாத நேரத்தில் அழைத்துவிட்டதாகவும் அதனால் அடுத்தவர் ஏதோ இனம் புரியாத தர்மசங்கடத்தில் ஆழ்ந்து விடுவதை தன்னால் உணரமுடிவதாகவும் அடிக்கடி கூறி கொள்வார்.

குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனது வார்த்தைகள் மெல்ல மெல்லமாக தொலை பேசி ஊடாக உயிர் பெற்று மேலேழுவது கேட்பவருக்கு ஓர் அற்புதமான சுகானுபவம் என்பது பலரது ஏகோபித்த கருத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனுக்கு மிகமிகப் பிடித்த விளையாட்டு "இருக்கும் பொழுதே இறக்கும் விளையாட்டு" என நான் கருதும் ரோலர் கோஸ்டர். 1993ம் ஆண்டு பதின்ம வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்த எனது பிள்ளைகளும் அவரது பிள்ளைகளும் அடைந்த குதூகலத்திற்கும் பன்மடங்கு மேலாக குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் அந்தத் திகில் விளை யாட்டில் படு கில்லாடியாக திகழ்ந்ததில் அன்று நான் பெற்ற பரவசம் பலகாலம் என் உடம்பெங்கும் பரவி யிருந்தது.

இப்பொழுதும் அப்படித்தான். மே மாதம் ஆரம்பித்து விட்டால் வொண்டர் லான்டில் "உயிரோடிருக்கும் இறந்த காலம்" எனும் அந்தக் கணங்கள் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனுக்காக ஏங்கும்!

குரும்பசிட்டியில் ஜெகதீஸ்வரன் ஓர் உயர்ந்த ஆத்மீக வாதி என்பது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. சித்தி விநாயகர் ஆலயத்திலும், மாரி அம்மன் ஆலயத்திலும் ஓர் அங்குல நிலம் தன்னும் அவரது கை படாமல் இல்லை.

குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனது ஆலயத் தொண்டினை அன்றாடம் அவதானித்த அயலூர் ஆசிரியர் ஒருவர் அதன் நேர்த்தியில் புல்லாய்ப் புல்லரித்ததுடன் குரும்ப சிட்டி ஜெகதீஸ்வரனை ஓர் ஒப்பந்தத் தொழிலாளி என நினைத்துத் தனது ஊரின் ஆலயத்திற்கும் வேதன அடிப்படையில் ஒப்பந்தம் செய்ய முயல குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் அதனை பவ்யமாக மறுக்க அதுவே தலைப்புச் செய்தி ஆகும் அளவிற்கு அன்று பிரசித்தி பெற்றது. அதில் உள்ளத்துள் பூவாய் புளகாங்கித்துக் கொண்டதாக இப்பொழுதும் சொல்லிக்கொள்வார்.

ஆனால் இங்கு குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனின் சொகுசு வாகனத்தில் யாரவது பயணிக்க நேர்ந்தால் அழகான கையெழுத்தில் அலங்காரமாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் இறுவட்டுகளில் ஒன்று தற்காலிகமாக குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் நாஸ்திகராக மாறி விட்டாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும். நீ அல்லால் தெய்வம் இல்லை என்பதற்குப் பதிலாக நீ எல்லாம் தெய்வம் இல்லை என்று எழுதி ஒட்டி யிருந்தால் யாருக்குத்தான் அந்தச் சந்தேகம் வராது? ஏன் என்று கேட்டால் வாகனம் ஓட்டுவதையும் மறந்து கை எடுத்துக் கும்பிட்டு மோகனமாய் சிரிப்பார்.

சமயத்தில் பிரசங்கம் செய்வதில் வல்லவராகவும் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் திகழ்ந்துள்ளார். பறை மேளம் இசைப்பதை தன் தொழிலாக கொண்டிருந்த ஒருவர் தனது திருவிழாவிற்கு சொற்பொழிவாற்ற யாருமே வருகிறார்கள்கள் இல்லை என வேதனைப் பட்ட பொழுது அங்கு சென்று உரையாற்றியதுடன் அன்று இரவு அந்த உபயகாரர் வீட்டிலேயே தங்கி மறு நாள் காலை ஆகாரத்தையும் அங்கேயே முடித்துக் கொண்டு வீடு திரும்பியது குரும்பசிட்டி ஜெகதீஸ் வரனது சமத்துவ கொள்கையை அந்நாளில் பறை சாற்றிற்று.

இந்தச் சமயத்தில் இன்னுமொன்றையும் சொல்லிக் கொள்வது பொருத்தமாயிருக்கும். சுண்ணாம்பு காள வாயில் திருநாவுக்கரசு நாயனார் ஏழு நாட்கள் தண்டனை பெற்றது நினைவில் உள்ளதா? காங்கேசன் துறை சீமேந்து தொழிற்சாலையின் சுதை அகழ்வில் சுரங்கம் ஒன்று கீரிமலை வீதியில் தோன்றியது. மாணவர் படைபடையாக அதனைப் பார்வையிட்டு மீண்டனர். ஆனால் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் மட்டும் எப்படியோ அந்தச் சுதைச் சுரியில் ஏழு மணித்தியாலங்கள் மாட்டிக் கொண்டார். மாசில் வீணையும் மாலை மதியமும் பதிகம் பாடியே இவரும் மீள வேண்டும் என்ற விருப்பம் இறைவனுக்கு இருந்திருக்குமோ?

குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனின் முதலாவது வேலை இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனத்தில் தொடங் கியது. எல்லோருக்கும் பொதுவான மின்விசிறியை குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் சுழல விட வஞ்சகமற்ற காற்று அடுத்த அறையிலிருந்த அறிவிப்பாளர் ஒருவரின் மேசை மீதிருந்த காகிதங்களை விசிறியடித்திட அவர் கத்த, இவர் கத்த சீக்கிரமே வேலையும் பறந்தது. ஆனால் நியாயம் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் பக்கமிருந்ததை அதற்கும் அடுத்த அறையிலிருந்த கே.எம். வாசகர் அனுமானித்ததில் நட்புடன் நெருங் கினார். இச்சம்பவத்தை அறிந்த ஏற்கனவே நண்பரா யிருந்த எஸ்.கே.பரராஜசிங்கம் குரும்பசிட்டி ஜெகதீஸ் வரனை தன் உள்வீட்டுப் பிள்ளையாக்கினார்.

குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் கவிதைகளை, கதைகளை, கட்டுரைகளை அழகாக எழுதுவது உலகறிந்தது. அவரது எழுத்தும் அழகானதாக இருக்கும் என்பது யாரும் அறியாதது. முன்பெல்லாம் இலங்கை பூராவும் விவசாய கண்காட்சியின் முடிவில் விவசாய மன்னர்கள் தெரிவு பெற்று மும் மொழிச் சான்றிதழ்களையும் பெற் றுக் கொள்வார்கள். கணனி அற்ற அக்காலத்தில் அந்த சான்றிதழ்கள் ஒவ்வொன்றையும் அழகாக மூன்று மொழிகளிலும் எழுதியது இவர்தான்.

குரும்பசிட்டியில் பேய்க்கிணறு என்றொன்று கவனிப் பாரற்றுக் கிடந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை சிறிது ஆழமாக்கினால் அதன் அயல் நிலம் முழுவதும் பாசனம் பெறும் என்பது தெரிந்தும் ஊரவர்கள் எட்ட நின்றே அதனைப் பார்த்திட கொழும்பிலிருந்து வேறு அலுவல்களுக்காக யாழ் நகர் வந்திருந்த அமைச்சரவை அதிகாரிகளை எட்டிப்பார்க்க வைத்தவர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன். அக் கிணற்றைத் தோண்டினால் அருகிலிருந்த கிணறுகள் உப்பு கரிக்கும் எனக் கூறி அத்திட்டம் நிராகரிக்கப்பட இதயம் தூர்ந்தது.

குரும்பசிட்டியில் பரமானந்தர் பாடசாலை அமைந்திருந்த பிரதானவீதியான ஈழகேசரி பொன்னையா வீதியை அகலிப்பது ஊருக்கே பரமானந்தமளிக்கும் என்ற இவரது கருத்து விஸ்தாரம் பெற முடியாமல் குறுகிட ஊர் ஊனமுற்றதாகவே இதயம் நடமாட்டம் இன்றி முடங்கியது.

1985ம் ஆண்டு வரலாறு குறித்து வைக்கும் முக்கிய ஆவணமான மொன்ரியல் தமிழர் ஒளிக்கான யாப்பினை குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் அலன் ராஜரத்தினம், கே.ஜேசுதாஸன் ஆகியோர் தயாரித்திருந்தனர்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் இரா.கனகரத்தினம் கனடா வந்ததற்கும் ஆவண ஞானியாகித் திரும்பியதற்கும் பின்னணியில் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனே காரண கர்த்தா என்பதையும் காலம் மறப்பதற்கில்லை.

குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனுக்கு பத்திரிகைத் தொழிற் பரிச்சயமும் உண்டு. 1965ம் ஆண்டு சன்மார்க்க தீபத்தில் தேவை கருதி ஆசிரியரானார். 1996ல் தேவை கருதாமலே நம்நாடு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இணைத்து விட்டேன்.

தனது தந்தையும், தந்தையின் ஊரும் பெரிதும் மதிக்கின்ற பத்திரிகை துறையில் உள்ள விருப்பம் காரணமாக அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் ஆஷ்லி. ரொரன்ரோ பல்கலை கழகத்தில் அரசியல் விஞ்ஞான இளமானிக்கான பட்டப் படிப்பின் பொழுது பல்கலை கழக வெளியீட்டுப் பிரிவின் ஆசிரிய குழுவில் அங்கம் வகித்துச் சிறப்பித்தவர். தற்பொழுது அரசியல் விஞ்ஞான முதுமானிப் பட்டப்படிப்பை நிறைவுசெய்து சென்டானியல் கல்லூரியில் நிர்வாகப் பிரிவில் அதிகாரியாக பணிபுரிகின்றார். தற்போது சட்டக்கல்லூரி செல்லத் தயாராகிறார். தந்தையின் செல்லப்பிள்ளை.

தமது மகனுக்கு பெண் சிநேகிதம் இருப்பின் ஏங்கும் தந்தையர் மத்தியில் தன் மகனின் பதின்ம வயதில் பெண்சிநேகிதம் இல்லையே என ஏங்கிய ஒரே ஒரு தந்தை நான் அறிந்த வரையில் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனாகத் தானிருப்பார்.

மகன் அஜந்தன் கனடிய தேசிய புகையிரத சேவையில் நடத்துனர். இன்னும் இரு வருடங்களில் புகையிரத பொறியியலாளராக இப்பதவி தன்னிச்சையாகவே உயர்த்தும்.

1981ம் ஆண்டு குரும்பசிட்டி வன்னியசிங்கம் நகை அடைவு கடைக் கொள்ளைக்கு ஏதாவது காரணம் இருந்திருக்கலாம். ஆனால் குரும்பசிட்டி ஐயாத்துரையின் அகால மரணத்துக்கு என்ன காரணம் நியாயப் படுத்தும்? சூறையாடப்பட்ட நகைகளின் பெறுமதியை கணக்கிடலாம். காலக்கிரமத்தில் அவற்றை சேகரிக்கலாம். ஆனால் சூறையாடப்பட்ட உயிரின் பெறுமதியை யாரால் கணக்கிட முடியும்? யார் அதனை மீட்பார்? மனிதம் மரித்த அக் கணத்தில் வாழ்வு மரணிக்க நிர்ப்பந்தம் செய்தது. மரணம் வாழ்ந்தே ஆக வேண்டும் எனக் கட்டாயமாக்கியது.

தான் மனசார நம்பி விசுவாசிக்கும் எழுத்தாளர்களுக்கும் பிரமுகர்களுக்கும் கௌரவமளித்துச் சிறப்பிக்க பல்கலைக்கழகங்களால்தான் முடியும் என குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. தானே வழங்கி கௌரவம் சேர்ப்பார். அந்த வகையில் கந்தவனம் இலக்கிய வித்தகரானார். செ.இராசநாயகம் முத்தமிழ் வித்தகரானார். இரா.கனகரத்தினம் ஆவணஞானியாக உருமாற இரா.சம்பந்தன் இன்பத்தமிழ் ஊற்று ஆனார். எனக்கு வழங்கப்பட்ட பட்டம் தேன்தமிழ் தென்றல். எல்லை தாண்டியதில் பி.எஸ் நடராஜா வர்த்தகக் கோன் ஆக ஆ.சி.நடராஜா அதிபர் நாயகமானார். வி.கிருஷ்ணசாமி சமூக ஞானியானார். க.சிவசுப்பிரமணியம் தேசாபிமானியாக மீண்டார். பொ.சிவசுப்பிரமணியம் சமூக ஜோதியானாதும் மு. திரு நாவுக்கரசு சிறுகதைச்சித்தரானதும் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனால்தான். இன்னும் இன்னும் எத்தனை பேர் இந்த அசகாய சூரனின் மோதிரக் கையால் குட்டு வாங்கப் போகிறார்களோ?

தாயாரின் 75 வது பிறந்த நாளுக்கு மாணிக்கப்பரல்கள் என்ற கவிதை நூலை ஒரே வாரத்தில் எழுதியவர் இந்த ஆசுகவி. குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனது பெயர் தெரிவுகள் கவர்ச்சிகரமானவை என்பதற்கு செம்மண்ணின் செழுங்கிளைகள் என்ற பெயரே நல்ல சான்றாகத் திகழ்ந்திருக்கும்.. ஆனால் அது பின்னர் கொலு வீற்றிருந்த குரும்பைநகராகி உறவுகளை தழுவியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போலவே தாயார் மாணிக்கத்தையும் தந்தையர் ஐயாத்துரையும் நினைவு கூரும் வகையில் இந்த மணி விழா மலருக்கு மாதுரை அல்லது ஊரை யும் உதிரத்தையும் குறிப்பிடும் வகையில் குருமணி என்று பெயரிருக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டர். அதுவும் ஜெகஜீவிதம் ஆகியது.

மண்ணுக்காகவும் மற்றவர்களுக்காகவும் வாழும் இதயங்கள் கடவுளின் நிழல்கள் என்பதற்கு குரும்ப சிட்டி ஜெகதீஸ்வரன் நிஜமான ஆதர்சம். இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனின் சேவை இன்னும் பல்லாண்டு தொடர இதய நல்வாழ்த்துக்கள். ஃஃஃ



இளவாலை எஸ். ஜெகதீசன் விழா நாயகருடன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம் மண்ணின் செழுங் கிளையோன்



1970 களின் ஆரம்பத்தில் ஜெகா

இன்று அகவை அறுபதில் கால் பதிக்கும் ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்களுடன் ஒரு உடன் பிறவா சகோதரராக, சைவமும் தமிழும் தளிர் நடை போட்ட நம் ஊராம் குரும்பசிட்டியிலே அயல் வீட்டுக்காரராக, கணிதபாடத்தை கற்றுத்தந்த ஆசிரியராக, குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா சக அங்கத்தவராக பல்வேறு கால கட்டங்களிலும் தொடர்பு கொண்டு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்ததால் இவரின் மணி விழாக் குழுவில் அங்கம் வகிக்கவும் ஒரு சிறிய கட்டுரையை எழுதவும் வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

ஆயிரத்து தொழாயிரத்து எண்பத்தொன்று அக்டோபர் மாதம் தான் பிறந்து வளர்ந்த நேசித்த மண்ணை விட்டு, நாட்டைவிட்டு வெளியேறி புலம் பெயர்ந்த மண்ணில் இன்று பல்வேறு ஆளுமைகளை எல்லாம் தனக்கே உரியதாக்கிக் கொண்ட ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்கள் இலக்கியப் பணி, சமூகப்பணி, மொழிப்பற்று, மண்பற்று போன்ற பொதுவிடயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுடன் மட்டும் நின்றுவிடாது தான் உயிராக மதிக்கும் தாயாருக்கு சிறந்த மகனாக, இளைய சகோதர சகோதரி களுக்கு பாசமிகு அண்ணனாக, மோகனா அக்காவிற்கு ஆழமாக நேசிக்கும் அருமைக் கணவனாக பிள்ளைச் செல்வங்களான அஜந்த், அஷ்லி இருவருக்கும் அன்பான தந்தையாக எல்லாவற்றிற்கும் மேலாக தன்னுடைய மனைவியின் வயோதிபப் பெற்றோரை அன்றாடம் கவனிக்கும் அருமை மருமகனாக வாழ்ந்து வருவதை நான் என் கண்கூடாக பார்த்தேன் - பார்க்கிறேன்.

இவரது பன்முகத்திறமைகள், நற்பண்புகள் யாவற்றையும் உற்று நோக்கி சற்று சிந்தித்துப் பார்ப்போமேயானால் இதன் பெருமை எல்லாம் இவரது பெற்றோரான மறைந்த திரு. ஐயாத்துரை, திருமதி. மாணிக்கம் அவர்களையே சாரும். சிறுபராயத்திலே இவரது தந்தையாரே ஆசானாக வும், வழிகாட்டியாகவும் இருந்ததையும் அவரிடம் காணப்பட்ட பல அரிய விடயங்களை உள்வாங்கிக் கொண்டமையையும் ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்களுடன் பேசும் தருணங்களில் என்னால் அவதானிக்க முடிந்தது. ஓரளவே படித்திருந்த திரு, திருமதி ஐயாத்துரை அவர்களுக்கு 1952ம் வருடம் ஐப்பசித் திங்கள் 8ம் நாள் மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் இன்று இந்தளவில் பலதரப்பட்ட மக்களாலும் பேசப்படவும், எழுதப் படவும், பாராட்டப்படவும், விழா எடுக்கப்படவும் தகுதியுடையவராகத் திகழ்கிறார் என்றால் அதற்கு அவரது தாய் தந்தையரே வித்திட்டனர் என்று கூறினால் அது மிகையாகாது. அதனை அவரே பல்வேறு சந்தர்ப்பங்களில் எம்மிடையே நடைபெற்ற உரையாடல்களில் ஒத்துக் கொண்டும் இருக்கிறார்.

இவரது பெற்றோர் இறைபக்தியுடையவர்களாகவும், கண்ணியமானவர் களாகவும், பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். இவரது தாயார் திருமதி மாணிக்கம் அவர்கள் தான் கொண்ட பெயரிற்கு மிகவும் ஒப்பானவர். அவருடைய அகமும், முகமும் ஒரே நிறம். மாணிக்கம் தான் அவர் குணத்தில். அவரை அறிந்தவர், பழகி யவர் அதனை அறிவர். எந்தக்காலத்திலும் அவர் உரத்த குரலில் பேசியதையே பக்கத்து வீட்டில் வசித்தும் நாம் கேட்டறியோம். இந்த இடத்தில் இவரது தந்தையார் திரு. ஐயாத்துரை அவர்களைப் பற்றி எனக்குத் தெரிந்தளவில் சிறிது குறிப்பிடுவது அவசியமாகிறது.

திருமதி. யசோதா அரவிந்தன்
சங்கீத ஆசிரியை,
தலைவர், குரும்பசிட்டி நலன்புரி சபை ~ கனடா
செயலர்,
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் மணிவிழா குழு ரொரன்ரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது, நான் சிறுமியாக இருந்த காலகட்டம். நாங்கள் அனைவரும் இவரது தந்தையாரை ஐயாத்துரை மாமா என்றே அழைப்போம். அவர் எமது முத்துமாரி அம்பாள் ஆலயத்தினருகில் ஒரு வியாபார நிலையத்தை நடாத்தி வந்தமையினாலும் கோயிலிலே அதிக நேரம் செல விட்டு வந்ததினாலும் அவருடன் பழகும் வாய்ப்பு சிறுவர்களாக இருந்த போதிலும் எமக்கு கிட்டியது. எப்போதுமே விபூதி பட்டை தீட்டப்பட்ட அவரது சாந்த மான முகமும் கனிவாக பழகும் விதமும் அனைவரை யும் கவர்ந்தீர்க்கும் தன்மை கொண்ட பாங்கும் ஐயாத் துரை எனும் அந்த அற்புதமான மாமனிதரை என் நெஞ்சில் அடையாளப் படுத்திக்கொண்டிருக்கின்றன. எம் போன்ற சிறுவர் சிறுமியர்களைக் கூட அவர் ஒரு போதும் மரியாதைக் குறைவாகவோ அல்லது ஒருமைப் பட விழித்துப் பேசியதையோ நான் கேட்டதில்லை. அவ்வளவுக்கு கனிந்த குரலில் அமைதியான, நாகரீக மான பேச்சே அவரது நாவிலிருந்து வெளிவரும். ஐயாத்துரை மாமா அவர்கள் தனக்கென தன் குடும்பத்திற்கென என்று மட்டுமே சிந்திக்காத, வாழாத ஒருவர்.

இவர் குரும்பசிட்டியிலே தங்களுக்குரிய நிலத்தைக் கூட மனைவியின் உறவினர்களுக்கே திருப்பி எழுதிக் கொடுத்த சம்பவத்தை அறிந்து நான் ஆச்சரியப் பட்டேன். சாதாரணமான ஒரு குடும்பத் தலைவன் முதலில் தான், தனது மனைவி பிள்ளைகள், அவர் களுக்கு சொத்து சேர்த்துக் கொள்ளவேண்டும் எனத் தான் யோசிப்பான். இந்தளவிற்கும் தமக்கென சொந்தமாக ஒரு இருப்பிடத்தை தேடிக்கொள்ளாத நிலையில் பொதுவாக எவரும் இப்படியான காரியத் தைச் செய்ய முன்வரமாட்டார்கள். "தனக்கென வாழாப் பிறர்க்கினியன்" மறைந்த திரு. ஐயாத்துரை அவர்கள்.

ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்களே தனது தந்தை யாரைப்பற்றிக் கூறியது எனக்கு இப்போ நினைவிற்கு வருகிறது. இவரது வாலிபப் பருவத்தில் பெண் சினேகிதிகளிடம் இருந்து வரும் கடிதங்களைக்கூட தபால் உறை பிரிக்கப்படாத நிலையில் எந்தவித சங்கோஜமுமின்றி அப்படியே தன்னிடம் கொண்டு வந்து தருவதாக கூறியிருந்தார். இன்றுவரை, தனது தந்தையார் தன் மேல் வைத்திருந்த நம்பிக்கை, மரியாதை, பாசம் எல்லாவற்றையும் எண்ணி பெருமை யுடன் நினைவு கூர இவர் தவறுவதில்லை.

ஓரிரு மாதங்களிற்கு முன்னர் எங்கள் ஊர் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது ஜெகதீஸ் வரன் அண்ணா அவர்களுக்கு மணிவிழா எடுக்கப்பட இருப்பதாக தெரிவித்தேன். உடனே அவர் அதற்கு யார் வீரமறவன் ஐயாத்துரை அண்ணனின் மகனுக்குத் தானே?" எனக் கேட்டார். எனது முகபாவனையை விளங்கிக் கொண்ட அவர் "ஏன் ஊரவர் வீடு கொள்ளை யடிக்கப்படுவதை உணர்ந்த அவர் ஆயுதம் தரித்தவர் முன் அதனைத் தடுப்பதற்காக நிராயுதபாணியாக நின்று போராட முற்பட்டு சூடுபட்டிறந்தமை வீரமறவன் இல்லையா" என விளக்கம் தர முயன்றார். அந்தக் கணம் அன்று நடந்த சம்பவத்தை மீட்டுப்பார்த்த பொழுது என்னையறியாமலே என் கண்கள் கலங்கின. அத்துடன் எங்கள் ஊரவர்கள் அவரை ஒரு "HERO" ஆக தங்கள் மனதில் வைத்திருப்பதையும் என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

என்ன ஒரு திகில் நிறைந்த துக்ககரமான சம்பவம் அது. 1981 ஜனவரி மாதம் 7ம் திகதி மதிய நேரமாக இருக்கலாம், அன்றைய தினம் தான் எமது அழகிய அமைதியான, சந்தோஷமான ஊரில் முதல் முதலாக துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டிருக்கும் என நினைக் கிறேன். அன்று அநியாயமாகப் பறிக்கப்பட்ட நல்லுள்ளம் கொண்ட ஐயாத்துரை மாமாவின் உயிரை எண்ணி சிறியவர் பெரியவர் என மொத்தக் கிராமமுமே கதிகலங்கி, அதிர்ச்சியுற்று, ஸ்தம்பித்து நின்றது. அவரது இழப்பு குடும்பத்தினர்க்கு மட்டுமின்றி எமது ஊரிற்கே பேரிழப்பாகிப்போனது. இப்படிப்பட்ட ஊர்ப் பற்றுக் கொண்ட தந்தைக்கும் உன்னதமான தாய்க்கும் மகனாகப் பிறந்தமை பெருமைக்குரியதே.

மற்றுமோர் விடயத்தை நான் இங்கே பகிர விரும்பு கிறேன். ஒரு நாள் மதிய நேரத்திற்கு சற்று முன்னதாக தொலைபேசியில் ஜெகதீஸ்வரன் அண்ணா அவர் களுடன் குரும்பசிட்டி மீள் கட்டுமானப்பணிகள் சம்பந்த மாக பேசிக்கொண்டிருந்த சமயம் அவர் திடீரென (கடி காரத்தை பார்த்திருப்பார் என நினைக்கிறேன்) ஐயோ நேரமாகி விட்டது இப்போ துண்டித்துக் கொள்கிறேன், பின்பு தொடர்ந்து பேசிக்கொள்வோம் என்றார். ஏன் எனக்கேட்டதற்கு அவரது மாமனார் மாமியாருக்கு மதிய உணவு அருந்தும் நேரம் நெருங்கிவிட்டது தான் உணவு தயார் செய்து கொடுக்க வேணும் என்று கூறி தொடர்பினைத் துண்டித்துவிட்டார். இப்படி ஒரு மரு மகனைப் பெற அவர்கள் என்ன தவம் செய்தனரோ என என் மனதில் எண்ணிக்கொண்டேன். சொந்தப் பெற்றோ ரையே வயோதிப நிலையங்களிலும், அனாதை இல்லங் களிலும், வைத்தியசாலைகளிலும் விட்டுவிட்டு வேலைப் பளு, நேரமின்மை என நொண்டிச் சாட்டுச் சொல்லி சென்று பார்த்து இரண்டொரு அன்பு வார்த்தை பேசவே முடியாத சூழலில் வாழும் மனிதர்கள் மத்தியில் இவரை நினைத்து நிச்சயமாக பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தந்தை யாரும் இதே போலவே தனது தாய் தந்தையினரையும் மனைவியின் பெற்றோர் இருவரையும் அவர்களின் இறுதிக்காலம் வரை அன்புடன் பராமரித்து வந்தார் எனக்கேள்விப்பட்டது ஒரு கணம் மனதில் தோன்றி மறைந்தது. தந்தைக்கு தப்பாமற் பிறந்த தனயன் - ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்கள்.

ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலயத்திலும் நடுநிலைக்கல்வியை தெல்லிப் பழை யூனியன் கல்லூரியிலும் க.பொ.த உயர்தரக் கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியிலும் கற்றுத்தேறினார். இவர் கல்லூரிக் காலங்களில் மிகவும் துடிப்புடன் அநியாயங்கள் எங்கு நடந்தாலும் தட்டிக் கேட்கும் துணிச்சலுடனும் நியாயத்திற்காக போர்க் கொடி உயர்த்தும் இளைஞனாகவும் இருந்திருக்கிறார். கல்வியில் திறமை மிக்க மாணவனாக திகழ்ந்த மையினால் பல தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரியராகவும் பணி புரிந்தார்.

பின்னர் கொழும்பு சென்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கணக்கியல் பிரிவில் தனது முதலாவது உத்தியோகத்தை தொடங்கி இருந்தாலும் அங்கிருந்தவர்கள் சிலரின் நீதியற்ற போக்கினை ஓரிரு வார காலங்களிலேயே அவதானிக்க முடிந்ததால் அந்த வேலையை விட்டு விலகிக்கொண்டார். சமூகத் தூய்மையினை விரும்புபவர்களுக்கு சமுதாயத்திலே போலியாக நடிப்பதென்பது முடியாத காரியமாகும். இவரது இளமைக் காலத்திலிருந்தே இதனை இவரிடம் அவதானிக்கக்கூடியதாக இருந்திருக்கிறது. அதன் வெளிப்பாடே இவர் தனது பத்தொன்பதாவது வயதில் எழுதிய கறுப்புப்பால், கதவைத்திறவுங்கள் போன்ற சிறுகதைகள். எந்தக்கால கட்டத்திலும் சமூகத்தை ஏமாற்றி வாழும் மனிதப் பிறவிகளுக்கெதிராக வெளிப் படையாக கருத்துத் தெரிவிக்கவோ தன்னெதிரில் நடைபெறும் தீமையான காரியத்தை எதிர்க்கவோ இவர் தயங்கியதே இல்லை. இவரது இந்தக் குணம் பல வேளைகளில் சில பேருக்கு எரிச்சலை ஊட்டி இருப்பதையும் அறிந்திருக்கிறேன்.

அதன் பின் இலங்கை அரசின் சிறுகைத்தொழில் அமைச்சுப் பிரிவிலும் அதனைத் தொடர்ந்து புடவைக் கைத் தொழில் அமைச்சுப் பிரிவிலும் தனது பணியினை மேற்கொண்டார். பின்னர் 1981 ஜனவரியில் நடைபெற்ற அனர்த்தத்தினால் தந்தையாரை இழந்து நின்ற பொழுது, அப்போ புடவைக் கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளராக இருந்த கலாநிதி. பி..ஏ..ரி குணசிங்க அவர்கள் ஜெகதீஸ்வரன் அண்ணா மீதிருந்த நல்லபி-மானத்தினால் தாமே நேரில் வந்து துக்கம் தெரிவித்துக் கொண்டது மட்டுமின்றி இவர் குடும்பத்துடன் தங்கி இருந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் பணி புரிய ஆவன செய்ததாகவும் அறிந்தேன். பின் சிறிது காலத்திலேயே குடும்பம் முற்றாக தலைப்பிள்ளையாகிய இவரின் பொறுப்பு என்றான நிலையில் நாட்டைவிட்டு வெளிநாடு செல்ல முடிவு செய்தார்.

முதலில் பிரான்சு நாட்டிற்கு புலம் பெயர்ந்தார். அங்கும் தன் குடும்ப சுமை ஒரு புறம் இருக்க அத்தோடு மட்டும் இருந்துவிடாது அங்கு தஞ்சம் அடைந்திருந்த தமிழ் இளைஞர்களையும் ஒருங்கிணைத்து அவர்களது நலன் கருதி "மாந்தலாயொலி நலன்புரிச் சங்கம் என்ற சங்கத்தினை நிறுவினார் . இது எந்த நிலையிலும் அவரின் அடிமனதில் புதைந்திருந்த சமூக சிந்தனையினதும் ஏதாவது செய்யவேணும் என்ற உத்வேகத்தினதும் வெளிப்பாடு என்று தான் எண்ணுகிறேன்.

பின்னர் கனடா நாட்டிற்கு புலம்பெயர்ந்து முதலில் கியூபெக், மொன்ரியாலில் வாசம் செய்த போதும் இவர் சும்மா இருக்கவில்லை. அங்கும் தமிழர் ஒளி என்ற அமைப்புடன் இணைந்து கொண்டு நற்பலனளிக்கும் பல திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தார். இங்கே இவர் ஒரு சிறந்த எழுத்தாளனாக வாரப்பத்திரிகை களுக்கு எழுதிய "புகையிலைக்காம்பு", "ஒரு ஓணான் தலையாட்டுகிறது", "நான் ஒரு கோழை" போன்ற சிறுகதைகள் குறிப்பிடப்படக்கூடியன. அதன் பின் ஆண்டு இரண்டாயிரத்தில் இவர் எழுதிய சிறுகதைகள் "இங்கேயும் மனிதர்கள்" என்ற பெயரில் சிறுகதைத் தொகுதியாக ஸ்காபரோ சிவிக் சென்ரறில் வெளி யிடப்பட்டது.

பின்னரும் தனது தாய்மேற் கொண்ட அதீத பற்று தலினால் "மாணிக்கப்பரல்கள்" என்ற கவிதைத் தொகுப்பினையும் தாய் மண்ணாம் குரும்பையூரின் சுவடுகள் அழிந்து போகாது வரலாற்றுப்பதிவாக அமையவேணும் என்ற, பல காலம் மனதில் வேரூன்றி இருந்த ஆசையினால் "கொலுவீற்றிருந்த குரும்பை நகர்" என்ற ஆவணப்பதிவையும் புத்தகவடிவம் கொடுத்து 2008 ம் ஆண்டு வெகு சிறப்பான முறையில் மண்டபம் நிறைந்த பெருமக்கள் முன்னிலையில் ஸ்காபறோ கனடா-கந்தசாமி கோவில் மண்டபத்திலே வெளியிட்டு வைத்தார். காலம் செய்த கோலம் காரண மாக நாம் பிறந்த மண்ணைவிட்டு நீங்கி, உறவுகளைப் பிரிந்து, உலகம் முழுவது சிதறி, முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரச் சூழலில் வாழ்ந்தாலும் பெற்றதாயையும் பிறந்த ஊரையும் பெருமைப்படுத்தத் தவறாத இவரை வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்திருந்த பெரும் பாலான மக்கள் மனதார வாழ்த்திச்சென்ற காட்சியை அன்று நான் பார்த்தேன். "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே".




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம்திகதி ரொறொன்ரோ கனடாவில் தோற்றுவிக்கப்பட்ட எமது குரும்பசிட்டி நலன்புரி சபையில் இன்றுவரை இவரது பங்களிப்பு, தன்னலமற்ற சேவை என்பது மிக முக்கியமான ஒன்றாக இருப்பது எமதூரவர்கள் யாவரும் அறிந்ததே. இவருடைய தலைமைக் காலமாகிய 1997 காலப் பகுதியிலே தான் இச் சங்கமானது ஒன்ராரியோ மாகாணத்தில் இலாப நோக்கற்ற நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

இதற்கான அமைப்புவிதி ஒன்றினை உருவாக்கவும் இலச்சினை, மன்றகீதம் போன்றன அமையவும் பெரு முயற்சி எடுத்தவர் இவர். பின் 1999 இல் தாயகத்தில் அல்லலுறும் அனாதைச் சிறுவர்களில் வருடம் ஒன்றிற்கு 15பேரைத் தன்வசம் பொறுப்பெடுத்துப் பராமரிப்பதென சபை தீர்மானிப்பதற்கு திட்டம் ஒன்றை வகுத்துக் கொடுத்தவரும் இவரே.

இங்குள்ள எம்மவரின் இலைமறை காயாக இருக்கும் கலைத்திறனை வெளிக்கொணரவும், ஊக்குவிக்கவும், அறிஞர், கலைஞர்களை நினைவு கூரவும், பாராட்டிக் கௌரவிக்கவும் என பல நோக்கங்களைக் கொண்ட வருடாவருடம் நடாத்தப்படும் முத்தமிழ்க் கலைவிழா விற்கும் ,விழா மலரிற்கும் "பொன் வயல்" என்ற பெயரைச் சூட்டியவர் என்ற பெருமையும் ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்களையே சாரும். இவர் செயற்குழுவில் அங்கம் வகிக்காத காலங்களில் கூட நடைபெற்ற கௌரவிப்பு விழாக்களில் பங்கேற்று குரும்பசிட்டி இரா. கனகரட்ணம் அவர்களுக்கு "ஆவண ஞானி" என்ற பட்டத்தையும் கவிஞர். கந்தவனம் அவர்களுக்கு "இலக்கிய வித்தகர்" என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவிக்கப்பட மூல காரணமாக அமைந்தார்.

15 வருடங்களாக கிரமமாக இயங்கி வந்த எமது நலன் புரி சபை 2008ம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து 2009 வரை, இயக்கமற்ற அல்லது கிட்டத்தட்ட உறங்கு நிலையில் இருப்பதை அறிந்த ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்கள் தூக்கமின்றி அல்லாடினார். அதை நான் அவர் பேச்சிலிருந்து உணர்ந்து கொண்டேன் அப்போது. எப்படியாவது பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு சமூகப் பணிகளில் முழுமனதுடன் ஈடுபடக்கூடியவர் களை அங்கத்தவர்களாகக் கொண்ட புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என பெருமுயற்சியை மேற்கொண்டார். இதற்காக கடந்த காலங்களில் அர்ப்பணிப்புடன் சங்கத்தில் ஈடுபட்ட வர்களுடன் எல்லாம் தொடர்பு கொண்டு, 2009 டிசம்பர் மாதத்தில் பொதுக்கூட்டத்தை கூட்டினார். ஓரளவு வயதில் குறைந்த சுறுசுறுப்பான இளைய சமுதாயத் தினரையே அங்கத்தவர்களாக தெரிவுசெய்ய வைத்து ஒரு நல்ல நிர்வாக சபை அமைய மிகவும் பாடுபட்டார்.

இதன் பின்னரேயே "ஊர்க்காற்று" எனும் சர்வதேசத் திலும் வாழும் எமதூரவர் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு நாட்டில் கூடும் நிகழ்வு கனடாவில் 2010 ம் ஆண்டு ஜூலை மாதமளவில் நடைபெற இருப்பதாக முடிவு செய்யப்பட்டது. அதையும் உரியமுறையில் ஒழுங்குகளை மேற்கொண்டு விழா ஒருங்கிணைப்பாளர் என்ற பெயருடன் முற்று முழுதாக தனது சொந்த வீட்டு நிகழ்வினை விட மேலாக நினைத்து தனது தேக நலனையும் பொருட்படுத்தாது சிறப்பாக நடந்தேற முழுமுதற் காரணமாக இருந்தவரும் ஜெகதீஸ்வரன் அண்ணாவே. இந் நிகழ்வு திறம்பட நடைபெறவும் இவ்வொன்று கூடல் மூலம் தாயகத்தில் சிங்கள அரசின் அதியுயர் பாதுகாப்புவலயத்தினுள் அகப்பட்டி ருக்கும் எமது கிராமம் விடுவிக்கப்பட்டு மீள் எழுச்சி ஒன்று உருப்பெறவோ அல்லது ஒரு பெரிய ஆக்க பூர்வமான செயற்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படவோ வேண்டும் என பெரிதாக எண்ணி இருந்தார். அனால் அவர் நினைத்தளவிற்கு அந்நிகழ்வு வெற்றி பெற வில்லை என்றே என்னால் கூறிக்கொள்ள முடியும். இவர் சாதாரணமாகவே ஊர் முன்னேற்றம் பற்றிய கனவுகளைக் காணும் போது அது நடைமுறைக்கு சாத்தியப்படுமோ இல்லையோ அதிகமாகப் பெரிய அளவிலேயே காண்பார்- பாரதி கண்ட கனவு போல். ஆனாலும் ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் முன்னைய வருடங்களில் நடைபெற்ற ஊர்க்காற்று நிகழ்வுகளை விட பல மடங்கு சிறப்பாகவும் நேர்த்தியா கவும் நலன்புரிச் சபையினர் நடாத்தி முடிப்பதற்கு மூலாதாரம் இவர் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என நம்புகிறேன்.

ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இந்த ஊர்க்காற்று நிகழ்வுக்கான அவரது அர்ப்பணிப்புடனான பங்களிப்பு எவ்வளவு தூரம் இருந்தது என்பதை என்னால் என் எழுத்துகளில் அடக்கிவிட முடியவில்லை. இதனை நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவராகவும் ஊர்க் காற்று குழுவில் இவருடன் சேர்ந்து ஈடுபாட்டுடன் கலந்து கொண்ட ஒரு அங்கத்தவராகவும் இருந்தமை யினாலேயே எனக்கு நன்றாக உணரக்கூடியதாக இருந்தது. இந் நிகழ்வினை நடாத்தி முடிப்பதற்குள் இவர் அதே மாதத்தில் அவரது உடலும் மூளையும் தமது சக்திக்கு அப்பாற்பட்டு இயங்கியதால் இருமுறை அவரது வேலைத்தலத்தில் இருந்தே நேரடியாக வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டதை எம்முடன் இருந்த மற்றையவர்கள் மறந்தார் களோ என்னவோ என்னால் இன்னமும் மறக்கமுடிய வில்லை.

ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்கள் ஊர்க்காற்று தினத்திலன்று இசைக்கப்பட என்று எமது கிராமத்திற் கான ஒரு கீதத்தையும் இயற்றி இருந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காரிருள் சூழக் கடிதளை கவ்வ ஈர்பத்து ஆண்டாய் இடருறும் தாயே... ஊறுகள் நீங்கி ஒளி பெற வேண்டும் வீறுடன் முன் போல் விளங்கிட வேண்டும்" இந்த வரிகள் மனதில் இன்னும் நிற்கின்றன. அவர் எண்ணியதைப் போலவே ஒரு வருட காலத்திற்குள்ளேயே எமது கிராமத்தின் ஒரு பகுதியாவது விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றத்திற்கான அனுமதியும் வழங்கப்பட்டு விட்டது.

அங்கே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் மீள்கட்டுமானப்பணிகளிற்கு இன்னும் தனது ஆதர வையும் நிதிப்பங்களிப்பினையும் ஆலோசனைகளையும் தாராள மனதுடன் வழங்கிக் கொண்டிருக்கிறார். எவ்வளவோ பிரச்சனைகளுக்கு மத்தியில் மேற்குலக வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எமது மண்ணிற்கு இவர் ஆற்றிய, ஆற்றும் சமூக சேவைக் காகவும் இன்னமும் பிறந்த மண்ணை ஆத்மார்த்தமாக நேசிப்பதற்காகவும் இவர் வாழும் போதே கௌரவிக் கப்படவும், பாராட்டப்படவும் வேண்டியது குரும்பசிட்டி மக்களாகிய எமது கடமை என்றே கருதுகின்றேன்.

இன்று மணிவிழாக் காணும் ஜெகதீஸ்வரன் அண்ணா அவர்களும் அவர் தம் பாரியாரும் குடும்பமும் இன்று போல் என்றும் நலமாக வாழ்ந்து, அவர் தன் பன் முகநற்பணிகள் தொடர்ந்து, நூற்றாண்டு விழாக்காண வேண்டும் என எல்லாம் வல்ல குரும்பசிட்டி முத்துமாரி அம்பாளை எனது சார்பிலும் என் குடும்பத்தவர் சார்பிலும் வேண்டி வாழ்த்துகிறேன்.



திருமதி யசோதா அரவிந்தன் குடும்பத்தினருடன் ஜெகா இணையர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சிந்தனையாளர்

சிறுவயதிலிருந்தே ஜெகதீஸ் ஒரு மிகச்சிறந்த சமூக சிந்தனையாளனாக, சமூக அமைப்புக்களே தனிமனித, சமூக மேம்பாட்டின் ஆதார சுருதிகள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராக, அந்த அமைப்புக் களின் வளர்ச்சிக்கான யாகத்தில் தன்னைத் தானே ஆகுதியாக்கிய வராக, தாய் மண்ணின் மீது விடுதலறியா விருப்பும் பற்றும் பாசமும் கொண்டவராக, கலை இலக்கியத்தினூடாக புதியதோர் உலகம் செய்யப் புறப்பட்ட ஆக்க இலக்கியவாதியாக எவ்வாறு வீறுடன் இன்றுவரை செயற்பட்டு வருகிறார் என்பதனை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். அது வெள்ளிடை மலை.

தான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெற வேண்டும் என்ற பேராண்மை யோடு வாழ்ந்து வரும் ஜெகதீஸ் தான் பட்ட துன்பம் பிறர் படக்கூடாது என்ற இலட்சிய வெறியோடு ஒரு சமூகப் போராளியாகவும் வாழ்ந்து வருகிறார். "எமது கிராமத்தின் வேர்களை மட்டும் தேடுவதை விடுத்து எங்கள் விழுதுகளையும் அடையாளம் காட்ட வேண்டிய கடமை எமக் குண்டு" எனத் தெரிவிக்கும் ஜெகதீஸ் அதற்கு மேலாக உலகமெல்லாம் பரந்து வாழும் விழுதுகள் சீரோடும் சிறப்போடும் செழிப்போடும் வாழ் வதற்கு மண்ணின கீழ் புதைந்துள்ள எமது மூதாதையர்கள் என்கின்ற மூலவேர்கள் வலுவூட்டும் என்ற நம்பிக்கையும் வலுவூட்ட வேண்டும் என்பதில் பேராவலும் கொண்ட பெருநோக்குடையவராக வாழ்கிறார்.



1990களில் இருந்து அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் சேதமுற்ற நிலையில் இருக்கும் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்

எமது கிராமம் மகத்துவமும் மகோன்னதமும் தனித்துவமும் பெறப் பாடுகள் பலபட்ட சிற்பி பிதாமகன் ஈழகேசரி பொன்னையா அவர்களின் மரணத்தின் போது சோ.தியாகராசன் அவர்கள் பாடிய பாடலின் சில-வரிகள் இவருக்கும் பொருந்தும்.

கூலிக்கு மாரடிக்காத முயற்சி
குணம் பல கொண்டு
மலர்ந்த அரும்பு
போலிச்சரக்கல்ல
ஆண்மையில் வாழும் ஜெகதீஸ்

என்ற எனது கருத்து உயர்வு நவிற்சியின் பாற்பட்டதல்ல. அது எனது உள்ளக்கிடக்கை. உள்ளக்கிடக்கை எல்லோரினதும் பிறப்புரிமை. விமர்சனம் செய்தல் அனைவரினதும் உரிமை. விமர்சனத்தை ஏற்பது அவரவர் கடமை.

குரும்பசிட்டி தன்னேரில்லாச் சிறப்பும் பாடறிந்து ஒழுகும் பண்பாட்டுப் பெருமையும் கொண்ட ஒரு நல்ல கிராமம். ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து பரஸ்பரம் நல்லெண்ணத் தினை வளர்த்து மற்றவருக்கு நன்மை செய்யாவிட்டாலும் கெடுதி செய்யாமல் மற்றவனுடைய நல்வாழ்வில் அழுக்காறு கொள்ளாமல் ஆற்றலும் அறிவுத்திறனும் கொண்ட ஆக்க சக்திகளாக கலை இலக்கியம் விளையாட்டு என்று ஆய கலைகளில் எல்லாம் துறைபோனவர்களாக பொது விடயங்களில் தாமாகவே முன்வந்து ஆர்வத்துடனும் அர்ப்பணிப் புடனும் அயராது அல்லும் பகலும் ஒன்றித்து ஒன்றுபட்டு ஒற்றுமையாகப் பழுதிலா சிறப்புடன் நேர்த்தியாக உழைக்கின்ற நேர்மை நீதி நியாய தர்மங்களுக்கு தாமாகவே கட்டுப்பட்டு ஒற்றுமையாக அமைதியாக ஆனந்தமாக தம்மளவிலே திருப்தி உடையவர்களாக வாழ்ந்த வாழ்கின்ற வாழப்போகின்றவர்களாக எமது மக்கள் உலகின் எந்த எந்த மூலைகளில் இருந்தாலும் காணப்படுவது தான் எமது கிராமத்தின் தனிச்சிறப்பாகும்.

திரு. வ. கிருஸ்ணசாமி
உள்ளூராட்சி
முன்னாள் உதவிஆணையாளர்
குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி
சங்கத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோ நாளையோ என்று தெரியாத தமது வாழ் நாளில் பிறிதொரு மனிதனுக்கோ மனிதர்களுக்கோ இன மத பேதங்களைக்கடந்து யாதும் ஊரே யாவரும் கேளிர் மனித குலமொன்றே என்ற மாண்புறு மானிட நேயக் கொள்கையுடன் தனித்தோ கூட்டாகவோ தமது இயல்பளவுக்கேற்ப உதவி சேவைகளைச் செய்வதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்களாக எமது கிராமத்து மக்கள் இரந்து உண்ணுவதையோ பறித்து உண்ணுவதையோ கேவலமாகக் கருதி உழைத்து உண்டு மண்ணில் நல்லவண்ணம் கௌரவமாக மிளிர்கின்றனர்.

இந்த மதிப்பீடு காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற கருது கோளின் பாற்பட்டதோ அல்லது மண்மீது கொண்ட பற்று பாசவெறித்தனத்தின் எதிர் வினையோ அல்ல. உங்களைப்பற்றி உங்கள் அயலவர் என்ன பேசிக்கொள்கின்றனர் என்பதனை ஒட்டுக்கேட்பதன் மூலம் இதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முடியும். புறஞ் சொல்லுதல் சமூக நாசத்தின் நச்சுவித்து என்று பாப்பாவிற்கு சொல்லப்பட்டது போல ஒட்டுக் கேட்பதும் தீமையின் விளை நிலம் தான் என்றாலும் பொய்மையும் வாய்மையிடத்து என்பது போல பொது நன்மை பயக்குமெனின் ஒட்டுக்கேட்பதும் கால நேர சூழ்நிலைக்கு ஏற்ப தவறல்ல.

இது சம்பந்தமாக கந்தையா குலசேகரம் அவர் களுடைய கல்வெட்டிலே நான் பதிவு செய்துள்ள அவருடைய கருத்துக்களை மீளப் பதிவு செய்வதில் தவறொன்றுமில்லை என நினைக்கிறேன். தன்னோடு உரையாடுகின்ற வேற்றூரவர்கள் "நீங்கள் குரும்ப சிட்டியை சேர்ந்தவர் தானே? என்று கேட்பார்களாம். "அது என்ன மாதிரி உமக்கு தெரியும் என்று தான் கேட்டால் "உமது முகம் சொல்கிறது, உமது உடல மைப்பு சொல்கிறது, உமது பேச்சும் பேசுகின்ற விதமும் சொல்கிறது, உடை நடை பாவனை நடத்தை கோலங்கள் எல்லாம் சொல்கின்றன என்பார்களாம். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இந்தப் பொதுப்பண்பு ஏழை பணக்காரன் படித்தவன் படியாத வன் சிறியவன் பெரியவன் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி எம்மூர் மக்கள் சகலரிடமும் பொதிந் திருக்கிறது. இந்தப் பண்புகளைக் கொண்ட ஆளுமை உடையவர்களாகவே எல்லாரும் விளங்குகின்றனர்.

இந்த பொதுவிதிக்கு ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் விலக்குடையவராக இருக்க முடியாது. இச் சிறப்புக் களை நாம் எங்கிருந்து பெற்றோம்? எமது மூதாதையர் களிடமிருந்து வாழையடி வாழையாக முதுசமாக பெற்றுக் கொண்டோம். எப்படிப் பெற்றோம்? அடக்கு வோரும் அடங்குவோரும் இல்லாத காரணத்தால் சகலரும் சங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பெற்றோம். தமது சிந்தனையால் செயற்பாட்டினால் இப் பொதுப் பண்புகளை வளர்த்துக்கொண்டவர்கள் சிறப்புப் பண்பு டையவர்களாக சிறந்த ஆளுமை உடையவர்களாக உயர்ச்சி பெறுகின்றனர் - கிராமம் நாடு உலக மட்டத்தில் இவர்கள் நாயகர்களாக ஆதர்ச புருசர் களாக பேசப்படுவதற்கு இதுவே காரணம். இவர்களுள் ஒருவராக திரு. ஐயாத்துரை ஜெகதீஸ்வரனை நான் பார்க்கிறேன். இதன் கருத்து இவர் குறை ஒன்றும் இல்லாத முற்று முழுமையாக சிறப்புடைய ஒருவர் என்பதல்ல.

நான் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டது போல படைக்கப்பட்ட எதுவுமே பரிபூரணமானதல்ல. நல்லது, கெட்டது, பெருமை, சிறுமை என்பதெல்லாம் விகிதா சாரத்தினைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. 50 வீதத்திற்கு மேலாக இருக்கும் பண்பு தான் அதன் இடு குறிப்பெயராகின்றது. சுய விமர்சனம், பொது விமர்சனம் மூலம் தன்னை உணர்ந்து கொள்பவர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் என்று நினைக்கின்றேன்.

பிரபல்யங்களில் குறை கண்டு அவர்களை மட்டம் தட்டுவதற்கு ஒரு சிலர் கண்ணில் எண்ணெய் வார்த்துக் கொண்டு கண்துஞ்சாது பசி நோக்காது காத்திருப்பார் கள். அவர்கள் அவ்வாறு இருப்பதாற் தான் பிரபல்யங்களால், பிரபல்யங்களாக இருக்க முடிகிறது. எதிரி எம்மைப் பாராட்டினால் நாம் எங்கோ தவறு செய்கிறோம் என்பது அர்த்தம் என்று சொல்லுவார்கள். இந்த வகையில் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் சங்கச்செயற்பாடுகள் ஊடாக தனக்கும் பிறருக்கும் பய னுடைய வகையிலே எவ்வாறு ஒரு சமூக மனிதனாக வாழ்ந்தார். அவருடைய ஆக்க இலக்கிய செயற்பாடு களின் கனதி என்ன? அவருடைய ஊர்ப்பற்று எத்தகையது என்பதனைக் கவனிப்போம்.

மனிதர்கள் பல கோடி ஆனால் அவர்களுடைய வாழ்வின் குறிக்கோள் ஒன்றே. தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி - அதாவது தமது பொருளா தாரம், கல்வி, கலை, பண்பாடு, ஒழுக்கம் போன்ற துறைகளில் மேம்பாடு பெற்று நல்ல மனிதர்களாக, அமைதியுடனும், ஆனந்தத்துடனும் வாழவேண்டும் என்பதே மனித வாழ்வின் குறிக்கோள். நிலத்தினுடைய இயல்பை மழைநீர் பெறுவது போல சமூக சூழலின் தன்மையிலேயே குறிக்கோளின் சாத்தியம் தங்கி யுள்ளது. எனவே மனித நல்வாழ்விற்கு உதவக்கூடிய உத்தமமான சமூகத்தினை உருவாக்குவதற்குப் பொருத்தமான சமூக அலகு கிராமிய சமூகம் அல்லது அடிமட்ட சமூகமே என்பது சமூகவியலாளரின் கருத்து ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சமூகம் தானாக உருவாகாது. மந்திரத் தால் மாங்காய் விழுத்த இயலாது. மயிலே மயிலே இறகு போடு என்றால் போடாது. முயற்சி செய்தே நோக்கத் தினை அடைதல் வேண்டும். ஒரு ஆற்றைக் கடப்பதற்கு படகு அல்லது பாலம் தேவை.

அவையின்றி ஆற்றங்கரையிலிருந்து எவ்வளவு தான் குதித்துக் கூத்தாடினாலும் அக்கரை செல்லமுடியாது. எனவே பொருத்தமான கருவி மூலமே முயற்சி மேற் கொள்ளப்பட வேண்டும். பொருத்தமான கருவி இல்லாமல் எவ்வளவு தான் விசுவாசமாகவும், கடுமை யாகச் சிரமப்பட்டு முயற்சித்தாலும் முயற்சிக்கேற்ற பலனைப் பெறமுடியாது. இதனை உணர்ந்து தான் நமது மூதாதையர் நல்ல சமூகத்தை அமைப்பதற்குப் பொருத்தமான கருவி சங்கங்களே என்பதை அனுபவ ரீதியாகவும், அறிவுரீதியாகவும் தெரிந்து கொண்டு சங்கங்கள் ஊடாகச் சமூகப்பணி ஆற்றினர். நாடக அரங்கேற்றங்கள், விளையாட்டுக்கள், மங்கல, அமங்கல நிகழ்வுகள், கோவில் விழா, அரசடி, மடத்தடி, வெங்காயச் சங்கத்தடி, மலையாளம் கடையடி என்று பொது இடங்களில் சேர்பவர்கள் தமக்குள் ஒன்று கூடி உறவாடி ஒழுங்கமைக்கப்படாத முறைசாராக் குழுக் களாகச் செயற்பட்ட அனுபவம் பின்னர் ஒழுங்கமைக்கப் பட்ட முறைசார் சங்கங்கள் செயற்படுவதற்கு உறு துணையாக அமைந்தது.

இந்த வகையில் மிகச் சிறிய வயதில், இளமையிலே, வறுமை வாட்டி வதைத்தபோதிலும் செம்மை நெறியில் வாழ்வதற்காக சன்மார்க்க இளைஞர் மன்றம், வளர்மதி சனசமூக நிலையம் போன்ற அமைப்புக்களில் இணைந்து துடிப்புடன் நற்பணி ஆற்றிய ஜெகதீஸ் புலம் பெயர்ந்த நாடுகளில் பல்வேறு அமைப்புகளின் உருவாக்கத்திலும், அவற்றின் செயற்பாடுகளிலும் முனைப்புடன் செயற்பட்டார்.

1993 ல் ஆரம்பிக்கப்பட்ட குரும்பசிட்டி நலன்புரிச்சபை கனடா என்ற அமைப்பில் அதன் தலைவராகவும் உறுப்பினராகவும் இன்று வரை இருந்து அதனுடைய ஆரோக்கியமான வளர்ச்சிக்காகத் தன்னுடைய நேரத்தி னையும் பொருளையும் சிரமத்தையும் தானஞ் செய்த ஒரு தியாகியாகவும் அவர் விளங்கி வருகிறார். இடம் பெயர்ந்து அல்லற்பட்டு, ஆற்றமுடியாத அவலத்தில் உழலும் ஊர் உறவுகள் பற்றியே நாளும் பொழுதும் சிந்தித்து, அவர்தம் அவலங்கள் நீங்க, இடர்ப்பாடுகள் அகல சங்கத்தினூடாக நல்ல பல திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தியவர். ஏனைய புலம் பெயர் நாடுகளில் இத்தகைய அமைப்புக்கள் கருவிலேயே சிதைக்கப்பட்டு விட்டன என்பது துன்பம் தரும் கேள்விச் செய்தி.

குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம் தோற்றம் பெற்று உயிர் வாழ்வதற்கு குரும்பசிட்டி நலன்புரிச்சபை கனடாவே முழுக்க முழுக்க காரண மாகும். இன்று உருக்குலைக்கப்பட்டு நிர்வாண நிலை யில் சீரழியும் குரும்பசிட்டியின் மர்மஸ்தானத்தையாவது மறைப்பதற்குப் பொன்பரமானந்தர் வித்தியாலயத்தினை ஆரம்பித்தே ஆகவேண்டும் என்ற அசட்டுத் துணிச்ச லுக்குக் கைகொடுத்து உதவியது குரும்பசிட்டி நலன் புரிசபை கனடா அமைப்பே ஆகும். அவர்கள் குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையத்திற்கு ஏலவே வழங்கிய நிதி உதவியே இப் பணியைச் செய்வதற்கு உதவியது என்பதனை வார்த்தைகளுள் அடக்கமுடியா நன்றிப் பெருக்குடன் எமது கிராமத்து மீள் எழுச்சிச் செயற்பாடுகளின் சிற்பிகளாக விளங்கு கின்ற, பெயர் குறிப்பிடுவதை விரும்பாத இளைஞர் களும், யுவதிகளும் மற்றும் நல்லுள்ளங்களும் நினைவு கூருகின்றனர்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தது போன்று, சமூக மேம்பாட்டுக்கும், சமூகமாற்றத்திற்கும் சங்கம் அமைத்து செயற்பட வேண்டும் என்ற எண்ணம் திரு ஜெகதீஸ் வரனுடைய மூளைக்குள் வானத்திலிருந்து திடீரென விழுந்த ஒன்றல்ல. பெரிய வாத்தியார் (திரு பொன் பரமானந்தர்) 1900ம் ஆண்டு மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்காக ஆரம்பித்த பாடசாலையுடன், பக்கம் பக்கமாக மக்களுடைய கலை, கலாசாரம், ஒழுக்கம், பண்பாடு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக் காக அமைத்து நடாத்திய இந்து வாலிபர் சங்கம் (பின்னர் சைவ வாலிபசங்கம்), நன்மை விருத்திச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம் போன்றவற்றின் வழியிலே, 1934ல் ஈழகேசரி பொன்னையா வள்ளலி னால் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நற்பணிகள் ஆற்றிடும் "சன்மார்க்க சபையினை தொடர்ச்சியாகக் கொள்கை வழி நடைபெற்ற "குருஷேத்திர" போரின் பின்னர் தோற்றம் பெற்று அழிவு வழியிலன்றி, ஆக்க வழியில் போட்டிபோட்டுச் செயலாற்றிடும் சங்கங்களி னால் செம்மைப்படுத்தப்பட்டது எனலாம்.

மந்தைகள் நீர் அருந்துவதற்கு அமைக்கப்பட்ட கேணி, அதனருகு அமைந்த ஆவுரோஞ்சிக்கல், சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து இளைப்பாற அமைக்கப்பட்ட சங்கட கடவைகள் என்பன எமது ஆதி மூதாதையரின் அறப்பணிகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

கலந்துரையாடுவதும், கருத்தொருமைப்பாடு காண்பது வும் ஒன்றுபட்டுக் கூட்டாகச் செயற்படுவதும் சங்கங் களின் முக்கியமான தூண்கள் என்ற கருத்தினை முற்று முழுதாக ஏற்றுக்கொண்டு செயற்பட்டவர் நண்பன் ஜெகதீஸ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையின் பலத்தினையும், அபிவிருத்திக்கு ஆதார மான அமைதி, சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றின் அடித்தளம் ஒற்றுமையே என்பதனையும், ஒன்று கூடிக் கூட்டாகச் செயற்படுவதனால் ஏற்படக்கூடிய நன்மை யையும் பட்டறிவு மூலம் தெளிவாகவே உணர்ந்து கொண்டவர் அவர். சங்கங்களின் பல்வேறுபட்ட நிகழ்வு கள் செயற்பாடுகளில் மக்களை ஒன்று கூட்டுவதன் மூலமே புரிந்துணர்வுக் குரிய களம் அமைக்கப்படும். புரிந்துணர்வு மட்டுமே பயனுறுதிவாய்ந்த கலந்துரை யாடல் கருத் தொற்றுமைக்கு வழி வகுக்கும் என்பத னால் சங்கச் செயற்பாடுகளை ஊக்குவித்தவர் ஜெகதீஸ். ஒற்றுமை, கூட்டுழைப்பு என்ற கருத்துக்கள் பொய்யோ, புனைகதையோ, கனவோ, கற்பனையோ, வரட்டுத் தத்துவமோ என்ற மயக்கத்தினை இவர் போன்ற பலர் குரும்பசிட்டிக் கிராமத்தில் சங்கச் செயற்பாடுகளினூடாக நனவாக்கிக்காட்டினர்.

உலகத்தில் உயிர் வாழ்கின்ற எந்த இரு மனிதர்களும் நூறு வீதம் ஒற்றுமையுடையவர்களாக இருக்கமுடியாது. இரணைப் பிள்ளைகள், உடன் பிறப்புகள் கூட அவ் வாறு இருக்க முடியாது. ஆதனால் ஒற்றுமை பற்றிய இந்த மயக்கம் எற்படுவது தவறு அல்ல. ஒற்றுமையின் நன்மையை எல்லா மனிதர்களும் அறிந்திருந்தும் ஒற்றுமைப்பட முடியவில்லையே என்று அங்கலாய்த்து, அடி பிடிப்படுவதற்குக் காரணம் ஒற்றுமைப்படுவதற் கான சரியான மார்க்கத்தை அறிந்து அதன் வழி செயற்படாமையேயாகும். மனிதர்கள் வேறுபாடு உடையவர்களேயன்றி மாறுபாடு உடையவர்களல்ல. இவர்களுக்கிடையில் இருக்கின்ற வேறுபாட்டின் இடைவெளி ஐந்து வீதத்திற்கு உட்பட்டதே என்பது அறிஞர் கருத்து. இந்த இடைவெளி சுருங்கினால் ஒற்றுமை பலமடையும். இடைவெளி பெருகினால் ஒற்றுமை குலையும், அமைதி குலையும், சண்டையும் சச்சரவும் வரும் மானிட வளர்ச்சி முயற்கொம்பாகும். இது பற்றி கார்ள் மாக்ஸ் என்ற மாமுனிவன் "சினேக முரண்பாடு", "அடிப்படை முரண்பாடு" பற்றித் தெளி வாகவே விளக்கி உள்ளார்.

இது பற்றி ஒரு சீனப் பழமொழி பின்வருமாறு கூறுகிறது. சேவல் கூவுவதைக் கேட்கக்கூடிய அல்லது நாய் குரைப்பதைக் கேட்கக்கூடிய இடைத்தூரத்தில் வாழ்கின்ற, ஆனால் வாழ்நாளில் ஒருவரை ஒருவர் சந்திக்காத இருவர் சந்திக்க நேர்ந்தால் அவர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் குசலம் விசாரித்துக் களிகூர மாட்டார்கள். பதிலுக்கு ஒன்றை ஒன்று கடித்து தின்கிற ஓநாய்கள் போலவே செயற்படுவர். எனவே கூடிக் குலாவி,இசைபாடி, மகிழ்ந்து, பறக்கின்ற குருவிக் கூட்டங்கள் போல நாம் வாழவேண்டுமானால் சங்கங் களின் செயற்பாடுகளின் மூலமே அது சாத்தியமாகும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டு செயற் படுபவரே ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள்.

"என்ரை பாட்டையே பார்க்கேலாமலிருக்கு, பிறகு சங்கம் சபை எண்டு மினைக்கெட வேறு வேலை இல்லையோ" என்று இவர் எப்பொழுதுமே அலுத்துக் கொள்ளவில்லை. மிதித்த இடத்துப் புல்லும் சாகாத மாதிரி வாழவும் விரும்பவில்லை. தன்னுடைய பாட் டைத் தான் வாழும் சமூகமே தீர்மானிக்கிறது என்பதில் அவர் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். எதை விதைக்கின்றோமோ அதனைத் தான் அறுவடை செய்வோம் என்ற விஞ்ஞான முடிபினை ஏற்றுக்கொண்டு அன்பையும், நன்மையையும் ஒட்டுமொத்த சமூக முன்னேற்றத்திற்கான செயற்பாடு களையும் விதைத்து அவற்றையே அறுவடை செய்தார்.

குரும்பசிட்டி பாய்ச்சல் வேகத்தில் முன்னேற்றமடைந்து ஒரு தனித்துவமான கிராமமாக மற்றைய கிராமத்தவர் களால் பேசப்பட்டதென்றால் குரும்பசிட்டியின் ஆத்மா வாக விளங்கிய சங்கங்களே அதற்குக் காரணமாகும் சங்கம் என்றால் ஏச்சும் பேச்சும் சண்டையும் சச்சரவும் நடக்கிற தீட்டுள்ள இடம் என்பது புனிதவான்கள் சிலருடைய கருத்து. அப்படி ஒன்றும் நடக்கிறதில்லை என்று முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கவும் முடியாது. சங்கம் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் உயர்ச்சி பெற வேண்டும் என்ற நன்னோக்கிலே, தாய் பிள்ளையைத் திருத்துவதற்கு பேசும் தொனியிலே பாணியிலே, நாகரிகமான முறையில் இந்த ஏச்சும் பேச்சும் பொதுமேடையில் நடைபெற்றால் அது பொன்னைச் சுடுவதற்கு நிகரானதே. பார்ப்பதற்கும் கேட்பதற்கும் சிறிது சங்கடமாக இருந்தாலும் அது சுடர்விடும் பொன்னாகவே ஒளிரும்.

வீட்டில் இருக்கும் துடைப்பம் முழுவியளத்துக்கு உத வாது என்பார்கள். ஆனால் வீட்டைத் தூய்மைப் படுத்தும் ஒரு முக்கிய பொருளே துடைப்பம். துடைப்பம் இல்லாவிட்டால் வீடு வீடாக இராது. ஏச்சையும் பேச்சையும் சங்கச் செயற்பாடுகளில் விமர்சனம் என்கிறோம். எம்மைத் தூய்மைப்படுத்தி நாம் வாழ் வாங்கு வாழ்வதற்கு விமர்சனம் உதவி புரிகிறது. விமர்சனம்தான் வளர்ச்சி என்ற குழந்தையைப் பெற்றெடுக்கிறது என்றொரு சீனப்பழமொழி உண்டு. சில சந்தர்ப்பங்களில் நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்று நக்கீரன் வழியில் ஜெகதீஸ் வரன் விமர்சனம் செய்ததும் உண்டு.

தரைக்கு மேற்புறம் தெரிகின்ற மரத்துக்குத் தலைவர் களையும் தரைக்குக் கீழ் உள்ள வேர்களைத் தொண்டர்களுக்கும் ஒப்பிடுவார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரின்றி மரம் இல்லை மரமின்றி வேருக்குப் பயன் ஏதுமில்லை. வேரும் மரமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளவை. வேர் முக்கியமானதா மரம் முக்கியமானதா என்பது குதர்க்க வாதம். குளு குளுவெனச் செழித்து வளர்ந்து பூவும் பிஞ்சும் காயும் கனியும் தரும் மரமாக வளர்வதற்கு ஆழம் செறிந்த ஆரோக்கியமான உரமான வேர்கள் அவசியம். ஜெகதீஸ் இன்றும் மக்களால் அன்போடு நினைவுகூரப்படுவதற்குக் காரணம் வளமான உரமான வேர்களாக இருந்து தனது பணிகளுக்கு உதவிய தோழர்களையும் தொண்டர்களையும் மறவாதிருப்பதே யாகும்.

சங்கம் என்பது தனிமனித முயற்சியல்ல கூட்டு முயற்சி என்பதில் அவர் என்றும் கரிசனை உடையவராகவே இருந்தார்.

"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்
தன்னலம் கருதாது பிறர்நலங் கருதுபவர்"

என்ற கருத்தியல் சாதாரண பொதுமக்களுக்குப் பொருந்தாது என்பது எனது கருத்து. இது ஞானியர்கள் சித்தர்கள் சிலருக்கு மட்டுமே பொருந்தக் கூடியது. ஜெகதீஸ் ஞானியுமல்ல சித்தருமல்ல. ஆனால் "என் கடன் பணி செய்து கிடப்பதே" "பணிபுரி பலனை எதிர்பாராதே" "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" "வாழ்க வையகம்" "வாழ்க வளமுடன்?" என்ற முது மொழிகளை உனக்கும் எனக்கும் இல்லையடி கண்ணே, இது ஊராருக்குச் சொன்னதடி பெண்ணே என்று சொல்லி காற்றோடு கரையவிடாமல் தனது இயல் பளவுக்கேற்ப, நடைமுறைப்படுத்த முயன்று அதில் குறிப்பிடக்கூடியளவு வெற்றியும் கண்டவர் ஜெகதீஸ். வான்புகழ் வள்ளுவர் வகுத்த சமூக சேவையாளர் படித்தரம் பற்றிய ஒழுங்கமைப்பில் மூன்றாவது படியில் இறுதிப் படியில் ஜெகதீஸைக் கணிக்கலாம்.

முதலாவதுபடி நாம் எல்லோரும் சுயநலம் உடையவர் களாக இருக்க வேண்டும் என்பதாகும். நாம் எல்லோருமே இந்தப்படியைத் தாண்டியவர்கள்

"தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்
மற்றெல்லாம் அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு"

இது தான் முதலாவதுபடி நாம் சுயநலம் பெறுவதில் வெற்றியடைய வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? பிறருக்குத் தீமை செய்யாது இருக்க வேண்டும். இது இரண்டாவதுபடி. இதனை

"தன்னைத்தான் காதலனாயின் - எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்"

என்கிறார் வள்ளுவர்பெருமான்.

நாம் எச்செயல் செய்தாலும் அதை ஒத்த பிரதிச்செயல் நிகழும் என்கிறார் ஐன்ஸ்ரீன் என்ற அறிஞர். தீமை செய்தால் தீமை வரும் நன்மை செய்தால் நன்மை வரும். கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு கல் எறியக்கூடாது என்பார்கள். ஏனென்றால் திரும்பக் கல் எறிவரும். இது மாறாத விதி. மாறி நடக்காது. நன்மை செய்யப் பிறந்த நாங்கள் நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருக்கவேண்டும் என்பது இதன் கருத்து.

மூன்றாவதுபடி நன்மை செய். தேவையறிந்து உதவி செய். புளிச்சல் ஏவறை விடுபவனுக்கு விருந்து வைக்காதே. "துயருறுபவனின் துன்பம் துடை" "பாத்திரமறிந்து பிச்சை போடு" என்பதாகும்.

"அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பெருவைப்புளி"

இதுவே வள்ளுவ நாயனார் கூறும் 3வது படி. இந்தப் படியில் இறுதிப்படியில் திரு ஐயாத்துரை ஜெகதீஸ் வரன் இருக்கிறார் என்பது எனது கருத்து.

ஜெகதீஸ் மிகச் சிறந்த ஓர் ஆக்க இலக்கியவாதியா-கத் திகழ்ந்திருக்கிறார். அவருடைய ஆக்க இலக்கியப் பணிபற்றி அதிகம் பரிச்சயமில்லாத யான் அதுபற்றி அதிகம் தெரிந்தவனாகக் காட்டிக்கொள்வது வேடதாரித் தனமானது மட்டுமன்றி பச்சைப்பொய் கூறுவதுமாகும். கடவுளுக்கும் கூடப்பொய் சொல்ல முடியும். ஆனால தன் நெஞ்சுக்கு மட்டும் பொய் சொல்லமுடியாது. எது எவ்வாறாயினும் சன்மார்க்கதீபம் என்ற சஞ்சிகையில் அவருடைய பத்தொன்பதாவது வயதிலே அவர் எழுதிய "கறுப்புப்பால்" என்ற முதலாவது சிறுகதை பற்றி நான் அறிவேன். அந்தக் கதை அப்பொழுது கிராமத்திலே எத்தகைய பிரளயத்தை ஏற்படுத்தியது என்பதையும் நான் அறிவேன். ஓர் ஆக்க இலக்கிய வாதியினுடைய நோக்கம் முழுமையாக நிறைவுபெறுகின்ற பொழுது அவன் தன் இலட்சியத்தில் வெற்றி பெற முடியும். ஒரு சிறந்த இலக்கியவாதியாக மதிக்கப்பட முடியும்.

ஜெகதீஸ் தனது முதலாவது சிறுகதை மூலமே இந்த நிலையைப் பெற்றுக்கொண்டமை போற்றுதற்குரியதே. மாற்றான் வலி அறிந்தே மோதவேண்டும் என்பது தான் நாம் கற்றுக்கொண்ட பாடம். ஆனால் ஒரு சுண்டெலி சிலிர்த்துக் கொண்டிருந்த சிங்கத்துடன் மோதிய பின்னரும் தலை நிமிர்ந்து நின்றதைப் பார்த்தோம். இவர் தம் தோழர்களின் துணைவலியில் நம்பிக்கை கொண்டதனலா அல்லது இளங்கன்று பயமறியாது என்பதனாலா இத்துணிவு ஏற்பட்டதென்பது ஆய்வுக் குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு வயதிலேயே ஜெகதீசினுடைய ஆழ் மனதில் கருக் கட்டியிருந்த அநீதிக்கு எதிரான குரல் காலந்தோறும் உரக்க ஒலித்துக்கொண்டே இருந்தது. ஒருவன் தான் வாழ்கின்ற காலத்து சமூக சூழலை அல்லது ஒரு நிகழ்வை அவன் பார்க்கின்ற பார்வையைப் பொறுத்தே அவனுடைய சிந்தனை செயற்பாடு அமையும். பார்க்கின்ற பார்வை வேறுபாட்டினாலேயே ஒரே விடயம் தொடர்பான கருத்துக்கள் பலவிதமாக அமைகின்றன. இந்த வகையில் சமூகத்தில் நிகழ்கின்ற கொடுமைகள், அநீதிகள், அநியாயங்கள், அறியாமை என்பவை துடைத்தெறியப்பட்டு நல்லதோர் சமூக உருவாக்கம் சம்பந்தமாகப் புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்ட வையாக இவருடைய ஆக்கங்கள் விளங்குகின்றன. இதனை இவர் ஆக்கிய கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற நூலில் நுண்புலம், முன்புலம், நண்புலம், கொண்புலம், என்ற பகுதிகளினூடே ஆழ்ந்து அகன்று அவிந்தடங்கிய நுண் மாண் நுளைபுலம் மிக்க அறிஞர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் உறுதிப் படுத்துகின்றன.

தொடர்ந்து இவருடைய ஊர்ப்பற்று எத்தகையது என்பதனை இவர் அரிதில் முயன்று ஆக்கிய 400 பக்கங்களைக் கொண்ட உருவச்சிறப்பும் உள்ளடக்கச் சிறப்பும் கொண்ட கொலுவீற்றிருந்த குரும்பை நகர் என்ற நூலின் 85வது பக்கத்தில் எமது மக்களின் ஊரப்பற்றினை "பொதுப்பணி மன்றங்களால் வளர்க்கப் பட்ட சமூக உணர்வு காரணமாக, கிராம அபிமானம் காரணமாக ஒவ்வொரு மகனும் எமது கிராமத்தை நேசிப்பவனாகக் காணப்படுகிறான். இன்றும் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் ஊரின் செய்திகளை பொதுப்பணி மன்றங்களின் செயற்பாடுகளை, ஊர் உடன்பிறப்புக்களின் நிலைமைகளை அறியும் அவாவில் இருக்கிறான். தான் கெட்டாலும தன் ஊர் சிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான்" எனப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

சிதைக்கப்பட்டுள்ள எமது கிராமத்தின் இன்றைய நிலைமையை, மீள் எழுச்சிச் செயற்பாடுகளை, (மீள்திகழ் நிலம்) உலகம் குடிலாகச் சுருங்கியுள்ள காரணத்தினால், எமது உடன் பிறப்புகள் மிக நன்றா கவே அறிந்துள்ள போதினிலும் அது பற்றி நாமும் தெரிவிக்க வேண்டியது நமது கடமையாகும். குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், ஊர்ப்பொதுமக்களும் ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் இச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். பூமிப் பந்தின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து பட்டு வாழ்கின்ற எமது புலம்பெயர் உறவுகள் தமது ஆர்வத்துக்கும், இயல்வளவுக்கும் ஏற்ப உதவிகள் பலவற்றினை வரை யாது வழங்கி வருகின்றனர். இவர்களின் பங்களிப் பின்றிப் பின்வரும் நடவடிக்கைகள் எதுவுமே உயிர் பெற்றிருக்கமுடியாது.

1. பொன். பரமானந்தர் பாடசாலை மீள ஆரம்பித்தல்
2. சிறி சித்தி விநாயகர் ஆலயம், அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம் ஆகிய பேராலாயங்களும், மற்றும் சிறு கோவில்களும் புனரமைப்புச் செய்தல்.
3. ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் அமைத்தல்.
4. கலைஞானி கலாலயம் அமைத்தல்
5. ஆ. சி. நடராஜா ஞாபகார்த்த நூல் நிலையம் அமைத்தல்
6. வீதிகள் விசாலித்தல், புதிய வீதிகள் அமைத்தல்
7. கிராம அலுவலர் பணிமனை அமைத்தல்
8. ப.நோ.கூ.ச கிளை 40 அமைத்தல்.

இச் செயற்பாடுகளுக்குப் பெறுமதி வாய்ந்த காணி-களை உபகரித்த டாக்டர் சி. கணேசையா, திரு வ. கதிர்காமத்தம்பி, அமரர் அ. செல்வரத்தினம் (தியாகன்) காணி உபகரிக்கவுள்ள திருமதி. பூ. சோமசுந்தரம் ஆகியோருக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறிது காலம் தற்காலிகமாகக் கிராம அபிவிருத்திச் சங்கம் செயற்படுவதற்கு தமது வீட்டினைத் தந்து உதவிய திருமதி. குமாரகுலசிங்கம் (குஞ்சக்கா) குடும்பத்தினருக்கும் எமது நன்றிகள்.

எமது கிராமத்தின் மிகச் சிறிய ஒரு பகுதி மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்ட வேளையில், ஒற்றையடிப் பாதையைக் கூடத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத நிலைமையில், பற்றையும் காடும் மண்டிக் கிடந்த அந்த வனாந்தரத்தில், ஒவ்வொரு முள்ளுப் பற்றையையும், தடியாலும் தனது ஒற்றைக் காலாலும் விலக்கிக் கொண்டு தாண்டித் தாண்டி, எம்மை உட்பகுதிக்கு அழைத்துச் சென்றவர் க. சிவதாசன் (பவியன்) ஆவார். இத் தருணம் வரை களத்தில் நின்று மேற்கூறப்பட்ட கருமங்கள் யாவும் உயிர் வாழ்வதற்கு உதவும் "கருமவீரனும்" அவரே ஆவார்.

அரச அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து வருபவர்கள் எவரும், எப்பொழுதும் சந்திக்கக் கூடியவர் என்பதற்கும் மேலாக, தேவைப்படும் தகவல் எதனையும் வழங்கக் கூடியவர் அவரே என பிரதேச செயலக திட்டமிடற் பணிப்பாளர் தெரிவித்துள்ளமை முற்றிலும் உண்மை யாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்திலும், பின்னர் காசுக்கான வேலைத் திட்டத்தின் போதும் இவருடைய தோழர்களாக, மீள் எழுச்சித் திட்டத்தின் சிற்பிகளாக பா. ஆரூரன், பா. சோபா, அ. யோகநாதன், பா. பிரசாந்த், பா. வீணா, வ. சிவசக்தி, இ. உதயன் போன்றோர் தோள் கொடுத்து உதவினர்.

தனக்கு விபரம் தெரிந்த காலம் முதலாக தன்னுடைய கிராமத்தை உயிரிலும் மேலாக நேசித்து, கிராம எழுச்சிக்காகவும், நொந்து நைந்து போன உள்ளங் களின் மீட்சிக்காகவும் அல்லும் பகலும் அயராது பாடுபட்ட மறைந்த தலைவர் ஆ.சி நடராஜாவின் இறுதிக்காலப் பணிகள் அதிசயமானவை அற்புத மானவை அதி உன்னதமானவை. மரணம் நிச்சயிக்கப் பட்டு இந்திய டாக்டர்களினால். கைவிடப்பட்ட நிலையிலும் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டல்ல ஊருக்கு உழைத்து அதனைப் பொன் வயலாக்க வேண்டுமென்ற உத்வேகத்தின் காரணமாக தனது சாவைப் பிற்போட்டுத்தருமாறு டாக்டர்களைக் கேட்டுக் கொண்டார். பிற்போடப்படும் ஒவ்வொரு நாளும் அவர் தாங்கொணா வேதனையில் தவிக்கவேண்டும் என டாக்டர்கள் தெரிவித்தபோதும் அதனை மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டு, மரணவேதனைகள் எல்லாவற்றையும் அனுபவித்துக்கொண்டு, மரணவாசலைப் பல தடவை கடந்து வந்து ஊரைப் பொன்வயலாக்குவதற்காகத் தனது இன்னுயிரை அர்ப்பணித்தார். இவருடைய உயிர்த் தியாகம் ஊரின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

முற்றாக நாசமாக்கப்பட்ட கிராமம் அல்லது தேசம் புனர் நிர்மாணம் செய்யப்படும் பொழுது 30 வருடத்துக்குப் பின்னர் அமையப்போகின்ற சூழலை மனதிற்கொண்டே திட்டமிடுவர். எடுத்துக்காட்டாக ஜேர்மனி, ஜப்பான் நாடுகளை நோக்கலாம். விமர்சனத்துக்கு உள்ளாகக் கூடிய எனது கருத்துக்களுக்கு நான் மட்டுமே பொறுப்பாளி. வேறுயாருமல்ல என்பதனை வினயத் துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. வீதிகளை விசாலப்படுத்துதல், புதிய வீதிகளை அமைத்தல்
2. தாம் பிறந்து தவழ்ந்து வளர்ந்த தமது காணி வளவுகளாகிய புண்ணிய பூமியை மீண்டும் வாழக் கூடிய இடமாகத்துப்புரவு செய்து எல்லை வேலிகளைப் போடுதல்
3. சுவர்கள் உள்ள வீடுகளுக்குக் கூரைகள் போட்டு தமது வீடுகளின் பெறுமதியை உயர்த்திக் கொள்வதுடன், குடியிருப்புக்கு ஊக்கமளித்தல்.
4. விவசாயக்காணிகளை துப்புரவு செய்து விவசாயத்தை ஊக்குவித்தல்.
5. எமது மூதாதையர்கள் சுவாசித்த பொன்வயற் காற்றினை சுவாசிப்பதற்கு ஏற்பாடு செய்தல், ஊக்கமளித்தல்.

எதிர்மறை சிந்தனை செயற்பாடுகள் உள்ளோர் பொன்வயல் சுவாசக்காற்றினைப் பரீட்சிக்காதவர்களே. அவர்களுடைய பெற்றோரோ அல்லது உறவினரோ நிச்சயமாக அவர்களுக்கு மாறுபட்ட பெருந்தகையோரே. ஆதலினால் அனைவரும் மனம்விட்டுப் பேசிக் கருத்துக் களை பகிர்ந்து கொண்டு ஒன்றாகப் பயனிப்போம் வாருங்கள்.

19 வது வயதில் கறுப்புப்பால் என்ற சிறுகதையை வெளியிட்டதன் மூலம் பிரளயத்தை ஏற்படுத்திய இந்த எளிமைமிக்க சாமானிய மனிதர் பல்லாண்டு பல்லாண்டு நீடு வாழ வேண்டும்.

உடல் நலத்தோடும் உள நலத்தோடும் ஆன்மீக நலத்தோடும் சமூக நலத்தோடும் இன்னும் இன்னும் உயர்ந்து வாழ வேண்டும்.

என்றென்றும் இளமைத்துடிப்போடு இதே இதய சுத்தி யோடு உண்மையாகவும் விசுவாசமாகவும் மாசு, மறு வற்று இனிது வாழ வேண்டும்.

பலன் கருதாப் பணி மூலம் தானும் பிறரும் பயன் பெற நலன் பெற இன்று போல என்றும் வாழ வேண்டும். புவனத்தில பெரியது எது எனக் கேட்ட முருகனுக்கு ஔவை தொண்டர் தம் பெருமை சொல்லவும் தகுமோ என்று கூறியதற்கமைய தொண்டு செய்து அமைதியும் ஆனந்தமும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும்

சங்கம் என்றால் சங்கடம் என்ற கருதுகோளைப் பொய்ப்பித்து சங்கம் தங்கத்தைவிடப் பெறுமதி வாய்ந்தது என்பதை மெய்ப்பித்து ஆன்மிக திருப்தி யோடு நிறைவாகவும் நிம்மதியாகவும் வாழ வாழ்த்து கிறேன். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் அவரவர் கருமமே கட்டளைக்கல்."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மார்க்கம் உள்ளவர்

குரும்பசிட்டி மண்ணின் வித்துக்கள் என்றும், எங்கும் முளைத்து, முட்டி மோதி வளர்ந்து தம்மை வளப்படுத்திக் கொள்வதுடன் தமது வேராகிய ஊரின் பெயரையும் நிலைநிறுத்திக் கொள்வதில் என்றும் பின் நிற்பதில்லை. அந்த வகையில் இன்னொரு வளமான எம் ஊர் வித்து திரு.ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள்.

காலத்தின் கோலத்தால் புலம் பெயர்ந்து எம்மவர்களின் உறவுகள் சிதைந்த வேளை கனடாவில் காலூன்றியவர்களில் இவரும் ஒருவர். இவரின் உடல் தான் இடம்மாறியதே அன்றி உள்ளம் இன்னும் எம் குரும்பசிட்டி மண்ணின் குச்சொழுங்கைகளில் நடமாடுவதையே உணர முடிகின்றது. ஏனெனில் அவர் கனடாவில் இருந்தாலும் குரும்பசிட்டி மண்ணின் வளர்ச்சியிலும், அபிவிருத்திப் பணிகளிலும் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். அதற்கு கட்டியம் கூறுவது போல் எமது மண்ணில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற காத்திரமான கனவான்களை ஆவணப்படுத்தி ஒரு நூலாக கொலுவீற்றிருந்த குரும்பை நகர் எனும் பெயருடன் ஆக்கி வெளியிட்டு வைத்த முயற்சி எல்லோராலும் முடியாததும், பாராட்டப்படக்கூடியதுமாகும். சுயநல நோக்கு இல்லாது ஊரின் மேல் உள்ள பற்றின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட நல்ல ஒரு கைங்கரியமாகவே இதனை கருதலாம். இது ஜெகதீஸ்வரனை அடையாளப்படுத்தியது மட்டுமல்லாமல் எம்மூரின் முகவரியாய் அமைந்த ஒரு ஆரம்ப முயற்சியாகும். அவருடைய பொதுவான மனப்பாங்கு இங்கே பிரதிபலித்து நிற்கின்றது.



*1934இல் ஆரம்பிக்கப்பட்ட குரும்பசிட்டி சன்மார்க்க சபை 1990களின் பின் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் சேதமுற்ற நிலையில்.*

மேலும், கனடாவிலும் எம்மூரவர்களின் ஒன்று கூடல்களில் பங்கேற்று, தன் உணர்வுகளை உறவுகளுடன் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாது, ஆக்கபூர்வமான பல செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்ற ஒரு மண் பற்றாளர் என்றால் மிகையல்ல. தொலைபேசி வாயிலாக தாயக மண்ணில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு மீள் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இவ் வேளையில் பல் வேறு அபிவிருத்தி பணிகள் தொடர்பாக தன் பங்களிப்பினை ஆற்றி வருகின்ற ஒருவர்.

கனடாவில் இயங்கி வரும் குரும்பசிட்டி நலன் புரி சபையின் முக்கிய பொறுப்புகளில் தன்னையும் ஈடுபடுத்தி கலை, இலக்கிய அபிவிருத்திப் பணிகளில் அர்ப்பணிப்புடன் பங்கேற்கின்ற பண்பில் தான் எல்லோர் மனங்களிலும் திரு ஜெகதீஸ்வரன் அவர்கள் உயர்ந்து நிற்கின்றார்.

இத்தகைய பண்பு நிறைந்தவர் இன்று அறுபது அகவையை பூர்த்தி செய்து மணி விழா காண்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. மாண்புறும் மனிதர்களின் மணி விழாக்கள் அவர்களின் அர்த்தம் உள்ள வாழ்க்கையை விளக்கி நிற்பன. அந்த வகையில் திரு.ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் தன் அர்த்தமுள்ள ஆண்டுகளினை பல்வேறு செயற்பாடுகளிற்காக பயன்படுத்தி இன்று எல்லோர் இதயங்களிலும் இடம் பிடித்துள்ளார் என்பது கண்கூடு.

இன்று போல் என்றும் உடல் நலத்தோடும், மண் பற்றோடும் வாழ்ந்து இன்னும் பல சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டும் என வாழ்த்துவதுடன், அவர் தம் குடும்பத்தினரும் நலமோடு வாழ்ந்து இவரின் அனைத்துப் பணிகளிற்கும் ஒத்துழைப்பு வழங்க எல்லாம் வல்ல குரும்பையூர் முத்துமாரி அம்மன் அருள்புரிய வேண்டும் என வேண்டிநிற்கிறோம்.

**திரு. சிவபாதம் சுப்பையா**
**சட்டத்தரணி,**
**மக்கள்வங்கியின் முன்னாள் பிரதேச முகாமையாளர்,**
**குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லவர்



ஜெகா மோகனா இணையர் தம் பிள்ளைகளுடன்

சீரும் சிறப்பும் பெற்ற குரும்பசிட்டி மண்ணிலே ஐயாத்துரை - மாணிக்கம் தம்பதியினருக்கு மூத்த புதல்வனாய் உதித்து கல்வி கேள்விகளில் சிறப்புற்றவர் திரு.ஐ.ஜெகதீஸ்வரன் அவர்கள்.

இவரது தந்தை சிவபக்தியும் சமூகநேயமும் மிக்கவர். சமூகத்தில் நிலவும் அட்டூழியங்களை எதிர்க்கும் மனப்போக்குடையவர். இதற்காகவே தன் உயிரை ஈந்தவர்.

அத்தகைய பெருமகனின் வழிவந்த ஜெகா அவர்களும் நேர்மையும் மக்களிடையே அன்புகாட்டும் குணமும் சமூகத் தொண்டுகளில் ஈடுபாடும் மிக்கவர். நாட்டிலே ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாகவும் தனது தாய் சகோதரர்கள் மேல் வைத்துள்ள பற்றினாலும் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். புலம் பெயர்ந்து வாழும் நிலையிலும் உள்நாட்டில் வாழும் மக்களின் அவலங்களையும் அவர்களுக்கு உதவக் கூடிய திட்டங் களையும் அக்கறையுடன் செவிமடுத்து ஆலோசனைகள் வழங்குவதில் வல்லவர். வாராவாரம் தொலைபேசி மூலம் தனது சகல நண்பர்களுடனும் தொடர்புகொண்டு குரும்பசிட்டியின் தற்போதைய நிலைமைகளை அறிந்து கொண்டே இருக்கிறார்.

ஜெகா அவர்களின் பணி தனித்துவமானது. அவர் கொண்டுள்ள இலட்சியம் உயர்வானது. அவரால் உயர்ந்தவர்கள் பலர். அதனால் அவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். நல்லோரின் பெருமை அவர்களுக்குள்ள உதவும் பண்பினால் மட்டும் அமையும்

திரு.ஜெகா அவர்கள் நீடூழி வாழவேண்டும்.
அவரது சேவைகள் நிலைக்க வேண்டும்.
வாழ்க பல்லாண்டு வளர்க நின் தொண்டு.

திரு. இராசநாயகம்
குட்டித்தம்பி
முன்னாள் அதிபர்,
குரும்பசிட்டி வளர்மதி சனசமூக
நிலையத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாவின் மைந்தன்

யாழ் மாவட்டத்தில் பல்வகைச் சிறப்பும் பெற்று விளங்கும் கிராமங்களில் குரும்பசிட்டி புள்ளியிட்டுக் குறிப்பிடத்தக்கது. ஈழ மண்ணிற்கு பெருமை சேர்த்த பல பெரியார்களைக் கொண்டது இந்தக் கிராமம். இந்த மண்ணின் புகழை மேலும் மெருகூட்டிக் கொண்டிருப்பவர்களில் ஒருவரே எங்கள் ஐ. ஜெகதீஸ்வரன்.

ஆம். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். நல்ல பேச்சாளர். நடிகர். சிறந்த கவிஞர். நல்ல கலைஞர் இலக்கியவாதி. சமூக சேவையாளர். கல்வியில் தன் தரத்தை உயர்த்திக் கொண்டவர். மொத்தத்தில் இவர் ஒரு பல்துறைசார்ந்த வல்லுனர். இத்தனை பெருமைகளையும் கொண்ட இவர் மகாஜனாவின் மைந்தன் என்று சொல்வதில் மகாஜனாக் கல்லூரி பெருமை கொள்கிறது.



மகாஜனக் கல்லூரி ஆண்டுவிழாவில்

மகாஜனா அன்னையின் மீதுள்ள பற்றினால் தான் பயின்ற மகாஜனா மென்மேலும் வளர வேண்டும் என்பதற்காக புலம்பெயர்ந்து வந்த பின்பும் கனடா பழைய மாணவர் சங்கத்துடன் சேர்ந்து நிர்வாக சபை உறுப்பினராக இருந்து, அதன் வளர்ச்சிக்கான அறிவுரைகள் வழங்கி, அயராது உழைத்தது மட்டுமன்றி இன்னும் நிரந்தர உறுப்பினராக இருந்து அவ்வப்போது தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி வருவது அவர் கல்விக்கூடத்தில் கொண்ட அதீத அக்கறை என்றே சொல்ல வேண்டும்.

மேலும் இவரில் எனக்குப் பிடித்தமான இன்னுமொரு பகுதி, இவர் தான் பிறந்த மண்ணில் கொண்ட விசுவாசம். ஆம் அந்தச் சிறுகிராமத்தின் செழிப்பை, உள்ளடக்கிய பெருமைகளை உலகம் அறியும் வண்ணம், ஒழுங்கை, தெருக்கள் தொடக்கம், கோயில்கள், வாசிகசாலைகள், பாடசாலைகள், வாழ்ந்த பெரியவர்கள் வரை, ஓர் ஆவணமாக எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு பதிவாக விட்டுச் செல்ல வேண்டும் என்ற பெரு நோக்குடன் கொலுவீற்றிருந்த குரும்பை நகர் என்ற நூலை உருவாக்கி வெளியிட்டிருந்தார். இந்த நிகழ்வு இவர் பிறந்த மண்ணிற்கு செய்த பெரும் பணி என்றே சொல்ல வேண்டும்.

இன்று மணிவிழாக்காணும் பல்துறை சார்ந்த வல்லுனர் சமூகத்தொண்டர் ஐ. ஜெகதீஸ்வரன் அவர்கள் நீடுழி காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி, மணிவிழாக் கண்டுவிட்டேன் என்று சோர்ந்து விடாமல், இதை ஒரு இடைவெளியாகக் கருதி பகுதி இரண்டு ஆக அவர் வாழ்க்கையை ஆரம்பித்து நற்பணிகள் தொடர வேண்டும். நல்ல நல்ல நூல்கள் அவர் கையால் பதிப்பாக வேண்டும், கவிகள் உருவாக வேண்டும், கலைப்பயணம் தொடர வேண்டும் என மகாஜனா பழைய மாணவர் சங்கம் சார்பில் வாழ்த்துகிறேன்.

திரு.நா.சாந்திநாதன்
முன்னாள் தலைவர்
மகாஜனா பழைய மாணவர்
சங்கம் ~ கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளநாவலர்

குரும்பசிட்டி ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்களின் அறுபது வயதுப் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக்கிளையின் தலைவர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் என்ற வகையில் அவரைப் பற்றிய சில குறிப்புக்களை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மிகவும் பிரபல்யமும், ஆளுமையும் மிக்க அதிபர்களாக இருந்த காலஞ்சென்ற ஐ..பி துரைரத்தினம், மு. கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் காலங்களிலேயே இவர் இங்கு கல்வி பயின்றார்.

ஐந்தாம் வகுப்பில் யூனியன் கல்லூரியிற் சேர்ந்த இவரை வழிப்படுத்தி, மெருகூட்டியவர் காலம் சென்ற குலசேகரம்பிள்ளை ஆசிரியரென இவர் அடிக்கடி குறிப்பிடுவார்.

ஐந்தாம் வகுப்பிலேயே தனது திறமைகளை வெளிப்படுத்திய இவர் ஆசிரியர் நாகரத்தினம் அவர்கள் தயாரித்த நாடகங்களிலும், தேவி ரீச்சரின் முயற்சியினால் தமிழ், ஆங்கி பேச்சுப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றிருக்கிறார்.

பண்டிதர் நடராசா, சிவத்தமிழ் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரிடம் தமிழும், சமயமும் கற்கும் வாயப்புப் பெற்ற இவர் இவ்வாசிரியர்களின் வழிகாட்டலில் சமய நிகழ்ச்சிகளிலும், விழாக்களிலும் பங்கு பற்றி அனைத்து ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் மதிப்பைப் பெற்றார்.

க.பொ.த. வகுப்பு மாணவர் மன்றங்களில் தலைவர், செயலாளர் எனச் செயற்பட்டு புதிய புதிய உத்திகளோடு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து அனைத்து மாணவர்களையும் திருப்தியுற வைத்திருக்கிறார். நாடக ஆசிரியரான காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் பெரு விருப்புக்குரிய மாணவனாக விளங்கியதோடு அவரால் நாவலா நாவலா என நாளும் பொழுதும் அழைக்கப்பட்ட ஜெகதீஸ்வரன் அவர்கள் இன்றும் எமது பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து பல்வேறு செயற்திட்டங் களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்.

மணி விழாக்காணும் திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் சிறந்த உடல் நலத்துடன் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழவும் இலக்கியப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடவும் யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி. ராஜினி விமலகாந்தன்**
**தலைவர், யூனியன் கல்லூரி**
**பழையமாணவர்சங்கம்,**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறுவர்

கத்துகடல் சூழ்ஈழக் கவின்யாழ் குடாநாட்டில்
முத்தமிழின் ஓசை முழங்கிச் செழித்திருந்த
குரும்ப சிட்டிக்கூடல் பனை வடலி
மருங்கு புன்செய் வளங்கள் பொலிசிற்றூர்!

அங்கன்று பிறந்தானோர் ஆற்றல்மிகு மைந்தன்!
இங்கு கனடாவில், இதற்குமுன் பிரான்சில்
ஊடகனாய், சிறுகதை புனைவோன், ஒண்கவிதை
பாடும் புலவோனாய், பரிதவித்த தமிழகதி
உறவுகட் குதவும் உண்மைத் தமழ்மகனாய்
நிறைபணிகொள் ஈர நெஞ்சன்! அவனேதான்
தந்தைஐ யாத்துரை தாய்மா ணிக்கம்செய்
முந்தைத் தவத்தின் முழுப்பேறாய் வந்துதித்தோன்!

ஊர்ப்பர மானந்தர் தெல்லிநகர் யூனியனில்
சீர்க்கல்வி ஓங்கிச் சிறுகைத்தொழில், புடவைக்
கைத்தொழில் திணைக்களங்கள் கணக்காய்வாளன் ஆனோன்!
ஒத்தகுடிக் கதிரேசு உயர்தங்க ரத்தினமாம்
ஆசிநிறையப் பெற்ற அம்மோக னாதேவி
நேச மனையாளாய் நெஞ்சமரப் பெற்றுயர்ந்தோன்!



பண்டிதர் வே. பஞ்சாட்சரம்
அவர்களுடன் விழா நாயகர்

தன்னிளமை வயதில் ஊர்ச்சன்மார்க்க இளைஞர்மன்றில்
பொன்னான சேவைபல புரிதலைவன், செயலனுமாய்
சால்சிரம தானங்கள், சமபந்தி போசனங்கள்
கால்கொள்ளக் காரணனாய்க் கருதி உழைத்தோனாம்!

தமிழீழ விடுதலைப்போர் தலைப்பட்டூர் மக்களெல்லாம்
தமதூர் பிரிகையிலே தானும் இடம்பெயர்ந்து
மனவலியி னோடு வந்து பிரான்ஸ் வளநாட்டில்
இனம்பிரிந்த மான்களாய் இதயங்கள் பேதலித்து
ஏதிலிக ளாயங்கே எய்துதமிழ் உறவுகட்காம்
ஏதிலிகள் சங்கம் எடுத்து பணிசெய்தான்!

எண்பத்து நான்கில் எம்சேய்சிவ குமாரன்
நின்தியாக நினைவுநாள் திரட்டிஎல்லா அமைப்பையுமே
கொண்டா டிட்டானாம் பிரான்சில்! குடிவந்து
வண்மைசேர் கனடா வளநாட் டினிலும்
மொன்றியல் நகரிலும் அகதிகட்காய் "தமிழர் ஒளி"
என்றதோர் சங்கம் எழக்காலாய் உழைத்திட்டான்!

அன்னவர்க்கு வேலை அரசுதரப் பணிசெய்தான்!
இன்னும் தமிழ்த்தென்றல் வானொலியும் கொண்டான்!
வானொலி நாடகங்கள், வண்கவிதை, பட்டிமன்றம்
தானெழுதி ஈந்தான்! இங்கேயும் மனிதர்கள்
சிறுகதைநூல், மாணிக்கப் பரல்கள் செய்யுணூல்
இறுதியாய்க் கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்னும்நூல்
படைத்தீந்த பல்கலைஞன் ஜெகதீஸ் வரன்கனடா
நடக்கும் குரும்பை நலன்புரி சங்கத்தின்
நாலாண்டுத் தலைவன் நண்ணிவய தறுபதினை
கோலா கலமாகக் கொண்டாடும் மணிவிழாவில்
அன்னாளினைக் காதல் அகத்தாளுடன் கூடி
அன்பார்சேய் அஜந்தன் அஸ்லி தம்முடனே
மன்னுகவே பவளவிழா, படர்நூறு வயதுவிழா
என்பனவும் தாண்டி என வாழ்த்தி இறைபணிவோம்!

பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம்
ஐம்பதுக்கு மேற்பட்ட
நூல்களை ஆக்கியவர்,
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்
மணிவிழா குழு உறுப்பினர்
ரொரன்ரோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நனி சிறந்தவர்

**The world is my country, all mankind are my breatheren and to do good is my religion. (Thomas Paine 1737 - 1809)**

பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே என்பார்கள். நான் இந்தக் கூற்றின் பகுதியாக இன்னும் ஒன்றினைச் சேர்க்க விரும்புகிறேன். பெற்றதாயும் பிறந்த பொன்நாடும், கற்ற கல்விக் கூடமும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே என்பது தான் எனது திருத்தம். அப்படி எண்ணுவோமாயின், வானமே வையத்திற்கு வந்து விடும் அல்லவோ. அங்கே வானம் வசப்பட்டு விடும் தம்பி, குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் எனது கூற்றினை அங்கீகரிப்பார் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.



"ஆசிரிய மாமணி"
திரு. பொ. கனகசபாபதி
"கொலுவீற்றிருந்த குரும்பை நகர்" நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில்

ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே என்பது ஒரு தாயின் வாக்குமூலம். இங்கே தாயின் கடமைகள் இரண்டு என்பது புலனாகிறது. பத்துமாசம் சுமந்து பக்குவமாய் ஈன்று விடுதல் ஒன்று. மற்றையது? அது தான் முக்கியமானது. தாயினது புறத்தே உள்ளது சுற்றம் அதனைச் சுற்றியுள்ளது சமூகம். அதனால் ஆக்கப் பட்டது தான் பிறந்த பொன்னாடு. சுற்றத்தினையும், பின்னர் சமூகத்தினையும் தான் பெற்ற மகவினுக்குத் தாய் தான் அறிமுகம் செய்து வைக்கிறாள். அவள் தாலாட்டில் மீண்டும் மீண்டும் உறவுகளைச் சொல்லியேதான் குழந்தைக்கு உணவூட்டுகிறாள், உறங்க வைக்கிறாள். இவரே உன் தந்தை என்பது முதல் மாமா, மாமி, அத்தை, அக்கா, அண்ணா, தங்கை என அத்தனை உறவுகளையும் இசையோடு சேர்த்து குழந்தை இசைவோடு வாழ்வதற்காகக் காது மூலம் கருத்தினில் உறைய வைக்கிறாள் தாய். எனவே, ஒரு குழந்தையின் ஆளுமை விருத்தியில் தாயின் பங்களிப்பு பாரியது.

**Because I feel that in the heavens above**
**The angels, whispering one to another,**
**Can find among their burning tears of love,**
**None so devotional as that of "Mother,"**
**Therefore, by that dear name I have long called you,**
**You who are more than mother unto me.**
**- Edgar Allan Poe.**

மேலே உள்ள சொர்க்கத்தின் தேவதைகள்
ஒருவர் மற்றவர்க்கு காதோடு காதாக
காதலாகிக் கசிந்துருகும் வேளையில் சொன்ன
தெய்வீக வார்த்தை அம்மா என்பது
அந்தப் பெயரால் தான் உன்னை நீண்ட நாட்கள்
அழைத்ததை நினைத்தபோது நீ எனக்கு
தாய் என்பதிலும் மேலாகத் தெரிகிறாய் அம்மா.

தாயினும் மேலானவள் நீ எனக்கு என்று தாயைப் பார்த்து இக்கவிஞர் சொல்கிறார். இதனைத் தான் தாயினும் சாலப் பரிந்து என்கிறார்களோ? அது தெய்வத்திற்கு வளங்கும் அம்சம். ஆனால் தாயினிற் சிறந்த கோவில் இல்லை என்பதால் தாய் தெய்வீகம் பெறுகிறாள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

திரு. பொ. கனகசபாபதி
பிரபல எழுத்தாளர், ஆய்வாளர்
முன்னாள் அதிபர்
மகாஜனா கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் ஜெகதீஸ்வரன் அவர்கள் தான் எழுதிய மூன்று நூல்களில் இரண்டினைத் தாயின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்பதனைக் கொண்டு அவர் தாயின்மேல் வைத் துள்ள பாசத்தின் எல்லையை உய்த்துணர முடியும். என் அன்னையின் வைரவிழா நாளில் மாணிக்கப் பரல்கள் என்ற கவிதைத் தொகுதி வெளிவருவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது என அக்கவிதை நூலில் ஜெகதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளமை தன் தாயின் மேல் எத்தனை பக்தி வைத்துள்ளார் என்பதைத் தெள்ளெனக் காட்டுகிறது. தாயின் மேல் பாடிய கவிதையைப் பாருங்கள்.

கண்ணுக்குள் எனை வைத்துக்
காப்பாற்றினாலோ
கண் ணிமைதீண்டி யென்மேனி
புண்ணாகுமென்று
தன்னுக்குள் தான் வைத்துத்
தண்ணீரில் தாங்கியிம்
மண்ணுக்கு அழைத்து வந்த
மாணிக்கப் பேழை

என்னை வளம்படுத்தத்
தன்னையே தான் வருத்தி
அன்னை என்ற வார்த்தைக்கு
அடையாளம் காட்டியவர் —
(மாணிக்கப் பேழை) மாணிக்கப் பரல்கள்

பாரதி பாடுகின்றார். என்கண்ணில் பாவையன்றோ கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ. ஆங்கிலத்தில் சொல்வார்கள், Apple of the Eye என்று. ஆனால் இங்கே ஜெகதீஸ்வரன் கவிதையிலே பாரதியினை விஞ்சி நிற்பதைக் காண முடிகிறது. கண்ணுக்குள் வைக்கலாம் தான் ஆனால் எனது கண்ணிமை அசைவின் போது இமை மயிர் என் குழந்தையைத் தீண்டிப் புண்ணாக்கிவிடலாமே அதற்கு என்ன செய்யலாம் என ஏங்குகிறாள். அந்த ஐய உணர்வினால் வேறு பாது காப்பான இடம் தேடுகிறாள். உடனே அவளது மன ஆதங்கத்துக்கு விடை கிடைக்கிறது. என் உள்ளேயே வைத்துப் பாதுகாக்கலாம் தானே. அங்கேயும் ஒரு சந்தேகம்! ஏதாயினும் புறத்தாக்கங்கள் பாதிக்கலாம் அல்லவா, அங்கே ஒரு தண்ணீர் நிரப்பிய பேழை அது பாதுகாப்பாய் இருக்குமல்லவா. எந்தப் புறத் தாக்கமும் குழந்தையை எட்டாது என்ற உறுதிப்பாடு ஏற்படுகிறது. சேய்க்கு வரும் நோய்க்குத் தான் மருந் துண்ணும் அற்புதத் தாய் எனும் தெய்வத்திற்கு, அன்னை எனும் வார்த்தைக்கு அடையாளம் காட்டிய தாயினது அன்பு பற்றி இதற்கு மேல் சொல்வதற் கில்லை. அந்த அன்பின் ஆழத்தைக் கண்டு தொழுது நிற்கும் ஜெகதீஸ்வரன் தாயெனும் அந்தத் தெய்வத்தை எந்த அளவிற்கு நேசிக்கிறார், நற்றவ வானிலும் நனி சிறந்ததாகக் காண்கிறார் என்பதை மேலும் விளக்கு வதற்கு வேண்டியதில்லை என எண்ணுகிறேன்.

மாணிக்கப் பரல்கள் கவிதை நூலிற்கான எம்மவர் களோடு என்ற முன்னுரையில் ஜெகதீஸ்வரன் அவர்கள் மாணிக்கத் தாயாருக்கும் நான் தவழ்ந்த பொன்வயற் தாயாளுக்கும் ஒரேநாளில் நிகழும் விழாவில் ஒரு சேர நூல் படைத்திடும் பாக்கியம் இவன் ஒருவனுக்கே வாய்த்திருக்கும் பெரும் பேறென எண்ணி இறும்பூது எய்துகிறேன் என்பதில் இருந்து கவிஞர் எந்த அளவி னுக்குத் தாயை நேசித்தாரோ அந்த அளவினுக்கு இல்லா விட்டாலும், அவர் தவழ்ந்த குரும்பை நகரையும் அதீதமாக நேசித்தார் என்பதை உணர முடிகிறது.

ஊர் பேதம் பார்க்காதே, எல்லாம் எம் ஊரே, உலகி- னர் எல்லோரும் நம் உறவே எனக் கூற வந்த சங்க காலப் புலவர், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றார். ஆனால் இது ஊருக்குத் தான் உபதேசம் போலும். இந்தப் புலவருடைய இயற்பெயர்? அது யாருக்குத் தான் தெரியும். அப்போ கணியன் பூங்குன்றன் என்பது? கணியன் என்பது அவரது தொழிற் பெயர். பூங்குன்று என்பது அவரது ஊர்ப்பெயர். இதில் புலனாகிற உண்மை ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஒருவருடைய இயற்பெயர் மறைந்து விடலாம், ஆனால் அவரது ஊர்ப் பெயரும், தொழிற்பெயரும் நிரந்தரமானவை. காலம் காலமாக நிலைத்து நிற்கக் கூடியவை. இதை உணர்ந்து தானோ என்னவோ தம்பி ஜெகதீஸ்வரன் தனது ஊர்ப் பெயரினைத் தன்பெயருடன் இணைத்து குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் என அவதாரமெடுத்துள் ளார். அவரால் ஊர் பெருமையுறுகிறது. அவர் ஊருக்கு அணிகலன். ஊர் அவருக்கு அடையாளம். கொலு வீற்றிருந்த குரும்பைநகர் எனும் நூல் மூலமாக ஜெகதீஸ்வரன் தனது ஊரின்மேல் எந்த அளவினுக்குப் பிரேமை கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அவர் முதலில் கண்விழித்த, தவழ்ந்த, தத்தக்கப் பித்தக்க எனத் தளர் நடைபோட்டுப் பின்னர், தலைநிமிர்ந்து இளைஞனாக ஏறுபோல் பீடு நடை போட்ட, ஊர் குரும்பசிட்டி. ஒட்டியுறவாடிய சுற்றமும், நண்பரும் தமிழ் ஈழத்தவர். அல்லல் பட்டு அவதியுடன் ஓடி வந்த பொழுது கைகொடுத்து அரவணைத்த ஊர் கனடா. மூன்றையும் அவர் மனதார நேசித்தார். குரும்ப சிட்டி திரு. ஜெகதீஸ்வரனை ஈன்றெடுத்துப் பெருமை பெற்ற புலம். அவர் அதனை எத்தனை மோகித்தார் என்பதை அவர் எழுதிய, கொலுவீற்றிருந்த குரும்பை நகர் என்ற பாரிய நூலின் மூலம் அறிய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் முடிந்தது. ஆனால் மக்களின் அல்லல் முடிந்த பாடில்லை. மீள்குடியேற்றம் என்கிறார்கள். பல கிராமங்களிலே இந்த மீள் குடியேற்றம் என்பது புதுக் குடியேற்றமாகவே உள்ளது. குடியேறுகிறவர் கள் பலர் அக்கிராமத்தினைச் சாராதவராக இருப்பர் அல்லது ஏறக்குறைய 25 ஆண்டுகளின் பின்னர் மீள வந்தவர் களாக இருப்பர். இவர்களுக்கு அவர்கள் வாழ்கின்ற கிராமங்களின் பழம் பெருமையை யார் எடுத்துரைப்பார்? ஆகவே ஒவ்வொரு கிராமம் பற்றியும், அதனுடைய தொன்மை பற்றியும் இலக்கிய கலாசார பாரம்பரியம் பற்றியும் தெரிந்தவர்கள் தெரியாதோருக்குத் தெரிய வைக்க வேண்டியது ஊர் அபிமானம் மிக்கோருக்கான தலையாய கடன்.

ஜெகதீஸ்வரன் இதனை உணர்ந்தவராக கிராமத்தின் வரலாற்றினை பதிவு செய்ய வேண்டும் என்ற வேட்கை கொண்டவராக இருந்தார் என்பதை அவரே கூறியுள்ளார். குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத் தலைவராக இருந்த வேளையிலேயே என் மனதில் முதல் முதலாய் துளிர்விட்டது. 1999இல் கனடா - குரும்பசிட்டி நலன்புரிசபைத் தலைவராக செயற்பட்ட வேளையில் முதல்முதலாக ஒரு முத்தமிழ் நிகழ்வினை நிகழ்த்திய போது அதனையொட்டி பொன்வயல் என்ற விழா மலரினையும் வெளியிட்டிருந்தோம். இவ்விழா மலரில் குரும்பசிட்டி கிராமத்தின் சுருக்கமான வரலாறும் இம்மண்ணிலே வாழ்ந்து ஏறத்தாழ இருபத் தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தாம் தேர்ந்த துறை யில் ஈடுபாடு கொண்டு உழைத்த பெரியார்களினது விபரங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. இம்மலருக்குப் பல் வேறு நாடுகளில் இருந்தும் பல்தரப்பட்ட மக்களிட மிருந்தும் கிடைத்த வரவேற்பும், ஆதரவும் எம் கிராமம் குறித்த முழுமையானதோர் வரலாற்று நூலை வெளி யிட வேண்டு மென்ற அவாவினைப் பேரவா ஆக்கியது. அந்தப் பேரவாவினை செயலாக்கியதன் விளைவே கொலுவீற்றிருந்த குரும்பை நகர் எனும் ஆவணப் பதிவேடு. இந்நூலினிலே முகிழ் நிலம் எனும் பகுதியிலே ஜெகதீஸ்வரன் அவர்கள் மிக விபரமாக கிராமத்தின் தொன்மை பற்றியும், அதன் வரலாற்று மேம்பாடுகள் பற்றியும் பேரு வகையுடன் நினைவு கூருகின்ற அதே சமயத்தில் இன்றைய நிலைகண்டு ஏங்குகிறார்.

எமது நாடு நல்ல நாடு. நல்ல அரசியல் தலைவர்கள் தப்பியும் பிறக்காதது தான் நாட்டின் துர்ப்பாக்கியம். எனது தேசம் எனக்கு ஒன்றுமே செய்யத் தேவை யில்லை. அது எனக்கு வளமான கல்வி கொடுத் துள்ளது. சுதந்திரமாக இயங்குதற்கு என்னைத் தயார் செய்துள்ளது. சமூகத்திற்குத் தொண்டாற்றவும், கௌரவமாக வாழவும் எனக்கு நிறையவே சந்தர்ப்பம் வழங்கியுள்ளது" என்கின்றார் அமெரிக்காவின் பிரபல அரசியல் வாதியான **Herbert Hoover** (1874 - 1964). இதே வகையில்தான் நாம் 1957 வரை கூறி வந்தோம். ஆனால் அதன் பின்னர் படிப்படியாக நடைபெற்ற அரசி யல் தகிடு தத்தங்கள் நாட்டின் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரை நாடோடிகளாக நாலாபக்கமும் சிதறுண்டு ஓட வைத்தது. தமிழர்கள் அகதிகளாக வாழாத நாடு எதுவும் இந்த அகிலத்திலே இல்லை என்பதால் உயிரினைக் காப்பதற்காக மக்கள் எத்தனை தவிப்புத் தவித்திருப்பார்கள் என்பது வெளிப்படை. ஜெகதீஸ் வரன் அவர்கள் தனது கவிதைகள் பலவற்றில் எமது போராட்டங்கள் பற்றியும் எம்மை வழிநடத்திய தலைவர் கள் பற்றியும் விடுதலைப் போரிலே மாவீரர்களாகி தம் உயிர்களை ஈகம் செய்தோர் பற்றியும் ஆழ்ந்த மன வருத்தத்துடன் ஆவணப்படுத்தியுள்ளார். கனடாவில் அவர் வாழ்ந்தாலும் அவர் உள்ளத்தால் தாயகத்தில் தான் சஞ்சரிக்கிறார்.

வந்தோரை வாழவைக்கும் நாடு கனடா. வாழ்வு தந்த நாட்டினை பாடிக் களிக்கிறார் ஜெகதீஸ்வரன். இதயத்தை வருடிய செயலுக்கு நன்றி கவிதையாகப் பொழிகிறது. ஓ.. என் கனடாவே என்ற அவர் கவிதை யில் அல்லல் பட்டு நின்ற நம்மவர்க்கு நெஞ்சினிற் பாலை வார்த்த நேயத்தினைப் பற்றிக் கூறியுள்ளார்.

சஞ்சலம் நிறைந்த இச்சகத்தினில் வாழ்வதற்கே
அஞ்சிய மனதினொடு அந்தரப்பட்டலைந்த வேளை
அஞ்சற்க மகனே ஆறுதல் கொள்வாய் என்றென்
நெஞ்சினிற் பாலை வார்த்த நேயத்தை மறக்கவில்லை.

அதே கவிதையில், "அகிலத்து மாந்தரெல்லாம் அவராய்த் தேடி வந்து அன்பைப் பகிர்ந்ததனால் ஆகி வந்ததெம் கனடா" என்ற வரிகளில் எம் கனடா என எத்தனை உரிமையோடு உரத்து கூவுகிறார். அத்தனை உரிமை கொண்டாடுபவர் எத்தனை வலுவாகக் கனடா வினை சுவாசிக்கின்றார் என்பதைச் சொல்லத் தேவை யில்லை. பாச உணர்வுடன் எம்மை வரவேற்று, எந்தப் பாரபட்சமான கல்வி முறையினால் ஏற்பட்ட தொடர் பிரச்சினைகளால், வாழ்வா அழிவா என்ற ஏக்கத்தினால், பிறந்த மண்ணை விட்டோடி வந்தோமோ அந்தக் கல்வியை நீ வேண்டிய மட்டும் தொடரலாம், உனது உடநலத்தினைப் பேணி உன் உள்ளக் கிடக்கையை எட்டுவதற்கு நான் துணைநிற்பேன் என அரவணைத்த இந்த அற்புத நாட்டினை நினைக்குந் தோறும், நினைக்குந்தோறும் நன்றி உணர்வு ஊற்றாகப் பெருகுகிறதே. அதனைத் தானே ஜெகதீஸ்வரன் சொல்லோவியமாய் தந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகதீஸ்வரன் அவர்களின் சிறுகதைத் தொகுதியான இங்கேயும் மனிதர்களில் வட்டத்தை விட்டு என்ற சிறுகதையினை வாசித்த பொழுது கனடாவின்மேல் எத்தனை நம்பிக்கை கொண்டுள்ளார் என்பதை உணர முடிந்தது. கதாநாயகி மீரா கணவன் உடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகப் பிரிந்து விடுகிறாள். பிரிந்தவள் தாயகத்தில் உள்ளோருக்காக சேவை ஆற்ற வேண்டும் என்ற பிராந்தியுடன் ஊர் திரும்ப எண்ணுகிறாள். அப்படிப் போவதாயின் தனது மூன்று வயதுக் குழந்தையை என்ன செய்வது என்ற கேள்வி அவள் முன் எழுகிறது. "எந்தத் தாய்க்கும் தன்பிள்ளை நல்ல முறையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தொண்டு நிறுவனத்து ஆலோசகர், அவள் வழமையாகச் சென்று வரும் தேவாலயத்து பாதிரியார் இருவரது அனுசரணை யுடன் பிள்ளையைக் கனடாவிலேயே விட்டுச் செல்லத் தீர்மானித் தாள்" என்பதிலிருந்து ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு கனடா எந்த அளவினுக்குத் துணை நிற்கும் என்ற ஆசிரியர் கணிப்பினை உணர முடிகிறது. ஜெகதீஸ் வரன் பிறந்தகத்தினை வாஞ்சையுடன் நேசித்தார் புக்ககத்தினையும் நேசிக் கிறார். பிறந்த பொன்நாடு, புகுந்த புகழ்நாடு நனி சிறந்த நாடுகளே!

நீட்டோலை வாசியா நின்ற நெடுமரமாய் நிற்காமல் அவையத்துள் தலை நிமிர்ந்து நிற்பதற்கான ஆரம்பக் கல்வியை வழங்கிய பொன் பரமானந்தர் பாடசாலையை அவர் இதயத்துள் வைத்துப் பூசிக்கிறார். பரவிய குருமணலின் முன்னே சம்பாணி கட்டி உட்கார்ந்து ஆட்காட்டி விரலால் அழுத கண்களுடன், ஆசிரியர் தேய்த்து அ, ஆ என எழுதிய காலத்தை இலகுவில் யாராலும் மறக்க முடியுமா? ஜெகதீஸ்வரன் தனது மாணிக்கப் பரல்களில் "கல்வி அறிவூட்டியெம் மனக் கண்ணைத் திறந்து வைத்த பொன்னர் பரமானந்தர் புகழ்அடி போற்றி!" என பொன் பரமானந்தரை அதன் மூலமாகப் பொன் பரமானந்தர் பாடசாலையினை வாழ்த்தி வணங்குகிறார். பொன் பரமானந்தர் இன்றும் குரும்பசிட்டி மக்களது அபிமானதுக் குரியவராய் உள்ளார் என்பதனை ஜெகதீஸ்வரனது "கொலு வீற்றிருந்த குரும்பை நகர்" எனும் நூலிலே ரசிகமணி. கனக. செந்திநாதனுடைய கவிதை மூலம் அறிய முடிகிறது.

சைவமெனும் பயிர் தழைக்கத் தமிழ்ப்பள்ளிக் கூடம்
தானேயாக்கி செவ்வியதாய் மாணவரைத் திறம்படவே
பயிற்றிநன்கு சிறக்கச் செய்தோன் பவ்விய நற்
பெயர்கொள் பரமானந்தர் எனும் பெரியார் பாதம்
தன்னில் ...... (ரசிகமணி கனக. செந்திநாதன்)

பொன் பரமானந்தர் ஜெகதீஸ்வரனுக்கு மாத்திர மல்லாமல், குரும்பசிட்டியின் அத்தனை குடிமக்களி னதும் போற்றுதற் குரியவராய் உள்ளார் என்பதைக் காணும் போது கல்வித் தொண்டே உலகின் முதலாய தொண்டு என எண்ண வைக்கிறது. ஆகவே அவரது பாடசாலை நினைவு ஜெகதீஸ்வரனுடைய உள்ளத்தில் சிறைப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற இடமெல்லாம் கங்கை போல், காவிரி போல் நீர்பிரவாகமாய் தமிழில் கவிதையாய், கதையாய், கட்டுரையாய் மேடைப் பேச்சாய் ஏறுபோல் பீடு நடை யுடன் வலம் வரச் செய்வதற்கு வேண்டிய கல்வியை, திறமையை, தலைமைத்துவப் பண்பை வழங்கிய மகாஜன மாதாவை அவர் என்றுமே போற்றிப் புகழ மறந்தாரில்லை என்பது மகாஜனாவின் பழைய மாணவர் சங்க வளர்ச்சியில் அவர் எடுத்த ஊக்கமிக்க உழைப்பு, நூற்றாண்டுவிழா மலரினை அச்சேற்றுவதில் அவர் காட்டிய ஈடுபாடு, விழாவினைச் சிறப்புற நடத்துதற்கு அவர் நல்கிய பாரிய ஒத்துழைப்பினைக் கொண்டு அளவிட முடியும். ஜெயரத்தினம் என்ற மாமனிதர் ஜெகதீஸ்வரன் என்ற பையனை பாரினில் எங்கு சென்றாலும் பண்பாளனாக, பவ்வியம் மிக்க நல் உள்ளம் கொண்டவனாக, எதனையும் சீர்தூக்கிப் பார்த்து நடுநிலையுடன் செயற்படும் சீராளனாக, மாற்றானின் கருத்தினையும் கனிவான பேச்சின் மூலம் அங்கீகாரம் தரும் பெருந்தன்மை மிக்கவனாக, ஆடம்பரமற்ற கம்பீரமுடையவ னான நல்லதொரு குடிமகனாக வார்த்தெடுத்துள்ளார் என்பதையிட்டு நான் பெருமையுறுகிறேன். ஜெகதீஸ்வரனைப் போற்றுகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகப் பற்றாளர்

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழும் சமூகப் பற்றாளன். தானுண்டு தன் குடும்பம் உண்டு என வாழாது தான் பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்து வாழ்பவர். இவர் தமிழ்ஒலி வானொலி, செந்தாமரை, சூரியன், நம்நாடு, பொதிகை, கனடாத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முதலான ஊடகங் களின் மூலமாகவும், குரும்பசிட்டி நலன்புரிச் சங்கச் செயற்பாடுகளின் வழியாகவும் கனடாத் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். அத்துடன் அவர் வெளியிட்டுள்ள இங்கேயும் மனிதர்கள், மாணிக்கப் பரல்கள், கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற நூல்களின் வாயிலாகவும், மற்றும் சமூகப் பணிகளின் வாயிலாகவும் குறிப்பாகக் கனடாத் தமிழ் மக்களாலும், அவரது எழுத்துக்களை அறிந்த ஏனைய நாடுகளில் வாழும் தமிழ் மக்களாலும் அவரது பெயர் நன்கு அறியப்பட்டிருக்கிறது என்பதை முதலிற் குறிப்பிடுதல் தகும்.



யாழ்ப்பாணம் குரும்பசிட்டிக் கிராமம் சைவமும் தமிழும் மேலோங்கியிருந்த முதுபெரும் பதி. ஆறுமுகநாலருக்குப் பின் யாழ்ப்பாணத்தில் சைவத் திற்கும் தமிழுக்கும் பெரும்பணியாற்றிய மன்றம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை. ஈழகேசரி. நா. பொன்னையா, இரசிகமணி கனக. செந்திநாதன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, கலைஞர் கே.கே.வி. செல்லையா, கலைஞானி. அ. செல்வரத்தினம், குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் முதலான பல பெரும் கலைஞர்களும் எழுத்தாளர்களும் வாழ்ந்து ஊருக்குப் பெருமை சேர்த்த கிராமம்.

இப்பதியிலே பிறந்து, தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற சான்றோரிடம் கல்வி கற்று, இளமையிலேயே எழுத்துத் துறையில் காலடி வைத்தவர் ஜெகதீஸ்வரன். 1967இல் "குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்ற" உறுப்பினராகச் சேர்ந்து, பின்னர் அதன் தலைவனாகி, சமூகம், சமயம், பண்பாடு, அரசியல் சார்ந்த பணிகளில் ஈடுபட்டவர். அம்மன்ற "சன்மார்க்க தீப"த்தின் மலர் ஆசிரியராகவும் செயற்பட்டவர். 1970 இல் யாழ்ப் பாணத்தில் தலைதூக்கிய "சமபந்தி போசனம்" நிகழ்வுகளிலும் முன்னின்ற செயல் வீரன் ஆவார்.

ஜெகதீஸ்வரன் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் குரும்பசிட்டி நலன் புரிச் சங்கத்துடன் இணைந்து அதன் தலைவராக மட்டுமன்றி, "பொன் வயல்" மலரையும் மலரவைத்து பன்முகப்பட்ட நற்பணியாளராகத் திகழ்கிறார்.

23ஆம் வயதில் இலங்கை வானொலி நிலையத்தில் சிறிது காலம் கடமை யாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அதில் திருப்தி காணாத ஜெகதீஸ்வரன், பின்னர் இலங்கை அரசின் சிறுகைத்தொழில் அமைச்சு, புடவைக் கைத் தொழில் அமைச்சுப் பிரிவுகளில் கடமையாற்றினார். தொழில் நிமிர்த்தம் இலங்கையின் பல பாகங்களிலும் பயணம் செய்த அவர் பல்வேறு சமூக கலாசார விடயங்களிலும் அனுபவங்களையும் பெற்றுக்கொண்டார். தாயகத் தில் இடம்பெற்ற அரசியல் கொடூரங்களால் தந்தையைப் பறிகொடுத்த நிலையில் அவர், 1981இல் நாட்டைவிட்டகல வேண்டியதாயிற்று.

சிறிது காலம் அவர் தமிழகத்தில் வாழ்ந்தபோது, அங்கு அறிமுகமான இலக்கிய உறவுகள் அவரை தேசப்பற்று மிக்க எழுத்தாளனாக்கின.

பேராசிரியர் பாலசுந்தரம்
இளையதம்பி
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்,
கனடா வளாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981 இல் அவர் பிரான்ஸ் நாட்டிற்குப் புகலிடம் தேடிச்சென்று, அங்கு மான்தலாயொலி என்ற இடத்தில் சிலகாலம் வாழ்ந்தார். அங்கு அகதிகளாக வந்து சேர்ந்த ஈழத்தமிழ் இளைஞர்களை ஒன்று சேர்த்து நலன்புரிச் சங்கம் ஒன்றை அமைத்து அவர்களை ஒற்றுமையுடன் நற்பணிகளில் ஈடுபட வழிகாட்டினார் என்ற செய்தியும் எமக்குக் கிடைக்கின்றது.

பின்னர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த ஜெகதீஸ்வரன் முதலில் மொன்றியலைத் தன் வாழ் விடமாகக் கொண்டார். அங்கு வாழ்ந்த சமூகநலன் விரும்பிகளுடன் இணைந்து கொண்ட அவர், மொன்றிய லில் இயங்கிய "தமிழர் ஒளி" நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டமை அவரது சமூக அக்கறையை வெளிக்காட்டுகின்றது. குரும்பசிட்டிக் கிராமம் கல்வி மான்கள் நிறைந்த பழம்பதி. அக்கிராமத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் கனடா வழங்கும் கல்வி வசதிகளைப் பயன்படுத்தி Mc Gill University இல் கணக்கியல் கற்றுத் தேர்ந்தமை மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

மொன்றியல் "தமிழ்ஒலி" வானொலியில் இலக்கியக் களத்தில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம் என்பனவற்றை இடம்பெறச் செய்தார். மொன்றியலில் இடம்பெற்ற நூல் வெளியீடுகள், மொழி வகுப்புகள், நாடக மேடை ஏற்றம் எனப் பல்வேறு பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டவர். மொன்றியலில் அவர் வாழ்ந்த காலம் முதலாக அவ்வப் போது சிறுகதைகள் எழுதுவதைத் தனது பொழுது போக்காகக் கொண்டிருந்தார்.

கனடாவில் அவர் முதல் எழுதிய சிறுகதை 1985 இல் "தமிழ் ஒளி" சஞ்சிகையில் வெளிவந்தது. மொன்றியலிலிருந்து ரொறன்ரோவுக்கு வந்து ஸ்காபரோ வில் வசிக்கத் தொடங்கியதும், மீண்டும் எழுத்துலகில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். செந்தாமரை, பொதிகை, மற்றும் பல பத்திரிகைகளிலும் அவரது சிறுகதைகள் வெளிவரலாயின. தாம் எழுதிய சிறுகதை களில் 11 கதைகளைத் தேர்ந்தெடுத்து "இங்கேயும் மனிதர்கள்" என்ற சிறுகதைத் தொகுதியை 2000 இல் வெளியிட்டிருந்தார். சமூக அக்கறையுடன் சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் பல்வேறு அவலங்கள், வாழ்க்கை யின் அறம் பிழைத்த அலங்கோலங்கள், தாயகத்தில் புரையோடிக் கிடக்கும் சமூகக் கட்டமைப்புக்கள், சமூக - அரசியல் சார்ந்த பிரச்சினைகள், அவற்றின் விபரீதங்கள், புலம்பெயர் வாழ்வின் துயரங்கள் என்பனவற்றை வெளிப்படுத்தி, அவற்றைக் கடியும் எழுத்தாவேசம் இவரது கதைகளில் காணப்படுகின்றன.

கனடாவில் 2008 இல் "கொலுவீற்றிருந்த குரும்பைநகர்-வரலாற்றுத் தொகுப்பு" என்ற ஒரு வரலாற்று ஆவணத் தைத் தயாரித்து வழங்கிய ஆசிரியரின் நாமம் என்றும் நிலைத்திருக்கும். இத்தொகுப்பை நோக்கும்போது, எம் தாய்த்திரு நாட்டின் நிலைமை நெஞ்சை வருடுகிறது.

எமது ஊர்களதும் தெருக்களதும் தமிழ்ப் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்படுகின்றன. ஊரெல்லை கள் மாற்றப்படுகின்றன. பரம்பரை பரம்பரையாக எம் முன்னோர் குடியிருந்த நிலங்களில் அரசினால் தென்னகத்து மக்கள் குடியமர்த்தப்படுகின்றனர். பாடசாலைகள், நூலகங்கள், கோயில்கள் முதலிய பண்பாட்டுத் தளங்கள் அழிக்கப்படுகின்றன. ஈழ வரலாறு மாற்றி எழுதப்படுகின்றது. வீதிப் பலகைகளில் தமிழ் ஊர்ப் பெயர்களும் தெருப் பெயர்களும் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்படும்போது வேண்டு மென்றே தமிழில் எழுத்துப் பிழைபட எழுதி, மொழிக் கொலையுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பிழை என்று சுட்டிக்காட்டத் திராணியற்ற அதிகார வர்க்கமே அங்கு நிர்வாகத்திலுமுள்ளது.

2002 ஆம் ஆண்டில் "யாழ்பாணம் மாவட்ட இடப்பெயர் ஆய்வு" என்ற எனது நூலில் குறிப்பிட்டவாறு ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் நீண்ட காலத் திட்டத்துடன் இதனை மேற்கொண்டுவருகின்றன என்ற செயற்பாடு இப்போது பூதாகரம் பெற்றுள்ளது. இத்தகைய நிலைப்பாடு ஈழத்தில் இடம்பெறும் வேளையில் தாயகத்திலே தத்தம் ஊர்களின் பூர்வீகம், பண்பாட்டு வரலாறு, ஊர்ப்பெயர் விளக்கங்கள், ஊர்ப் பெரியார்கள், பண் பாட்டு மையங்கள் என்பன பற்றிய முழுமையான தரவு களைப் பாதுகாத்து அவற்றை ஆவணப்படுத்த வேண்டி யது புத்திஜீவிகளின் வரலாற்றுக் கடமையாகின்றது.

இப்பின்னணியில் "கொலுவீற்றிருந்த குரும்பைநகர் - வரலாற்றுத் தொகுப்பு" என்ற நூல் பெரிதும் முக்கியத் துவம் பெறுகின்றது. "ஊருக்கு உழைத்திடல் யோகம் - இந்த உண்மை உணர்ந்திடல் யாகம்" என்ற பாடல் வரிகளைச் செயற்படுத்திக் காட்டியவர் ஜெகதீஸ்வரன். இளமையிலே ஊர்ப்பற்றும் சமூக விழிப்புணர்வுடனும் செயற்பட்ட இவர், "எம் கிராமத்தின் வரலாறு குறித்த நூலொன்றினை ஆக்க வேண்டுமென்ற எண்ணம் 1970களிலே குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத் தலைவராக இருந்த வேளையிலே என் மனதில் முதன் முதலாகத் துளிர்விட்டது" எனத் தன் நூலிலே குறிப் பிடுவது அவர்மீது ஒரு மதிப்பை ஏற்படுத்துகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டிக் கிராமத்தின் கல்வி மான்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள், ஆசிரியப் பெருந்தகைகள் முதலானோர் பற்றிய கட்டுரைகளைத் தக்கோர் மூலம் எழுது வித்தும், தம் ஊர் பற்றிய முன்னோரது நூல்கள், சிறப்பு மலர்கள், கட்டுரைகள் எல்லாவற்றையும் தேடி எடுத்து ஆராய்ந்து, அவற்றிலுள்ள தரவுகளைத் தொகுத்தும் இந்நூலைத் தொகுத்திருக்கும் முறை பாராட்டத்தக்கது.

குரும்பசிட்டிக் கிராமம் மயிலிட்டியிலிருந்து பிரிந்து தனிக் கிராமமாக உருப்பெற்ற வரலாறு, 1900 முதல் 1985 வரையில் தம் கிராமத்தில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகள், 1986 - 1990 ஆம் ஆண்டுக்கு இடைப்பட காலத்தில் ஊரில் நிகழ்ந்த அநர்த்தங்கள் - அழிவுகள், அதனைத் தொடர்ந்து அங்கு வாழ்ந்த மக்கள் அகிலமெங்கும் புகலிடம்தேடி வாழும் வாழ்க்கை நிலைமை என்பன பற்றிய ஒரு வரலாற்றுச் சுவடியாக இந்நூலை உருவாக்கித் தந்த ஒரு சாதனையாளருக்கு மணிவிழா எடுப்பது சமூகக் கடமையாகின்றது.



இளவாலை எஸ். இராசநாயகம் அவர்களின் நூல்வெளியீட்டு விழாவில்
ஜெகா அவர்கள் அறிமுக உரை ஆற்றுகிறார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தமிழ்மகன்



"இங்கேயும் மனிதர்கள்" நூல் வெளியீட்டு விழாவில்
பேராசிரியர் யோசப் சந்திரகாந்தன் உரையாற்றுகையில்

தாய் மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனேடிய மண்ணில் வளர்ந்து இவ்வாண்டு மணிவிழாக் காணும் நண்பர் குரும்ப சிட்டி ஜெகதீஸ்வரன் அமைதியான, அடக்கமான இனிய மனிதர்.

தனது மண்ணையும் மக்களையும் அவர்களின் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தன் மனத்திரையில் தன்னை விட்டகலாத நிழல்போல் தொடர்ந்தெண்ணி வாழும் உயர்வான உன்னத மான ஓர் தமிழ்மகன்.

ஆழ்ந்த அக்கறையுடனும் மனச்சுத்தியுடனும் நேரிய சமூகமாற்றத்தை வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் தூலங்களிலும் வேண்டி விழையும் ஓர் சீரிய சிந்தனையாளன்.

புரட்சிகரமான சமூக மேம்பாட்டுற்கும் சமய நெறிகளின் கால வளர்ச்சியை யொட்டிய அடித்தள மாற்றத்திற்கும் அறைகூவல் விடுக்கும் ஓர் ஆணித்தரமான ஆர்வலர்.

கனேடிய மண்ணில் வேரூன்றி வளர்ந்து வாழ்ந்து, கல்வியறிவுபெற்று, வேலைவாய்ப்புப்பெற்றுக் குடும்ப, குழும நிலைகளில் பெருகிப் படர்ந்து வரும் எமது தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம், இம்மண்ணில் எமக்கும் ஏனையோர்க்கும் நற்பயன் தரும் வண்ணம் நின்று, நிலைத்து நிமிர்ந்து நீடுகாலம் நிலையுற்று வாழ வழி சமைக்கத் தன்னாலியன்றளவு பணி செய்து கிடப்பதே என் கடன் எனும் நன்மனத்தோடு சமூகப் பணிகளில் தன்னை இலை மறை காயாக ஈடுபடுத்திவரும் இளமையுள்ளம் கொண்ட இலக்கியப்படைப்பாளர்.


இந்த சிந்தனைச் சிற்பி நீண்டகாலம் வாழ்ந்து இக்கனேடிய மண்ணில் எம்மவர்க்குத் தொடர்ந்து வழிகாட்டும் முன்னோடியாக வளம் தர வேண்டு மென்று வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் சந்திரகாந்தன்
அமுது யோசப்
ரொரன்ரோ பல்கலைக் கழகம்,
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகமாகவே தெரிந்தவர்



1984இல் பிரான்சில்

நீண்ட நெடும் தூரம் நடக்க...!

மணிவிழாக் காணும் -
குரும்பசிட்டி மண் தந்த
ஜெகதீஸ்வரன் அண்ணா...!

நானறிய -
நான்காண்டின் முன்னால்...
தாய்க்காய் -
"மாணிக்கப்பரல்கள்"
தாய் மண்ணிற்காய் -
"கொலு வீற்றிருந்த குரும்பை நகர்"
தந்தவர் நீங்கள்...!
அந்த நாளில் இருந்து - கொஞ்சம்
அதிகமாகவே
எனக்குத் தெரிந்தவர்...!

இருபத்தெட்டாண்டுகளாய் -
இந்த மண்ணில் பதியமானவர்...!
ஆனாலும் -
தாய்மண் பற்று - அதிகமானவர்...!

குரும்பசிட்டி நலன் புரிச் சபைத் -
தலைவராய் நான்காண்டுகள்...!
செஞ்சோலைப் பிள்ளைகள்
பதினைவர் - உங்கள்
பதவிக் காலத்தே
பாசத்தொடு தத்தெடுக்கப்பட்ட
பண்பு பாராட்டற்குரியது...!

பின்னர் -
பின்னால் இருந்தபடியே
பிறசேவைகள் பல...!

இன்றும் கூட
"என்னதான் இன்னும் நான் செய்யலாம்
என் மண்ணுக்கு"
என்பதே -
உங்கள் நோக்கம் என்பதில்
எங்கள் இதயம் பூரிக்கிறது...!

உங்கள் -
நோக்கம் நல்லது...
மிக மிக நல்லது...!

தாயையும் - தாய் மண்ணையும்...
நேசிக்கும் மனிதன் -
தரத்தில் உயர்ந்தவன்...! சந்தேகமில்லை...

சகோதரரே -
நிறைவான உங்கள் வாழ்வு...
இன்னும்
குறையின்றி நீண்டு நடக்க...
இறைவனை வேண்டி
நெஞ்சார வாழ்த்துகிறேன்...!

திருமதி. கோதை அமுதன்.
ஆசிரியை, நிகழ்ச்சித்
தயாரிப்பாளர்
CMR, தமிழ்வண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளமிலாச் சிரிப்பழகன்

நண்பர் குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரனுக்கு அறுபதாவது பிறந்த நாள் வாழ்த்துக் கூறும் இவ்வேளையில் அவர் அழுதும் தொழுதும் நேசித்தும் யாசித்தும் போற்றும் குரும்பசிட்டி பற்றிய சில நினைவுகள் என்னுள் மோதுகின்றன.

குரும்பசிட்டி என்ற தூய தமிழ்க் கிராமத்தை எனக்கு அறிமுகம் செய்தவர் "குட்டி" என அழைக்கப்படும் பரராஜசிங்கம் என்ற செய்தியாளர். 1960 இன் பிற்பகுதியில் குரும்பசிட்டி உதயதாரகை சனசமூகநிலைய விழா வொன்றுக்கு அப்போது புகழ் பெற்றிருந்த நாட்டியத் தாரகை லீலா நாராய ணனை ஏற்பாடு செய்து தருமாறு என்னிடம் கேட்டிருந்தார். அவரது விருப்பத்தை நிறை வேற்றியதோடு அந்த விழாவுக்கும் சென்றிருந்தேன்.



குரும்பசிட்டி மண்ணில் நான் பாதம் பதித்த முதல் நிகழ்வு இது. பின்னர் இரசிகமணி கனக செந்திநாதனுடனான தொடர்பு ஏற்பட்டது. இது எனது "ஈழநாடு" பத்திரிகைக் காலம். மல்லிகை டொமினிக் ஜீவாவின் தொழி லகமே எங்கள் சந்திப்புக் களம். இலக்கிய உலகில் குரும்ப சிட்டியின் பெயரை துலங்கச் செய்தவர் இரசிகமணி.

கொழும்புவாசியான எனது "தினகரன்" காலத்தில் குரும்பசிட்டி உறவை நெருக்கமாக்கியவர் நண்பர் வேல் அமுதன். "தகவம்" என்னும் தமிழ் கதைஞர் வட்டத்தின் அமைப்பாளராக இருந்த இவர் குரும்பசிட்டியின் நற்புதல்வர்களில் முக்கியமானவர்.

1983 இற்குப் பின்னரான எனது யாழ். "முரசொலி" காலத்தில் குரும்பசிட்டி உறவை மேலும் நெருக்கமாக்கியவர்கள் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத் துரையும், அவரது மைத்துனர் இராஜரத்தினம் ஆசிரியரும். இவர்களின் அற்புதமான உறவினால் மாதம் ஒரு தடவையாவது குரும்பசிட்டி செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது.

"வார முரசொலி"யில் கலைப்பேரரசு அவர்கள் "அரங்கம்" என்னும் தொடர் பத்தி எழுதி வந்ததால் குரும்பசிட்டி உறவு மேலோங்கி நகர்ந்தது. இத்தகைய உறவை கனடாவில் மேலும் இறுக்கமாக்கி தொடர்ந்து பேணி வருபவர் குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்.

இவர்மீது அபிமானம் ஏற்படுவதற்குப் பிடிமானமாக அமைந்தது தான் பிறந்த ஊர் (நகர்-குரும்ப (city) மீதான இவரது காதல் பற்று அன்பு அக்கறை - ஒருவகை யில் வெறி என்றும் சொல்லலாம்.

ஈழத்து இலக்கிய உலகில் தாழையடி (திருநெல்வெலி) சபாரத்தினம் சில்லையூர் செல்வராஜன் காவலூர் ராஜதுரை நீர்வை பொன்னையன் ஆகியோர் வரிசையில் தனது பெயரைப் பிறந்த ஊரொடு இணைத்து வளர்ந்தவர் ஊரின் பெயரை வளர்த்தவர் ஜெகதீஸ்வரன்.

ஈழகேசரிப் பொன்னையா சன்மார்க்க சபை என்பவற்றின் பாரம்பரியத்தில் வந்து தனது மண்ணின் புகழை நிலைநாட்டி அதனூடாக எழும் நெடுந்துயரை மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டு வாழ்ந்து வருகிறார் இவர்.

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்
தமிழர் தகவல் – கனடா
பிரபல அரசியல் விமர்சகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகதீஸ்வரன் ஆடம்பரமற்ற உணர்வோட்ட எழுத்தாளர் அமைதியான சொல்லாட்சி உரையாடலா-ளர் கருத்துகளைக் கருத்துகளால் மட்டும் மோதும் பண்பாளர் எதனையும் குரோதமாகச் சிந்தித்து எவரையும் விரோதியாக்க விரும்பாத உயர்ந்த உள்ளத்தவர். இவரிடம் நான் கண்ட மெச்சத்தக்க அம்சம் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பெருந் தன்மை. தமது கருத்துக்கு ஒவ்வாத கருத்து மறுதரப்பிலிருந்து வரும்போது தலையைச் சரித்து மென்நகையுடன் "அப்படியும் இருக்கலாம்" எனக் கூறி கடினமான உரையாடலை வேறு திசைக்கு லாவக மாகத் திருப்பி விடுவார். அவரிடம் நான் கண்ட அல்லது அனுபவித்த உண்மை இது. இன்றைய நாட்களில் இவ்வகைச் சிறந்த மனப்பான்மை உடையவர்களைக் காண்பதரிது.

எழுத்தில் இவர் கீரன் பரம்பரை. கூர்மையான பேனா குற்றத்தைக் குற்றமென்று குத்தி நிற்கும். சிலசமயம் வார்த்தைகளில் பொறி பறக்கும். ஆனால் நல்லவை-களை வியந்தோம்பும் தன்மை நிறையவே இருக்கும்.

"இங்கேயும் மனிதர்கள்" "மாணிக்கப் பரல்கள்" என்னும் சிறுகதை, கவிதைத் தொகுதிகளை இதுவரை பிரசுரித் துள்ளார். இதிலுள்ள கதைகள் பற்றி கட்டுரையின் விரிவஞ்சியும் வேறு கட்டுரைகளில் இவை பற்றிய விமர் சனங்கள் குறிப்பிடப்படும் என்பதாலும் அவை பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை.

"கொலுவீற்றிருந்த குரும்பைநகர்" என்ற இவரது கட்டுரை நூல் தமிழீழ வரலாற்றில் முத்திரை பதித்தது. இதன் தலைப்பே இன்று குரும்பசிட்டி எவ்வாறு இருக்கின்றது என்பதை பளிச்செனத் தெரிவிக்கின்றது. பலாலி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டபோது முதற்பலியான கிராமம் குரும்பசிட்டி. அந்த மண்ணின் செழுமை அந்த மக்களின் வாழ்வு சமூக-சமய கல்வி வளர்ச்சி செல்வம் கொழித்த விவசாயம் கல்வி கலை பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்பட்டு அந்த மண் மீண்டும் தமக்குக் கிடைக்காதோ என்ற ஏக்கத்தின் பிரதி பலிப்பாக இந்த நூலை அமைத்துள்ளார் குரும்பசிட்டி ஐயாத்துரை ஜெகதீஸ்வரன்.

சுமார் நானூற்றியிருபது பக்கங்களைக் கொண்ட இந்த வரலாற்றுத் தொகுப்பின் பிறப்பில் ஜெகதீஸ்வரனின் வேதனைகளும், சோதனைகளும் சாதனையாக்கப்பட்டி ருப்பதைப் பார்க்க முடிகின்றது. அந்த மண்ணின் சிறப்பையும் அதன் மைந்தர்களையும் ஏழு கண்டங் களிலும் தேடிப் பிடித்து ஒன்றாக்கித் தந்துள்ளார்.

தாயகத்துக் கிராமங்கள் ஊர்கள் நகரங்கள் ஒவ்வொன்றினதும் வரலாறு தனித்தனியாக எழுதப்பட்டு நூலாக்கப்பட்டால் அதுவே தமிழீழத் தாயகத்தின் மொத்த வரலாற்றை உருவாக்க உதவும் என்ற அரிய சிந்தனையை இந்த நூலின் ஊடாக அவர் சமூகத்துக்குத் தெரியப்படுத்தி யுள்ளார்.

"கொலுவீற்றிருந்த குரும்பைநகர்" நூலை மேலும் போதிய தரவுகளுடனும் ஆவணங்களுடனும் எழுதி வெளியிட்டிருப் பாரானால் பல்கலைக்கழக கலாநிதிப் பட்டத்திற்கு அது உதவியிருக்கும்.

நல்லவர்கள் வல்லவர்கள் வாழும்போதே மதிப்பளிக் கப்பட வேண்டுமென்பதில் நிரம்பவே அக்கறை உள்ளவர் என்பதை இரண்டாண்டுகளுக்கு முன்னர் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. 1981இல் வன்கொலைக்கு ஆளான தமது தந்தையாரின் இடத்தில் வைத்து மதித்து வரும் இளவாலை செ.இராசநாயகம் ஆசிரியரை "தமிழர் தகவல்" விருது வழங்கி மதிப்பளித்த வேளையில் அந்தச் சிறப்பு தமக்களிக்கப்பட்டது போன்ற மனோநிலையில் அவர் இருந்ததையும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்ததையும் பார்த்து ஆச்சரியப்பட்டவர்களுள் நானும் ஒருவன்.

தான் பிறந்த மண்ணில் அவர் கொண்டிருக்கும் பாசத்திற்கு நிகராக தன்னைப் பெற்ற அன்னையையும் போற்றி மதிக்கின்ற ஓர் உன்னதமான புதல்வன் ஜெகதீஸ்வரன். தமிழ்ப் பஞ்சாங்கக் கணிப்பு அறுபது ஆண்டுகள் என்னும் சுற்றுவட்டத்தைக் கொண்டது. ஒருவர் தாம் பிறந்த அதே ஆண்டில் மீளப் பிரவேசிக்கும்போது அறுபதாவது பிறந்த நாள் வருகின்றது. தன் குடும்பம் என்ற வட்டத்துக்குள் வெளியில் வந்து தனது ஊர் தனது இனம் தனது நாடு என்கின்ற சிந்தனையில் செயற்பட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சமூகத்தால் மணிவிழா எடுத்து பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அந்த வகையில் அதற்கான சகல உருத்துகளும் கொண்ட நண்பன் ஐ. ஜெகதீஸ்வரனுக்கு மணிவிழா வாழ்த்துக் கூறுவதோடு குடும்ப சமேதராக நீண்ட நெடுந்தூரம் இவ்வுலகில் பயணித்து சமூக இலக்கியப் பணிகளைப் புரிய வேண்டு மென்பது எனது மன விருப்பம். ❋❋❋





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத் தொண்டர்



*1990இல் நிகழ்ந்த இடப்பெயர்வுக்கு முன்னர் குரும்பசிட்டி முத்துமாரிஅம்பாள் ஆலய திருஉலாக் காட்சியொன்று*

வேழமுகத்து எம்பெருமானும், அன்னை முத்துமாரி அம்பாளும் அருளாட்சி செய்யும் இலங்கைத்தீவின் வடபால் அமைந்துள்ள குரும்பசிட்டிப் பதியில் ஐயாத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அருமை மைந்தன் ஜெகதீஸ்வரன் அவர்களின் 60 அகவை பூர்த்தியை முன்னிட்டு அவரைச் சார்ந்தவர்கள் வெளியிடுகின்ற மணிவிழா மலருக்கு எமது ஆசிச் செய்தியினை அனுப்பி வைப்பதில் மனமகிழ்வடைகிறோம்.

சிறுவயது முதல் சமயப் பொதுத்தொண்டுகள் பலவற்றில் ஈடுபட்டு பெரியோர்கள், நண்பர்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் இடம்பிடித் துள்ளார். குறிப்பாக குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் உற்சவ காலங்களில் இவர் மேற்கொண்ட சமயப்பணிகள் இவற்றுள் தலையா யவை. அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்துச் சிவதொண்டுகளில் இவரது முழுக் குடும்பமுமே ஈடுபட்டமை கிராம மக்கள் அனைவரும் அறிந்த தொன்றே.

அவருக்கு எடுக்கப்படும் இவ்விழாவினையிட்டு பெருமகிழ்வு கொண்டு அடியேனும் எனது குடும்பத்தாரும் அவரும், அவரது குடும்பமும் சிறப்புற்று வாழவும், அவர் மென்மேலும் அரிய பெரிய தொண்டுகள் ஆற்றி இறை அருள் பெறவும் மனமுவந்து எமது நல்லாசிகளை வழங்கி வாழ்த்தியமைகின்றேன்.

சிவத்திரு
ஆறுமுகக்குருக்கள்
சிவபாதசுந்தரக்குருக்கள்
பிரதமகுரு
முத்துமாரி அம்பாள் ஆலயம்
கட்டுவன், இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்க் காந்தானவர்

நான் அப்போது தான் ரொறொன்ரோவிற்கு வந்த புதிது. ஆங்கிலக் கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சைக்காக Midland Collegiate Institute க்குப் போயிருந்த போது, எதிரில் சற்றுப் பரிச்சயமானவர் போல் ஒருவரின் முகம். உடனடியாக யாரென்று அடையாளப் படுத்திக் கொள்ள முடிய வில்லை. அவர் தானாகவே வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நீங்கள் குரும்பசிட்டி தானே. நான் ஜெகதீஸ்வரன்.

நாங்கள் சிறுவயதிலேயே குரும்பசிட்டியை விட்டு வெளியேறிவிட்டதால் ஜெகதீஸ்வரன் என்று கேள்வியளவில் பரிச்சயமேயொழிய நேரடியான பழக்கம் இல்லை. ஆனால் மகாஜனக் கல்லூரியில் கல்வி பயிலும் பொருட்டு ஊர் திரும்பியபோது ஜெகதீஸ்வரன் அண்ணாவின் தங்கையுடன் சிறிது பழகும் வாய்ப்புக்கிட்டியது.



கனடா - குரும்பசிட்டி நலன்புரிசபை 2009இல் கூட்டிய பொதுக் கூட்டத்தில் குரும்பசிட்டி கவிஞர் இராசரத்தினம் அவர்களுடன்

1981 ஜனவரியில் குரும்பசிட்டி வன்னியசிங்கம் அவர்களின் அடைவுக்கடையில் நிகழ்ந்த கொள்ளைச் சம்பவமும், அதனைத் தடுக்கும் பொருட்டு அவ்விடத்திற்கு வந்த ஜெகதீஸ்வரன் அண்ணாவின் தந்தை யாரான திரு. ஐயாத்துரை அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரமான சம்பவமும் என் மனக்கண்ணில் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தது.

அப்போது அதிர்ச்சி, பயம், பிரமிப்பு போன்ற பல்வேறு உணர்வுகளுக்கு ஆட்பட்டிருந்த சிறுவர்களாகிய எம்போன்றோருக்கு திரு. ஐயாத்துரை அவர்கள் எங்கள் கிராமத்திற்காக உயிர் விட்ட காரணத்தினால் எங்கள் மனங்களில் மறக்க முடியாத ஓரிடத்தைப் பிடித்திருந்தார். இங்கு நம் ஊரவர் ஒருவரை அந்நிய மண்ணில் சந்தித்த மகிழ்ச்சியில் சிறிது நேரம் அளவளாவிவிட்டு அகன்றேன்.

அதன்பின் ஜெகதீஸ்வரன் அண்ணாவைப் பலவிழாக்கள், புத்தக வெளியீடுகள், குரும்பசிட்டி ஒன்றுகூடல்கள், பொன்வயல் கலை விழாக் களில் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இவ்விழாக்களில் அவரின் பங்களிப்புக்கள் மூலமாக அவரது இலக்கிய அறிவு, எழுத்தாற்றல், ஆளுமை, பேச்சாற்றல் போன்றவற்றை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது எனினும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ஜெகா அண்ணாவை எவருக்கும் அஞ்சாமல் தான் சரியென நம்பும் விடயங்களை முன்னெடுத்துச் செல்லும் ஒரு நபராகவே நான் அறிந் திருந்தேன். இவற்றைக் கண்கூடாகப் பார்க்கும் வாய்ப்பு, 2010 இல் நிகழ்ந்த குரும்பசிட்டி ஊர்க்காற்று நிகழ்வுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் போது எனக்குக் கிட்டியது.

குரும்பசிட்டி நலன்புரிசபை, உபதலைவர் என்ற வகையில் நானும், ஊர்க்காற்று ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டேன். ஊர்க்காற்று ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் ஜெகா அண்ணா எங்களுக்கு மலர் ஆக்கம், நிகழ்ச்சி அமைப்பு, Sponsors, மண்டப ஒழுங்குகள் என எல்லாவிதத்திலும் ஆலோசனை தந்தது மட்டுமன்றி அவரே எங்களுடன் எல்லா இடங்களுக்கும் நேரடியாக வந்து எல்லா உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து விழாவிற்கான ஏற்பாடுகள் யாவற் றையும் திறம்பட நிகழ்த்த உதவினார்.

**திருமதி. அகல்யா கோபால்**
**குரும்பசிட்டி நலன்புரிசபை, முன்னாள் உபதலைவர்**
**குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் மணிவிழா குழு உறுப்பினர்**
**ரொரன்ரோ.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள், தலைமை தாங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்தல் போன்ற விடயங்களில் ஜெகா அண்ணாவின் அனுபவம் தோய்ந்த வழிநடத்த லின்றி ஊர்க்காற்று 2010 இவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்குமா என்பது சந்தேகமே.

கடந்த காலங்களில் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் அமைந்த ஊர்க்காற்று நிகழ்வுகளை உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் குரும்பசிட்டி மக்கள் ஒன்றுகூடிச் சந்தித்து மகிழும் நிகழ்வாக மாத்திரமே இருந்தன. ஆனால் ரொறொன்ரோவில் 2010 இல் நடைபெற்ற ஊர்க்காற்று நிகழ்வு வெறுமனே ஒன்றுகூடல் நிகழ்ச்சியாக அமையாது, ஜெகதீஸ்வரன் அண்ணாவின் சிந்தனையால் இலங்கையில் இடம் பெயர்ந்து வாழும் எமது உடன் பிறப்புக்களின் கல்விக்கு உதவும் பொருட்டு நிதி சேர்க்கும் ஒரு நிகழ்வாகவும் அமைந்தது.

உலகெங்கும் பரந்து வாழும் குரும்பசிட்டிக் கிராம மக்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அனைவருக்கும் அழைப்பிதழ்கள் கிடைக்க வகை செய்து இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து எம்மூர் மக்கள் ரொறொன்ரோவுக்கு வந்து தமது சுற்றங்களைச் சந் தித்து, நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்ட விதம் குறித்து பாராட்டி, சிலாகித்து மகிழ்ந்த விழா இவ் ஊர்க்காற்று 2010.

குரும்பசிட்டிக் கிராமத்திற்கென ஒரு கீதம் ஜெகா அண்ணாவினால் இயற்றப்பட்டு ஊர்க்காற்று 2010 நிகழ் வில் அரங்கேற்றப்பட்டது. பல்வேறு சங்கங்கள், பொதுப் பணி மன்றங்களுக்கென மன்ற கீதங்கள் பலரால் இயற்றப்பட்டு பாடப்பட்டிருந்தாலும் ஒரு கிராமத்திற்கான கீதம் இயற்றிப்பாடப்பட்டது இதுவே முதல் தடைவ என நம்புகிறேன்.

இவ்வாறு பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற ரொறொன்ரோ ஊர்க்காற்று 2010 நிகழ்வின் வெற்றிக்கு ஜெகா அண்ணாவின் வழி நடத்தலும், ஆலோசனை களும், தலைமைத்துவமுமே முக்கிய காரணங்கள் எனின் மிகையல்ல.

நல்லதொரு குடும்பத்தலைவராக, சிறந்த வீடு விற்பனை முகவராக, இளையவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக, நல்ல இலக்கியவாதியாக தன்னைப் பன்முகங்களிலும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ஜெகா அண்ணா அறுபது அகவை எய்தி விட்டாரென நம்பமுடியவில்லை. இன்னமும் சிந்தனை, சொல், செயல் என எல்லாவிதத் திலும் துடிப்பாகச் செயற்பட்டுவரும் ஜெகா அண்ணாவிற்கு மணிவிழா எடுப்பதையிட்டும், இவரது மணிவிழா மலரில் எனது சிறுபங்களிப்பைச் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதை விட எப்படி வாழ்ந்தார் என்பதுதான் முக்கியமானது. தக்கார், தகவிலார் என்பது அவரவர் தங்கள் வாழ்வில் சாதித்த விடயங்களை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஆதலினால் மணிவிழாக் காணும் ஜெகா அண்ணா தனது பணிகளை இடைவிடாது தொடர வேண்டு மெனவும் மேலும் பல விழாக்களைக் காணும் வகை யில் நலனுடன் பல்லாண்டு வாழ வேண்டுமெனவும் இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.



கனடா குரும்பசிட்டி நலன்புரி சபையினரால் 2010இல் நடாத்தப்பட்ட "ஊர்க்காற்று" நிகழ்வில் ஜெகா அவர்களினால் இயற்றப்பட்ட கிராமத்தின் கீதத்தை இசைக்கும் காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழு வீற்றிருக்கும் குரும்பை நகரான்

தோள் கண்டார் தோளே கண்டார் என்பது போல, ஒருவரை உடல் ரீதியாக, உளரீதியாக, அறிவு முதிர்ச்சியூடாக, ஆளுமை ரீதியாக அறிந்து கொள்வதில் முழுமை கிடைக்கும் என நம்புவது சாத்தியமற்றது.

அடியேன் இரு தசாப்தங்களுக்கு இளையவரான ஒருவரைப் பற்றி நன்கு அறிந்து கொண்டேன் எனக் கூறுவது பொருத்தமற்றது. நாளுக்கு நாள் சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருப்பதே காரணம்.

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் குரும்பசிட்டி எனும் கிராமத்தின் பெயர் தவழத் தொடங்கியது ஈழகேசரிப் பொன்னையா எனும் பெரியாரினாலும் அவரது குடும்பத்தினரால் நிர்வகிக்கப்படும் சன்மார்க்க சபை எனும் மன்றத்தாலுமாகும்.



மற்றைய கிராமங்களைப் போலவே சில முதலியார்கள் பண்டிதர்கள் இருந்திருக்கலாம். ஆனால் ஈழகேசரி எனும் தொடர்புச்சாதனமான செய்தித் தாள் தோற்றம் பெற்றபின் அதன் தகவல்களைப் பரப்பும் வேகமும் அதன் பரவல்களும் காரணமாயின. அத்தோடு சன்மார்க்கசபை, பல பெரியார் களை அழைத்துச் சகல அறிவையும் கிராமத்தில் பரப்பியமையும் கிராமத்தின் அறிவு முதிர்ச்சிக்குக் காரணமாயின.

1955 இல் எனது முதலாவது சிறுகதை ஈழகேசரியில் பிரசுரமானதும், 1958இல் எனது 24வது வயதில் சன்மார்க்க சபையில் உரை யாற்றியமையும், தொடர்ந்த பங்குபற்றல்களும் குரும்பசிட்டியுடன் மிக நெருக்கமான நட்பும், தொடர்பும் ஏற்பட்டதும் உண்மையே. காலம் செல்ல பதவியுயர்வுகளும், இடமாற்றங்களும், வாழ்வியல் மாற்றங்களும் இத் தொடர்புகள் அருகி அருகி அற்றே போய்விட காரணமாகிவிட்டன.

ஊரில் இருந்த காலத்தில் ஜெகதீஸ்வரனின் தந்தை அகால மரணம் அடைந்த சம்பவத்தை நான் அறிவேன். பண்டாரவளையில் பிரபல வர்த்தகராக விளங்கியவர் இவர் தந்தையார். 1970களின் பின் குரும்ப சிட்டிக் கிராமத்திலேயே தங்கி முத்துமாரி அம்பாள் ஆலயத்துடன் ஒன்றி வாழ்ந்தவர்.

இங்கே, 1990களில் லான்ஸ்டவுண் கூட்டுறவு இல்லத்தில் நடைபெற்ற மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் பேச்சுப் போட்டிகளின் போது முதன்முதலில் திரு. ஜெகதீஸ்வரன் அவர்களைச் சந்தித்த ஞாபகம்.

1996 நொவம்பர். குரும்பசிட்டி நலன்புரிசபை இரா. கனகரத்தினம் அவர் களது ஆவணங்களைக் காட்சிப்படுத்தி ஒரு கண்காட்சியும், பாராட்டுக் கூட்டமும் ஒழுங்கு செய்திருந்தது. இப்பாராட்டு விழாவில் உரையாற்று வதற்காக என்னை ஒழுங்கு செய்திருந்தார் திரு. ஜெகதீஸ்வரன். இதனுடனேயே ஜெகதீஸ்வரனுடனான தொடர்பு படிப்படியாக வளர ஆரம்பித்தது.

வாசிப்பு எனக்கு உயிர் போன்றது. தேடல், தேடல், தேடல். ஊரில் இருக்கும் காலத்தில் சங்ககால நூல்கள் தொடக்கம் நவீன இலக்கியங் கள், இலக்கண நூல்கள் அனைத்தும் ஓரளவு வாசித்திருந்தோம்.

குறமகள்
வள்ளிநாயகி இராமலிங்கம்
புகழ் பூத்த எழுத்தாளர்
தலைசிறந்த பெண்ணியவாதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண இதிகாசங்கள் தொடக்கம் தி.மு.க. தெய்வ நிந்தனைகள் வரை சில ஷேக்ஸ்பியர் நூல்களும் அடங்கலாக அறிவகம் என நூல் நிலைய அறைக்குப் பெயருமிட்டு கண்ணாடி அலுமாரிகளில் அடுக்கி வைத் திருந்தோம்.

கனடாவுக்கு வந்ததும் கனடா பற்றிய அறிவு பெறு வதற்காக புவியியல், வரலாறு, அரசியல், உயிரினங்கள் பற்றிய நூல்களை வாசித்தும் அவற்றை மொழி பெயர்த்தும் உடனுக்குடன் தமிழில் எழுதித் தமிழர்தகவல், நம்நாடு, உதயன் போன்ற செய்தித் தாள்களுக்கு வழங்கிக் கொண்டும் திரிந்தேன். அத் தோடு இங்கே வெளியாகும் தமிழ்ச் செய்தித் தாள் களில் அவற்றின் தலையங்கங்களைப் பார்ப்பதோடு சரி. விளம்பரங்களால் நிறைந்தனவாகவும், ஏற்கனவே தெரிந்த விடயங்களை நிரப்பியிருப்பனவாகவும் இருப்ப தனால் அவற்றை வாசிப்பது குறைவு.

நம்நாடு பத்திரிகையில் உள்ளத்து நெருடல்களும், உண்மையின் தேடல்களும் எனும் தலைப்பில் கட்டுரைகள் தொடராக வருவதுண்டு. யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த மாதர்கள் மூவர் எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இது குறித்து நம்நாடு ஆசிரியர் தீவகம் இராஜலிங்கம் அவர்கள் எனக்குத் தெரியப்படுத்திய போதுதான் அக்கட்டுரையினை வாசிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது.

இக்கட்டுரையில் கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகிய மூவர் குறித்தும் எழுதப்பட்டிருந்தது. இக்கட்டுரை பற்றி எனக்குச் சிறிது மகிழ்ச்சி. ஏனெனில் அம்பாள் ஆலய சக்தி உபாசகன-ான ஜெகதீஸ்வரனுக்கு ஆன்மீகக் குரு போன்றவர் சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இவரது ஊரவர், உறவினர் எனும் தொடர்பு. என்னை ஜெகதீஸ்வரன் அறிந்திருக்கவே முடியாது. அக்கிராமத் துடனான தொடர்பு பலகாலத்திற்கு முன்னரே விட்டுப் போய் விட்டது. அவருடன் எதுவித தொடர்பும் இல்லா திருக்கும் போதே எழுதியுள்ளார் எனின், அது அவரது உண்மைத் தேடலைக் குறிக்கின்றதல்லவா?

2004 யூலை 31இல் குரும்பசிட்டி நலன்புரிசபையின் வருடாந்த பொன்வயல் கலைநிகழ்வில் நினைவுரை யாற்றுவதற்கு என்னை அழைத்திருந்தனர். அப்போது குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரனும் பேசுகிறார் என்பதை அறிந்து கொண்டதால் என்னை முதலில் பேச அழைக்குமாறு கேட்டுக் கொண்டேன். ஏனெனில் அதில் ஒரு கள்ளத்தனம். இருவரும் ஒரே விடயத்தைப் பேச வேண்டிவருமே, ஒரே விடயத்தைத் திருப்பிப் பேச முடியாதே என்பதுதான்.

அன்றுதான் ஜெகதீஸ்வரன் பேசியதைப் பார்த்திருந் தேன். கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர் களைப் பற்றிய நினைவுரை என்பதனால் ஈழகேசரி பொன்னையா, சன்மார்க்கசபை, அதன் செயற்பாடுகள் குறித்து நான் விபரமாகப் பேசியதால் இவருடைய பேச்சைக் கேட்க ஆவலாய் இருந்தேன். ஜெகதீஸ் வரனுடைய பேச்சில் குரும்பசிட்டியின் மறுபக்கத்தைப் பற்றியும் பண்டிதர். வ. நடராசா பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலய அதிபராகவிருந்த ஆ.சி. நடராசா, மற்றும் பல பெரியார்களைப் பற்றியும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இவருடைய ஆற்றலை அன்றே என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இதன்பின் இவருடனான தொடர்பு அதிகரித்தது.

இவர் 2000 ஆண்டில் இங்கேயும் மனிதர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தார். இதன் பிரதி ஒன்றை வெளியீட்டு விழா முடிந்த பின்னர் எனக்குத் தந்திருந்தார். நூல் வெளியீடுகளில் எமக்குப் பேசக் கிடைத்தால் அந்த நூலை மேலோட்டமாக வாசித்துக் கருப்பொருளை அறிந்து கொள்வேன். இரண்டாம்முறை ஆழ்ந்து வாசித்து சில குறிப்புகளை எடுத்துக் கொள்வேன். மூன்றாம் முறை வாசிக்கும் போது எமக்குத் தரப்பட்ட பணிக்கு அதாவது தலைமை யுரையா, வெளியீட்டுரையா, ஆய்வுரையா என்பதுள் அடங்கிய பகுதிகளை மட்டும் தெரிந்தெடுத்து அதற் கேற்ற குறிப்புகளை எடுத்துக்கொள்வேன். அத்தோடு விசேடமாக பெண்பாத்திரங்களுக்குரிய உரிமைகளுக்கு மாறாக ஏதும் தொனித்திருந்தால் எந்த உரையாயினும் சரி அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஓரிரண்டு வாக்கியமாவது தொனிக்க விடுவேன்.

இங்கேயும் மனிதர்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்டதால் ஆறுதலாக வாசிப்போம் என வைத்து விட்டேன். சில நாட்களின் பின் அழைத்த ஜெகதீஸ் வரன் புத்தகம் எப்படி இருக்கிறது? என்றார். பிறருக்குத் தீங்கு விளைவிக்காத பொய் பேசலாம் அல்லவா... மிக நன்றாக இருக்கிறது. எந்தெந்தக் கதைகள் பிடித் திருக்கு? போச்சடா போச்சு. அடுத்த பொய். யாரோ சந்திக்க வந்திருக்கினம் பிறகு நானே உங்களை அழைக்கிறேன்.

எமது இறுக்கமான கொள்கைப் பிடிப்புக்கு எதிர்மாறான இவரது சில ஆக்கங்களை எனக்குப் பிடிக்கவில்லை. பொதுவாக அணிந்துரைகளை நாம் வாசிப்பதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வலைக்குள் நாம் விழுந்து விடக் கூடாது என்பதற்காக. இவரது சிறுகதைத் தொகுப்பில் பின்னாலுள்ள கதைகள் என்னை மிகவும் கவர்ந்தன. குறிப்பாக விடுதலை எனும் கதை இயக்கங்கள் சம்பந்தமானது. இரகசியம் பேண வேண்டியது. அம்பலப் படுத்தியது போல ஒரு கோபம். ஆயினும் 74ஆம் பக்கத்தில் ஒரு பந்தியில் நெய்தல் நில வர்ணனை இரங்கல் எனும் உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாகக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

ஜெகதீஸ்வரனது கல்வி பற்றி எமது மதிப்பு 12ஆம் வகுப்பு வரை தான். அதில் அகப் பொருள் பற்றி இல்லையே விஞ்ஞான வகுப்புமாச்சே என அதிசயப்பட்டதுண்டு. வெளிநாடு வந்த பலர் தாம் அங்கே கண்டிராத பணத்தை இங்கே கண்டு ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்லர் என ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டலைவதையும், அல்லலுறும் பெற்றோர், உற்றாரை மறந்து வாழும் போலித்தனம் நிறைந்த நிலையையும் இவரது கதைகளில் பரக்கக் காணலாம்.

மரபு குன்றாத வகையில் மாணிக்கப்பரல்கள் நூல் தந்தார். மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் முறையில் சொல்லடி சிவசக்தி - வல்லமை தாராயோ - பாரதியின் அதே உணர்ச்சிக் குவியலைக் காணக் கூடியதாக இருக்கிறது. தேன் தமிழ்த் தென்றல் இளவாலை எஸ். ஜெகதீஸன் இன்பத் தமிழ் ஊற்று இரா. சம்பந்தன் ஆகியோரின் அணிந்துரை, மதிப்புரை என்பன மிக நேர்த்தியாக அமைந்திருக்கிறது.

கொலுவீற்றிருந்த குரும்பை நகர் ஒரு கிராமத்து வரலாறு. அக்குவேறு ஆணிவேறாக என்பது போல் புல்பூண்டு தொடக்கம் தெய்வங்கள் வரை முன்நிலம், முகிழ்நிலம், திகழ்நிலம், நெகிழ்நிலம் எனத் தமிழ் அறிஞன் ஒருவனின் நூலைச் சொல்லவா வேண்டும்.

காரைநகர், புங்கைநகர், யாழ்நகர் போன்று குரும்ப + City யும் தமிழ் படுத்தப்பட்டு குரும்பைநகர் ஆனதோ. ஒரு நகைச்சுவைக்காகத்தான்.

இந்த நூலை ஆய்வுநூல் முறையில் எழுதியிருந்தால் ஒரு Ph.D பட்டம் கிடைத்திருக்கும். முனைவர் பதவி பெற்றிருக்கலாமே. சிறிய சிறிய நூல்களை எழுதியே கலாநிதிப் பட்டங்கள் பெற்றுள்ளனரே. ஒரு முனைவரின் ஆலோசனையோடு சட்டகங்கள் போட்டு நூற்பட்டியல் பக்கங்கள் போட்டு ஒரு பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்திருக்கலாம்" குறமகள்.
சிரித்தார். தெரியும் அவர் அடக்கமானவர். புகழைத் தேடி ஓடாதவர். சமூக சிந்தனையாளர். ஜெகதீஸ்வரனை அறிந்தவர்களுக்கு அவரது புன் சிரிப்பும், மென்மையான பேச்சும், பணிவு கலந்த குரலுமே உடன் ஞாபகத்திற்கு வரும்.

எனக்கு இது ஏனோ பிடிப்பதில்லை. பெண்ணியம் பேசும் காரணத்தினால் பெண்கள் பதுங்கிப் பதுங்கிப் பேசாமல் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பது என் கொள்கை. இவர் ஆணாக இருந்தும் ஏனிந்த மென்மையும் தயக்கமும் எனும் கொதி எனக்கு. மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கிப் பாயுமாம். எறும்பூரக் கற்குழியும், சமநீதி, சமூகநீதி எனப் பேசிக் கொண்டு பணிவது போலப் பணிந்து விடாக்கண்டராகத் திகழ்வதையும் பேசுபவரது கருத்துக்களோடு உடன்படாவிடில் ஒத்தூதாது மௌனித்து விடுவதையும் பின்னாளில் கண்டு கொண்டேன்.

ஜெகதீஸ்வரன் அவர்கள் தன் பெயரை எழுதுவதே புரட்சிகரமானது. இலங்கையில் எவருமே எச்சமூகத்தவராயினும் இத்தகைய முறையில் எழுதுவதில்லை. குரும்பசிட்டி ஐ ஜெகதீஸ்வரன் என நீட்டி முழக்கி எழுதுவார். தனது பிறந்த பொற்கிராமத்துக்குத் தனி ஒரு கௌரவத்தையும் தகைமையையும் கொடுத்திருக்கிறார். இதைப் பார்த்த போது எனக்குப் பழைய நினைவொன்று வந்தது. 1940ஆம் ஆண்டுகளில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு அதிபராகக் கடமை ஆற்றுவதற்கு தமிழ் நாட்டிலிருந்து சுப்பிரமணி ஐயர் என்பவரை முகாமையாளர் அழைத்திருந்தார். அவர் அதிபராய் இருந்த போது ஐயர்மாரை பெயர் சொல்லிக் கூப்பிடுவது புனிதமில்லையென்று தம்மை முதலெழுத்துக்களால் அழைக்கும்படி கூறியிருந்தனர். எனவே அவர் EKS என எல்லாராலும் அழைக்கப்பட்டார். அவர் ஓய்வு பெறும் போது அவரது தம்பியான EKE அதிபராக வந்தார். பின்னர் ஆசிரியர் ஒருவர் தேவையாகவே தமையனின் மகனாகிய ESK வந்தார். அண்ணனுக்கும் மகனுக்கும் எப்படி ஒரே பாட்டனார் ஆகிய 'E' இருக்க முடியும். அந்த 'E' யார்?

பிரச்சனையை அவர்களே தீர்த்து வைத்தார்கள். இடையாத்து மங்கலம் கிருஷ்ணையர் சுப்பிரமணி ஐயர் (EKS), இடையாத்து மங்கலம் சுப்பிரமணிஐயர் கிருஷ்ணசாமி சர்மா (ESK) முதலிருவரும் இந்தியாவுக்கு போய்விட்டனர். மூன்றாவது ESK யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து, யாழ்ப்பாணத்திலேயே விவாகம் செய்து அங்கேயே ஓய்வு பெற்றவர். இடையாத்து மங்கலம் என்பது தமிழ் நாட்டிலிருக்கும் ஓர் ஊர். அனேகமாக அங்குள்ளவர்கள் தமது ஊர்ப் பெயரை முதலில் போட்டுத் தங்கள் தகப்பனின் முதலெழுத்தைப் போட்டுத் தம் பெயரை எழுதுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் தன்னூருக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு புதுமைப்புரட்சியாக ஜெகதீஸ்வரன் தொடக்கி வைத்திருக்கிறார். மற்றையோர் புனைபெயர்களில் மாத்திரம் புகுத்திக் கொள்வர்.

சென்ற இடமெல்லாம் குரும்பசிட்டி விசுவாசத்தை மறக்க விடாது சங்கங்களை அமைத்தும் இயன்றவரை கல்வியறிவூட்டியும் "பொன்வயல்" சஞ்சிகையில் ஓரளவே படித்தவர்களும் கூட வாசிக்கத்தக்கவிதமாக எளிமையான தமிழில் தனது ஆக்கங்களைப் படைத்தும் இடத்துக்கு ஏற்றவாற எழுதக் கூடிய வல்லமை வாய்ந்தவர் ஜெகதீஸ்வரன்.

நல்ல தமிழறிவை இளம் வயதிலேயே, அதாவது உலக அனுபவம் வர முன்னரே பெற்றுவிட்டதால், இவரின் தமிழறிவிற்கு யாரும் உரிமை கொண்டாட முடியாது. ஆயினும் பலருடனும் கலந்துரையாடல் செய்யும் ஆற்ற லைப் பின்னர் வளர்த்திருக்கலாம். படிக்கும் காலத்தி லேயே கல்லூரிப் பட்டிமன்றங்கள், கவியரங்குகள், நாடகங்களில் பலரும் மெச்சும் படியாகத்தன் ஆற்றல் களை வெளிக் கொணர்ந்தார். சிறுவயதில் யூனியன் கல்லூரியில் படிக்கும் போது, அம்மா தூக்கிக் கொண்டு வந்து, கார் வரும்வரை தானே வைத்திருந்து கொடுக்கும் புத்தகப்பையுடன், காரில் ஜம்மென்று ஏறி உட்கார்ந்து பாடசாலைக்குச் சென்று வந்தவர், மகா ஜனக்கல்லூரியில் உயர்தர வகுப்புப் படிக்கும் வேளை யில் இரண்டு சோடி உடுப்புக்களுடனேயே பாடசாலை செல்ல வேண்டிய நிலையில் இருந்தார்.

மூன்று தலைமுறைகள் வாழ்ந்தவரும் இல்லை. மூன்று தலைமுறைகள் தாழ்ந்தவருமில்லையென்பர். ஆனால் தன் வாழ்விலேயே ஜெகதீஸ்வரன் சிறுவயதில் மிகுந்த வசதியையும், இளவலாகிய வேளையில் பெரும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியவரானார். அரசாங்க சேவையில் இணைந்து மெது, மெதுவாக குடும்பம் தலையெடுக்கத் தொடங்கிய வேளையில் இவரது, தந்தையாரின் இழப்பு இவரை மட்டுமல்ல முழுக்குடும்பத்தையுமே நிர்க்கதிக்குள்ளாக்கியது.

இந்தப் பொழுதுகள் தந்த வலியினை முத்துமாரி அம்பாள் ஆலயமும், நல்ல சில நட்புகளுமே தாங்கிப் பிடித்தனவென இப்போதும் மனம் திறந்து சொல்லும் தன்மை படைத்த ஜெகதீஸ்வரனை - மணிவிழாக் காணும் இந்த நன்னாளில் வாழ்க! வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறோம்.

அர்த்தநாரியாக, செந்தமிழும் சுவையும் போலக் கை கோர்த்து நடக்கும் மோகனாவுடனும் தந்தையாகும் தகைமைகளைத் தந்துதவிய புத்திரச் செல்வங்களுட னும் சுகநலத்துடனும் தமிழ்ப்பணி செய்து வாழ்க.

குரும்பசிட்டி ஜெசதீஸ்வரனே உங்கள் முத்துமாரி அம்மன் துணையுடன் பவளவிழா, வைரவிழா, நூறாண்டு விழாவரை தமிழ்ப்பணி செய்து வாழ்க. OOO



*1990களில் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்களது ஆவணங்களின் கண்காட்சியும், பாராட்டு விழாவும் நடைபெற்ற வேளையில் குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள் உரையாற்றும் காட்சி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாமித்திரர்




*2008இல் ஜேர்மனியில் நிகழ்ந்த "கொலுவீற்றிருந்த குரும்பை நகர்" அறிமுக விழாவில் திரு.வரதராஜா இளையதம்பி அவர்கள் திரு. செல்வராஜா இளையப்பு அவர்களிடமிருந்து பிரதியொன்றைப் பெறும்போது*

1960 களின் இறுதிப்பகுதி எங்கள் கிராமத்து மத்தியில் ஒரு பொதுநிகழ்வு. மிகப் பிரபலமான இலக்கியவாதி ஒருவர் மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது விசுவாமித்திரரின் யாகம் குறித்தும், அந்த யாகம் தங்குதடையின்றி நடப்பதற்குக் காவலாக இராமனும், இலக்கு வனும் இருந்தது குறித்தும் பேச்சுத் திரும்பியது.

அரசகுலத்தவனான இராமன் முறைப்படி வில்வித்தைகள் கற்ற பின்னால் முதன்முறையாக, விசுவாமித்திரரின் யாகத்தை இடையறாது நடாத்த காவல் செய்து கொண்டிருந்த நிலையில், தாடகை யாகத்தை குழப்பும் விதமாய்க் குறுக்கிட, விசுவாமித்திரர் பொறுமையிழந்து இராமனிடம் தாடகைமீது அம்பெய்யுமாறு பணிக்கிறார். இராமனோ ஒரு பெண்ணின் மீது முதன்முதலில் அம்பு எய்யுமாறு நேர்ந்து விட்டதே என எண்ணித் தயங்குகிறான். இதனை உணர்ந்த விசுவாமித்திரர் இராமா தயங்காதே, அம்பை எய் என்கிறார். இராமன் மறுகணமே தாடகை மீது அம்பினை ஏவி விடுகிறான்.

இதனைக் குறிப்பிட்ட இலக்கியவாதி இராமனைப் போன்று, நாங்கள் பெரியவர்கள் சொல்கின்ற விடயங்களை ஏன் என்று எதிர்த்துக் கேள்வி கேட்காது உடனே நிறைவேற்றக் கூடிய இளைஞர்களே எங்களுக்குத் தேவை. அவர்கள் தான் எங்களோடு இருக்க முடியும். மற்றையவர்கள் எங்களைவிட்டு சென்றிருப்பதையிட்டு நாங்கள் கவலைப்படவில்லை என்ற சாரப்பட உரையாற்றியிருந்தார்.

இந்நிகழ்வினை வீதியில் நின்றவாறே நானும் வேறு சில இளைஞர் களுமாய் கேட்டுக் கொண்டிருந்தோம். இதற்கு சில மாதங்களின் முன்பு தான் சில எமதூர் இளைஞர்கள் தங்களுக்குக் குறித்த அமைப்பில் உரிய இடம் வழங்கப்படவில்லையென்றும், தங்கள் கருத்துக்களை யாரும் செவி மடுப்பதில்லையென்றும் கூறிப் பிரிந்து சென்றிருந்தனர். நிகழ்வு முடிகிறது. நாங்களும் கலைந்து சென்று விட்டோம்.

சில மாதங்கள் கழிந்துவிட்ட நிலையில் இன்னுமொரு பொது நிகழ்வு. குரும்பசிட்டி அரசடி சந்திக்கு அண்மித்ததாய் அம்மன்றத்தின் தலைவ-ரெனச் சொல்லியவாறே உரையை ஆரம்பித்தார் ஒரு இளைஞன். இந்த இளைஞனின் பேச்சும் துரோணர் அர்ஜுனனுக்கு விற் பயிற்சி அளித்தது பற்றியும், துரோணர் அர்ஜுனனோடு செல்லும் வழியில் தாகம் எடுக்க அர்ஜுனன் தனது நாயை நீர்ச்சுனை இருக்கும் இடம் குறித்து அறிந்து வருமாறு அனுப்பவும், நாய் ஏகலைவன் குடில் இருந்த இடத்திற்குச் சென்றதும், ஏகலைவன் கோபமுற்று ஆயிரம் கொத்துப் பாணங்களை ஒரே தடவையில் நாய் மீது ஏவியது பற்றியும் திசை திரும்பியது.

துரோணரை மானசீகக் குருவாக கொண்டு வில் வித்தை பயின்ற ஏகலைவன், தனது முதன்மைச் சிஷ்யனான அர்ஜுனனை விஞ்சிவிடக் கூடா தென்ற ஒரே காரணத்தினால் காணிக்கை கொடுக்க விரும்பிய ஏகலை வனிடம், அம்பை ஏற்றுவதற்கு அத்தியாவசியமான கட்டை விரலைக் காணிக்கையாகக் கேட்ட துரோணரின் கபடத்தனமான செயலைக் குறிப்பிட்டு இத்தகைய பெரியவர்கள் காட்டும் வழியில் கண்ணை மூடிக் கொண்டு இளைஞர்கள் செல்ல முடியாது, செல்லவும் கூடாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

**திரு. வரதராஜா இளையதம்பி**
**ஜேர்மனி,**
**தெல்லிப்பளை**
**ப.நோ.கூட்டுறவுச் சங்க**
**முன்னாள் அலுவலர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு என் கண்களையே நம்ப முடியவில்லை. எங்களை விட மிகவும் ஒல்லியான சிறிய உருவம், யாருடனும் உரத்துப் பேசுவதையே நாம் காண்பதில்லை. எனக்கு அடுத்த வீட்டில் இருந்த, அனைவராலும் தம்பி, தம்பி என்றே அழைக்கப்பட்ட ஜெகதீஸ்வரன் என்ற இந்த இளைஞனின் நெஞ்சுரம் என்னை மிக வெகுவாகப் பாதித்திருந்தது.

என் வயதையொத்த இளைஞர்கள் பல விடயங்களை யும் கூடி நின்று விவாதிப்பதுண்டு. கருத்துச் சொல்வ துண்டு. பல பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் இடது சாரி, முற்போக்குச் சிந்தனையாளர்களும் நிரம்பி வழிந்த ஒரு கிராமத்தில் எவருமே பகிரங்கமாக கருத் துச் சொல்ல இயலாத அல்லது விரும்பாத ஒரு விடயம் குறித்து பகிரங்கமாக மேடையேறி தக்கதோர் பதிலை, தர்க்கரீதியாக முன்வைத்திருந்தது என் போன்ற பலரின் கவனத்தை ஈர்த்தது.

ஆசிரியராகவிருந்த என் தந்தையை சிறுவயதிலேயே இழந்துவிட்டதனால் பொருளாதாரரீதியில் பல்வேறு சிரமங்களை எங்கள் குடும்பம் எதிர்நோக்கவேண்டி யிருந்தது போலவே எனது உறவினரும், நண்பருமான ஜெகதீஸ்வரனின் குடும்பமும் அவரின் இளமைக் காலத் தில் பல சிக்கல்களை எதிர்கொண்டது. அத் தகைய குடும்பச் சூழ்நிலையில் இருந்து கொண்டே பலவிதமான ஆளுமைகளையும் வெளிப்படுத்தியவராக விளங்கினார்.

பள்ளிக்கூட நாட்களிலேயே பேச்சுப்போட்டிகளிலும், நாடகங்களிலும் மிகுந்த அக்கறையோடு ஈடுபட்டவர். அத்தோடு பின்னாளில் இவரோடு பழக ஆரம்பித்த பின்னர் அயற் கிராமங்களில் நிகழும் பட்டிமன்றங்கள், கவி அரங்குகள், நாடகங்கள் என்பனவற்றுக்கும் எங்களோடு மிதிவண்டிகளில் வந்து பார்த்து இரசிப்பார். எங்களோடும் விவாதிப்பார்.

இவரது பெற்றோர் காலம் காலமாக தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் அனுதாபி களாகவும், ஆதரவாளர்களாகவும் இருந்த போதும் இவர் தோழர் வி.பி.யின் அனுதாபியாகவும், கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளராகவும் இருந்தார். இவர் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளராக இருந்த வேளையிலும் இவரது சனசமூக நிலைய நண்பர்கள் கட்சியின் பிரச்சார உபகரணங்களை சனசமூக நிலையக் கட்டிடத்தில் வைப்பதை எதிர்த்தவர்.

சனசமூக நிலையம் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர் களுக்கும் பொதுவானது. எமது அரசியல் விருப்பை பொது நிறுவனங்களில் திணிக்கக் கூடாது என வலியுறுத்தியவர். இதனால் இவரோடு சேர்த்தியங் கியவர்களே இவரைப் பல்வேறு சிக்கல்களிலும், வழக்குகளிலும் மாட்டி வைக்கத் துடித்தனர். இவற்றைத் தனியாக நின்றே போராடி வெற்றி கண்டவர்.

கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்த வேளையிலும் இவரது உறவினர்கள், ஊரவர்கள் மூலம் பல சிக்கல்களை அனுபவித்தார். இவர் மட்டுமன்றி இவரது முழுக் குடும்பமுமே பாதிக்கப்பட்டது. இந்த நேரங்களில் இவர் அணி சேர்ந்து நின்ற இடதுசாரிச் சிந்தனையாளர்களோ, முற்போக்குவாதிகளோ கை கொடுக்க முன்வராத நிலையில் அறுபதுகளின் இறுதிப்பகுதிகளில் ஊரில் எந்த அமைப்பிற்கு எதிரான கருத்துக்களை இவர் வெளியிட்டாரோ, எழுதினாரோ அதே அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவரே பின்னாளில் இவர் குடும்பத்திற்கு ஆதரவளித்ததும் குறிப்பிடத்தக்கது.

இங்கே இன்னுமோர் முக்கியமான விடயத்தை நான் குறிப்பிட்டேயாக வேண்டும். இவரது எத்தகைய நட வடிக்கைகளுக்கும் எந்தக் காலகட்டத்திலும் இவரது பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்ததில்லை. முக்கியமாக இவரது தந்தை இவருக்குச் சுதந்திரம் கொடுத்திருந்த தோடு மட்டுமன்றி இவர் செயல்களுக்கு தனது மானசீக ஆதரவையும் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இவர் அரசாங்க சேவையில் இணைந்து கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில், எமது ஊரவராலேயே இவர் குடும்பத்தில் கூப்பன் என்று சொல்லப்படுகிற ரேஷன் காட்டுகள் கூட இல்லாமற் செய்யப்பட்டன. கிராமத்தின் செல்வந்தர்கள், பிரபல தொழில் தருநர்கள் எல்லோரும் அனுபவித்துக் கொண்டிருந்த சலுகையை இவர் குடும்பம் இழந் திருந்தது.

இவரது அச்சுருவில் வந்த முதலாவது, சிறுகதையான கறுப்புப்பால் எத்தகைய அதிர்வலைகளை ஏற்படுத்தி யது என்பதை அன்று இளைஞராகவிருந்த என் போன்றவர்களுக்குத் தான் தெரியும். இவரது தந்தை யாரைக் கூட அழைத்துக் கதைத்ததும், அச்சுறுத்திய தும் எத்தனை பேருக்குத் தெரியும். தெரிந்தும் தெரியா மல் இருந்தோர் இன்னொரு புறம். இந்த நெருக்குவாரம் தீர்வதற்கு முன்னரேயே கதவைத் திறவுங்கள் என்ற அடுத்த சிறுகதையை எழுதியிருந்தார்.

இவருடைய பொருளாதார நிலைமையும், பின்புலமுமே இவரது முன்னேற்றத்தை இழுத்து நிறுத்தின என்று என்னால் திடமாகச் சொல்ல முடியும். ஏனெனில் இவர் அனுபவித்த பல விடயங்களை நானும் அனுபவித் திருக்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலும், ஆளுமையும் இருந்தும் குடும் பச்சூழலும், ஈரமான மனதும் எங்களை வெளியே வர விடாமல் இழுத்துப் பிடித்திருந்தன என்பதை ஒத்துக் கொள்ளவே வேண்டும்.

இத்தனை கழுத்தறுப்புக்கள் நெருக்குவாரங்களைத் தாண்டி வெளியே வந்து இன்று தான் சார்ந்த குடும்பத்தை ஓரளவிற்கு நல்ல நிலைக்குக் கொண்டு வந்ததோடமையாது, தான் பிறந்து வளர்ந்த கிராமம் குறித்து மிகுந்த கரிசனையோடு தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு அடி மட்டத்தில் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு தன்னாலியன்ற உதவிகளை செய்து கொண்டும், பொதுநலன் பேணும் விடயங்களில் அங்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற தாபனங்களோடு மிக நெருக்கமான உறவினைப் பேணி அவற்றுக்கும் தன்னாலான உதவிகளையும், ஆலோ சனைகளையும் வழங்கி வருகிறார்.

மேலும் 2007இல் புலம்பெயர்ந்து வாழும் குரும்பசிட்டி மக்கள் ஒன்று சேர்ந்து ஜேர்மனி டோட்முண்ட் நகரில் ஊர்க்காற்று நிகழ்வைக் கொண்டாடியபோது ஏறத்தாழ 25 ஆண்டுகளின் பின்னால் ஜெகதீஸ்வரனைச் சந்திக்க முடிந்தது. கனடாவிலிருந்து பார்வையாளராக வந் திருந்த இவர் காலை 10 மணியிலிருந்து இரவு 11 மணி வரை மண்டபத்திலேயே இருந்து வருபவர்கள் அனைவ ரோடும் அளவளாவி சிற்றுண்டி பரிமாறி மகிழ்ந்ததோடு மட்டும் அமையாது விழா முடிந்து மண்டபத்தை துப்பரவு செய்து முடித்த பின்னரேயே மண்டபத்தி லிருந்து வெளியேறினார்.

2008 ஓகஸ்ட்டில் குரும்பசிட்டிக் கிராமத்தின் வரலாற் றுத் தொகுப்பான கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற தனது நூலின் அறிமுக விழாவை ஜேர்மனியிலே நிகழ்த்தினார். ஜேர்மனி வாழ் குரும்பசிட்டி மக்கள் அனைவரும் சேர்ந்து நிகழ்த்திய இவ்வறிமுக விழா விற்கு, குரும்பசிட்டி, சன்மார்க்க சபைத் தலைவர் திரு. சுப்பையா சிவபாதம் அவர்கள் பிரதம அதிதியாகவும், உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அவர்கள் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர். ஜெகதீஸ்வரன் அவர்களின் இவ்வாவணத் தொகுப்பு எம் கிராமத்து மக்களுக்கு இன்று ஒரு கைநூல் போல விளங்குகிறது. ஏறத்தாழ 20 ஆண்டுகள் சனநடமாட்ட மற்ற, காடாய் கட்டாந் தரையாய் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டிருந்த எமது கிராமத்தின் மிகக் குறுகிய பகுதியே 2011இல் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், எங்கள் எதிர்காலச் சந்ததிக்கு எம் கிராமத்தை அடையாளங்காட்ட இந்நூல் ஒன்றே இன்று எங்களிடமுள்ளது. இதனை எம் கிராமத்து மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூருவர்.

எங்கள் கிராமத்து அம்பாள் ஆலயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஜெகதீஸ்வரன் அநேகமான நாட்களில் ஆலயத்திலே கூட்டுவதும், துடைப்பதும், கழுவுவதுமாய் நிற்பதையே அந்நாட்களில் நான் பார்த்திருக்கிறேன். கிராமத்தில் நிகழ்ந்த கொள்ளை யைத் தடுக்க முயன்று தனது உயிரை ஈகம் செய்த ஜெகதீஸ்வரனின் தந்தை ஐயாத்துரை அவர்களும் தமது இறுதிக் காலம் முழுவதையும் ஆலயச் சூழலி லேயே கழித்தவர். ஈழகேசரி பொன்னையா வீதியி லிருந்து அம்பாள் ஆலயத்திற்குச் செல்லும் மக்கி ஒழுங்கையை மயிலிட்டிக் கிராமசபை மூலம் புதுப் பித்துப் பராமரிக்கச் செய்ய திரு. ஐயாத்துரை அவர் கள் மயிலிட்டிக் கிராமசபைக்கு நடையாய் அலைந்து திரிந்ததும் இன்று அநேகம் பேருக்கு மறந்தே போயிருக்கும்.

ஒரு நல்ல, எளிமையான குடும்பத்தில் பிறந்து, ஆற்றல், ஆளுமை, விடாமுயற்சி போன்ற குணங்களால் முன்னேறி இன்று 60 வயதினைப் பூர்த்தி செய்யும் திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் எல்லாவகையிலும் ஒரு திருப்திகரமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். பண்புடை மனைவி பவ்வியம் தெரிந்த பிள்ளைகளோடு சகல செல்வங்களும் பெற்று நீடு வாழ்ந்து மென்மேலும் பல நூல்களை ஆக்கித் தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை ஆற்றல் மிக்கவர்

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் அவர்களை நாங்கள் கடந்த 27 வருடங்களாக அறிவோம். எமக்குள்ளே ஒரு நீண்டகால நட்பு இருந்து வருகின்றது. ஜெகதீஸ்வரன் பல துறைகளிலும் ஆற்றல் உள்ளவர் என்பதை மொன்றியாலில் தமிழர் ஒளியின் செயலாளர்களில் ஒருவராக இருந்து திறம்படச் செயலாற்றிய போது அந்நிறுவனத்தின் கலாச்சாரத்துறைப் பொறுப்பாளர் என்ற முறையில் அறிந்து கொண்டேன்.

அதைவிடவும் தமிழர் ஒளியின் நிறுவனர்களில் ஒருவர் என்ற வகையில் எனது கணவர் மொன்றியாலில் 1985இல் இவரைச் சந்தித்தபோது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அந்தக் கால கட்டத்தில் அந்தச் சூழலில் இவர் போன்ற இளைஞர்கள் சமூகப்பணி செய்ய முன் வந்தது எமது சமுதாயம் புலம் பெயர்தேசத்தில் முன்னேற்றம் அடையும் என்ற நம்பிக்கையை அப்போதே ஏற்படுத்தியிருந்தது.



ஒக்டோபர் 2000இல் நிகழ்ந்த "இங்கேயும் மனிதர்கள்" நூல்வெளியீட்டு நிகழ்வில் திருமதி. லீலா சிவானந்தன் அவர்கள் உரையாற்றுகிறார். கவிஞர் கந்தசாமி, தீவகம் இராஜலிங்கம் ஆகியோருடன் உடனிருக்கின்றனர்.

தமிழர் ஒளியில் நாம் சந்தித்துக் கொண்டபடியால் இச்சங்கத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் இங்கே சொல்லியேயாக வேண்டும். 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களை அடுத்து பெரும்பாலான இளைஞர்கள் மொன்றியால் நகரத்துக்கு புலம்பெயர்ந்து வந்தனர். அங்கு அவர்கள் பல சவால்களை எதிர்நோக்க வேண்டி இருந்தது. புதிய இடம், புதிய சூழல், புரியாத மொழி, காலநிலை வேறுபாடு, வேலை கிடைப்பதில் சிரமம் எனப் பல விடயங்கள். இந்த நிலையில் மிகுந்த கஷ்டப்பட்டு வேலை பெற்றுக் கொண்ட இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து தாம் பட்ட கஷ்டம் ஏனையோர் படக் கூடாது என்ற உயர்ந்த சமூக நோக்குடன் தமிழர் ஒளி என்ற சங்கத்தை 1983 டிசம்பர் 20ம் திகதி ஆரம்பித்து புதிதாக வரும் தமிழ் சமூகத்தவருக்கு பல விதங்களிலும் உதவக்கூடிய, பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்தினர்.

செபஸ்டியான்தாசன், அலன் ராஜரட்ணம், ஏ. ராஜேந்திரலிங்கம், எனது கணவர் சின்னையா சிவானந்தன் ஜெராட் சேவியர், பரமானந்தன், அன்ரன் ரொசாரியோ, பசில் ஆகியோர் சேர்ந்து இச்சங்கத்தை ஆரம்பித்தனர். இச்சங்கத்தின் மூலமாக பிரெஞ்சு வகுப்பு, ஆங்கில வகுப்பு, தையல் வகுப்பு, கணனி வகுப்பு, வானொலிச்சேவை போன்றவற்றை நடாத்தி வந்தனர்.

1983, 84, 85, 86 காலப்பகுதியில் மொன்றியாலில் முன்னெடுக்கப்பட்ட இவ்வாறான பல செயல்திட்டங்களுக்கு பல அறிஞர்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள் அனைவருமே நட்புடனும், அர்ப்பணிப்புடனும் தோள் கொடுத்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் விளங்கினார். தமிழர் ஒளியின் நிதிச் செயலாளராகச் செம்மையாகத் தனது செயலைச் செய்து தன் திறமையை வெளிப்படுத்தினார்.

எங்கு சென்றாலும் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தமிழரின், பண்பாடு, கலாச்சாரத்தைப் பேணுவது தமிழரின் தனிக்குணம். அந்த வகையில் அன்றாட வாழ்க்கையில் பல பிரச்சனைகளைச் சந்தித்த போதும் தம் மொழியையும் பண்பாட்டையும் காப்பதிலும் வளர்ப்பதிலும் கவனத்தைச் செலுத்தினார்கள். அந்த வகையில் ஆரம்பிக்கப்பட்டது.

திருமதி. லீலா சிவானந்தன்
நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
கீதவாணி, தமிழ்வண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CFMB 1410 என்ற அலைவரிசையில் கனடாவின் முதல் தமிழ் வானொலி நிகழ்ச்சி. அப்போதைய கலாச்சாரத்துறைப் பொறுப்பாளர் என்ற முறையில் வானொலி நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்ததால் இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அனைத்துக் கலைஞர்களின் திறமையையும் ஆற்றலையும் நேரடியாக அறியக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக ஜெகதீஸ்வரன் பல நிகழ்ச்சிகளைச் செய்த துடன் நாடகங்களிலும் நடித்துத் தமது திறமையை வெளிப்படுத்தினார். அதுமட்டுமல்லாது எமது தமிழ்த் தென்றல் என்ற வானொலிச் சேவை நடாத்திய முத் தமிழ் விழா என்ற முதல் மேடை நிகழ்ச்சியில் கவிதை அரங்கத்தில் பங்கு பற்றித் தன் கவித்திறமையையும் வெளிப்படுத்தினார். தமிழர் ஒளி நடத்திய போட்டி களிலும் பங்கு பற்றி பல பரிசுகளைப் பெற்றார். இவர் எழுதிய இங்கேயும் மனிதர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் இவர் ஒரு சிறந்த எழுத்தாள ரென்பதற்குச் சான்றாக விளங்குகின்றது.

பல்வேறு பயிற்சித் திட்டங்கள் வானொலி நிகழ்ச்சி, கவிதைநூல், பார்வை - மாதாந்த வெளியீடு, தமிழ்த் தென்றல் ஆண்டுவிழா மலர் ஆகியவற்றில் ஜெகதீஸ் வரனின் பங்கு குறிப்பிடத்தக்கது என்பதும் அந்நேரத் தில் அவரின் ஒத்துழைப்பு தமிழர் ஒளிக்கு உறுதுணை யாக இருந்தது என்பதும் மறுக்க முடியாதது.

60 அகவையைப் பூர்த்தி செய்யும் அவரை வாழ்த்து வதுடன் 100 ஆண்டு விழாவும் கொண்டாட வேண்டும் என்று எமது குடும்பத்தின் சார்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



ஒக்டோபர் 2000இல் நிகழ்ந்த "இங்கேயும் மனிதர்கள்" நூல்வெளியீட்டு நிகழ்வின் முடிவில் கனடா குரும்பசிட்டி நலன்புரி சபை முன்னாள் தலைவர் திரு. சி. கிருஷ்ணகாந்தன் முன்னிலையில் வைத்தியகலாநிதி திரு. க. வைத்தியநாதன் & திருமதி. வைத்தியநாதன் ஆகியோர் நூலாசிரியர் ஜெகாவை கௌரவம் செய்யும் காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ளவர்



நேசம் மிகுந்த என்
பாசமுள்ள தம்பியின்
அகவை அறுபதுக்கு
அக்காவின் வாழ்த்துக்கள்.

நினைத்துப் பார்க்கிறேன் என்
நெஞ்சம் இனிக்கின்றது.
கடந்து வந்த சிறுபராயம்
என் கண்முன்னே நிற்கிறது.

சின்னக்கா எனக்கூவி
ஓடி வந்தென்கை பிடிப்பாய்
பொன்னுக்கு நிகரப்பா உன்
பொய்யில்லாப் பாசம்.

நோயுற்ற நான் இங்கு
நொந்து போய் இருந்த நேரம்
தாய்க்குச் சேய் செய்வது போல்
தம்பி நீ எனக்குச் செய்தாய்.

தேசம் கடந்தாலும் நம்
நேசம் மாறாது
யுத்தம் பிரித்தாலும் நம்
சித்தம் குலையாது.

ஓப்பரிய நற்குணங்கள்
சீலமிகு மனைவி மக்கள்
பெறற்கரிய எல்லாம் பெற்ற
பெருமகனாம் ஜெகதீஸ்வரன்

செகம் உள்ளவரை நீ
சுகமாக வாழ்ந்திடுவாய்
சகுந்தலா அக்கா நான்
நெஞ்சார வாழ்த்துகிறேன்.

செல்வி. சகுந்தலா
அருளானந்தம், கொழும்பு
சகிப்புத்தன்மை மிக்க சகோதரி,
50 ஆண்டுகளுக்கு மேலாக
பரிவும் பாசமும் காட்டி
வருபவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டி ஐயாத்துரை



டாக்டர். & திருமதி முருகையா



டாக்டர். முருகையா
சுப்பிரமணியம்
&
திருமதி. றாகினி முருகையா
இங்கிலாந்து

இந்து மகா சமுத்திரத்தின்
அழகிய தீவு இலங்கை.

வடக்கே அமைந்த சிறுசிங்கப்பூர்
எமது குரும்பை நகர்.

மாணிக்கமாய் திகழ்ந்த அன்னைக்கும்
வீரத்தந்தைக்கும் கிடைத்தவர்தான் ஈசன்
அவர் அடைகின்றார் அகவை 60.

கல்லூரிக் காலங்களில்
அநியாயங்களைத் தட்டிக்கேட்டு
நியாயத்துக்காய் போர்க்கொடி
உயர்த்தியவர் ஈசன்.

அரங்கம் ஏறிய உமது பட்டிமன்றம்
கவி அரங்குகளை மறக்க முடியுமா?

சன்மார்க்க இளைஞர் மன்றம்
எழுவதற்கு முழுமூச்சாக உழைத்தவர்.

பொய்கள் மறைந்திட போலிகள் வீழ்ந்திட
உண்மைகள் நிலைத்திட உழைப்பவர் உயர்ந்திட
படைத்தீர் கறுப்புப்பால் படையல்.

குரும்பசிட்டிக்கு கிடைத்தார்
குட்டி ஐயாத்துரை - அவர்
அடைகிறார் அகவை 60.

வணங்குகிறோம் இறைவனை
குறை ஏதுமில்லாத வாழ்வு
நிறைவான தேகாரோக்கியத்தோடு
குடும்பத்துடன் பல்லாண்டு
வாழ வாழ்த்துகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை மாற்றங்களுக்கு வித்திடுபவர்



ஜெகா மோகனா இணையர்
மொன்றியலில் - 1985

திரு. வாமதேவன் வெற்றிவேல்,
தமிழ் ஆசிரியர், டென்மார்க்.
குரும்பசிட்டி சன்மார்க்க
இளைஞர் மன்ற
முன்னாள் தலைவர்,
வாடாத நினைவுகளோடு
வாழுகின்ற நண்பர்

கறுப்புப்பால்

இன்னமும் எனக்கு புதிராகவே உள்ளது.
இதை விட ஒரு அழகான அர்த்தமான பெயரை அந்தச் சிறுகதைக்கு யாராலும் தந்திருக்க முடியாது என்று உறுதிபடச் சொல்வேன்.

இந்த சிறுகதையைச் சமர்ப்பித்து தனது எழுத்தாளுமையை அடையாளப் படுத்திய நண்பர் ஜெகதீஸ்வரன் அவர்களின் இன்னொரு பக்கத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. அவரது போர்க்குணம் . தான் வாழ்ந்த சூழ்நிலையில் தன் கண் முன்னே நடந்த ஒரு அநியாயத்தை தன் எழுதுகோல் கொண்டு சாட முற்பட்ட ஒரு துடிப்பான இளைஞராக எனக்கு அறிமுகமாகிறார்.

இவரது எழுத்துக்களின் தாக்கம் காரணமாக சில இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்ட போதும் துணிந்து நின்று சவால்களை இன்முகத்துடன் சந்தித்தார் என்றுதான் கூறுவேன்.

தனக்கு சரியெனப்பட்ட கருத்துக்களை துணிச்சலாக முன்மொழிந்து வாதிக்கும் இவர் திறமை கண்டு நான் ஆச்சரியப்பட்டதுண்டு. இவரது குடும்ப பொருளாதாரம் மட்டும் அந்நேரம் கைகொடுத்திருந்தால் இன்னும் பலரும் போற்றும் உயர் நிலைக்கு வந்திருப்பார் என்பதில் எனக்கு சந்தேகம் கிடையாது. ஆனாலும் தனது அயராத முயற்சியினால் வாழ்வில் எதிர்நீச்சல் போட்டு எழுதுவினைஞராக அரச நியமனம் பெற்று ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் பணியாற்றியிருந்தார். இவ்வேளையில் கூட தம் மக்களின் தேவைநாடி சமூக அக்கறையுடன் பணியாற்றிய இவரின் நட்புஎனக்கு கிடைத்ததுபற்றி பெருமைகொள்கிறேன்.

நாம் பிறந்து வளர்ந்த கிராமம் குரும்பசிட்டி என்பதாகும். ஒரேயொரு சதுரமைல் பரப்பளவைக்கொண்ட செம்பாட்டு பூமி. இந்த கிராமத்தை உருவாக்கிய சிற்பிகள் பலர் எனினும் ஈழகேசரி பொன்னையா பொன் பரமானந்தர் என்போர் முக்கியமானவர்களாவர். ஆனாலும் இந்த கிராமத்திலே வாழ்ந்த ஒவ்வொரு மனிதரும் என் ஆசான்கள் என்பேன். அமைதியான ஆர்ப்பாட்டமில்லாத இந்த ஊருக்கு புகழ் சேர்த்த கமக்காரர்கள் கல்விமான்கள் கலைஞர்கள் தொழில்தருனர்கள் பலர்.

சன்மார்க்க நெறி நின்று சந்தடியில்லாமல் இருந்த இந்த பூங்கிராமம் சிங்களத்து படையெடுப்பில் சின்னாபின்னமானது. போர் முடிந்துவிட்டது அமைதி வந்துவிட்டது என்ற வாசகங்களுடன் நாமும் உருக்குலைந்த ஊருக்கு உயிர் கொடுக்க வருகின்றோம்.

இம் முயற்சியில் களமிறங்கி பணியாற்றும் ஆர்வலர்களுடன் சேர்ந்து தோழர் ஜெகதீஸ்வரனும் தன் உச்ச நிலை பங்களிப்பை வழங்கிவருவது அவர் தன் கிராமத்தின் மீது கொண்ட பற்றைப் பறை சாற்றி நிற்கிறது.

குரும்பசிட்டி கிழக்கு பகுதியில் அரசடி சுற்றாடல் என்பது ஒரு இதய பூமியாகும். தூர்ந்துபோன நடேசர் கடையின் அத்திவாரக் கற்களின் மீது அமர்ந்து எதிர்காலத்தைப்பற்றி எந்தவித பயமும் இல்லாமல் அளவளாவி மகிழ்ந்த அற்புதமான காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் ஜெகாவின் கனல் பேச்சுக்கும் சிரிப்பொலிக்கும் அங்கு குறைவிருக்காது. இன்னமும் இந்தப் பண்பு இவருடன் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது அவர் வணங்கும் அம்பாளின் கிருபையே என்று கூறலாம்.

புலம்பெயர் வாழ்வு என்பது எம்மீது திணிக்கப்பட்ட ஒரு துன்பியல் நிகழ்வாகும். இதனால் எமக்கு கிடைத்த நன்மைகள் தீமைகள் பல என்று அடுக்கிக்கொண்டே போகலாம். எது எப்படி இருப்பினும் இது எமக்கு கிடைத்த ஒரு பொன்னான சந்தர்ப்பமாகவேநான் பார்க்கிறேன்.

எமது தேசத்தின் மொழியின் இருப்பு எமது வாழ்வியல் முறை பொருளாதார உத்திகள் தொழில்நுட்பம் என்று பலவற்றையும் சீர்தூக்கி பார்த்து மீள் பரிசோதனை செய்வதற்கானவாய்ப்பாகவே எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் நிறைய விடயங்களில் மாற வேண்டும் இல்லை திருந்தவேண்டும் என்று அழுத்திச் சொல்வேன்.

ஜெகதீஸ்வரன் போன்ற மக்கள் மனோநிலை மருவி எழுதும் படைப்பாளிகள் புலத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழர்களின் சிந்தனை மாற்றங்களுக்கு வித்திடும் புதிய ஆக்கங்களைத் தருவதன் மூலம் தமது தேசத்திற்கும் மொழிக்கும் அளப்பெரிய சேவை செய்யவேண்டும் என்று தோழமையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ் வளர்க உமது பணி என்று வாழ்த்தி தங்களின் மணிவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன்.



*2001 "பொன்வயல்" நிகழ்வில் குரும்பசிட்டி சசி கீதா சகோதரிகளை (திரு. திருமதி செல்லத்துரை தம்பதிகளின் புதல்விகள்) கௌரவம் செய்யும் நிகழ்வு*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் நண்பன்

*அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே நண்பனே*
*இந்தநாள் அன்று போல் இன்பமாய் இருக்குதே...*

ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன்னால், குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலயத்தில், வளர்மதி சனசமூகநிலையம் நடாத்திய நாடகப் போட்டியில் எனது சகோதரர் திருச்செல்வம் அவர்களோடு ஆரம்பித்த ஜெகதீஸ்வரன் அவர்களுடைய நட்பு என்னோடும் தொடர ஆரம்பித்தது. இந்த நட்பு எங்கள் இரு குடும்பங்களுக்கு இடையேயான நட்பாகி, உறவாகி இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பது மட்டற்ற மகிழ்ச்சியே.



இவர் எப்போதும் ஜாலியாக இருப்பார். அடிமனதில் ஆழப்புதைந்திருக்கும் பலவிடயங்களை எப்போதேனும் பகிர்ந்து கொள்வார். மற்றைய நேரங் களில் எல்லாம் ஒரே ஜோக், கிண்டல் சிரிப்புத்தான்.

எங்கள் ஊரில் (கட்டுவனில்) மாணவர்களுக்கு ரியூஷன் கொடுத்து வந்தார். சில சமயங்களில் அதிகாலை 5 மணிக்கு ரியூஷன் ஆரம்பிக்கும். ஏழு மணிக்கு ரியூஷன் முடித்துக் கொண்டு தனது வகுப்புக்களுக்காக மகாஜனக் கல்லூரிக்குச் செல்வார். பின்னர் பாடசாலை முடிந்ததும் தொடர்ந்து இரவு 9, 10 மணிவரை ரியூஷன் வகுப்புகளை நடத்துவார். அந்தக்காலங்களிலேயே தமது பெற்றோருக்கு எதுவித சிரமும் கொடுக் காது தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்வார்.

இத்தோடு கவிதை, நாடகம், பட்டிமன்றம் கோவில்களில் சொற்பொழிவுகள் என அனைத்திலும் பங்கு கொள்வார். என்னையும் இந்த இடங்களுக் கெல்லாம் அழைத்துச் செல்வார். இதனால் இந்த விடயங்களில் எனக்கும் ஆர்வம் ஏற்படக்காரணமாகவிருந்தார். எங்கள் கிராமத்தில் ஞானோதய வித்தியாசாலையில் நிகழ்ந்த நாடகமொன்றில் இவரும் எங்கள் ஊர் இளைஞர்கள் பாலேந்திரா, கணேசமூர்த்தி ஆகியோரும் பங்குபற்றி நடித்ததும் எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது. குரும்பசிட்டி மு. திருநாவுக்கரசு அவர்களின் மனிதன் மாறவில்லை என்ற நாடகமாக இருக்கலாம் என நம்புகிறேன்.

இவர் அனேகமான விடயங்களில் விடாக்கண்டன் கொடாக்கண்டன் பேர்வழி. எந்த விடயங்குறித்து கதைக்க ஆரம்பித்தாலும் இறுதிவரை விட்டுக் கொடுக்க ஒருப்படார். தான் கொண்ட கருத்துக்களுக்காக பல சந்தர்ப்பங்களை இழந்திருக்கிறார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நண்பர்கள் என்று கூடப் பார்க்காமல் காரசாரமாகக் கதைப்பார். பின்னர் மறுதினமே எல்லாவற்றையும் மறந்து விட்டு சாவகாசமாகப் பேசுவார். இதனால் இவரைப் புரிந்து கொண்டவர்களோடு மட்டுமே இவரால் பழக முடிந்திருந்தது.

திரு. இராஜன் திருமேனி
பிரமரன்
பொருளர்,
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்
மணிவிழா குழு, ரொரன்ரோ
40 ஆண்டுகளுக்கு மேலாக
சீரான நட்புப் பாராட்டி வரும்
உறவினர்

1970களில் **Computer Bank** மூலம் அரசவேலைக்குப் புள்ளி அடிப் படையில் தெரிவு செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்ட போது ஒரே நேரத்தில் மூன்று அரசாங்கத் திணைக்களங்களில் இவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணி செய்ய விரும்பி அதனை ஏற்றுக் கொண்ட போதிலும், அங்கு சென்ற சிறிது காலத்திலேயே அங்குள்ள நடைமுறைகளோடு ஒத்துப்போக முடியாத மனநிலையில், கே. எம். வாசகர் போன்ற பெரியவர்களின் ஆலோசனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடும் இவரது தந்தையாரின் விருப்பத்தை மீற முடியாமலும் அங்கிருந்து விலகி அரச திணைக்களமொன்றில் எழுதுவினைஞராகச் சேர்ந்து மிகக் குறுகிய காலத்திலேயே தாம் கடமையாற்றிய பிரிவின் தலைவராகி, உள்ளக கணக்காய்வு செய்பவராக உயர்ந்தார்.

இதேவேளையில் Co-operative Inspector பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுத் தொகுதியின் ஆளுங்கட்சி அமைப்பாளரைச் சந்தித்து சிபார்சுக் கடிதம் பெற மறுத்ததால், அந்தச் சந்தர்ப்பத்தை இழந்தமையையும் இங்கே குறிப்பிட்டுதான் ஆக வேண்டும்.

கொழும்பில் கடமையாற்றும் போது இரண்டு மூன்று மாதத்திற்கு ஒருமுறை நண்பர் ஜெகதீஸ்வரன் ஊருக்கு வருவார். கடிதமூலம் எங்களோடு தொடர்புகளைப் பேணி வந்த அந்த நாட்களில் ஊருக்கு வருவதாகத் தகவல் கிடைத்ததும் இந்த நாட்களை எண்ணி எண்ணிக் காத்திருப்பேன். அந்தக் குறித்த நாள் வந்ததும் மனதுக்குள் பட்டாம் பூச்சி சிறகடித்துப் பறக்கும் மனநிலையில் இருப்பேன்.

காலையிலேயே தெல்லிப்பளைப் புகையிரத நிலையத் திற்குச் சென்று கொழும்பிலிருந்து வரும் புகையிரதத் திற்காக காத்திருப்பேன். புகையிரத நிலையத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்து இருந்து கதைத்து தேநீர் அருந்தித்தான் தனது வீட்டிற்குச் செல்லுவார். நண்பர் ஜெகதீஸ் தனது குடும்பத்தைவிட எமது குடும்பத்துடன் தான் கூடிய நேரம் செலவழிப்பார்.

நான் எனது சகோதரிக்குத் திருமண ஒழுங்குகள் செய்த வேளையில் எனக்குப் பக்கபலமாக இருந்து இந்தத் திருமணம் நல்லபடி நடந்தேற கைகொடுத்துத வினார். நண்பர் ஜெகதீஸ்வரனின் தந்தையாரே இத் திருமணத்தை குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் முன்னின்று நடாத்தி வைத்தார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

எனது நண்பர் ஜெகதீஸ்வரனும் நானும் பழகிய உலாவிய அந்த நாட்கள் என்றும் மறக்க முடியாதவை. யாழ். நகரத்து திரையரங்குகளும், சுபாஸ் கபே, றிக்கோ கூல்பார் என்பனவும் இன்னமும் மனத்திரை யிலிருந்து அகற்ற முடியாதவை.

நண்பர் ஜெகதீஸ்வரன் தந்தையார், இவருக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி என்னையும் அழைத்துச் சென்று தம் மகனுக்கு நிச்சயித்த பெண் ணைக் காட்டி அகமகிழ்ந்தார். இதன் பின்னால் என் நண்பரின் வீட்டிற்குச் செல்லும் போதெல்லாம் தனது மகனின் திருமணத்தை எவ்வளவு சிறப்பாக நடாத்த வேண்டுமென என்னோடு கலந்துரையாடுவார். தமது மகன் என்றும் கஷ்ரப்படாமல், மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென விரும்பினார்.

ஆனால் ஜெகதீஸ்வரனின் தந்தையார் 1981 ஜனவரி 07 இல் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வறுமை நிலையில் இருந்து ஓரளவு மீண்டு கொண்டிருந்த குடும்பம் மீண்டும் கதிகலங்கிப் போயிற்று. இதன்பின் குடும்பப் பொறுப்பு முழுவதும் எனது நண்பனின் தலையிலேயே விழுந்தது. இதனால் இவரது திருமணம் தடைப்பட்டது. இந்தச் சமயத்தில் நான் எனது நண்பனுடன் இருக்கவில்லை. எனது வேலை காரணமாக வெளிநாட்டிற்கு சென்றிருந்த நிலை யில் எனது நண்பருக்கு ஆறுதல் கூற அவரருகில் ஒருவரும் இருக்கவில்லை. தனித்து நின்று போரடித் தமது குடும்பத்தைக் காப்பாற்றினார்.

தந்தையாரின் மரணத்தைத் தொடர்ந்து, 1981 ஒக்ரோபரில் நாட்டை விட்டு வெளியேறி பிரான்சுக்குச் சென்றிருந்தார். அங்கேயும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாட்களைக் கழித்தார். அங்கே எனது நண்பனுக்கு மூன்று தடவை அறுவைச்சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் வைத்தியர்கள், கையைப் பிசைந்த நிலையில் உயிரோடு போராடி ஆண்டவன் கருணையால் உயிர் பிழைத்தார். இத்துணை சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி தன்னம் பிக்கையோடு மெது மெதுவாக முன்னேறினார். பிரெஞ்சு மொழியைக் கற்று, தனது நண்பர்களுக்கும் உதவி தேவைப்படுவோருக்கும் மொழிபெயர்ப்புகளில் உதவி செய்தார். பொலிசாரின் திடீர்ச்சோதனைகளில் விசா இன்றி தங்கியிருந்த தமிழ் இளைஞர்களின் சிரமங் களுக்கு சம்பந்தப்பட்ட பகுதிப் பொலிஸ் பொறுப்பதி காரிகளைச் சந்தித்து தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

1984ல் நான் எனது தாய்நாட்டிற்குத் திரும்பியிருந்தேன். அப்போது நண்பர் ஜெகதீஸ்வரனின் தாயார் அவருக்குப் பெண் பார்க்கச் செல்வதாகக் கூறி என்னையும் அழைத் துச் சென்ற போது எனது நண்பனுக்குப் பெண் பார்க் கும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்திருக்கிறதே என எண் ணிப் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். இதே நேரம் என் நண்பர் இந்தியா வந்திருப்பதை அறிந்து நான் இந்தியா செல்ல முயற்சித்த போதும், தமிழ்நாட்டில் மதுரை மீனாட்சி அம்மன் சன்னிதியில் நிகழ்ந்த இவரது திரு மணத்தில் கலந்து கொள்ள இயலாமல் போய் விட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் ஜெகதீஸ்வரன் அவரது தங்கையை எனது பெற்றோரின் சம்மதத்துடன் எனக்குத் திருமணம் செய்து வைத்தார். எனது தாயார் தனது இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டு இருந்த போது எனக்கு ஆதரவாக இருந்ததும், எனது தாயார் எனது நண்பரின் மடியிலேயே தனது இறுதி மூச்சை விட்டதும் இன்றும் என் மனதில் அழியாத நினைவுகளாக உள்ளன. இத் தகைய, எனது இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொண்டுள்ள ஒரு நட்பை உறவு கொண்டமைக்காக நான் மிகவும் பெருமையடைகிறேன்.

கனடா வந்த பின்பும் பல்வேறு பிரச்சனைகள் அவரைத் தொடர்ந்து கொண்டேயிருந்த போதும், இவருடைய அயராத உழைப்பும், தன்னம்பிக்கையும் இவரது பாரியாரின் ஒத்துழைப்பும் இன்று இவரை ஓர் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறது. ஆசைக்கு ஒரு பெண்ணும், ஆஸ்திக்கு ஒரு ஆணும் என அழகான நல்லதொரு குடும்பம். இன்று போல் என்றும், நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென அகவை 60ஐ அடையும் எனது நண்பனுக்கு எனது மைத்துனருக்கு மனம் நிறைந்த எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜெகா மோகனா இணையர் ஜெகாவின் சகோதரி கௌரி - ராஜன் குடும்பத்தினருடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுரம் மிக்கவர்




"பொன் வயல்" விழாவின் போது மூத்த கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரன் அவர்களால் நடிகர் கோபிநாத் அவர்கள் கௌரவம் செய்யப்பட்டவேளை

2001.08.19 ஸ்காபரோ நகரில் அன்னை திரேசா கல்லூரி விழா மண்டபம். கனடா - குரும்பசிட்டி நலன்புரி சபையினர் தமது வருடாந்த பொன்வயல் நிகழ்வைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். நலன்புரிசபைத் தலைவராக திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் இருந்த போது தான் இப் பொன்வயல் வருடாந்த கலைநிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இப்போதும் இவர் தலைவராக இருந்த வேளையில் மூன்றாவது பொன்வயல் நிகழ்ந்து கொண்டிருந்தது.

குரும்பசிட்டிக் கிராமத்தின் மூத்த கலைஞர்களைக் கௌரவித்தல் என்ற வகையில் கந்தையா கோபிநாத் ஆகிய நானும் நாடகத்துறையில் ஈடுபட்டு ழைத்தவன் என்ற ரீதியில் கௌரவம் செய்யப்படுவதற்காக அழைக்கப் பட்டிருந்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் திரு. ஜெகதீஸ்வரன் அவர் களுடன் முதன்முதலில் உரையாடும் சந்தர்ப்பம் வாய்த்தது.

சொந்த மண்ணில் 1960களில், சன்மார்க்க நாடக மன்றத்தின் மூலம் நான் நாடகங்களை எழுதி மேடையேற்றிய நாட்களில் கந்தப்பு சிவதாசன், தம்பி நாதர் புவனேந்திரன், கந்தப்பு கணேசநாதன், தம்பிப்பிள்ளை சிவலிங்கம் போன்றோரை எனது நாடகங்களில் நடிக்க வைத்திருந்தேன். அந்த நாட் களில் மிகவும் சிறுவயதினரான ஜெகதீஸ்வரன் சன்மார்க்க சபை பின் மண்டபத்தில் நடக்கும் இளைஞர் சங்கக் கூட்டங்களுக்கு வந்து பங்கு பற்றியதை நான் நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத்துத் தலைவராக இவர் செயற்பட்ட வேளையில் எமதூர் அருள்மிகு சித்திவினாயகர் ஆலயத்தில் வருடாந்த உற்சவ காலத்தில் சமயச் சொற்பொழிவு நிகழ்வினை ஒழுங்கு செய்ய முனைப்புடன் செயற்பட்டதை நான் அறிவேன். இங்கு இவர் ஒரு முக்கிய பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. அதாவது சாதாரணமாக வருடாந்த உற்சவ காலத்தில் வரும் பக்தர்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு சமயச் சொற்பொழிவினை நிகழ்த்துவது சாத்தியமில்லாமலிருந்ததே காரணம். இதனால் மக்களை ஆலயத்தை நோக்கி வரச் செய்வதற்காக உற்சவக் காலத்தின் போது நாள் தோறும் முதலில் இன்னிசைக் கச்சேரியையும் அதனைத் தொடர்ந்து சமயச் சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்திருந்தார். இவரின் இந்த ஏற்பாடு மிகுந்த பலனைக் கொடுத்திருந்தது.

குரும்பசிட்டிக் கிராமம் விவசாயிகளையும், கைத் தொழில்களுள் ஒன்றான சுருட்டுத் தொழில் செய்பவர்களையும் பெருமளவில் கொண்டிருந்தது.

திரு. கோபிநாத் கந்தையா
ஓய்வுநிலை ஆசிரியர்
தலைசிறந்த நடிகர்
மொன்றியல், கனடா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருட்டுத் தொழிலாளர்கள் ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தின் (Employees' Provident Fund) கீழ் இணைக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு தொழிலாளியும் தனது சம்பளத்தின் 6% ஐ இத்திட்டத்திற்குச் செலுத்தும் போது தொழில் தருபவர் 9% ஐ செலுத்த வேண்டியிருந்தது. தொழில் தருபவர்கள் (முதலாளி) தாம் அதிக நிதி செலுத்துவதை தவிர்ப்பதற்காக தொழிலாளர்களை குறைந்தளவு பணத்தை இத்திட்டத்திற்குச் செலுத்தி னால் போதும் என இவர்கள் மீது இரக்கம் கொண்டவர்கள் போலச் செயற்பட்டார்கள். உண்மை நிலைமை தெரியாது கையிற் கிடைக்கும் சம்பளம் அதிகமாகக் கிடைத்தாற் போதும் என்ற நிலையில் இருந்த சுருட்டுத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய எண்ணி ஜெகதீஸ்வரன் ஊழியர்களின் உண்மையான சம்பளத்தின் 6% ஐ இத்திட்டத்திற்குச் செலுத்தச் செய்த போது ஊழியர்கள் தமது சம்பளம் குறைந்து விட்ட தென்று ஒரு புறமும், முதலாளிகள் தாம் இப்போது அதிக பணம் செலுத்த வேண்டியிருக்கிறதென்று மறுபுறமும் தாறு மாறாக ஏசித்தீர்த்தார் கள் என்பது சுவாரசியமான விடயம்.

திரு. ஜெகதீஸ்வரன் அரசாங்க சேவையில் இணைந்திருந்த வேளையில் தமிழ் அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஒரு முறை கலந்திருந்தார். அப்போது 1977 ஆவணிக் கலவரம் இலங்கைத்தீவடங்கிலும் வெடித்து ஓய்ந்திருந்தது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபம் என நினைக்கின்றேன். மொழி வழி பிரிந்த தமிழ் அரச ஊழியர்களின் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்ட ஒரு கட்சிப் பிரமுகர் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேச்சை முடித்துக் கொண்டு அமர்ந்ததும் மொழிவழி பிரிந்த அரச ஊழியர்களை ஏன் கட்சிவழி பிரிக்கப் பார்க்கிறீர்கள் என்று பகிரங்கமாக இவர் எழுந்து குரலெழுப்பிய போது அந்த மண்டபமே பெரும் திகைப்புடன் இவரைப் பார்த்தது.

தமிழ் அரச ஊழியர் தொழிற்சங்கத் தேர்தல் சூடு பிடித்து போட்டியிட்டவர்களே கைது செய்யப்பட்டும், சிறைப்பிடிக்கப்பட்டும் இருந்த கால கட்டங்கள் அவை. அந்தக் கால கட்டத்தில் அரசியற் போட்டிப் பழி வாங்கல்களும் நிறைந்திருந்தன. அந்தப் பொழுதுகளில் அத்துணை துணிச்சலோடு குரலெழுப்பிய ஜெகதீஸ்வரன் அவர்களின் நெஞ்சுரத்தைப் பாராட்டவே வேண்டும்.

புலம் பெயர்ந்த மண்ணிலே - இங்கு குரும்பசிட்டி நலன்புரிசபையினர் முத்தமிழ் விழாவொன்றினை நடாத்துவது குறித்து ஆலோசித்தபோது செயற்குழுவில் இருந்த பத்து உறுப்பினர்களுமே இது எம்மால் இயலாத காரியம். இது எமக்குச் சரிவராது என்று கருதிய போது தமது பக்க காரண காரியங்களை விளக்கி அனைவரையும் சம்மதிக்க வைத்து ஏகமனதாகத் தீர்மானிக்கச் செய்து அனைவரது ஒத்துழைப்புடனும் எல்லோரும் பாராட்டும் விதத்தில் அந்நிகழ்வினை நடாத்தி முடித்திருந்தார். அந்த நேரத்தில் எமது கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்கள் ஏறத்தாழ 90 அளவிலேயே இருந்திருக்கலாம் என்பது எனது அனுமானம். மூன்றாவது பொன்வயல் நிகழ்வில் புகழ்பூத்த ஈழத்து நாடக்கலைஞரான கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்கள் மூலம் என்னைக் கௌரவம் செய்தது என்னைச் சார்ந்தவர்கள் என்னை அங்கீகரித்திருப்பது போன்ற மன உணர்வினை ஏற்படுத்தியிருந்தது.

குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையத்திற்கு இவர் கனடா - நலன்புரிசபைத் தலைவராக இருந்த போது தொடக்கி வைக்கப்பட்ட நிதிப்பங்களிப்பின் சேமிப்பிலேயே தற்போது பொன். பரமானந்தர் வித்தியாலய வாகன சேவை நடைபெறுகிறதென்பதை இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும். போர் உக்கிரமடைந்து இடப்பெயர்வும் உயிரழிவும் தொடர்ச்சியாக இடம் பெற்ற வேளையில் அனாதரவான 15 சிறார்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பொறுப்பையும் இவர் தலைவராக இருந்த காலத்திலேயே நலன்புரிசபையால் நிறைவேற்ற முடிந்தது.

முள்ளிவாய்க்கால் அவலங்களின் பின்னர் எமதூர் மக்களில் பலர் பல்வேறு சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த வேளையில் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக இருந்த அமரர் ஆ. சி. நடராஜா அவர்கள் அவசர நிதியுதவி தேவை எனக் கேட்டிருந்த நிலையில் உறங்கிக் கொண்டிருந்த நலன்புரி சபையைத் தட்டி எழுப்பிச் செயற்பட வைத்து வாரணன் கந்தவனம், யசோதா அரவிந்தன், அகல்யா கோபால் போன்ற இளையவர்கள் மூலம் ஏழு இலட்சம் ரூபா வரை சேர்த்து அனுப்புவதற்கும் பின் நின்று செயற்பட்டவர் ஜெகதீஸ்வரன் என்பதை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது.

இன்றைய நிலையிலும் கிராமத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவருவதோடு அங்குள்ளவர்களின் தேவையறிந்து ஏனைய நாடுகளிலுள்ள குரும்பசிட்டி மக்களோடு தொடர்பு கொண்டு வேலைத்திட்டங்கள் பல உருவாகவும், நிறைவேறவும் செயற்பட்டு வருகிறார் என்பதை நான் அறிவேன்.

இத்தகைய ஆளுமைமிக்க தன் ஊர் மீது அக்கறை கொண்ட திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் பல்லாண்டு காலம் சேமமுற வாழ்ந்து மேலும் பலநற்பணிகளைச் செய்ய வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்கவர்

அமரர் திரு. க. ஐயாத்துரை அண்ணரின் சிரேஷ்ட புத்திரன் மதிப்புக்குரிய திரு. ஜெகதீஸ்வரனின் 60வது பிறந்தநாள் கொண்டாட்டம் ஒக்டோபர் 8ந் திகதி 2012இல் நடைபெறும் என்று அவரின் அன்புச் சகோதரி ஜெய கௌரியும், அவரின் கணவர் திரு. இராஜனும் எமக்குத் தெரியப்படுத்திய போது எனது மனைவியும் நானும் மிக்க மகிழ்ச்சியடைந்தோம். திரு. ஜெகதீஸ்வரனின் தாயார் திருமதி மாணிக்கம் எனது மனைவி ஞானாம் பிகையின் தந்தை திரு. மு. வல்லிபுரம் அவர்களின் மூத்த சகோதரன் திரு. மு. கந்தையாவின் அன்பு மகள்.

திரு. ஜெகதீஸ்வரனின் அடுத்த சகோதரி திருமதி. ஜெயபவானி இந்தியா விலும், மற்றைய சகோதரன் திரு. ஜெயசீலன் நியூசிலாந்திலும் குடும்ப சமேதரராக வாழ்கின்றனர்.



திரு.ஜெகதீஸ்வரன் தனது ஆரம்பக்கல்வியை குரும்பசிட்டி பொன். பரமானந்த வித்தியாசாலையில் முடித்தபின் இடைநிலைக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், தொடர்ந்து மகாஜனாக் கல்லூரியிலும் பயின்றார். அவர் அங்கும் தம் திறமையால் அக்கல்லூரிக-ளின் தலைசிறந்த பழைய மாணவர்களின் பட்டியலில் முதன்மை இடங்களைப் பிடித்துள்ளார்.

இவர் எமது குடும்பத்தின் நெருங்கிய உறவினர் என்ற முறையில் அவருடைய அன்பும் பண்பும் மிக்க அவரின் குடும்பத்தலைவி திருமதி. மோகனா மற்றும் அவர்களின் செல்வக் குழந்தைகள் செல்வன். அஜந்தன், செல்வி அஷ்லி ஆகிய திறமை உள்ள பிள்ளைகளையும் நாம் நன்கு அறிவோம். சிறந்த பாராட்டுக்குரிய பெற்றோராக இருந்து இரு பிள்ளை களையும் முன்னேற்றுவதற்காக சிறந்த வழிகாட்டுடன் வளர்ப்பதைக் கண்டு நாம் பெருமிதம் அடைகின்றோம்.

நான் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில், மூளாயில் உள்ள எம் வீட்டுக்கு திருமதி மாணிக்கம் அக்கா, செல்வன். ஜெகதீஸ்வரனையும், செல்வி. ஜெயகௌரியையும் உறவினர் என்ற முறையில் அன்புடன் கூட்டி வருவார். ஜெயகௌரி ஆரவாரமாகக் கதைப்பார், தம்பி ஜெகதீஸ்வரன் மிக அமைதியாக இருப்பார். ஆனால் இடையில் ஆராய்ச்சியான, நுணுக்கமான கேள்விகள் தான் கேட்பார். அந்த நேரங்களிலே என் மனைவி, இவரின் வருங்காலத்தில் மிளரப் போகும் சிறந்த ஆற்றல்களைப் பற்றி எதிர்வு கூறியது இன்று உண்மையாகியுள்ளது. வளரும் பயிரை முளையில் தெரியும் என்னும் முதுமொழிக்கு ஏற்ப இன்று அவர் புலமைத்தன்மையுள்ள, சிறந்த எழுத் தாளனாக, சிந்தனைச் சிற்பியாகத் திகழ்வதைக் கண்டு பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

திரு. ஜெகதீஸ்வரன் எழுத்தாளனாகப் புதுமைகள் விதைப்பவராகவும், புதுமையான ஆளுமை உடையவராகவும் மிளர்வதை இவருடைய நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. சிறப்பாக இங்கேயும் மனிதர்கள் என்ற முதலாவது சிறுகதைத் தொகுதி உதாரணமாகும். பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே என்ற கூற்றுக்கு ஏற்ப இவர் இயற்றிய மாணிக்கப் பரல்கள் என்ற கவிதைக்கொத்து - வைர விழாக் காணும் என் அம்மாவிற்கு என்று சமர்ப்பணம் செய்த நூல் எல்லோரையும் மனம் உருக வைத்துள்ளது.


திரு. திகம்பரலிங்கம்
அப்பாப்பிள்ளை
ஓய்வுநிலை ஆசிரியர்
விக்ரோறியாக்கல்லூரி ~இலங்கை
& T.D.S.B.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பெற்ற தாயை இவர் கௌரவித்து பெருமைப் படுத்திய முறையை நூல் வெளியீட்டு விழாவைப் பார்வையிட்ட அனைவரும் அவரைப் பாராட்டினர்.

வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பாள் தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய் திருமதி. மாணிக்கம் பேருவகை அடைந்ததை நாம் அன்று கண்டோம். தேசபக்தி மிக்க திரு. ஜெகதீஸ்வரன் தன் உறவினர் வெளிநாடுகளில் இருந்து கனடா வந்தால் அவர்களை விருந்தோம்பி அன்புடன் மற்றைய உறவினர்களிடமும், வேறு பல இடங்களுக்கும் சிரமம் பாராது கூட்டிச் செல்வார். இவர் குரும்ப சிட்டி நலன்புரிச் சங்கத்தின் இயக்கத்திற்கு காரண கர்த்தாகவாக இருப்பவர். கொலுவீற்றிருந்த குரும்பை நகர் என்ற இவரின் நூலும், சமூகத்திற்கும், உலகிற்கும் இவரின் சிறப்பியல்புகளைப் பறைசாற்றி நிற்கின்றன.

அவரின் தன்னலமற்ற சேவையும் புகழும் மேலோங்க அவரது இந்த 60வது பிறந்த நாளில் எம் நல்லாசிகளை அவருக்குக் கூறி எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு பூரண தேகசுகத்தையும், நீண்ட ஆயுளையும், சகல ஐஸ்வரியங்களையும் அருள வேண்டுமென்று மனதாரப் பிரார்த்திக்கிறேன். ♦♦♦



திருமதி. அமிர்தலிங்கம், திருமதி திகம்பரலிங்கம் ஆகியோருடன் விழாநாயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமையான (மரு) மகன்



ஜெகா தனது மனைவி மோகனா, மாமனார் ஆசிரியர் கதிரேசு உடன்

எமது மருமகன் ஜெகதீஸ்வரன் அறுபது வயது பூர்த்தி அடைவதை- யொட்டி, அவருடைய உறவினர்கள், நண்பர்கள். பெரியவர்கள் சேர்ந்து ஒரு மணிவிழா மலரினைத் தயாரிப்பது குறித்து நாம் மிகவும் மகிழ்கிறோம்.

மேலும் எமது மருமகனார் நீடுழி வாழ வேண்டுமென அவரை வாழ்த்த எமக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மிக்க மனநிறைவு அடைகிறோம்.

எமது மகள் மோகனாவை ஏற்றுச் செவ்வனே வாழ்ந்து வருவதை எண்ணி யும், எம்மையும் எமது அந்திம காலத்தே எவ்வித குறையுமில்லாமல் தம்மோடு சேர்த்து வைத்திருப்பதை எண்ணியும் பெரும் மனநிறைவு உடையோம்.

எமது குடும்பம் பெண்பிள்ளைகள் எண்மருடன் பத்துப் பேரைக் கொண்டது. இதை எண்ணி மிகவும் கவலையுடன் வாழ்ந்து வந்தோம். இவ்வேளையில் தான் எமது மகளை ஜெகதீஸ்வரன் ஏற்க முன்வந்தார். எமது மகள் மோகனாவிற்கு அடுத்து இருந்த மூன்று பெண்களையும் வாழ வைக்க உதவினார்.

அதனால் எமது வாழ்வு விடிவெய்தியது. இப்போது யாபேரும் வாழ்வு பெற்றுள்ளனர்.

மீண்டும் எமது மருமகன் குடும்பத்துடன் செவ்வனே வாழ்ந்து சிறப்புற வேண்டுமென முருகப் பெருமானை வேண்டி அமைகிறோம்.

திரு. குருநாதர் கதிரேசு
முன்னாள் அதிபர்
வேலுப்பிள்ளை வித்தியாசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பை நகரின் குரல்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியிருந்ததும் இந்நாடே அதன்
முந்தையராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே அதை
வந்தனை கூறி மனதில் இருத்தி வாயுற வாழ்த்தேனோ.

பாரதியின் இந்த தேசப்பற்று மிக்க பாடல் எமது கிராமத்தின் இருப்பை, அடையாளத்தை மீளக்கட்டி எழுப்பும் இவ்வேளையில் மிகவும் பொருத்த மான ஒன்றாகும். ஒரு நாட்டை, ஒரு சமுதாயத்தை, ஒரு கிராமத்தை நேசிக்கின்ற உளப்பாங்குள்ள எந்த ஒரு மனிதனின் உள்ளத்திலும் இப் பாடல் வரிகள் தரும் உணர்வுகள் ஏதோ ஒரு வடிவத்தில் உறவாடிக் கொண்டேயிருக்கும்.



குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ்வரன் அவர்களின் அறுபதாவது அகவைதனை அலங்கரித்து மலரும் இந்தமலர்தனை ஊர்க்காற்று தொட்டு தழுவிட மண்ணின் மணமும் கலந்து வீச வேண்டும் என்றவொரு அவாவில் ஊர் குறித்த சில விடயங்களை உட்புகுத்த நினைத்தோம். இடப் பெயர்வுக்கு முன்னர் கிராமத்தில் வாழ்ந்த உறவுகளை குடும்பரீதியாக பட்டியலிட முனைந்த போது ஏறத்தாழ 750 குடும்ப விபரங்களை பட்டியலிட வேண்டிய நிலை. இந் நடவடிக்கை இம்மலரின் பல பக்கங்களை எமதாக் கிக் கொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்வதாக அமைந்து விடும். என் றாலும் கூட இப்பட்டியல் படுத்தல் நடவடிக்கை நாட்டின் பல பாகங் களிலும் வெளிநாடுகள் பலவற்றிலும் வாழ்ந்து வரும் எமது கிராமத்து உறவுகளுக்கு தாம் வாழ்ந்த காலத்தில் தமக்கு அருகில் வாழ்ந்தவர் களது இல்லங்களையும் உள்ளங்களையும் நினைவு கூர வைப்பதுடன் ஊரோடு உறவாட வைப்பதாகவும் அமையும் என்பது எமது எண்ணம்.

இடப்பெயர்வுக்கு முன்னர் எம்முடன் எமது கிராமத்தில் வாழ்ந்த மக்கள், அவர்தம் மாண்புகள், உணர்வுகள், பழக்கவழக்கங்கள், அவர்கள் சுமந்து நின்ற பண்பாட்டு விழுமியங்கள் இவை எல்லாம் எளிதில் மறக்க முடியாதவை. இந்த வகையில் கிராமத்தின் ஒவ்வொரு உறவும் பெறுமதி மிக்கவை. இதனை எம் மண்ணில் பிறந்து தவழ்ந்து மண்ணின் புழுதியில் குளித்து வளர்ந்தவர்களால் நன்கு அசை போட்டுக்கொள்ள முடியும்.

திரு. சக்திவேல் அருணாசலம்,
குரும்பசிட்டி கிராம
அபிவிருத்திச்சங்க
உபதலைவர்

தான் பிறந்த மண்ணை, உறவாடிய மக்களை, கல்வி அறிவூட்டிய ஆலயத்தை, கைகூப்பி வணங்கி நின்ற ஆலயங்களை என்றும் பெருமைக்குரியவையாக பெறுமதி மிக்கவையாக நினைந்து வாழும் உள்ளங்கள் தான் இன்று மீண்டெழும் குரும்பை நகரின் வேர்களாய் விழுதுகளாய் நின்று ஊரின் வளத்துக்கு உரமூட்டக் கூடியவை. எமது கிராமத்து உறவுகளை நினைக்கும் போது இந்த உணர்வுகள் அனைத்து உள்ளங்களிலும் ஒன்றித்து நிற்பதை எம்மால் உணரமுடிகிறது. வீணையின் நரம்புகளை தட்டும் போது அவை தமக்கே உரிய நாதத்தை எழுப்புவது போல் எமது கிராமத்து உறவுகளின் இதயவீணைகளின் நாடி நரம்புகளை தொடும்போது அவர்களுக்கே உரிய பாணியில் அவர்தம் எண்ணங்களை எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இத்தகைய ஒரு நிலையில் வைத்து நோக்கக் கூடிய ஒரு பெருமைக் குரியவர் திரு.ஐ.ஜெகதீஸ்வரன் அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின பொதுநலன், கிராமத்தின் மாண்பு, கிராமத்தின் பின்புலங்கள் கிராமத்தின் எதிர்கால நிலைகள் என பலவகை விடயங்களையும் தன் இதயத்தின் நாதமாக்கி இதயத்தில் கணிசமான ஒரு பகுதியை இதற்காகவே நிரந்தர களஞ்சியமாக்கி நிற்கும் ஒரு சிந்தனையாளர் என்று குறிப்பிடலாம். இந்த வகையில் திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் பௌதீக நிலையில் பல மைல்கள் தொலைவில் இருந்தாலும் தம் உள்ளத்தால் ஊரோடு உறவாடி நிற்கும் ஒருவர் என்றால் மிகையாகாது.

கிராமத்தின் மீள் கட்டுமானப் பணிகள் சிறுகச் சிறுக மேற்கொள்ளப் பட்டுவரும் நிலையில் திரு.ஐ.ஜெகதீஸ் வரனைப் போன்ற பல உள்ளங்கள் எமக்கருகில் என்றென்றும் நிற்கின்றன என்ற ஒரு இனம் புரியாத உணர்வு எமக்கு ஊக்கமளித்து நிற்கின்றன. கிராமத்து மீள் கட்டுமானப் பணிகளில் பங்களிப்பு செய்து எமது எதிர்காலச் சந்ததியை மீண்டும் மண்ணில் தவழவிட வேண்டும் என்ற உணர்வும் உரிமையும் கிராமத்து உறவுகள் எல்லோருக்கு முன்னாலும் உள்ள ஒரு பாரிய பொறுப்பாகும்.

இந்த உரிமையும் பொறுப்புக்களும் வெறும் நிதிஉதவிகளுடன் மட்டும் நின்றுவிடாது பெறுமதி மிக்க ஆலோசனைகளாகவும் திட்டங்களாகவும் அமைதலும் வேண்டும். கிராமத்தின் பழம் பெருமைகளையும் மாண்பு களையும் வாயளவில் பேசி கழிப்பதிலும் பார்க்க அந்த பெருமைகளையும் மாண்புகளையும் தற்கால நிலை களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் கிராமத்தின் மீள் கட்டுமானப் பணிகளின் ஊடாக தக்கவைக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு வருக்கும் ஏற்பட வேண்டும். பழம் பெருமைகளைப் பேசியே காலத்தைக் கழித்து கால மாற்றங்களுக்கு இயைபுபடக் கூடியதாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளில் காட்டிய சோம் பேறித் தனத்தின் விளைவுகளை இன்று தமழினம் சந்தித்து நிற்கும் நிலை இதற்கொரு எடுத்துக் காட்டாகும்.

எனவே எமது கிராமத்து உறவுகள் அவர்கள் உள்நாட்டில் வாழ்ந்தாலென்ன வெளிநாடுகளில் வாழ்ந்தாலென்ன தமக்கே உரிய உரிமையுடனும் வாஞ்சையுடனும் கிராமத்தின் மீள் கட்டுமானப் பணிக-ளில் கைகோர்த்து நிற்கவேண்டிய காலம் இதுவாகும். இப்பணிகளில் திரு.ஐ.ஜெகதீஸ்வரன் அவர்களின் பங்கும் என்றும் நிலைத்து நிற்க வாழ்த்துகிறோம்.

எம் கிராமத்து உறவுகளே கிராமத்தின் மீள் கட்டுமானப் பணிகளில் உங்கள் உணர்வுகள் நிலைக்கட்டும் உறவுகள் தொடரட்டும்!




"உதயன்" பிரதம ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம், நாடகக் கலைஞர் கணபதி ரவீந்திரன், திரு. கிருபா கிருஷான் ஆகியோருடன் "பொன்வயல்" விழா மேடையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வித்தகர்



திரு. குரு அரவிந்தன்,
பிரபல சிறுகதையாளர்,
நாடக, சினிமா வசனகர்த்தா

புகுந்த மண்ணில் எனக்கு இரண்டு ஜெகதீசன்கள் அறிமுகமானார்கள். இருவரும் மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவர்கள். இருவருமே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். எனக்கும் இலக்கியத்தில் ஈடுபாடு இருந்ததால், ஜெகதீஸ் என்ற பெயரை யாராவது குறிப்பிடும் போதெல்லாம் பல தடவைகளில் யாரைக் குறிப்பிடுகின்றார்கள் என்பதில் குழப்பம் ஏற்படுவதுண்டு. பின்புதான தெரியவந்தது இவரின் பெயர் ஜெகதீஸ்வரன், மற்றவரின் பெயர் ஜெகதீசன் என்பது. ஆனாலும் இந்தக் குழப்பத்தைப் போக்க, எஸ். ஜெகதீசனை இளவாலை ஜெகதீசன் என்றும் ஐ. ஜெகதீஸ்வரனான இவரை குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் என்றும் ஊரின் பெயரையே அடைமொழியாகக் கொண்டு அழைக்கத் தொடங்கினோம். இவர்களால் இவர்களது ஊரும் பெருமைப்பட்டதால் அதுவே நிலைத்துவிட்டது.

பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் நண்பர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள். 2000ம் ஆண்டு இங்கேயும் மனிதர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட இவர், 2008ம் ஆண்டு மேலும் இரண்டு அருமையான நூல்களை ஒரே நாளில் கனடாவில் வெளியிட்டு கனடிய தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்திருந்தார். கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் கொலுவீற்றிருந்த குரும்பைநகர், மாணிக்கப் பரல்கள் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா ரொறன்ரோவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கனடாவில் உள்ள பல இலக்கிய ஆய்வாளர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் இந்தக் கவிதை நூலை வெளியிட்டு வைக்க, மகாஜனாக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களும் யாழ் பல்கலைக்கழக முன்நாள் விரிவுரையாளர் சுப்பிரமணிய ஐயர் அவர்களும் கலந்து கொண்டு மதிப்புரை நிகழ்த்தியிருந்தனர்.

மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவு மலரைத் தொகுக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தபோது எப்படியாவது இவரிடமிருந்து ஏதாவது ஆக்கம் ஒன்றைப் பெற்றுவிட வேண்டும் என்ற ஆவலோடு தொடர்பு கொண்டேன். முதலில் ஏதோ காரணத்தால் மறுத்து விட்டாலும் பின் ஏற்றுக் கொண்டு நூற்றாண்டு மலருக்காகக் கவிதை ஒன்றை அனுப்பியிருந்தார். எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் மகாஜனாக் கல்லூரி அன்று எப்படித் தலைநிமிர்ந்து நின்றது என்பதற்கு அவரது கவிதை வரிகளில் சிலவற்றைப் பாருங்கள்.

"தாழ்வார ஓரத்திலே தசமித் தினத்தினிலே
கால்கோள் கொண்ட தெங்கள் சைவப்பள்ளி
ஆண்டிரண்டு காணு முன்னே அனேகம் மாணவர்கள்
சூழ்ந்து கொள்ளத்தாயாள் குடிபுகுந்தாள் கொட்டகைக்கு"

என்று மிஷனரிமாரின் தொல்லைகள் மட்டுமல்ல, இயற்கையோடும் போராடித்தான் அன்று கல்வி கற்க முடிந்தது என்று அன்றைய நிலையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் இவர், இன்று சமுதாயத்தில் தான் மட்டுமல்ல மகாஜனன்கள் உயர்ந்த நிலையில் இருப்பதற்குத் தன்னலமற்ற மகாஜனா அன்னைதான் காரணம் என்பதைக் கவிதை வரிகளிலே மேலும் தருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணெனக் கல்வியைக் காலத்திற் புகட்டினாய்
விண்ணையும் தொட்டிடும் வித்தையைக் காட்டினாய்
உன்னைநீ அறி யென்று உள்ளொளி ஏற்றினாய்
அன்னையே இன்னும் நீ ஆயிரம் ஆண்டு வாழ்வாய்"

என்று கல்விச் செல்வத்தை அள்ளித் தந்த மகாஜனா அன்னையை வாழ்த்திப் பாடுகின்றார்.

மணிவிழா காணும் இனிய நண்பர் ஜெகதீஸ்வரனின் சமூக, இலக்கிய சேவை மேன்மேலும் தொடரவேண்டும், அதன் மூலம் தாயகத்தில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த இந்த மண்ணிலும் எங்கள் இனம் நலம் பெறவேண்டும் என்று கூறி, வையமே வாழ்த்துரைக்க வாழ்க பல்லாண்டு என்று எனது சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் வாழ்த்திப் பாராட்டுகின்றேன். ❑❑❑



"மாணிக்கப்பரல்கள்" நூல் வெளியீட்டு விழாவின் போது
மகாஜனக் கல்லூரி முன்னாள் தலைவர் திரு. இரவீந்தரன் இரத்தினசிங்கம்
விழா நாயகரின் தாயாரிடமிருந்து நூல் பிரதியைப் பெறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிப்பவர்

மிக நெருக்கமான, மிக நீண்டகால என் நட்பு வளையத்துக்குள் இடம் பிடிக்காவிட்டாலும், கண்டு பழகிய ஒரு சில சந்தர்ப்பங்களிலேயே என் மனதில் நிரந்தரமாய் இடம்பிடித்துக்கொண்ட ஒருவர் நண்பர் ஜெகதீஸ் வரன் அவர்கள்.குரும்பசிட்டி என்ற ஊர்ப்பெயரைச் சொன்னதும், சட்டென்று ஜெகதீஸ்வரனின் ஞாபகம் வருமளவிற்கு, ஊர்ப் பெயரில் புகழ்பெற்றோரில் இவரும் ஒருவர்.

பேச வேண்டுமென்பதற்காகவே எதையாவது பேசிக் கொண்டிருக்காமல், புகழ வேண்டும் என்ற சூழ்நிலை கருதியே அவசியமற்ற புகழாரங்களை அள்ளிவீசி யாரையும் குளிர்காய வைக்காமல், அலசுவதற்காக மட்டுமே எந்த விடயத்தையும் அலசி விடாமல், எழுத வேண்டுமென்றே எதை எதையோ எழுதி விடாமல், ஆழமான மண் பற்றுடன், குறித்த விடயத்திற்குள் தன் பேச்சைச் சுருக்கிக்கொண்டு, நாணயம், நியாயம், இங்கிதம், வினயம் தெரிந்த பண்பான ஒரு நண்பர் ஜெகதீஸ்வரன் அவர்கள்.



*1990களில் தனது மகன், மகளுடன் ஜெகா*

ஜெகதீஸ்வரன் என்ற இந்த ரசிகனுக்குள்ளே மிதமிஞ்சிய தமிழ்ப்பற்று விஞ்சிக் கிடக்கிறது. தமிழன் என்ற ஒருமையைப் புறக்கணித்து, தமிழர் நாம் என்ற பொது உறவுக்குள் புதைந்து, பொதுநலம் மதித்து, ஒட்டுமொத்த சமூக வெற்றி, இணைந்த வெற்றி, எடுத்த காரியத்தின் ஒன்றுபட்ட வெற்றி என்று, எப்போதும் தொலைநோக்கில் சிந்தித்து செயற்படத் தெரிந்த நல்ல மனிதன் இவர்.

அவசியமற்ற வார்த்தைப் பிரயோகங்களை இணைத்து அரசியலுக்குள் அர்த்தமின்றி நுழைந்து விடாமல், தமிழியல் தகுதிகாண் கருதி இலக்கிய இலக்கணங்களுக்குள் காரணமின்றிப் புகுந்து விளையாடாமல், அறிஞன் என்ற போற்றுதல் கருதிப் புரியாத மேற்கோள்களுக்குள் தன்னை உட்புகுத்திக் கொள்ளாமல், சொல்ல வந்த விடயத்தை அவசியமின்றி சுற்றிவளைத்து உவமானம் கூறாது, நேரடியாக அதுவும் நெத்தியடியாக, கண்ணைப் பார்த்து கண்ணியமாக நேரில் பேசத் தெரிந்த உத்தமர் என் நண்பர் ஜெகதீஸ்வரன்.

பணிவு, அன்பு, மனிதநேயம் கொண்ட மனப்பாங்கு, தரம் பிரிக்காது அனைவரையும் மதித்து நடக்கும் பொன்னான இதயம், தான் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் தமிழரின் தகுதரம் பேணி மதித்து நடக்கும் பாங்கு என, தனக்கே உரித்தான தனித்தன்மையுடன் தமிழினத்திற்கு ஓர் உதாரண மனிதராய், பெருமை சேர்க்கும் பண்பாளர். அக்கறைமிக்க மனித உரிமை ஆர்வலர், நேர்மையான விமர்சகர், முற்போக்கு சிந்தனையாளர், தமிழ் மொழி, சமயம், கல்வி, கலை, பண்பாடு போன்றவற்றின் ஏற்றத்திலும் எழுச்சியிலும் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் பற்றும் கொண்ட சமூக மேம்பாட்டுச் சிந்தனைமிக்க ஒருவர்.

குறிப்பிட்ட ஒரு துறையில் மட்டுமே தன்னை இனம் காட்டிக்கொள்ளாது, எழுத்து, பேச்சு, கவிதை, சமூகப்பணி, சமயப்பணி, ஊர்ப்பணி என்று விரிந்துபட்ட கலை இலக்கிய சமூகத் துறைகளில் மிளிர்ந்தாலும், ஆர்ப் பாட்டமில்லாது அடக்கி வாசிக்கத் தெரிந்த பண்பாளர். தனது 19 வயதில் கறுப்புப் பால் என்ற ஒரு புரட்சித் தலைப்பில் சிறுகதை எழுதி, எழுத்தாளர் உலகத்தை சிந்தித்துப் பார்க்க அழைத்த இளவல் இவர்.

திரு. குயின்ரஸ் துரைசிங்கம்
அரசியல் விமர்சகர்
தலைசிறந்த நிகழ்ச்சித்தொகுப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மதிக்கும் ஆசான் திரு.எஸ்.இராசநாயகம் அவர்களது நூல் வெளியீடு தொடர்பான செயற்பாடுகளின் போது, தானாகவே ஓடிஓடி அனைத்து வேலைகளையும் இழுத்துப்போட்டுக்கொண்டு, வெற்றியாக அவரது நூல் வெளியீட்டை நடத்திக் கொடுத்தபோது, நான் இந்த ஜெகதீஸ்வரனிடம் மறைந்திருந்த "ஜெம்"மைக் கண்டுகொண்டேன்.

குரும்பைநகரில் பிறந்த தமிழரின் இந்த ஒளி, மாணிக்கப்பரலாக, மகாஜனனாக, இங்கேயும் நல்ல மனிதர் இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்யும் நல்ல செயற்பாட்டாளராக, இன்னும் அரை நூற்றாண்டு வெற்றியுடன் நடைபோட, இவரது மணிவிழாவில் இவரையும், இவரது வெற்றிக்கு உறுதுணை வழங்கிய மனைவி பிள்ளைகளையும், மகிழ்வோடு வாழ்த்துவதில் நிறைவடைகிறேன்.



பத்மஸ்ரீ எஸ்.பி. பாலசுப்பிரமணியம், கவிஞர் பா. விஜய், பாடகர் முகேஷ் அவர்களுடன் ஜெகா தன் மகளுடனும், தற்போதைய குரும்பசிட்டி நலன்புரிச் சபை தலைவியுடனும் (2007)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகத்து உண்மையாளன்



கலையென்று வரும்போது கனடாவில் பலபேர்கள்
கண்களில் தெரிந்த போதும் - சிலர்
நிலைகொண்ட இடந்தானே நீதிக்கு இலக்காகி
நின்றது மற்ற தெல்லாம் - இங்கே
தலைகொண்ட கர்வமும் தானென்ற போட்டியும்
ததும்பிய குளத்துச் சேறாய் - ஒரு
விலையின்றிப் போனதோர் வேளையில் அண்ணனே
விளைந்தனை முத்தாய் இங்கே பொய்ம்மை
வலைகொண்டு வீசினோர் வழியினை விலக்கிநீ
வாழ்வினை அமைத்தாய் வாழி பொங்கும்
உலைகொண்ட சோற்றுக்கு ஒருசோறு பதமென்ற
உதாரணம் உடைத்தாய் வாழி!

உடலுக்கு வயதுண்டு உளத்துக்கு வயதில்லை
உணர்வுக்கோ இரண்டும் இல்லை என்றும்
கடலுக்கு ஓய்வில்லைக் கருத்துக்கும் ஓய்வில்லை
கடமையை உணர்வார் நெஞ்சில் - தாழை
மடலுக்கு மணமில்லை மலைபோல வளர்ந்தாலும்
மாந்தர்கள் முகர்வ தில்லை! பலாத்
தடலுக்குச் சுவையில்லை சுளைதாங்கி நின்றாலும்
தடல்போன்ற வாழ்வு வேண்டாம்! - இங்கே
குடலுக்கு இரைதேடும் கொக்கெல்லாம் இருக்கட்டும்
கூவுவாய் குயிலாய் நீயும் - கொடிப்
பிடலுக்குக் கல்தூக்கும் பிழையின்றி அண்ணாநீ
பெரியதோர் கடமை செய்தாய்!

அறுபது அகவைதானே அமைதிக்குத் தொட்டில்
அந்த ஆனந்தம் பெருகவாழி! இன்று
உறுவது முதுமையேனும் உள்ளத்தில் நிதானமென்ற
ஊற்றையும் கண்டு வாழி வாழ்வில்
பெறுவது என்னவென்றே பெருந்திரை விலகுமிந்தப்
பெரியதோர் நாளில் அண்ணே பெற்ற
குறுநகை மனைவியோடும் குழந்தைகள் தங்களோடும்
குலவிய சுற்றம் சூழக் கொன்றை
நறுமலர் முத்துமாரி நங்கையின் பாதம்போற்றி
நன்மையே கண்டு வாழ்க! நீயும்
நிறுவிய நூல்கள்வாழி! நிலமதில் அவைகள்சொல்லும்
நெஞ்சகத்து உண்மை வாழி!!

கவிஞர். இரா. சம்பந்தன்
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்
மணிவிழா குழு உறுப்பினர்
ரொரன்ரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பதிவாளர்

எம்மவர்கள் தாம்பிறந்து வளர்ந்த மண்ணை மறந்தவர்களாக வாழ்ந்து வரும் இந்தக்காலகட்டத்தில் பிறந்த மண்ணும் பெற்ற தாயும் நனி சிறந்தனவே என மதித்து வாழ்வோரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். தமிழ்கத்துத் தமிழர்கள் தாம் பிறந்த மண்ணைமறக்காமல் தங்களது பெயர்களுக்கு அடைமொழிப்படுத்திச் சிறப்பிப்பதோடு தமக்கும் பெருமையைத் தேடிக்கொள்கின்றார்கள். எம்மவரைப் பொறுத்தவரை நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் என விரல்விட்டு எண்ணக் கூடியவர்களையே நாம் ஊர்ப்பெயரோடு இணைத்து இனங் காண்கின்றோம். தாம்பிறந்த மண்ணின் பெயரைக் குறிப்பிடுவது பெருமையைத் தராது என்று எண்ணுகின்றார்களோ என்னவோ! ஆனால் குரும்ப சிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் தனதுபெயரோடு தனது தாய்மண்ணைப் பிறந்து தவழ்ந்து, மண்விளையாடி, ஓடியாடி விளையாடிய மண்ணைப் பொன்னாகவே கருதுகின்றார். இது அவரின் பெருந்தன்மையையும், மண்ணின் மீது அவர் வைத்திருக்கும் பெருமதிப்பையும் வெளியுலகிற்குப் படம் பிடித்துக்காட்டுகின்றன.



இங்கேயும் மனிதர்கள் என்னும் சிறுகதைத் தொகுதியும் மாணிக்கப் பரல்கள் எனும் கவிதைத் தொகுதியும் அவரது இலக்கியக் கருவூலங்களாக வெளிவந்துள்ளன. மண்மீது கொண்ட மாறாத அன்பினால் எம்மினத்தவர்களால் கவனிக்கப்படாது மறந்துபோயுள்ள வரலாற்றுப் பதிவுகளின் முக்கியத்துவத்தையும் அதன் அத்தியாவசியத்தையும் நன்கு உணர்ந்துகொண்டவர். முன்னோரால் பதிவுசெய்யப்படாது மறைந்துபோன, புதையுண்டுபோன சரித்திரங்கள் பற்றி அவரது மனக்குமுறலை அவர் எழுதிய கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்னும் நூல் கோடிட்டுக் காட்டுகின்றது. வரலாற்றுப் பதிவு என்பது வெறும் வரலாற்றை மட்டும் தரவுகளாகத் தராமல் அந்தமண்ணின் இயல்பு, வளம், தன்மை, அதன் மக்கள், அவர்களின் வாழ்வியல் முறைகள் என்பனபற்றியும் கவனத்தைச் செலுத்தியுள்ளார் என்பது தெளிவு.

சிறுகதைத் தொகுதியில் அவர் தன்னை ஒரு இலக்கியர் அல்ல என்றும் ஜெயகாந்தன், புதுமைப்பித்தன், மௌனி, வரதராஜன், கல்கி, காண்டேகர், சுந்தரராமசாமி போன்றோரது கதைகளின் வழியாக சிறுகதை இலக்கியம் என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொண்டுள்ளார். அது மட்டுமன்றி சிறுகதைகளின் தோற்றுவாய் பற்றி காமர் செட்மாமை ஆதாரப்படுத்தி அவரின் கூற்றையும் தனதுரையில் மனிதனிடத்தில் தனது உடைமை பற்றிய உணர்வு எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளதோ அதேயளவு ஆழமாகக் கதை கேட்கும் ஆர்வமும் ஆழமாய் வேரூன்றியுள்ளது. மிகப் பழங்காலத்திலேயே பொது இடங்களில் ஒன்றாய் அமர்ந்து கதைகேட்கும் வழக்கம்இருந்திருக்கின்றது என்பதனை எடுத்தாண்டுள்ளார்.

திரு. த. சிவபாலு MA
ஆசிரியர், TDSB
முன்னாள் தலைவர் ~ கனடா
தமிழ் எழுத்தாளர் இணையம்

அவ்வாறே சிறுகதைக்கான வரைவிலக்கணத்தைப் பல்வேறு சிறுகதை, நாவல் இலக்கிய வல்லாளர்களின் வாயிலாக தனது ஆய்வினையும் அதன்வழி தனது அறிவையும் பெருக்கித் தேக்கிக்கொண்டுள்ளார் எனலாம். எச்.ஜி.வேல்ஸ், மற்றும் எட்கார் அலன் போ, எச்.இ.பேட்ஸ் போன்றோரது கருத்துக்களையும் புதுமைப்பித்தனின் கருத்தையும் தனது எண்ணத்தில் ஊடாட விட்டிருக்கின்றார் என்றால் அவர் தன்னை ஒரு இலக்கியர் அல்ல எனக்கூறுகின்ற ஒரு தன்னடக்கம் நிறைந்த இலக்கியராகக் காட்டியுள்ளார் என்பது தெளிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தனது 19 வயதில் கறுப்புப்பால் என்னும் சிறுகதை யினூடாக அறிமுகமான ஒரு எழுத்தாளர். நாடு கடந்தும் தனது பணியை விட்டுவிடாது, தனது வேலைப்பழுக்கள், குடும்பச் சுமைகளுக்குள் நின்றும் தொடர்கின்ற ஒரு இலக்கிய ஆர்வலர் மட்டுமன்றி இலக்கியப் படைப்பாளியாக அவர் தன்னை வெளிப் படுத்திக்கொண்டுள்ளார் என்று துணிந்து கூறும் அள விற்கு அவரது எழுத்தாற்றல் நிலை கொண்டுள்ளமை வெளிப்படை.

இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி 2000த்தில் வெளிவந்துள்ளது. அதில் ஒரு கோபுரம் சாய்கிறது, நித்தம் நித்தம் மாறுகின்ற, இலையுதிர் காலம், புகை யிலைக் காம்பு, முந்தைவினைமுழுதும், தோற்றுப்போன தோர், வட்டத்தைவிட்டு, நல்ல வண்ணம் வாழலாம், விடுதலை, போலிகள், இங்கேயும் மனிதர்கள் என்னும் பதினொரு சிறுகதைகளைத் தந்துள்ளார். அவரது உள்ளத்தைப்போலவே சைவத்தின் நிலைக்களனாகத் தன்னை வரித்துக்கொண்ட செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியிடம் வாழ்த்துரையைப் பெற்று அவரது ஆசியைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு, தன்னை அறிமுகப்படுத்தக் கூடியவர் சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மனாதன் அவர்கள் என உள்ளத்தால் உள்ளி அவரை அணுகியுள்ளார். அத்தோடு இந்த நூலுக்கான அணிந்துரையைப் வணக்கத்திற்குரிய பேராசிரியர் ஜேசெப் சந்திரகாந்தன் அடிகளாரிடம் பெற்றுக்கொண்டுள்ளார். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்ற ஔவையின் பொன்மொழிக் கேற்ப குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனின் எண்ணவலைகள் எப்பொழுதும் கற்றவர்களைச் சுற்றி வருகின்றது என்ப தோடு கற்ற பெரியாரின் துணைகோடல் செவிக்கின்பம் என்பதற்கமைய அவர் கல்வியியலாளர்களை அண்டித் திரிவதும் பெரிதும் மதித்து அவர்களுக்குத் தன்னா லான பணிகளைச் செய்து வருவதும் அவரது பெருந் தன்மையைக் காட்டிநிற்கின்றது.

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரனின் எழுத்துக்கள் அவரை ஒரு சிறந்த வாசகர் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. மனிதன் வாழ்க்கை முழுமையும் கற்க வேண்டும், கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் என்பது ஸ்ரீபரமஹம்சரது கூற்றாகும். ஆன்மீகத்தில் மிகுந்த ஈடு பாடும் நம்பிக்கையும் கொண்டுள்ள ஜெகதீஸ்வரன் ஒரு சிறந்த வாசனைப் பழக்கம் உடையவர். அவரது ஆளுமையினை அது புடம்போட வைத்திருக்கின்றது என்பதனை அவரது எழுத்துநடை, சொல்லாளுகை, பொருட்பொதிவு என்பன எடுத்துக்காட்டுகின்றன.
எடுத்துக்காட்டாக,
தமிழ் கூறும் நல்லுகம் என்பது
இப்போது வடவேங்கடம் தென்குமரி அல்ல
அது வடதுருவம், தென்துருவம் என விரிந்துவிட்டது.
தமிழறியா இப்பெரும் பரப்பில்
ஒவ்வொரு தேசத்திலும் துளிப்பொறியாக விழுந்த ஈழத்தமிழர்,
தங்கள் மொழியையும் மொழிசார்ந்த வாழ்வையும்
துடிப்போடு காப்பாற்றுவதற்காக
பல்வேறு வழிகளில்
வானொலியாக, பத்திரிகையாக, சஞ்சிகையாக,
இலக்கிய முயற்சிகளாக,
பாடசாலைகளாக, கோயில்களாக, சங்கங்களாக
இணையத்தளங்களாக,
தங்கள் உழைப்பை
அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்,
இந்த அர்ப்பணிப்புக்குப் பின் இருப்பவர்கள்
வெறும் சாமானியர்களே
என்னும் காலம் செல்வத்தின் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார் ஜெகதீஸ்வரன் என்றால் அவரது வாசிப்புத்திறன் எங்கெங்கெல்லாம் செல்கின்றது என்பது வெளிப்படை.

வெறுமனே பிரபலங்களைத் தேடிச் சாட்சியமாக்காது எம்மிடையே உள்ள புத்திஜீவிகளின் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளும் உள்ளப் பாங்கு அவரிடம் குடிகொண்டுள்ளமையைப் பாராட்டத் தான் வேண்டும்.

தோற்றுப்போனதோர் என்னும் சிறுகதையில் ஒரு கண வனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உரையாடலை மிகவும் காத்திரமாக நகர்த்திச் சென்றுள்ளமை ஆண்மை, பெண்மை என்னும் பதங்களுக்கிடையே உள்ள உணர்ச்சிகளை வெளிக்கொண்டுவர அவர் கையாண்டுள்ள கருப்பொருள் புலம்பெயர் சூழலை அடிப்படையாகக் கொண்டுள்ளமை. கணவன் என்ற தானத்திலிருந்து மட்டுமல்ல எழுத்தாளன் என்ற தானத் திலிருந்தும் அவன் தோற்றுப்போனமையை மிக நய மாக எடுத்தாண்டுள்ளார். இவ்வாறு அவர் எடுத்துக் கொண்டுள்ள கருப்பொருட்கள் சற்று வித்தியாச மானவை. இலையுதிர் காலம்என்னும் சிறுகதையில் காதலனுக்காகத் தன்னை அர்ப்பணித்த இளம்பெண் அவன் ஆளாகித் தன்னை ஏமாற்றியதை உணர்ந்து சாதாரண யாழ்ப்பாணத்துத் தமிழ்பெண்ணாக தற் கொலை செய்யாமல் எதிர்நீச்சல் போடவைத்திருக் கின்றார். ஈற்றில் சிங்கள வாலிபனின் நட்புப்பலமாக வாழ்வை ஒட்டவைத்துக்கொள்ளும் நிலைமையைச் சித்தரிக்கும் கதை சாதாரணமான ஒன்றல்ல. பெண்கள் தமது வாழ்வைத் தாமே அமைத்துக்கொள்ளவேண்டும் என்னும் கருத்தை விதைத்துள்ளார். அவரது கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தைத் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக்குத் திருமணத்திற்காக வரும் பெண்களில் சிலர் படும் மன உளைச்சல்கள், பொருளியல் இடர்பாடு கள் போன்றவற்றை மிக நயமாக எடுத்தாண்டுள்ளார். சூதும் வாதும் வேதனை செய்யும் என்னும் பொன் மொழியை மறத்தலாகாது என்பதனை அவர் உணர்த்தி யுள்ளார். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பதற்கேற்ப கனடாவில் ஆலயங்களின் பித்த லாட்டம், பணம்பண்ணும் வியாபாரதலமாக மாறிவிட்ட நிலைகளையும் அவர் நயமாக எடுத்துரைத்துள்ளார். அவர் கையாண்டுள்ள கதாபாத்திரங்களின் பாத்திரப் படைப்பு பிரமாதம் என்றுதான் சொல்லவேண்டும். பாத்திரங்களைப் பேசவைக்கும் பாங்கும் வாசகர்ளைச் சலிப்படையாது ஆர்வத்தோடு வாசிக்கத்தூண்டும் பாணியில் அமைந் துள்ளது. இங்கேயும் மனிதர்கள் போலித்தனத்தையும், புகழுக்காக வாழ்வதையும் கண்டிக்கும் மனப்பக்குவம் ஜெகதீஸ்வரனின் எழுத்துக் களில் பிரதிபலிக்கின்றன. மனிதர்கள் பலவிதம், அதில் ஒவ்வொருவரும் ஒரு விதம் என்பதனை நினைவூட்டுகின்றன அவரின் சில கதைகள். கதைகள் ஊடே சமூகப் பிரக்ஞைகளையும், பிரச்சினைகளையும் முதன்மைப்படுத்தி அவற்றை கையாளும் தன்மை சிறப்புடையது.

மாணிக்கப்பரல்களில் பாரதியின் பாணியில் கவிதை படைத்துள்ளார் ஜெகதீஸ்வரன் என்பதற்கு அவரது வல்லமை தாராயோ என்னும் கவிதை கட்டியம் கூறுகின்றது. சமகால ஈழத்துப்பிரச்சினை தீரவேண்டும், தீர்க்கப்படவேண்டும் என்பதில் அவரது மனம் துன்பப் பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. ஈழத்தில் வாழும் எம்மினத்தின் துன்பம், துயரம், வாழ்வியல் மாற்றமடையவேண்டும் என்னும் ஒரு தமிழ்ப் பற்றாள னின் கருத்துச் செறிவாக அடிமனதில் இருந்து வியா பித்து எழுந்த ஆழ்மனக்குமுறலாக அக்கவிதையின் வெளிப்பாடு அமைந்துள்ளது. வல்லமை தாராயோ எம்மவர் வாழ்வு மீட்சியுற என அடியெடுத்து வல்லமை தாராயோ நம்மவர் மனத்திண்மையைக் கூட்டிவிட வல்லமை தாராயோ எம்மண் விடிவினைக் காண் பதற்கு வல்லமை தாராயோ எம் வாழ்வினை நாமே வாழ்வதற்கு சொல்லடி மாரித்தாயே நீ வல்லமை யெமக்குத் தாராயோ என பாரதியைப்போன்று சொல்லடி சிவசக்தி என்று பாடியது போன்று மாரித் தாயை வேண்டிப் பாடியுள்ள பாடல்கள் அமைந் துள்ளன. அவரிடம் உள்ள சொல்லாட்சி கவிதையின் சிறப்பிற்கு மெருகூட்டுகின்றன.

தன்னூரே பெரிதெனக்கொண்டு வாழ்ந்தவர்கள் குரும்பசிட்டி தந்த அருந்தவப் புதல்வர்கள் என்பதனை எடுத்த எடுப்பிலேயே கல்வித் தொண்டும், சமூகத் தொண்டும் சமயத்தொண்டும் கொண்டு வாழ்ந்தவர்கள் பற்றி அவர்களைத் தலைமேல் கைவைத்து துதிக் கின்றார்.

அவரது பாடலில் எண்ணுக்கணக்கின்றி எம் மூர்க்குப் பொருளீந்த சின்னர்ச் சட்டம்பியார் சேவடி போற்றி!
நுண்ணிய ஆய்வினாலே தொல்தமி ழகராதி செய்ய எண்ணிய முத்துக்குமாரரே போற்றி!
கல்வியறிவூட்டி யெம்மனக்கண்ணைத் திறந்துவைத்த பொன்னர் பரமானந்தர் புகழடி போற்றி
நூற்றுக்கு மேற்படு தமிழ்நூலினை வெளியிட்டெம்மை ஆற்றுப்படுத்திய பொன்னைய வள்ளலே போற்றி! என அவர் தன்னூருக்குத் தொண்டாற்றிய அனைவரையும் புகழ்ந்து போற்றியகவல் செய்துள்ளமை மண்ணையும், மக்களையும் நேசிக்கும் மனிதநேயத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. தமிழினத்தின் மீட்சி, இனஒடுக்குமுறைக் கான தீர்வு, விடுதலை என்பனபற்றிய கவிதைகள் கருத்தாளம் மிக்கவையாகப் படைக்கப்பட்டுள்ளன.

கொலுவீற்றிருந்த குரும்பைநகர் குரும்பசிட்டியின் பண்டைய வரலாறு, அதன் புவியியற் பின்புலம், மக்கள் பண்பாடும் தொழில்களும், கல்விக்கூடங்களும், ஆலயங்களும் என்பனபற்றிய ஆதாரபூர்வமான பதிவாக இந்த நூலைக்கொள்ளத்தக்க அளவிற்கு அதன் உட்பொருட் செறிவு நேர்த்தியாக அமைந்துள்ளமை ஒரு ஆவணமாகக் கொள்ளத்தக்க சான்றாகவுள்ளது. குரும்பசிட்டியில் வாழ்ந்தவர்கள், தொடர்புடையவர்கள், புகுந்தவர்கள் என பல்வேறுதிறத்தினருள்ளும் மண் ணுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் தொண்டாற்றிய பலரது வரலாற்றை இலகுவாக அறியக்கூடியவகையில் இந்த நூல் பெருந்தொகையான கட்டுரைகளைக் கொண்டுள்ளமை அந்நூலின் சிறப்பிற்கு மெருகூட்டி நிற்கின்றது. சின்னர், பொன்னர் எனத்தொடங்கி பல்கலைக்கழக பேராசிரியர்கள், வர்த்தகப்பிரமுகர்கள், சமய, சமூகப்பணியாளர்கள் எனப் பல்வேறு பிரமுகர் களின் வரலாற்றக்குறிப்புக்கள் ஆவணமாக்கப் பட்டுள்ளன.

குரும்பசிட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும் அதிபருமான ஆ.சி. நடராசா அவர்கள் தனது ஆசி யுரையின் ஈற்றில் இந்நூலாசிரியர்பற்றி ஊருக்கு உழைத்திடல் யோகம், இந்த உண்மை உணர்ந்திடல் யாகம் எனக்குறிப்பிட்டுள்ளமை இந்த ஆசிரியரின் பணியினை அவர் மனதாரப் பாராட்டியுள்ளமை வெளிப்படையாகின்றது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை யின் தலைவர் சு.சிவபாதம் அவர்கள் இந்நூல்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலர் ஒவ்வொர் குரும்பசிட்டிவாழ் மனிதனையும் நிம்மதிப்படுத்தும், பழைய நினைவுகளைத் தூண்டும், நிமிர்ந்து நடக்க வைக்கும். எம் பரம்பரைப் பாரம் பரியங்கள் பேசும் என்பதில் ஐயமில்லை. கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் பொன்வயல் மலரின் தோற்றத்திற்குக் காரணமானவர் குரும்பசிட்டி திரு. ஐ. ஜெகதீஸ்வரன் அவர்கள். ஆண்டுதோறும் இந்த மலர் தாங்கிவந்த கட்டுரைகளைத் தெரிந்து, அவற்றுடன் மேலும் சில் தகவல்களைச் சேர்த்து ஓர் வரலாற்று ஆவணமாக அவர் இதனை வெளியிட்டுள்ளார் எனக்குறிப்பிட்டுள்ளர்.

முத்தமிழ் வித்தகர், நாடகக் கலையரசு, செ.இராச நாயகம் அவர்கள், நேருக்குநேர் தொடர்ந்து நோக்காத நாகரீகத்தோடு கூடிய நுணுகிய ஆழமான ஊடுருவ லோடும் கேள்வி கேட்கும் விழிகள், அகன்று பரந்த நெற்றி பலவேளைகளில் புன்சிப்புடனும் சிலவேளை களில் உணர்வலைகளாலேயே திறனாய்வையும் சொல் லாமற் சொல்லும் உறுதியான உதடுகள் இன்னும் சிலவேளைகளில் குறும்புத்தனத்தோடு குத்தலாக வெளிவரும் அட்டகாசச் சிரிப்பு அவற்றிற்கு உரிமை யாளனே ஐ. ஜெகதீஸ்வரன்" என அவரை நயமாக வர்ணிக்கின்றார்.

இவர் குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றம், வளர்மதி சனசமூக நிலையம் ஆகியவற்றில் சிறு வயதிலேயே நிர்வாகியாக இருந்து எம்முடன் இணைந்து பணியாற்றியவர். அந்தப் பணி கனடா வந்த பின்பும் குரும்பசிட்டி நலன்புரி சபையினூடாகத் தொடர்கிறது என நாடகவித்தகர் க.சிவதாசன் இவரது ஆரம்ப முயற்சிகள்ஈடுபாடுகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

குரும்பசிட்டி நலன்புரிச் சங்கத்தின் தலைவி நிரூபா தங்கவேற்பிள்ளை அவர்கள் குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ் வரனின் செம்மண்ணின் சரித்திரத்தைப் பருகும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம் விழுதுகளுக்கு குரும்பை நகரை அடையா- ளம் காட்ட இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன் எனக்குறிப்பிடுகின்றார்.

இந்த நூலின் தோற்றுவாய்க்கு அடிகோலியது கனடா உதயன் பத்திரிகையில் அதன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் தொடக்கிவைக்க பிறந்தபதியிலும் சிறந்ததொன்றில்லை என்னும் பகுதியில் தானும் குரும்பை நகரைப்பற்றி எழுத வாய்ப்புக்கிடைத்தமையே என்பதனை நன்றிக் கடப்பாட்டுடன் தனது முகவுரையில் குறிப்பிடுகின்றார் ஐ.ஜெகதீஸ்வரன் அவர்கள். எனது கிராமத்தின் வேர்களை மட்டும் தேடுவதை விடுத்து விழுதுகளையும் அடையாளம் காட்டவேண்டும் என உணர்ந்தேன் எனத் தனது உள்நோக்கம் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளமை அவரது அடிமனத்து எண்ணம் நீண்டகால ஆவல் இந்தநூல்மூலம் பரிணமித்துள்ளது என்பது வெளிப்படை.

பல்துறை இலக்கியராகவும், வரலாற்றுப்பதிவாளராகவும், கட்டுரையாளராகவும், கவிஞராகவும் தன்னை வெளிப் படுத்திக்கொண்டுள்ள குரும்பைநகர் தந்த ஒரு சிறந்த எழுத்தாளன் என்று அவரை துணிந்து கூறலாம். அறுபது அகவை கண்டு மணிவிழாக் கொண்டாடும் குரும்பைநகர் தந்த ஐயாத்துரை ஜெகதீஸ்வரனையும் அவரது குடும்பத்தாரையும் வாழ்த்துகின்றேன். அவரது எழுத்துப்பணி தொடரவேண்டும் என்போன்ற தமிழ் அன்பர்களின் உள்ளக்கிடக்கை என்பதனையும் உணர்வித்து ஊக்குவிக்கின்றேன்.



"மாணிக்கப்பரல்கள்" நூல் வெளியீட்டு விழாவின் போது கனடாத் தமிழ் எழுத்தாளர் இணைய தலைவராக இருந்த ஆசிரியர் த. சிவபாலு அவர்கள் உரையாற்றிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் வசப்பட்டவர்



*1995இல் 24 மணி நேர முதல் தமிழ் வானொலிச் சேவைக்கான அனுமதி கிடைத்ததையொட்டி CTBC இயக்குநர் இளையபாரதி அவர்கள் சகல ஊடகத்துறையினருடன் நடாத்திய சந்திப்பு நிகழ்வு*

நேற்றைய முன்தினம் பார்த்து நேற்றுப்பழகி இன்று நண்பர் என மூச்சு விட முன்னரே வாழ்க்கை முந்திக்கொண்டு வந்து முதுமையை காதோரம் சொல்லுகிறது.

குடும்பவாழ்க்கை, சமூகவாழ்க்கை, இலக்கியவாழ்க்கை என வாழ்க்கை வட்டங்கள் மாறி மாறி வேகமாக சுழலும் போதும் வாழ்க்கையின் படிமானங்களை கற்றவன் மட்டுமே தானும் கற்று தான் வாழும் சமூகத்திற்கும் கற்றுக் கொடுக்கிறான். அவன் மட்டுமே சமூகத்தினால் அங்கீகரிக்கப்படுகிறான். மதிக்கப்படுகிறான்.

வாழ்க்கை எல்லோருக்கும் வசப்படுவதில்லை வசப்பட்டவர்கள் எல்லாம் வாழ்ந்து முடிப்பதும் இல்லை குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் வாழ்க்கைக்கும் வசப்பட்டு மற்றவர்களுக்கும் வசப்பட்டு இருக்கிறார், அதனால்தான் மணி விழா காண்கிறார், காணவைக்கப்படுகிறார்.

ஏழு வயதில் நடிக்கத் தொடங்கி 19 வயதில் எழுதப் புறப்பட்டவருக்கு இப்பொழுது மணிவிழா, இங்கேயும் மனிதர்கள் இவரது முதல் சிறுகதைத் தொகுதி. வித்தகர்கள் அமரர் மு.பரராஜசிங்கம் அமரர் K.M. வாசகர் போன்றவர்களின் ஆகர்ஷிப்புக்கு உட்பட்ட காலத்தில் இலங்கை வானொலிப் பட்டறையில் வாழ்ந்தவர்.

குரும்பசிட்டி மண்ணில் சன்மார்க்க இளைஞர் மன்றத் தலைவராக இருந்தபொழுதும் சரி, குரும்பசிட்டி நலன்புரி சபையில் தலைவராக இருந்தபொழுதும் சரி அவர் பணி மிகவும் சிறப்பாகவே இருந்திருக்கிறது.

புலம் பெயர்ந்த பின்னர் பிரான்சிலும் கனடாவிலும் கவிதை கதை நாடகம் எனபலதுறைகளிலும் கால் பதித்தவர் மட்டுமல்ல பிரகாசித்தவர்.செந்தாமரையில் தொடர்ச்சியாக இவரது சிறுகதைகளை படித்தபோது இவரது வாழ்வுக்கும் எழுத்துக்கும் ஒரே அலைவரிசையைப் பார்த்திருக்கிறோம். எங்கள் வானலையில் (CTBC) உலா வந்த இவரின் சிறுகதைகள் உண்டு. குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் கனடாவில் ஆரம்பத்தில் ஒலிபரப்பாகிய தமிழ் ஒலி வானொலி நிகழ்ச்சியில் கதை கவிதை கட்டுரை நாடகம் எனப் பலதுறைகளிலும் அடையாளம் காட்டியவர்.

இன்று அவர் மணிவிழா காண்கிறார். மகிழ்ச்சி பெருமகிழ்ச்சி அவர் வாழ்வில் எல்லாம் கிடைத்திருக்கிறது. இன்னும் இன்னும் எல்லாம் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**இளையபாரதி**
இயக்குனர், கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
(முதல் 24 மணிநேர தமிழ் வானொலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகப் பண்பாளர்

ரொரன்ரோவுக்கு சி.என்.கோபுரம், யாழ்ப்பாணம் என்றால் பனை, பருத்தித்துறை என்றதும் தட்டுவடை வாசம் மூக்கிலேறும். குரும்பசிட்டி என்றால் கலை இலக்கியம் மணக்கும். குரும்பசிட்டி எனக்கு அயலூர். எனது ஊர் ஒரு குருவிக் குஞ்சளவு என்றால் இது இறகு முளைக்கத் தொடங்கும் பருவத்தில் உள்ள குஞ்சு. இந்தக் கணக்கு பரப்பளவில் மட்டுந்தான் பொருந்தும். ஆனால் கலை இலக்கியத்தில் வானம் இவர்களுக்கு வசப்பட்டது. எனதூரில் வாழ்ந்த வித்துவ சிரோன்மணி கணேசையர் அவர்களுக்கு ஐயர் என்ற போற்றுதலுக்கு மேல் எனதூர் எந்தச் சிறப்பையும் அவருக்கு செய்ததில்லை.

அவரைத் தோளில் சுமந்தவர்கள் இவ்வூர் அறிஞர்கள். கலை இலக்கிய அறிஞர்களை நான் பட்டியலிட்டு தோற்றுப்போக விரும்பவில்லை. யாரையாவது தவறவிட்டு விடுவேன் என்பதொன்றே காரணம். நான் பலரை அறிந்திருக்கிறேன். சிலரோடு மதிப்புடனான தொடர்புகள் இருந்திருக்கிறது. ஓரளவு நட்போடு பழகியது இருவர். ஒருவர் சிறுகதை எழுத்தாளர் காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்கள். அடுத்தவர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் அவர்கள். நான் ஊரில் ஜெகதீஸ்வரனைக் கண்டிருக்கிறேன். அவருடன் அதிகம் பழக்கம் இருந்ததில்லை. அங்கு நான் கவிஞனாக அறிமுகம் பெற்றிருக்கவும் இல்லை.



வறுமைக்கோட்டுக்குள் வாழ்ந்த மிகச்சாதாரணன் நான். கனடா வந்தபின் இந்த இலக்கிய சூழல்தான் அவரை அறிமுகம் செய்து வைத்தது. இளமையில் எங்கள் வாழ்க்கைப் பயணம் ஒன்றாயிருந்ததால் போலும் இலகுவில் ஒட்டிக் கொண்டோம். வீடுவரை விருந்துண்டு புழங்கும் அளவுக்கு இல்லை எனினும் என் மனசில் மிக நெருக்கமான இடமுண்டு. மிக அமைதியானவர் உரக்க சத்தமிட்டு பேசி நான் கண்டதில்லை. தானாகவே வந்து உதவி செய்யும் பண்பாளர். கருத்துக்களில் தீர்க்கமான உறுதி கொண்டவர். அதை வலியுறுத்துவார். முடிவு தனது மனதுக்கு உவப்பில்லா விட்டாலும் பெரும்பான்மைக் கருத்தோடு ஒத்தோடுகின்ற ஜனநாயகப் பண்பாளர்.

எல்லாவற்றிலும் மேலாக தான் பிறந்த ஊர்மீது தீராத காதல் கொண்டவர். எப்போதும் ஊருக்காய் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவா உள்ளவர். இவையெல்லாம் நான் இவர் மீது பொறாமை கொள்ள வைக்கின்ற விடயங்கள். அவரது எல்லைக்குட்பட்டுத் தன் ஊருக்கும் இலக்கியத்திற்கும் தனது பங்களிப்பையும் பதிவு செய்திருக்கிறார் என்பதே சிறப்பு.

எனது முதலாவது கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவின் போது மண்டபம் கிடைக்காமல் சிரமப்பட்டேன். தானகவே ஓடிவந்து மண்டப ஒழுங்குகள் எல்லாம் செய்து தந்தார். அகதி வாழ்வில் ஒரு கால் நடை மனிதனாக அலைபவன் நான். என்னை எந்த விழாக்களில் அல்லது சடங்குகளில் கண்டாலும் தன் காரில் வீடுவரை கொண்டு வந்து விட்டுச் செல்வார். மனிதவாழ்வில் அறுபது அகவைகள் என்பது முதல் சுற்று. இது அவன் தேடுகிற காலம். அடுத்தசுற்று இனி ஆரம்பிக்கும். அது கொடுக்கிற காலம். தான் தேடிய ஞானத்தை பட்டறிவை அடுத்துவரும் தலைமுறைக்கு பயன்படு வழியில் சமர்ப்பிக்கின்ற காலம். ஒரு எழுத்தாளன் என்ற வகையில் இனிவரும் காலத்தில் இவர் நிறையவே எழுதவேண்டும். அதற்கான நல்ல ஆரோக்கியமும், சூழலும் அமைய வேண்டும். இதுவே என் அவா. இதுவே என் வாழ்த்து! வாழ்க பல்லாண்டு!

**கவிஞர் திருமாவளவன்.**
**தலைசிறந்த கவிஞர்,**
**தேர்ந்த கொள்கையில்**
**தீர்க்கமாயிருப்பவர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிகர எழுத்தாளர்



திரு. கணபதிப்பிள்ளை
அப்புக்குட்டி MA
முன்னாள்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ் பல்கலைக்கழகம்

குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் கறுப்புப்பால் என்ற சிறுகதையூடாக எழுத்து லகில் பிரசவம் பார்க்கப்பட்ட புரட்சிகர எழுத்தாளன். இடதுசாரி இலக்கியத்தின் செல்வாக்குக்குட்பட்ட இளைஞன். தனது 19வது வயதில் தான் வாழ்ந்த சமுதாயத்தின் விரும்பப்படாத நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டியதன்மூலம் அவர் பிறந்த கிராமத்தில் முக்கிய பிரமுகராக மாற்றப்பட்டவர். பிறந்த ஊரின், வாழும் சமுதாயத்தின் விழுமியங்களுக்கு விளக்கம் கொடுக்க முனைந்ததனூடாக ஊர் கொடுத்த பெயர் அடைமொழியைப் பெருமையுடன் பெற்றுக் கொண்டவர் இவர்.

எழுத்தாளர்கள் தமது படைப்புக்களுக்குப் பிரமாக்கள். ஒவ்வொரு படைப்புக்களிலும் காரணகாரியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். விதி என்ற செயல்முறையூடாகப் பிரமனால் படைக்கப்பட்ட இந்த உலகுக்கு விளக்கமும் விபரணமும் கொடுப்பவர்கள் இந்த எழுத்தாளர்கள். அவர்களது வரிசையில் இவரும் ஒருவர்.

சிறுகதையூடாகச் சமுதாயத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் இயற்கை யுடன் தொடர்புபடுத்தி மனிதர்களின் நடத்தைகளை வெளிக்காட்டும் எழுத்துக்கள் மனதைவிட்டு அகலுவதில்லை. அக்கினப் பிரவேசத்தின் அவசியத்தை வெளிக்காட்டிய ஜெயகாந்தன் அதன் தொடர்போன்று 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நவீனத்தின் மூலமும் இதற்கு வழி இதுதான் என்று தனது கருத்தினை வெளிப்படையாகச் சொல்லியிருந்த பாங்கினை ஜெகதீஸ்வரனது எழுத்துலகப் பயணிப்பிலும் அவதானிக்க முடிகிறது.

'கறுப்புப்பால்', 'நான் ஒரு கோழை' போன்ற சமகாலப் படைப்புகளூடாகப் பயணித்த இவர் 'இங்கேயும் மனிதர்கள்' என்ற சிறுகதைத் தொகுதியினை வெளியிட்டதன் மூலம் சமுதாயத்தினையும் அதன் தனியன்களின் நடத்தைகளையும் தெளிவாக அவதானித்திருக்கிறார்.

ஒரு இலக்கியவாதியின் பார்வையானது நிகழ்வுகளைப் பற்றியதாக மட்டுமன்றி நிகழ்வுகளுக்கான காரணங்களைத் தேடும் ஆர்வம் கொண்டதாகவும் இருப்பதனை இவரது எழுத்துக்களூடாக அடையாளம் காண முடிகிறது. எழுத்தாளன் தான் வாழும் சமுதாயத்தை உள்ளே யிருந்தும், வெளியிலிருந்தும் பார்க்கும் பொழுது விஞ்ஞான அணுகு முறையைக் கைக்கொள்ளுகிறான். இத்தகைய சமூக விஞ்ஞானிகள் சமுதாயத்தின் ஏற்றத்துக்குத் தொண்டாற்றி வருகிறார்கள்.

குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத்தின் தலைவராகவும் பின்னர் குரும்பசிட்டி நலன்புரிச்சபையின் தலைவராகவும் இருந்து செய்த சேவைகள் இவரது சமூகப் பணிகக்கான ஆர்வத்தினை எடுத்துக் காட்டுகிறது. இவர் சென்ற இலக்கியப் பாதை யிலும் சமூகப்பாதையிலும் இவருக்கிருந்த பணிவு 'நான் ஒரு இலக்கிய வாதியல்ல, இலக்கியத்தைச் செழுமைப்படுத்துவது எனது நோக்கமுமல்ல, மாறாக நான் வாழுகின்ற சமுதாயத்தில் என் உணர்வலைகளைத் தட்டி விட்ட பல நிகழ்வுகளில் ஒரு சிலவற்றை அவ்வப்பொழுது எழுத்தில் வடிக்க முயற்சித்திருக்றேன்" என்ற அவரது வரிகளின் மூலம் தெளிவு படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகதீஸ்வரனை எழுத்தாளன் சமூக நலன் விரும்பி ஆகிய அளவுகோல்களூடாக மட்டும் நோக்கிவிட முடியாது. ஒரு நண்பனாக ஒரு உறவினனாக ஒரு குடும்பத்தலைவனாக அவரது நடவடிக்கை ஒவ்வொன்றும் முக்கியம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இயற்கையாகவே அவரிடம் அமைந்திருந்த இனிமையாகப் பேசும் மனப்பக்குவமும் மற்றவரது மனம் கோணாதவாறு நடந்து கொள்ளும் விதமும் சமுதாயத்தில் பின்பற்றக் கூடிய மாதிரியாக அவரைக் காண முடிகிறது.

ஜெகதீஸ்வரனது உரையாடல்களில் எவ்வளவு மென்மைத்தன்மை காணப்படுகிறதோ அதேபோல் நகைச்சுவை உணர்வும் மலிந்திருக்கும். அவருடன் உடையாடும் சந்தர்ப்பங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்திருக்கிறது. கடந்த இருபது வருடத்துக்கு மேலான அறிமுகத்தில் அவ்வப்பொழுது அவரது புன்முறுவல் ஒன்றே ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமனாகவும் நட்பை வெளிக்கொணருவதாகவும், இருப்பதனை உணர முடிகிறது.

ஜெகதீஸ்வரனது மணிவழா அவரது வயதுக்கு எடுக்கப்படும் சாதனையாக மட்டும் நான் நோக்கவில்லை. அவரது வாழ்க்கைத் தத்துவத்தில் அவர் கொண்ட உறுதிப்பாட்டுக்கும் வாழும் முறைமைக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அங்கீகரிப்பாகவே அவதானிக்கிறேன். அவர் சமுதாயத்தில் கொண்டிருந்த கரிசனையும் சமுதாயம் அவர்மீது கொண்ட கரிசனையும் ஏற்படுத்திய பெருமை தான் இந்த மணிவிழா என்று சொல்லும் பொழுது அவரது ஆளுமை மேலும் அங்கீகாரம் பெறுகிறது.

ஒரு மனிதனது அறுபதாண்டு என்பது பல வழிகளில் முக்கியம் பெறுகிறது. வாழ்க்கை வட்டத்தில் முதிர்ச்சிக்குப் பின்னைய இளமை இக்காலத்தில் மீண்டும் உதயமாகிறது. அறுபதுகளில் மீண்டும் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. மனிவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அறிவும் அனுபவமும் இணைந்திருக்கும் இக்காலப்பகுதிதான் சமூகத்தில் ஒருவருக்கு மதிப்பையும் மரியாதையையும் வழங்கும். சமூக சிந்தனையிலும் அரசியல் போன்ற சமூக சேவைத்துறைகளிலும் இக்காலம் தான் அவர்களது பொற்காலம்.

'ஒரு திறமைசாலிக்குச் சில சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவனுடைய திறமையை ஒருவராலும் மறைக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது' என்ற சிறுகதை வாசகம் அவரது உயர்ச்சிக்கான உள்ளுணர்வை வெளிக் கொண்டு வந்திருக்கிறது.

தமிழரது கலாசாரத்திலும் வாழ்வியல் ஒழுங்கிலும் அவருக்கிருந்த நம்பிக்கையை 'எங்களுக்கென்று ஒரு காலாசாரம் பண்பாடு ஒழுங்குமுறை இருக்கல்லோ, பண்பாடும் ஒழுங்குமுறையும் உடலைவிட உள்ளத்துக்குத் தான் மிக முக்கியமானவை. ஒவ்வொருத்தரும் தன்னைத் தான் திருத்திக் கொண்டால் உலகம் தானாகவே திருந்தியிடும்' என்ற அவரது சமூகப் பார்வைக் கருத்தின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

'ஒரு எழுத்தாளனாயிருந்தாலும் சரி, ஒரு இலக்கியவாதியாக இருந்தாலும் சரி முதலில் நல்ல சிந்தனை, நல்ல சொல், நல்ல செயல் இந்த மூன்றும் தான் ஒருத்தரிட்ட இருக்க வேணும்' என்ற இவரது தெளிவான சிந்தனை ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய தகைமைகளைத் தெளிவுபடுத்துகின்றது.

திருவள்ளுவர் குறிப்பிட்டிருக்கும், "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற திருக்குறளை காட்டிய சங்கம் மருவிய கால இலக்கியத்துக்கு இருபத்தோராம் நூற்றாண்டில் உரையெழுதிய இவரது எழுத்துக்குறிப்புக்கள் தான் இவர் தக்கார் என்பதனை வெளியுலகுக்குக் காட்டி நிற்கும். இதற்காகவே அவரது சிந்தனையிலிருந்து சில சிந்தனைத் துளிகளை அடையாளம் காண முடிகிறது.

ஜெகதீஸ்வரனுடைய மணிவிழா சிறப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என்றும் அவரது எழுத்துலகப் பயணத்தில் பல மைல் கற்களைத் தாண்டிச் சாதனை படைக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தினை அவர் தோள் மீது சுமக்கச் செய்து வாழ்த்துகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்ந்தவர்

2010 ம் ஆண்டு யூன் மாதம் 06ந் திகதி "நான் நிழலானால்" என்ற எனது சிறு கதைத் தொகுதியின் விமர்சன நிகழ்வுக்கு வந்திருந்த, இலக்கிய ஆர்வம் மிக்க ஒரு சில பத்துப் பேர்களில் ஒருவராக என் கதைகள் பற்றிய தன் அபிப்பிராயத்தைக் கூறிப் பாராட்டிய ஒரு நல்ல மனதுக்குச் சொந்தக்காரராக பின்னர் அந்த நிகழ்வு பற்றி அழகான தமிழில் நிறைவான ஒரு விமர்சனம் எழுதி சக எழுத்தாளர்களை ஊக்கு விக்கும் ஒரு உயர்ந்த மனிதனாக ஜெகதீஸ்வரன் அவர்களின் நட்பு எனக்குக் கிடைத்தது.



பின்னர் யசோதாவுக்கூடாக அவரின் பல நல்ல பண்புகள் தெரிய வந்த போது அவரில் ஒரு உயர்ந்த அபிப்பிராயம் எனக்கு ஏற்பட்டது. தம்மை நல்லவர்களாக உலகத்துக்குக் காட்டுவதில் மட்டும் மிகவும் அக்கறை கொண்ட மனிதர்கள் வாழும் இவ்வுலகில், நியாயம் பற்றிய அக்கறை யின்றி இராவணன் ஆண்டால் என்ன, இராமன் ஆண்டால் என்ன என்ற அசட்டையில் இருக்கும் நம்மவர் மத்தியில், முதுகுக்குப் பின்னால் கதைக்காமல் கதைக்க வேண்டிய இடத்தில் நின்று நியாயத்துக்காகப் போராடும் ஜெகதீஸ்வரன் அவர்களின் பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. மகாஜனாவில் மாணவனாக இருந்த போது மட்டுமன்றி பின்னர் பழைய மாணவனாகவும் அதை அவர் பல தடவைகள் செய்திருப்பது, நானும் ஒரு மகாஜனன் என்ற முறையில் என் மனதை நிறைத்தது.

அதே போன்ற, இன்னொரு நல்ல இயல்பை, கற்ற கல்லூரியில், பிறந்த ஊரில், வாழும் நாட்டில் உள்ள விசுவாசத்தை கவிஞர் ஜெகதீசஸ்வரனின் கவிதைகளில் கண்டு மனம் நெகிழ்ந்தேன். மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டுச் சரித்திரத்தை மிகவும் கச்சிதமாகவும் மனதைத் தொடும் வகையிலும் சொல்லும் "மகாஜன மாதா வாழி நீ பல்லாண்டு" என்ற கவிதையில்,

"கண்ணெனக் கல்வியைக் காலத்திற் புகட்டினாய்  
விண்ணையும் தொட்டிடும் வித்தையைக் காட்டினாய்  
'உன்னைநீ அறி'யென்று உள்ளொளி ஏற்றினாய்  
அன்னையே இன்னுநீ ஆயிரம் ஆண்டு வாழ்வாய்!

என்று வாழ்த்தி, மேலும்

"சுயமிழந்தோரின் வாழ்வு சூனியமான போது  
சூரியனாய் வந்தபிள்ளை "துரையப்பா பள்ளி" தந்தார்!

எனப் பாவலர் துரையப்பாவின் மேன்மையையும் கல்லூரியின் அன்றைய அவசியத்தையும் அழகாகச் சொல்கிறார் அவர்.

பின்னர் அதே கவிதையில்,

"முற்புறத்தே யமைந்த பொன்விழா மண்டபமும்  
அற்புதமா யெழுந்திருக்கும் பாவலரின் சிலைஅழகும்  
அரைவட்ட வடிவான தெருவோடு வாசல்களும்  
இரைமீட்டிப் பார்க்கையிலே இன்பம் நிறைத்திடுமே"

என்று அந்த அழகான மகாஜனாவை ஒரு பரவசத்துடன் எம்மையும் நினைக்க வைக்கிறார்.

"சிற்பமும் சித்திரமும் சிறப்புறக் கற்றுத்தேர்ந்துநல்  
சித்திரத் தேர்கள்தந்த கலாகேசரி வாழி!  
பற்றுறை விற்பன்னர் பழகுதற்கினிய ரெங்கள்  
நற்றமிழ்க் கவிநாயகர் கந்தவனம் வாழி!"

திருமதி. ஸ்ரீரஞ்சினி  
விஜயேந்திரா,  
சிறுகதை எழுத்தாளர்,  
கனடா-தமிழ் எழுத்தாளர்  
இணையச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.  
noolaham.org | aavanaham.org

இப்படி "வாழ்த்தி வணங்குகிறேன் நீடு வாழி!" என்ற கவிதையில் தன் ஊருக்காக உழைத்த பலரையும் நிறைவாக வாழ்த்துகிறார் அவர்.

"அகிலத்து மாந்தரெல்லாம் அவராய்த் தேடிவந்து
அன்பைப் பகிர்ந்ததனால் ஆகிவந்த தெம் கனடா"
எனக் கனடாவின் பெருமை பேசும் "ஓ என் கனடாவே!" என்ற கவிதை.

"சஞ்சலம் நிறைந்த இச்சகத்தினில் வாழ்வதற்கே
அஞ்சிய மனத்தினோடு அந்தரப்பட்டலைந்த வேளை
'அஞ்சற்க மகனே, ஆறுதல் கொள்வாய்' என்றென்
நெஞ்சினிற் பாலை வார்த்த நேயத்தை மறக்கவில்லை"
என்று கவிதை வரிகள் அவரது நன்றியுணர்வைச் சொல்கின்றது.

பொதுவாக, எங்களுடைய தலைமுறையினர் தாய் நாட்டை எண்ணி வருந்துவதிலும், இங்குள்ள கால நிலை, படிப்புக்கேற்ற வேலையின்மை போன்ற நிதர் சனங்களினால் ஏற்படும் ஆற்றாமையில் கலங்குவதிலும், கலாச்சார வேறுபாடுகளின் அதிருப்தியில் மனமுடைந்து நொந்து போவதிலும் — வாழ வைக்கும் நாட்டுக்குச் செலுத்த வேண்டிய நன்றியை மறந்து போயிருப்பதைப் பார்த்து மனம் நோவோருக்கு இது ஒரு ஒத்தடமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இவ்வகையில் சராசரி மனிதனிலிருந்து வேறுபட்டு, தன் உள்ளார்ந்த உணர்வால் உயர்ந்து நிற்கும் ஜெகதீஸ்வரன் அவர்களின் அறுபதாவது அகவையில் அவர் இன்னும் பலகாலம் நலமுடன் வாழவேண்டும் என நான் மனமார வாழ்த்துகின்றேன். ▣▣▣





*2000 ஒக்டோபரில் நிகழ்ந்த "இங்கேயும் மனிதர்கள்" சிறுகதைத்தொகுப்பு வெளியீட்டில் திருமதி. கோதை அமுதன் அவர்கள் விமர்சன உரை ஆற்றுகிறார்.*
*அமர்ந்திருப்போர்:*
*பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன், கவிஞர் கந்தசாமி, தீவகம் இராஜலிங்கம், இளவாலை எஸ். இராஜநாயகம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனாவாதி

வடிகட்டிய சுயநலவாதிகளும், வாரிச் சுருட்டிக் கொள்ளும் வாஞ்சை மிக்கோரும் மிகுந்துள்ள நம்மவர் மத்தியில் பிறரது துயரங்களைக் கண்டு மனமிரங்கி அவர்களுக்கு தம்மாலியன்ற வகையில் உதவி செய்யும் பொதுநல நோக்குடைய சிலரும் வாழ்ந்து வருவது அதிசயம் தான். உலகின் கண் வாழும் கோடான கோடி மக்களின் குணாதிசயங்கள் யாவும் பன்னிரண்டு ராசிகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன. எப்படித் தான் புத்திமதி சொன்னாலும் அவனைத் திருத்த முடியாது. அது அவனது பிற விக் குணமெனக் கூறி பலர் அலுத்துக் கொள்வதை நாம் அவதானித் துள்ளோம். பிறவிக் குணம் என்பது அவரவர் பிறக்கும் ராசி யின் குணமாகும்.



பல்வேறு மிருகங்கள், கொடிய விசமுள்ள தேள் போன்ற பல ராசிகளை முதலில் படைத்த இறைவன், நீதியையும் நியாயத்தையும் கடைப்பிடித்து வாழக் கூடிய நடு நிலைமை கொண்ட ராசியினரையும் படைத்தால் தான் உலகில் சமநிலை ஏற்படும் எனக் கருதி இறுதியாகவே துலாராசியைப் படைத்ததாக சோதிடக் கலையில் கூறப்பட்டுள்ளது. மேலைநாட்டு சோதிடக் கணிப்பின்படி செப்டம்பர் மாதம் 23ம் திகதியிலிருந்து ஒக்டோபர் 22ம் திகதிக்குள் பிறப்போராது ராசி துலாராசியாகும்.

துலாராசியில் பிறப்போர் எத்தகைய குணாதியங்களைக் கொண்டவர்கள் என்பதற்குச் சிறந்த உதாரண புருசராகத் திகழ்ந்தவர் அண்ணல் மகாத்மா காந்தி. இந்தியாவின் விடுதலைக்காக வல்லரசான பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அஹிம்சை ரீதியில் போராடி வெற்றி கொண்டவர். மக்கள் சக்தியை ஒன்றிணைத்து அஹிம்சைப் போராட் டத்தினை மேற்கொண்ட அவர் எவரிடமிருந்தும் பணம் திரட்டவுமில்லை, அபகரிக்கவுமில்லை. வங்கிகளில் கொள்ளை அடிக்கவுமில்லை! எவரையுமே கொலை செய்யவுமில்லை. ஆனால் இறுதிவரை கத்தி இன்றி இரத்தமின்றிப் போராடி அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார்.

ஸ்ரீலங்காவில் நடைபெற்ற இன விடுதலைப் போரின் போது அநீதியை எதிர்த்தமைக்காக குரும்பசிட்டி கிராமத்தில் கொடூரமான முறையில் அகால மரணத்தை எதிர்கொண்டவர் அமரர் ஐயாத்துரை. இறைபக்தியும், நேர்மையும் மிக்க வர்த்தகரான அவரது மூத்த புதல்வராக ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதி துலாராசியில் பிறந்தவர் ஜெகதீஸ்வரன். துலாராசியில் பிறந்த அத்தனை பேரும் மகாத்மாக்கள் ஆக முடியாதெனினும் அந்த ராசிக்குரிய சிறந்த குணாதிசயங்களைக் கொண்டிருப்பார்கள். நேர்மை, தன்னடக்கம், பொதுநல நோக்கு, பிறருக்கு உதவி செய்யும் அவா ஆகிய அருங்குணங்களை நான் எனது நண்பர் ஜெகதீஸ்வரனிடம் கண்டேன்.

நான் வினிபெக் மாகாணத்தில் இருந்து 1992ஆம் ஆண்டு இறுதியில் ஸ்காபரோவுக்கு வந்து குடியேறிய பின்னர் எழுத்தாளர் என்ற முறையில் எனக்கு அறிமுகமானவர் நண்பர் ஜெகதீஸ்வரன். ஒரே திகதிகளில் பிறந்தோர் அல்லது அந்தத் திகதிக்குப் பொருத்தமான திகதிகளில் பிறப் போரே நண்பர்களாவது வழக்கம். எனது நீண்ட கால நண்பரான ஜெக தீஸ்வரனது பிறந்த திகதிக்கும் எனது பிறந்த திகதிக்கும் பொருத்தம் இல்லாவிடினும் அவரும் என்னைப் போலவே துலாராசியில் பிறந்தவர் என்ற உண்மை அண்மையில் தான் தெரிய வந்தது.

வீரகேசரி மூர்த்தி
பத்திரிகையாளர்,
சிறுகதை படைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் மூத்தபிள்ளை என்பதனால் தந்தையாரின் மரணத்தின் பின்னர் இளவயதிலேயே குடும்பப் பாரத்தைச் சுமந்தவர் ஜெகதீஸ். இளவயதில் வறுமை யினையும், துன்பங்களையும் சுமந்தவர்களே பின்னர் சமூகத்தில் பரந்த நோக்குடையவர்களாகவும், சிறந்த அனுபவசாலிகளாகவும் திகழ்வது உண்மை. முற் போக்கு சிந்தனாவாதியான இவர் தனது பத்தொன்ப தாவது வயதில் கறுப்புப் பால் என்ற தனது முதலாவது சிறுகதையினை எழுதினார். பட்டினியால் வாடுவோருக்கு உதவி செய்ய விரும்பாத அரிசி ஆலை முதலாளி ஒருவர் ஆலயத்தில் ஆடம்பரமாகத் திருவிழா செய் வதைக் கருவாகக் கொண்ட அச்சிறுகதை பெரும் வர வேற்பினைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து கதவைத்திறவுங்கள், ஒரு ஓணான் தலையாட்டுகின்றது" போன்ற சிறந்த சிறுகதைகளை எழுதினார்.


தந்தையைப் பறிகொடுத்த நண்பர் ஜெகதீஸ்வரன் இலங்கையில் நிலவிய நிம்மதியற்ற அக்கால சூழ்நிலையில் தொடர்ந்து வாழ மனமின்றி முதலில் தனியாக வெளிநாட்டுக்கு வந்தார். அதன் பின்னர் படிப்படியாக தாயையும், இரு சகோதரிகளில் ஒருவரையும் இங்கு கனடாவுக்கும், மறு சகோதரியை இந்தியாவுக்கும், தம்பியாரை நியூசிலாந்துக்கும் வர வழைத்து பருவத்தில் திருமணமும் செய்து வைத்தார். கனடாவிலுள்ள குரும்பசிட்டி மக்களினால் நன்கு அறியப்பட்ட ஜெகதீஸ்வரன் குரும்பசிட்டி நலன் புரிச் சங்கத்தின் தலைவராக 1997ம் ஆண்டு தெரிவு செய்யப் பட்டு தொடர்ந்து நான்கு வருடங்களாக தலைவராக இருந்து பொதுப் பணியாற்றி வந்தார். இவரது காலத்தில் பொன்வயல் என்ற ஆண்டு மலரும் வெளி யிடப்பட்டது. குரும்பசிட்டி கிராமத்தின் வரலாற்றினைச் சித்தரிக்கும் கொலு வீற்றிருந்த குரும்பை நகர் என்ற நூலினையும், மாணிக்கப்பரல்கள் என்ற கவிதை நூலி னையும் 2008ஆம் ஆண்டு இவர் எழுதி வெளியிட்டார். இவ்வகையில் இயற்கையை ரசிக்கத் தெரிந்த பண்பாளரும், சிந்தனா சக்தி மிக்க எழுத்தாளருமான ஜெகதீஸ்வரன் 1984ஆம் ஆண்டு இறை அருளால் தனது குணஇயல்புகளுக்கேற்ற மோகனாவை இல்லத் தரசியாக திருமணம் செய்து கொண்டார். பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக இல்லற தர்மத்தை நன்குணர்ந்து கடந்த இருபத்தெட்டு ஆண்டு காலமாக வழுவறக் கடைப்பிடித்து வாழ்ந்து தம்மைப் போலவே நற் குணமும், நற்பண்புகளும் கொண்ட இரு சற்புத்திர ரையும் ஈன்றெடுத்து வளர்த்த வயது முதிர்ந்த தம் பெற்றோரையும் அன்புடன் பேணிக்காத்து வரும் மோகனாவும் இன்று போல் என்றும் இன்புற்றிருக்க இறைவன் அருள் புரிவான் என்பது நிச்சயம்.



*2004.08.24இல் திருமணபந்தத்தில் இணைந்து 20 ஆண்டுகள் பூர்த்தியானவேளை தமதில்லத்தில் தாயாருடனும், துணைவியாருடனும்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சா நெஞ்சம் கொண்டவர்




எழுத்தாளர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் என்னுடன் பல வருடங்களாக பணி புரிந்து வருகிறார். இவர் ஒரு சிறந்த சமூகசேவையாளர். சமூகம் சம்பந்தமாகக் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் புனைந்து சமூகத்தில் மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை உறுதிபடத் தெரிவிப்பவர். நூல் வெளியீடும் செய்துள்ளார். கோவில் பணிகளிலும் சிறப்பாகச் செயலாற்று பவர். சமயப்பற்றுள்ளவர். மிகவும் தன்னம்பிக்கை உள்ள ஒரு மனிதர் இவர். மற்றும் இவருடன் வேலைபுரிபவர்களிடம் மிகவும் பண்பாகவும், இனிமையாகவும், புன்சிரிப்படனும் பழகும் குணநலமுடையவர். எதையும் தானே முன்னின்று செய்ய வேண்டும் என்ற அஞ்சா நெஞ்சம் கொண்டவர்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கும், குரும்பசிட்டி மக்களுக்கும் தன்னாலான உதவிகளையும் செய்து வருகிறார். இவர் ஒரு நாட்டுப்பற்றாளர். கனடாவில் நடைபெறும் சமூகம் சம்பந்தமான கூட்டங்களிலோ, அரசியல் சம்பந்தமான கூட்டங்களிலோ இவரைக் கட்டாயம் காணலாம். அலைகள் ஓயாதடிப்பது போல் இவரது பணிகளும் தொடரவேண்டுமென்றும், இந்த மணிவிழாவைப் போல மேலும் பல விழாக் கள் கொண்டாடி தீர்க்காயுளுடன் வாழ்க வளமுடன் என்று வாழ்த்து கிறேன்.

திரு சண்முகவடிவேல் துரைசிங்கம்
மட்டுவில் நலன்புரிச் சங்க தலைவர்,
**Member of the DST Family**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Shining Example

I have known Jega anna personally for the past five years and first met him during our time working together. As a fellow employee he has been a joy to work with. He has a teaching spirit and was very willing to help train me with respect to my responsibilities in my new role. His advice was welcomed and very much appreciated as his assistance has thus far helped me perform more effectively and efficiently. His welcoming attitude also helped me to acclimate myself in my new job and feel at ease with my new surroundings. Jega anna has also proven to be a formidable co-worker and an excellent team player during our many shifts together. I am confident that my high regard for Jega anna is shared not only by me but also our fellow co-workers as well given the manner with which everyone else views Jega anna as well.



And while Jega anna's influence at work is indeed deeply felt the effect he has had on my life is far greater since he has become my friend and mentor. He is very open minded, genuine, compassionate and level headed. He has always proved to be a reliable source of support for me and is always willing to lend an ear to those in need. Jega anna's kindness has no bounds and he has been an unwavering source of support during my wife's hospitalization and has offered words of wisdom and support whenever I am faced with a particularly difficult obstacle or decision either professionally or personally. Jega anna is always one of the first to offer his help to others and I feel fortunate to consider him as a friend and mentor in my life. It takes a very special person to drop their own duties momentarily and come to the aid of others without hesitation.

Jega anna has a wonderful sense of humour, an admirable passion for life and a sense of adventure that has not diminished a bit even as he approaches his 60th birthday. His life experiences have given Jega anna an interesting and unique ability to view situations with a positive, uplifting attitude. Jega anna has an uncanny ability to dole out advice that fits any situation and throughout our friendship he has displayed this keen sense of empathy numerous times. I can think of a number of instances when Jega anna has made a statement and I am left baffled immediately afterwards. However, upon further thought I am able to identify the intent and significance of his words and its relevance and deeper meaning.

Over the past five years I have come to realize that Jega anna has proven to be an excellent example of a good, well intentioned, and truly caring friend. It is often said that people come into our lives for a reason, a season, or a lifetime. Looking back at my five year friendship with Jega anna I can say with the utmost confidence that Jega anna is indeed a lifetime friend of mine and I look forward to enjoying his company, advice, and friendship for many years to come. Jega anna: you serve as a shining example of what a good friend is and I appreciate all that you have done thus far for me.

**Mr. Mathivannan Thuraisingham.**
**Dip. in Com. Eng.**
**Member of the DST Family**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I have known Jega for almost ten years. I am honored to be given an opportunity to speak about such an amazing man.

It's been a pleasure working with you during these past ten years. I really enjoy working with such a pleasant and kind person. Your dedication to life has always left me astonished.

Your ability to balance your work life and your personal life with ease has always impressed me. I hope one day, I can follow in your foot steps to be an exceptional family man, as well as a remarkable co worker.


Sharing my working days with you has given me all the strength and guidance I need to be not only a better worker but also a better man. You're someone that I look up to, and wish to have your determination and self confidence at your age. I hope all your birthday wishes come true. Not just a year older, but a year better. Here's to another year of experience.

God bless you and wish you all the best on your 60th birthday and the years yet to come. Happy 60th Birthday Jega.

**Mr. Anpalagan Kanthasamiyar B.Sc,**
**Member of the**
**DST Family**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amazing Person



I would like to congratulate Jega Iyathurai on his 60th birthday and wish him a couple of things.

First, I'm very glad to see him celebrate his birthday surrounded by his friends and family. Jega is a cheerful energetic pillar within our DST community and is a joy to work with. He is not only a valued co-worker but also a reliable and kind-hearted friend to all those who have had the pleasure of striking up a friendship with him.

During our friendship and time at DST I've always wondered how he had time for everything- from his commitment to work, his family, and his love for writing and strong sense of community.

He is an amazing person, and on his birthday I would like to wish him simple happiness. I wish him the harmony that comes when all the components of life are balanced- When daily work brings delight and in the evening you hurry back home to be with your family. I wish Jega a year full of joys that give one the strength to realize your dreams and accomplish great achievements.

Happy Birthday Jega Anna, may this 60th year be your best yet.


**Mr. Sunanthan Shanmugalingam**
**Dip.in Comp. System & Net working**
**Member of the DST Family**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mentor



*After daughter's Graduation Ceremony at U of T*

I met Jega at DST Output. I have known him on a personal basis for about three years,and he has been my mentor and friend throughout these years.

He is very reliable and dependable He is always the First one in on his shift, and one of the last ones out.

Jega is always loaded with enormous tasks, with cut off times, and somehow manages to finish them off with ease.

His vast knowledge and experience at DST, has helped me and others gain an understanding of why and how jobs are processed.


He is always ready to lend a hand, and never says "no" when asked for help. His youthfulness and boundless energy are awe-inspiring and I am very fortunate to call him my friend.

**Mr. Sayi Parameswaran**
**Member of the**
**DST Family**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A formidable friend & co-worker



Having known Jega during our time at DST I have come to know him as a good friend, philosopher, and a fantastic source of guidance and advice.

He is soft-spoken, always direct and to the point, and a very logical and efficient co-worker. I have observed him in the workplace for a number of years and he always executes his work with precise planning in a very organized manner demonstrating his knowledge and familiarity with his work.

He is also a source of help at DST as he is always ready and willing to help his fellow co-workers and he is always available to offer his advice when requested. Despite the fact that he is one of the more senior level employees at DST Jega always shows the utmost respect to those around him and displays a sense of professionalism whenever he interacts with his colleagues.

This behaviour has earned Jega the respect of his co-workers at DST and is something that I myself admire as he refrains from behaving irresponsibly or rashly despite the situation.

Having met and worked with his hard-working and bright son Ajay I can also attest to the fact that Jega is a great father as witnessed by his colleagues at DST.

**Mr. Umang Deasai BSc.**
**Member of the**
**DST Family**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மைந்தன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் குரும்பசிட்டி பெரியதொரு தடம் பதித்துள்ள கிராமமாகும். இலக்கிய கலைப் பாரம்பரியம் நிறைந்த இம் மண்ணில் பிறந்து, அம் மண்ணில் வாழ்ந்த பலரும் இன்று வெளி நாடுகளில் வாழ்ந்து தமதூரின் பெருமைகளை நிலைநாட்டி வருகின்றனர். இராணுவத்தால் துவம்சம் செய்யப்பட்டு பல்வேறு அழிவுகளைச் சந்தித்த இக்கிராமத்தின் இலக்கிய விதைகள் புலம் பெயர் நாடுகளில் பெரும் விருட்சங்களாகி நிற்கின்றனர்.



வரலாறு தொலைந்தாலும் வாழ்க்கை முடியவில்லை என்ற பெருமூச்சினை ஆழமாக விட்டுக் கொண்டிருப்பவர்களில் ஐ. ஜெகதீஸ்வரனும் முக்கிய மானதொருவர். ஊருக்குழைத்திடல் யோகம் இந்த உண்மை உணர்ந் திடல் யாகம் என்ற வார்த்தைகளுக்குப் பொருத்தமானவர் இவர். எனவே, அவரும் தன்னுடைய பெயருடன் ஊரையும் சேர்த்து குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் என்று எழுதி வருகிறார்.

1952இல் குரும்பசிட்டியில் பிறந்த இவர் குடும்பத்தில் மூத்தவர். பொன். பரமானந்தர் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய இவர் சிறுவயதிலேயே நடிக்கத் தொடங்கினார். பல்வேறு சமயப்பரீட்சைகளில் பரிசுகள் பெற்றார். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக்கினார். கதை சொல்வது, ஆங்கிலத்தில் பேசுவது இவரது தனித்திறன். ஆறாவது வகுப்பிலிருந்து மாணவர் மன்றங்களில் தலைவர், செயலாளர் போன்ற பதவிகளில் சிறப்பாகச் செயல்பட்டார்.

1967இல் சன்மார்க்க இளைஞர் மன்ற கட்டிடத்தினை நிறுவுவதில் தனது உழைப்பை நல்கியதுடன், சன்மார்க்க தீபம் சஞ்சிகையில் இணையாசிரிய ராகி எழுத்தாற்றல் பெற்றார். சமூகசேவையில் ஈடுபட்டு நீர்வள ஆய்வுக்காக பல அதிகாரிகளையும் அழைத்து வந்தார். அத்துடன் சாதி ஒழிப்பு செய்வதற்காக சமபந்திபோசனத்தில் பங்கெடுப்புச் செய்து முற்போக்குள்ள இளைஞரானார். 70களில் சிங்கள எதிர்ப்புக்கு முன்னோடியாகத் தமிழ்ப்பற்றும் தமிழ்தேசியப் பற்றினையும் ஏற்படுத்திக் கொண்டார். துணிச்சல் நிறைந்த இவர் சமூகப்பற்றாளராகி விடுதலைத் தாகமும், மக்களின் ஒற்றுமையும் வேண்டி நின்று இளையோர் செயற்திட்டங்களை முன்னெடுப்பதிலும் வல்லவரானார்.

19 வயது முதல் எழுத்துலகில் பிரவேசித்த இவர் சன்மார்க்கதீபம் என்ற சஞ்சிகையில் கறுப்புப்பால் என்ற கதையை எழுதிப் பிர- பலமானார். பல எழுத்தாக்கங்களை துணிச்சலுடன் வெளியிட்டார். தனது மனதின் கிடக்கைகள், ஆவேச உணர்வுகள், உண்மைக்கான தேடல்கள் புதிய உலகம் பற்றிய பல்வேறு சிந்தனைகளைக் கொண்டவர் இவர்.

1981இல் பிரான்ஸ் நாட்டிற்குப் புலம் பெயர்ந்து சென்றார். புலம் பெயர்ந்தாலும் மண்பற்றும், சமூக எண்ணமும் அவருடன் கூடவே சென்றன. 1984ல் தியாகி பொன். சிவகுமாரனின் பத்தாவது நினைவு தினத்தை சிறப்பாக ஒழுங்கு செய்து நடத்தினார். இளைஞர்களை இணைத்துப் பொதுமேடைகளில் அரசியல் அறிவினை ஊட்டினார்.

1984இல் இந்தியாவுக்குச் சென்று திருமணமும் செய்து கொண்டார். திருமணம் நிறைவேறினாலும் நிறைவேறாத இலக்கியத் தேடல்கள் நீண்டு சென்றன.

சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்
ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி
முன்னாள் விரிவுரையாளர்
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்
மணிவிழா குழு உறுப்பினர்
ரொரன்ரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சில் **Mantes La Jolie** என்ற நகரில் நலன்புரிச்சங்கமொன்றினை ஏற்படுத்தினார். எனினும் நாட்டுச் சூழ்நிலைகளால் சிறப்பாக இயக்க முடிய வில்லை. எனினும், பிரெஞ்சிய மொழி அறிவு பெற்று பலருக்கு உதவி வந்தார். அதே ஆண்டு கனடாவுக்கு அவர் புலம் பெயர நேர்ந்தது.

மொன்றியலில் உருவாகிய தமிழர் ஒளி நிறுவனம் ஜெகாவின் பல்வேறு திறன்களை வளர்க்க உதவியது. 1984இல் நிதிச் செயலாளராகப் பதவிபெற்று பல்வேறு கணக்கியல் சேவைகளைச் செய்தார். 1985இல் தமிழர் ஒளியில் ஒரு நிர்வாகியாக இணைந்த எனக்கு அவருடன் ஏற்பட்ட இறுக்கமான நட்பு இன்று வரை தொடர்கிறது. 1983, மார்கழி திங்கள் 20ம் நாள் உருவான தமிழர் ஒளி கலை, கலாசாரங்களை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியது எனலாம்.

புலம் பெயர்ந்து வந்தவர்களை அரவணைத்து பல சேவைகளைச் செய்த இந்நிறுவனம் நூல்நிலையம், ஆங்கில பிரெஞ்சு மொழி வகுப்புக்கள், தையற்கலை, தொண்டர் சபை, ஒலிபரப்புச் சேவை, சஞ்சிகை வெளியீடு, இளந்தொண்டர் சேவை போன்ற பல துறைகளில் ஈடுபட்டது. இதில் ஜெகாவும், நானும் இணைந்து சேவை செய்து பல ஆற்றல்களை நாங்களும் பெற்றுக் கொண்டோம். சிறுகதை எழுதுவது, கவிதை எழுதுவது இவரது பொழுது போக்கு. நான் ஒரு கோழை என்ற அற்புதமான கதையை தமிழ் ஒளி சஞ்சிகையில் எழுதிப் பிரபலமானார். இந்த நட்புக் காலத்தில் அவரது பல்வேறு வகைப் புலங்களை அறிய முடிந்தது.

மொன்றியலிலிருந்து ரொரன்ரோவுக்கு இடம் பெயர்ந்த அவரது திறமைகள் பல மேலும் வெளிப்பட்டன. இளவாலை எஸ். ஜெகதீசனின் பொதிகை சஞ்சிகை யிலும், செந்தாமரைப் பத்திரிகையிலும் கதைகளை எழுதி வந்தார். ஒரு ஓணான் தலையாட்டுகிறது என்ற இவரது சிறுகதை இன்றும் என் நினைவுக்கு வந்து செல்லுகிறது. சூரியன் பத்திரிகையில் குரும்பசிட்டி பற்றிய தொடர் கட்டுரைகளை எழுதினார்.

தீவகம் ராஜலிங்கத்துடன் இணைந்து நம்நாடு பத்திரிகையில் துணை ஆசிரியராகக் கடமை புரிந்தார். இவரது உள்ளத்து நெருடல்களும் உண்மையின் தேடல்களும் என்ற கருத்துப்பதிவு கடல் கடந்தும் பாராட்டுப் பெற்றன. வேலைப்பழுவுக்கு மத்தியிலும் இவரது எழுத் தாக்கங்கள் இவரைச் சிறந்த படைப்பாளியாக இனம் காட்டியது.

சிறுகதை மட்டுமன்றிக் கவிதைத் துறையிலும் ஈடுபட்ட இவர் கீதவாணி, கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபன கவிதா நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். நியாயத்திற்காகப் போராடும் உணர்வு இவருக்குரிய தனித்துவம். பல்வேறு கதைகளிலும், கவிதைகளிலும் இந்த தனித்துவம் அப்படியே கொப்பளித்து நிற்கும்.

பிரெஞ்சு, தமிழ், ஆங்கில மொழிகளில் பரிச்சயம் பெற்ற இவரது அடிப்படைத்திறன் கணக்கியலிலும் இருந்தது. குரும்பசிட்டி மக்கள் கனடாவில் வாழ்ந்து வருவதில் அவருக்கு மிகவும் பெருமையும் உண்டு. இதனால் கனடா குரும்பசிட்டி நலன்புரிச்சபையில் தலைவராகவும் கடமையாற்ற முடிந்தது. பொன்வயல் மலர் தயாரிப் பதில் மிகுந்த வெற்றியை இவர் பெற்றார். இரா. கனக ரத்தினம் அவர்களுக்கு ஆவணஞானி என்ற பட்டமும், அத்துடன் இவர் தலைவராக இருந்தபோது கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு இலக்கிய வித்தகர் பட்டமும் வழங்கப் பெற்றது.

பல சிறுகதைகளை எழுதிப் பாதுகாத்து வந்த இவரது எண்ணம் நூலொன்றை வெளியிடத் தூண்டியது. 2000ம் ஆண்டு இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி இங்கேயும் மனிதர்கள் என்ற தலைப்பில் வெளியானது. 11 சிறுகதைகளைக் கொண்ட இந்நூல் பலரது பாராட்டு தல்களையும் பெற்றதுடன் ஒரு சிறந்த எழுத்தாளராக இனம் காணவும் உதவியது. பல்வேறு கருத்தியல் களையும் தன் அனுபவங்களையும் பதிவு செய்துள்ளார்.

2008, யூன் மாதம் இவரது இரண்டு படைப்புக்கள் வெளி யாகின. மாணிக்கப்பரல் என்ற கவிதை நூல் மரபு இலக்கியத்திற்கும், நவீன கவிதைக்கும் சான்றாயிற்று. இவரைப்பற்றி தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் தமிழியல் பரப்பில் கவிதை, கட்டுரை, கதை, விமர்சனம் என்று பல்வேறு விழுதுகளைப் பரவவிட்டு பெயர் பெற்றுத் துலங்குபவர் குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் என்று பெருமைப்படுத்தி யுள்ளார். கவிஞர் இரா. சம்பந்தன் இந்நூலை இலக்கிய தடாகம் என்று குறிப்பிட, பொதிகை ஜெகதீஸ்வரன் நாக்கின் மேல் நின்ற நல்ல தமிழால் மூக்கின்மேல் விரல் வைக்க மகன் தரும் வைரமான படைப்பு இது என்று கூறியது மிகவும் பொருத்தமே.

அவர் வெளியிட்ட மற்றைய நூல் 400 பக்கங்கள் கொண்ட கொலு வீற்றிருந்த குரும்பை நகர் என்ப தாகும். இவ்வளவு தராதரத்துடன் இன்னொரு நூல் வெளிவருவதென்பது மிகவும் கடினமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிறீலங்கா, இங்கிலாந்து, அயர்லாந்து, சுவீடன், பிரான்ஸ், நோர்வே, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் வாழும் குரும்ப சிட்டி மக்களுடன் தொடர்பு கொண்டு பல ஆதாரங் களையும், படங்களையும் இணைத்து மிகவும் சிறந்த ஆவண நூலாக்கி அனைவருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

வரலாறு தொலைந்த மண்ணுக்கு வரலாறு படைத் துள்ளார் இவர். சட்டத்தரணி திரு. சு. சிவபாதம் இம் மலர் ஒவ்வோர் குரும்பசிட்டி வாழ் மனிதனையும் நிம்மதிப்படுத்தும், பழைய நினைவுகளைத் தூண்டும், நிமிர்ந்து நடக்க வைக்கும் என்று பெருமைப்படுத்தி யுள்ளார். 1900ஆம் ஆண்டு முதல் 1985 வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய இந்நூல் தடயமின்றி முழுமையாக சிதறுண்ட நகரத்தை உலகு அறிய வைத்துள்ளது. சிறந்த நலன்புரி சேவைக்காக 2001இல் ரொரன்ரோ மேயரிடம் அன்றே விருது பெற்ற ஜெகா விருது களுக்காக வாழ்ந்த ஒருவரல்ல. வாழ்நாள் முழுவதும் எண்ணற்ற சமூக சேவைகளைப் புரிந்தும், மண் பற்றினை வெளிப்படுத்த வரலாற்று ஆவணத்தினை எழுதியும், மக்களின் மனதில் இடம்பெற்ற ஒருவர். அவரின் குணாதிசயத்திற்கு ஏற்ற மனைவி, அன்புக்குப் பாத்திரமான பிள்ளைச் செல்வங்கள் அவரது வளர்ச்சிக் குப் பல்வேறு வழிகளிலும் உதவிய துணைவர்களாவர்.

முகத்தில் எந்நேரமும் தவழும் புன்னகை, தார் மீகத்திற்காக குருதிசிதறும் முகபாவம், நகைச்சுவைக் காக வாயைத் திறந்த வெடிச்சிரிப்பினை உதிர்க்கும் களங்கமற்ற முகபாவம், அவரது அடையாளச் சின்னங்கள். கணக்கறிவியல், பேச்சு, எழுத்து, கவிதை, விமர்சனம், சமூகசேவை அனைத்தும் கொண்ட இவர் விருதுப்பெயர்களைத் தன்னுடன் சேர்க்காத ஒருவர். அவர் என்றும் குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரனாகவே வாழ்வார். ஜெகாவின் மணிவிழாவுக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்.





*கொலுவீற்றிருந்த குரும்பை நகர் நூல் வெளியீட்டு விழாவில் சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் அறிமுக உரையாற்றுகின்றார்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசம் மிக்கவர்

குரும்பசிட்டி கைலாயபிள்ளை ஐயாத்துரை அவர்களின் மூத்த மகனாகிய திரு. ஜெகதீஸ்வரன் அவர்களை மிக நீண்ட காலமாகவே நான் அறிவேன். ஜெகதீஸ்வரன் எமது கிராமத்தை எவ்வளவு ஆழமாக நேசித்தார், நேசித்து வருகிறார் என்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கண்கூடாகப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு நிறையவே வாய்த்திருந்தது.



இவரின் தந்தையார் ஐயாத்துரை அவர்களின் சகோதரர் வேலாயுதம் எனது பாடசாலை நண்பர். ஐயாத்துரை அவர்கள் இளமைக் காலத்தில் பண்டாரவளையில் வர்த்தகத்தில் சிறந்து விளங்கியவர்.

பின்னாளில் கிராமத்தில் இருந்த காலத்தில் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இவர் செய்த தொண்டினை எமது முழுக் கிராமமுமே அறியும். எமது கிராமத்தில் நிகழ்ந்த கொள்ளையைத் தடுப்பதற்காக தமது உயிரைத் துறந்த தியாகச் செயலையும் யாரும் எளிதில் மறந்து விட முடியாது.

இத்தகைய பெருமகனின் மைந்தனாகிய நீர் 1970களில் அம்பாள் ஆலயம், விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் சிரமதானப் பணிகள் செய்ததும், அன்றைய நாட்களில் உணவுத்தட்டுப்பாடு நிலவிய வேளைகளில் எமது கிராமத்திலிருந்த வெதுப்பகத்திற்கு (Bakery) அதிகாலையிலேயே சென்று பண்டிதர் நடராஜா அவர்களுடன் மக்களுக்குப் பாண் விநியோகம் செய்தமையும் எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது.

இதுமட்டுமன்றி எமது கிராமத்தைப் பற்றிய ஒரு வரலாற்றுத் தொகுப்பினை, கிராம முன்னேற்றச் சங்கம் தனது அறுபது ஆண்டினைப் பூர்த்தி செய்த வேளையிலே, கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற தலைப்பில் ஆக்கி, வெளியிட்டு வைத்த கைங்கரியத்தைச் செய்த உம்மை கிராம முன்னேற்றச்சங்கத்தின் முன்னாள் தலைவரென்ற வகையில் மிகுந்த மனநிறைவோடு வாழ்த்துகிறேன்.


இது மட்டுமன்றி, இவ்வாறான நூலினை எழுதுவதற்கு பக்கசார்பின்மையும், காழ்ப்புணர்ச்சி பாராட்டாமையும் முக்கிய தகுதிகளென யான் கருது கிறேன். இதனைச் செம்மையாகச் செய்த உமது மனத்திண்மையை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

மேலும், அறுபது வயதினை நிறைவு செய்யும் இந்நாளில் உடல் ஆரோக்கியத்துடன், மனைவி, பிள்ளைகள் அனைவரும் சேமமுற வாழ வேண்டுமெனவும், உமது இலக்கியப் பணிகள் மென்மேலும் சிறக்க வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

திரு. சி. கனகசுந்தரம்
பொன். பரமானந்தர்
மகா வித்தியாலய முன்னாள்
அதிபர்,
குரும்பசிட்டி கிராம
அபிவிருத்திச் சங்க முன்னாள்
தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலரில் ஒருவன்



கவிஞர் அல்வை.
கோ.தர்மகுலசிங்கம்
திறந்த மனதோடும், தீர்க்கமான
கொள்கைப் பிடிப்போடும்,
25 ஆண்டுகளுக்கு மேலான
இனிய நட்பைப் பேணுபவர்.

தாய் ஒன்று.
தமிழ் ஒன்று
தமிழ் பேசும் மானிடத்தின்
தரமோ ஒவ்வொன்று.

ஏனென்றால்
ஏளனப் பார்வை ஒன்று.

சேற்றில் முகம் காட்டும்
செந்தமிழ் பெண்ணாள்
மீட்கும் யாழிசையில்
மோட்சம் தேடுவர்!

அதுவாய்
அன்பர்கள் எத்தனை
இந்த பச்சைவயல் பூமியில்
இதயத்தை வெழுத்து வைத்தார்?

கண்டவர்கள் எல்லாம்
கண்ணின்று அகன்று விட்டார்
வாய் விட்ட வார்த்தை
வடிகால் வழியேகிச் சேறாகிப் போச்சு

அதுவல்ல இவன்
அவனியில் சிலரில் ஒருவன்

கவியரங் கொன்றில்
கவிபாட ஏறினான்
காற்றின் விசை போல்
கடகடவெனக் கவிபாடிப் போனான்

குரும்பசிட்டி மல்லிகையும்
குன்றா மணம் கமழும்
மண்ணின் வாசனைக்கு - இவன்
புதிய மகுடம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோன நிலை கடந்த
போதி முனிவனின் புன்முறுவல்
அன்பு பிசகாத
அசல் உள்ளம் உடையவன்!
இனிப்பாய் பாயும் அருவியாய்
இங்கிதம் நாவின் அசைவில்!

இயற்கையின் உறவாய்
இராக்கால நட்சத்திரமாய்
ஜெகதீஸ்வரனெனும்
ஜெகசிற்பியன் உள்ளான்.

பத்தாறு அகவை காண்கிறான்
படிகள் பலவேறி உயர்ந்தவன்!

படிகள் தோறும்
பண்பு அன்பு இனிமை
கலை கலாச்சாரம்
கவிதை
கட்டுரை
கதைகள்
ஆதி அனைத்தும்
அறிந்து படைத்தவன்!



*1982இல் அகதிவாழ்வில் இருப்பிடம் தேடி அலைந்த வேளையில், வழிகாட்டி உதவிசெய்த "கானா" நாட்டு அகதி ஒருவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பொதுமகன்

நட்பு என்பது என்ன? நண்பன் என்பவன் யார்? என்னை நீண்ட காலமாகவே விடைதேடி அலைய வைத்துக்கொண்டிருக்கும் வினாக்கள் இவையென்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். எழுத்திலும் பேச்சிலும் இவை குறித்த வரைவிலக்கணங்களில் உள்ள உண்மையும் உன்னதமும் நடைமுறையில் இல்லாதிருப்பதுதான் இந்த இடையறாத சுழியோடலுக் கான காரணம். சுண்டிப் பார்த்துக் கண்டுபிடிக்கும் சுலபம் உண்மை நட்பையும், உண்மை நண்பர்களையும் கண்டறிவதில் பொருந்தவே பொருந்தாது.

அதிலும் "சுத்தமான புத்திசாலிகள்" எனச் சுயபிரகடனம் செய்துவரும் இலக்கியக்காரர்கள் நடுவே, இவை கிஞ்சித்தும் கிடையாமலிருப்பது வேடிக்கை மட்டுமல்ல, தாங்கொணா வேதனையும் கூட! இதற்காக, வெறும் "முகநக நட்பு" மட்டுமே உண்மை நட்பென நம்பி, நம்பி ஏமாந்து போயே பழக்கப்பட்டுவிட்ட மனதைக் குறை சொல்லியென்ன? உலகம் அப்படி!



ஆயினும் அன்று தொட்டு இன்றுவரை விதிவிலக்குகள் இல்லாமலில்லை. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இவ்வாறான விதிவிலக்குகளுக்கு ஆதாரங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. உதாரணமாக -

"செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்.."

எனச் சான்றோர் நட்புக் குறித்த நாலடியார் கூற்றுக்கு - "வழிச் செல்லுங் காலத்தில் ஒருவரை ஒருநாள் கண்டாலும், சான்றோர், பழமை வழியான நேயம் போலத் தோன்றும் வகையில் அன்பு செய்து அவரைப் பிணிப்பர்" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இத்தகைய சான்றோர் நட்புக்குச் சாட்சியாக என் கைவசம் உள்ள ஒரு சில நண்பர்களுள் குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரனும் ஒருவராவார்.

1986ஆம் ஆண்டு - நான் கனடாவுக்குள் காலடி வைத்த வருடம் - மொன்றியால் நகரில் "தமிழர் ஒளி" நிறுவனத்தினர் ஒரு கலை விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். கவியரங்கு அதில் ஓர் அங்கம். நண்பர்கள் ஜெகதீஸ்வரன், சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், கோவி தர்மகுலசிங்கம் ஆகியோருடன் நானும் அதில் பங்குபற்றினேன். அன்றுதான் நண்பர் ஜெகதீஸ்வரனை முதன்முதலில் சந்தித்தேன். கவியரங்கு தொடர்பாகவும், கவியரங்கின் போதும் நண்பர் ஜெகதீஸ்வரனின் கருத்துக்களைக் கருத் தூன்றிச் செவிமடுத்தேன். பின்னர், இரண்டொரு வருடங்களில் இருவரும் ரொறொன்ரோ வந்து குடியேறினோம்.

தொண்ணூறுகளின் துவக்கத்தில் "தாயகம்" பத்திரிகைக்காக நான் எழுதிக்கொண்டிருந்தேன். தாயகத்துடன் பொருது மோதிக்கொண்டிருந்த "செந்தாமரை" பத்திரிகையில் அவர் எழுதிக்கொண்டிருந்தார். எழுது தளமும் எழுதுபொருளும் எதிரும் புதிருமாக இருந்தபோதும் அவரும் நானும், எலியும் பூனையும் போலன்றி, நல்ல நண்பர்களாகவே இருந்து வந்தோம்.

"நான்காவது பரிமாணம்" என்னும் இலக்கியச் சஞ்சிகையை நான் தத்தெடுத்துத் தலையில் சுமந்தபோது, நண்பர் ஜெகதீஸ்வரனை அடிக்கடி சந்தித்துக் கொண்டேன்.

திரு. க. நவம்
"நான்காவது பரிமாணம்"
சஞ்சிகை ஆசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைமாறு கருதாது ஆலோசனைகளையும் உதவிகளையும் அவர் எனக்கு "அள்ளி அள்ளி வழங்கினார்" என்று சொல்லி ஏமாற்றுவது சற்றே அதீதம் என்பதால், "வழங்கினார்" என்பது சாலப் பொருந்தும்.

2000 அக்டோபரில் அவர் தமது முதலாவது சிறுகதைத் தொகுதியான "இங்கேயும் மனிதர்கள்" என்ற நூலை வெளிக்கொணர்ந்தபோது, வெளியீட்டுரை நிகழ்த்தும் பொறுப்பை என்னிடம் தந்திருந்தார்.

இலக்கியச் சந்திப்புக்களின் போதும், சில விசேட நிகழ்வுகளின் போதும் இடையிடையே சந்தித்துக் கொள்வோம். "தொல்லை நெடும் பிறவித் தொலைபேசி" கருவியில் அரட்டலின்றி அளவாக அவ்வப்போது அளவளாவி வந்துள்ளோம். அன்பும் அபிமானமும், மதிப்பும் மரியாதையும் ஆர்முடுகலோ அல்லது அமர் முடுகலோ இன்றி, எமக்கிடையில் சமச்சீராகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கண்டநாள் முதலாகக் கனகாலம் பழகி உறவாடியவர் போல, இன்றுவரை என்னிடம் நட்புப் பாராட்டிப் பழகிவரும் நண்பர் ஜெகதீஸ்வரனுக்கும் எனக்குடையிலான நட்புறவின் நறுசுருக்கம் இவ்வளவுந்தான்!

நண்பர் ஜெகதீஸ்வரனுடன் பழகியதிலிருந்தும், அவரது படைப்புக்களிலிருந்தும் அவர் குறித்து அன்று என் மனதில் பதிந்துபோன கோட்டுருவச் சித்திரம் எந்தவித மாற்றமுமின்றி, இன்றும் அதேபோன்று மாறாதிருக்கின்றது!

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்த மனித சமூகத்தின் அங்கத்தவர் தான். இனாமாகக் கிடைத்த இந்த அங்கத்துவத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை எல்லோரும் உணர்வதில்லை. தானுண்டு, தன் குடும்பம் உண்டு என்ற தோரணையில், வெறுமனே உண்டு உடுத்துக் கொண்டாடிக் களித்துக் காலத்தைக் கழிப்பதிலேயே அநேகமானோர் கண்ணுங் கருத்துமாக உள்ளனர். தம்மை வாழவைத்த உலகுக்கும் சமூகத்திற்கும் நன்றிக் கடனாக எதையாவது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமின்றி வாழும் இவர்கள் சுயநலவாதிகள்.

மாறாக, தானும் வாழ்ந்து, சகமனிதனும் வாழவேண்டும் என்ற சீரிய சிந்தனையுடன் சமூகத்துக்கு நல்லது செய்ய நினைப்பவர்கள் பொதுநலவாதிகள். இவர்களையே நன்றியோடு நாடு நினைக்கும், சமூகம் நினைக்கும், நண்பர்கள் நினைப்பர். நண்பர் ஜெகதீஸ்வரனுக்கு மணிவிழா கொண்டாட வேண்டும் என்று அவரது நண்பர்களும் உறவினர்களும் முன்வந்ததற்கு அவரிடம் காணப்படும் அந்த அளவிறந்த சமூக அக்கறைதான் பிரதான காரணம். அவரது கதைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்ற படைப்பாக்கங்கள் மட்டுமன்றி, சிறுவயது முதலான இவரது சமூக வாழக்கைச் செயற்பாடுகளும் இதனையே சுட்டி நிற்கின்றன.

தான் வாழும் சமூகத்தின்பால் பற்றுடைய ஒருவன்தான் பிறர் ஈனநிலை கண்டு துள்ளுபவன், துடிப்பவன். சமூக அநீதி கண்டு கோபாவேசம் கொண்டு, கலகக் குரல் எழுப்புபவனும் அவன்தான். அதுவே உண்மைக் கலைஞனுக்குரிய அடிப்படைக் குணாம்சம்.

அன்றுதொட்டு இன்றுவரை நண்பர் ஜெகதீஸ்வரனிடம் நான் காணும் குணவியல்பும் அதுதான். தனது சட்டையில் தீப்பிடிக்காதவரை, அடுத்தவனின் சட்டை தீப்பற்றி எரிந்து சாம்பலாகிப் போவதையிட்டு அக்கறைப்படாமல் இருந்துவிட்டுப் போகும் சராசரி மனிதரல்ல, அவர். தன்னைப் போலவே பிறரையும் நேசிப்பவர். பிறருக்குத் தீங்கு நேர்கையில் தனக்கு நேர்ந்ததாகக் கருதி, போர்க்கொடி தூக்கும் மனப்போக்குடையவர். அநீதிக்கெதிரான ஆர்ப்பாட்டக் குரலை உரத்து வெளிப்படுத்தும் நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் மிக்கவர். நீதியும் சமத்துவமும் சகோரத்துவமும் கொண்ட ஒரு சமூகத்தைக் கனவாகக் கொண்டவர். இத்தகைய உயரிய சிந்தனைகளின் உண்மை வெளிப்பாடுகளே அவரது இளமைக்கால வாழ்க்கையும் எழுத்தாக்கங்களும்.

அண்மையில் மறைந்த பேராசிரியர், தமிழப் பேரறிஞர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு ஸ்காபரோ நகரில் "நினைவரங்கு" ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் நான் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் இது நடந்தது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந் நிகழ்வு குறித்து எனது நண்பர்களுக்கு மின்னஞ்சல், முகவேடு வழியான செய்தியை அனுப்பி வைத்திருந்தேன். எனது செய்தி கிடைத்ததும் நண்பர் ஜெகதீஸ்வரன் "இந்த நிகழ்வுக்கு நான் என்ன விதத்தில் உங்களுக்கு உதவலாம். தயவுசெய்து அறியத் தாருங்கள்" எனக் கேட்டு உடனடியாக எனக்குப் பதில் அனுப்பியிருந்தார்.

நிகழ்வுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர், நிகழ்வில் வந்து கலந்துகொள்ளுமாறு முழு விபரங்களுடன் மீண்டும் எனது நண்பர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தேன். மறுநாளே நண்பர் ஜெகதீஸ்வரன் தொலைபேசியில் அழைத்து என்னோடு பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடலின் போதுதான் அவர் கண்ணில் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகி, கட்டிலில் கிடந்தபடி ஓய் வெடுத்துக் கொண்டிருக்கிறார் என்ற தகவலை நான் ஊகித்துணர்ந்தேன்.

அந்நிலையிலும் அவர் என்னிடம் மிகுந்த உரிமை யுடனும் வாஞ்சையுடனும் கேட்டார்-"ஈழத் தமிழருக்குப் புகழ் சேர்த்து வாழ்ந்துபோன ஒரு உலகப் பொது மகனுக்கான பொதுநிகழ்வை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறீர்கள். விழாவில் வந்து கலந்துகொள்ள முடியாத நிலையில் நான் இருந்தாலும், ஏதாவது ஒரு வழியில் உதவ விரும்புகிறேன். நிச்சயம் உங்களுக்கு நிதி ஒரு பிரச்சினையாக இருக்கும். எவ்வளவு பணம் தேவை? சொல்லுங்கள், நான் தருகிறேன்."

விழா குறித்து பல நண்பர்களிடம் உதவி கேட்டுச் சோர்ந்து போயிருந்த எனது மனம் ஒரு கணம் பூரித்து மலர்ந்தது! நோய் வாய்ப்பட்டுப் படுத்துக் கிடக்கை யிலும், நேசத்துடன் அவர் நீட்டிய உதவிக் கரத்தை எண்ணிச் சில்லிட்டுச் சிலிர்த்தது! மிகுந்த நன்றி யுணர்வுடன் சமாதானம் சொல்லி, "தேவைப்பட்டால் நிச்சயம் கேட்பேன்" எனக்கூறி, அவரது வேண்டு தலிருந்து விடுபடவே போதும் போதுமென்றாகிவிட்டது!

எந்தவொரு பொது விடயத்திற்கும் உதவி கேட்க முன்னர், தாமாகவே முன்வந்து கைகொடுத்து உதவும் மனப் பக்குவம் உள்ளவர்கள்தான் ஒரு சமூகத்திற்கு இன்று தேவைப்படுகின்றார்கள். குறிப்பாக, நொந்து போயிருக்கும் எங்கள் ஈழத் தமிழ்ச் சமூகத்திற் குத் தேவைப்படுகின்றார்கள்.

"புறம் பேசுவதையும், பகிடி செய்வதையும், நக்கல் செய்வதையும், பிறரை நோக்கி வெற்றுவேட்டுக் கேள்வி கேட்பதையுமே அறமாகக் கொண்டு திரியும் இலக்கியக்காரர்கள்" வாழும் எமது றொறொன்ரோ தமிழ்ச் சூழலில், நண்பர் ஜெகதீஸ்வரன் ஒரு புறநடை யல்லவா? "பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும் ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே!" என "நல்வழி" சொன்ன வார்த்தை இன்னமும் பொய்த்துவிடவில்லை என்பதற்கு இவர் ஒரு சான்றல்லவா? இவர் போன்றோரின் பொருட்டே, இன்றும் எல்லோர்க்கும் பெய்கிறது மழை என்பதில் பிழை இல்லையல்லவா? சகல சிறப்புக்களுடனும் அவர் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்த மனம் அவாவுறுவதில் அர்த்த முண்டல்லவா?

அகவை அறுபதை எட்டிய அன்பு நண்பர் ஜெகதீஸ் வரனுக்கு எனது அகம் கனிந்த வாழ்த்துக்கள்! ♥♥♥




ஒக்டோபர் 2000இல் "இங்கேயும் மனிதர்கள்" நூல்வெளியீட்டின் போது "நான்காவது பரிமாணம்" நவம் அவர்கள் உரையாற்றுகின்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை நண்பர்



செந்தமிழின் பண்புவளர் குரும்ப சிட்டிச்
செழுநகரின் திருமைந்தன் செகதீ ஸ்வரன்பேர்ச்
சிந்தனையாற் சீரியநல் எழுத்தாற் பேச்சாற்
சிறந்தஅருங் கலைஞன்என் நெஞ்சில் நிற்போன்
இந்தநிலத் தறுபதாண் டெய்தி நிற்கும்
இனியதினம் வந்ததுகாண் ஒன்றுசேர்ந்து
நந்தமிழர் எடுக்கின்ற மணிவி ழாவின்
நாயகனைப் போற்றிடுவோம் வாழி நண்ப!

காற்றாடி போற்சுழலும் உலக வாழ்வைக்
கலையாக்கும் கரம்பிடித்த எழுதுகோலும்
சேற்றுவயல் விளைகின்ற செந்நெல்லைப் போற்
சிந்தனைகள் உதிர்க்கின்ற வாயும் நாவும்
நேற்றைநாள் வரலாறு பூமிக் கோள
அரசியலின் நீரோட்டக் கூர்ப்புத் தேர்ந்த
ஆற்றலுடைக் கூர்மதியும் கொண்டோய் நின்னை
அறிந்தவர்நாம் வாழ்த்துகிறோம் வல்லோய் வாழி!

சமுதாய முன்னேற்றம் பார்க்கும் நோக்கும்
சலியாமல் அதற்குழைக்கும் பரந்த நெஞ்சும்
அமுதொப்ப. இல்லையிலை அதற்கும் மேலாய்
அள்ளிவிளை யாடியஊர் மண்ணிற் பற்றும்
சுமைதுன்பம் பெருந்துயரம் வரலா றாகிச்
சோகநதி குளிக்கின்ற சொந்தம் எண்ணும்
அமைந்தமனக் கலைநண்ப நின்னைப் பாட
அருந்தமிழே அழகுபெறும் வாழி நீடு!

வளர்கின்ற கலையென்னும் வசந்தம் தேடி
வட்டமிடும் சுகத்தும்பி வடியும் தேனாய்க்
கிளர்கின்ற தமிழ்ப்பனுவற் கடலிற் றோய்ந்து
மெய்மறக்கும் தனிச்சுவைஞன், புதுமை சேர்த்து
எழுகின்ற எண்ணமெலாம் மிளிரும் பொன்போற்
கதைகவிதை என்றாக்கும் விந்தைக் காரன்
விளைநிலம்போற் தமிழ்சொரியும் செகதீஸ்வரன் பேர்
வித்தகனே நீவாழி! தமிழும் வாழி!

கனித்தருபோற் கலைவிளையும் இனிய நண்ப
காலமெல்லாம் தமிழ்நின்னைக் கூடி வாழும்
பனிமலர்சேர் குவைஎன்னச் சிரிக்கு முங்கள்
பண்பாட்டுத் திறம்அன்பர் நெஞ்சில் வாழும்
இனிதாக இன்னும்நூ றாண்டு காலம்
இப்புவியில் நீவாழ வாழ்த்துச் சொன்னோம்!
மனிதரிடை மாணிக்கம் போல்வாய் வையம்
மங்கைஉமை பங்கனருள் கொண்டே வாழி!

கவிஞர். அனலை
ஆ. இராசேந்திரம்
திருக்குறளுக்கு உரை எழுதிய
சிறப்புமிக்கவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத மனிதர்



மொன்றியலில் 1984இல் பிரெஞ்சு மொழிக் கல்விக் கூடமொன்றில்

வீசிய தென்றல் ஓர் விநாடி என் காதிலே கூறிய செய்தி கேளும்
வீணாகப் பேசிட காலமும் இல்லையாம் விரைவாக ஓடுதங்கே
பேசிய வேளையில் ஜெக தீஸ்வரன் பெருந்தகை மணிவிழா அறிந்தேன்
பேனா எடுத்தொரு வாழ்த்தினைஎழுதியே வழங்கஎண்ணமுற்றேன்
மூசியே தமிழ் மொழி பேனா முனைகளில் முட்டி மோதியது காண்
மூத்த புதல்வரை வாழ்த்த எண்ணிய ஆர்வம் அமைந்தது தான்

தாயக மண்ணது நினைவுகள் சுமந்து தமிழ் படைக்கும் ஒருவர்
தன்உறவுகள் பேணியே உன்னத மனிதராய் வாழ்ந்திடும் மகனார்
காயங்கள் கண்டதால் மருந்துகள் தந்துமே உண்மையாய் பழகும் நண்பர்
காலங்கள்மாறினும் கண்ணியம்மாறாது நெறிநின்று வாழும் மனிதர்
மாயங்கள்இல்லை எம்மண்ணிலே பிறந்திட்டால் இப் பண்புகள்வந்துசேரும்
மணிவிழாநாயகர் குரும்பையூர்என்பதால்இலக்கியம் நாவில்வாழும்

காலச் சூழலில் கனடா சென்றவர் கடமை உணர்ந்து நின்றார்
காகிதம் மீதிலே கருத்துகள் பலதினை எடுத்து இயம்பி வந்தார்
நாலா பக்கமும் நம்மவர் உறவுகள் நாடி வளர்த்துக் கொண்டார்
நாட்டு மேன்மையை நல்ல ஆக்கமாய் படைத்து வழங்கி வந்தார்
பாலமாகவே இருந்து எங்களை இணைத்து மகிழ்ந்து கொண்டார்
பாடுபட்டு ஓர் ஆவண நூலினை ஆக்கி எமக்கு அளித்தார்

காற்றும் வாழ்த்திட கனடா வந்ததால் கவிதை அனுப்பி வைத்தேன்
காலம் நூறையும் கடந்து நீங்கள் நீடு வாழ வேண்டும்
ஊற்றாய் சுரந்து தழிழை படைத்து ஊரை உயர்த்த வேண்டும்
ஊர்க்காற்று இனிமேல் மண்ணில்வந்து வசந்தம் வீசவேண்டும்
போற்றித் தொழுதோம் அம்பாள் அடியை நாற்றாய் செழித்து வாழ்க
போதாது இந்த மணிவிழா மேலும் நூறாண்டு கடந்து வாழ்க

கவிஞர் குரும்பையூர்
தம்பித்துரை ஐங்கரன்
வவுனியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஆர்வலர்

அகவை அறுபதில் நுழைந்து மணிவிழாக்காணும் சமூக ஆர்வலர் திருவாளர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் வாழ்ந்து வந்த கால கட்டங்களை சற்றுத் திரும்பிப் பார்ப்போமாக இருந்தால் நாம் ஓர் சமூகத்தின் எழுச்சிக்கு அல்லது கட்டமைப்புக்கு ஒரு சமூகவியலாளர் எந்தளவுக்கு தன்னை சமூகப்பணிகளில் ஈடுபடுத்திக்கொள்ளுகின்றார் அல்லது இவரின் நடவடிக்கைகளில் இருந்து ஒரு சமூகவியலாளர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்பதனை ஐயப்பாடின்றி எவராலும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என நம்புகின்றேன்.



பரீஸில் உள்ள ஈபிள் கோபரத்தின் உச்சியில், அதன் கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்த பொறியியலாளர் திரு. ஈபிள் அவர்களின் உருவச் சிலையுடன் ஜெகா

இவர் ஓர் சமூக ஆர்வலர் மட்டுமல்ல, முற்போக்கு கருத்துக்களை மக்களிடம் விதைக்கும் கதாசிரியராகவும், கவிஞனாகவும் காணப்படுகின்றார். இவர் எழுதிய கறுப்புப்பால் என்னும் சிறுகதையை நான் வாசித்த போது அந்தக் காலகட்டத்தில் சமூக சீர்கேட்டுக்கெதிரான கருத்துக்களை எவ்வளவு துணிச்சலுடன் பதிவு செய்துள்ளார் என்பது என்னை ஆச்சரியப்படுத்தியது. இது எனக்கு அவர்மீது ஓர் அன்பினையும், மரியாதையையும் வைப்பதற்கு காரணமாக அமைந்து விட்டது.

பச்சை மருதாணிக்குள் மறைந்திருக்கும் சிவப்பு போல இவர் தான் வாழ்ந்த சமூகத்திலிருந்து சற்று விலகி சமூகத்துடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஓர் முற்போக்கு இடதுசாரி கொள்கையுடையவராக காணப்பட்டார். அன்பு, அறிவு, அடக்கம் ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டு எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் ஓர் செயல் வீரனாகக் காணப்பட்டார்.

இன்று தமிழர்களது வரலாறு சிதைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் வருகின்ற காலகட்டத்தில் திருவாளர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்கள் வரலாற்று உண்மைகள் அழிந்து விடக்கூடாது என்பதற்காகவும் வரலாற்று நிகழ்வுகள் எம் அடுத்த சந்ததியினருக்கு போய்ச்சேர வேண்டுமென்பதற்காகவும் கொலுவீற்றிருந்த குரும்பை நகர் என்னும் ஆவணப் பதிவினை எம் மக்களுக்காய் பதிவிட்டுள்ளார். இப்பதிவானது காலத்தின் தேவைகருதி அவரால் எடுக்கப்பட்ட முடிவு அவரின் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. வரலாற்று பதிவுகளை பதிவிடல் என்பது அத்தனை சுலபமானதொன்றல்ல. அதுவும் இன்று எம் மக்கள் எம்மண்ணில் இருந்து அகற்றப்பட்டு பல நாடுகளிலும் சிதறுண்டு வாழுவதனால் அனைத்து தகவல்களையும் திரட்டி வடிவமைத்து இருக்க முடியாது. மாறாக எம்மவரில் பெரும்பாலானோர் இப்படியான முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு தாமாக முன்வந்து ஒத்துழைப்பினை நல்குவதாகவும் இல்லை. எப்படியிருப்பினும் இப் பதிவானது வரலாற்று ஆவணமாக முழுமைப்படுத்தப்படா விட்டாலும் ஒரு பகுதியினையாவது நிறைவேற்றி நிற்கும் என்பது உண்மை.

குரும்பசிட்டியில் பிறந்து கனடாவில் வாழ்க்கையை தொடர்ந்து கொண்டிருக்கும் திருவாளர் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன் அவர்களின் வாழ்க்கையை நாம் மூன்று பகுதிகளாகப் பார்க்கலாம். அவர் எமது மண்ணில் மக்களோடு மக்களில் ஒருவனாக இருந்து கொண்டு எமது சமூகத்திற்காய் ஆற்றிய பணிகள். அவர் அரச உத்தியோகத்தில் இருக்கும் போது எம் மக்களுக்காய் செய்த செயற்பாடுகள்.

**திரு. சிவபாதம் கணபதிப்பிள்ளை**
**சட்டத்தரணி, இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் அகதி வாழ்க்கையை ஆரம்பித்தபின் அங்கிருந்து கொண்டே எமது மக்களுக்காய் அவர் மேற்கொண்ட பணிகள். இப்படியாக அவர் ஒவ்வொரு கால கட்டத்திலும் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை.

சமூக வேலைத்திட்டங்களில் தம்மை இணைத்துக் கொள்பவர்கள் தனிமனிதர்களாக இருந்தால் என்ன, குழுக்களாக இருந்தாலென்ன, ஒரு சமூகமாக இருந்தால் என்ன இப்படித்தான் சமூகம் இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். மாறாக இப்படித்தான் இருக்க வேண்டும் என்று உடனடியாக எதிர்பார்க்கக் கூடாது. எம்மில் அனேகரிடம் இப்படி இருப்பதில்லை. ஆனால் மணிவிழாக்காணும் திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்கள் சமூக விழுமியங்களை ஏற்றுக் கொண்டவராகக் காணப்பட்டார். பொதுவாக நாம் சமூகத்திற்கு பணியாற்றப் புறப்பட்டால் சகிப்புத்தன்மை, அன்புகாட்டல், அவர்களை மதித்து நடத்தல் என்பன எங்களிடம் வேரூன்ற வேண்டும். அவர்களின் சுக துக்கங்களில் எல்லாம் பங்குதாரர்களாக வேண்டும். சுருங்கச் சொன்னால் மானிட விழுமியங்களை மதித்து நடக்கும் தார்மீகப் பொறுப்பு எங்களிடம் காணப்பட வேண்டும். இக் குணாம்சங்களை திருவாளர் ஜெகதீஸ்வரனிடன் நான் காண்கின்றேன்.

நாம் கடமைகளை செய்ய முற்படும் போது சமூகங்களுடன் ஒத்தியங்க வேண்டும். சமூகத்தின் தேவைகளை புரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் கருமங்களை ஆற்ற வேண்டும். இதனால்தான் சர்வதேச சட்டமே தனிமனித உரிமைகளைப் பாது காப்பதற்காக கடுமையான போக்குகளைக் கடைப்பிடிக்கின்றது. இந்த வகையில் திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்கள் சமூகத்தின் தேவை கருதி அவ்வப்போது காலத்தின் தேவை கருதி தனது பணியினை செய்து வந்தமையை எவரும் மறுக்க முடியாது. குறிப்பிட்டு சொல்வதானால் ஆழிப்பேரலையின் கொடுமையினால் எம்மக்கள் அழிவுகளை சந்திக்க நேர்ந்தபோது இரவு பகல் பாராது செயல்பட்டு அல்லல்பட்ட மக்களுக்கு உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதியினை சேகரித்து அனுப்புவதில் பின் நின்று செயற்பட்டார்.

யுத்தகாலத்தின்போது அரச தொடர் குண்டு வீச்சுகளால் சகலதையும் இழந்து நிர்க்கதியாகி இருந்த எம்மக்களுக்கு அவசிய தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக கனடா வாழ் எம்மவரிடம் நிதியினை சேகரித்து அனுப்பி வைப்பதையும் பின்னின்று செயலுருப்பெற வைத்தார்.

இன்று அரச படையினரால் விடுவிக்கப்பட்ட எம் நிலப் பரப்பில் மீள்குடியேற்றம் நடப்பதற்கும், சிதைக்கப்பட்ட எம் கிராமத்தின் மேம்பாட்டிற்காகவும் அர்ப்பணிப்போடு தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்டு வருகின்றார்.

ஒருவன் தன் சமூகப்பணியினை நிறைவேற்ற முற்படும் போது அக்கிராம மக்களின் வாழ்நிலையை புரிந்து கொள்ள தவறுவானாக இருந்தால் அவன் மேற்கொள்ளும் பணி தடைப்பட காரணமாக அமைந்து விடும். சமூகத்திலிருந்து எதிர்ப்பு கிளம்பினால் சேவை, பணி எல்லாம் தடைப்படும். இந்த வகையில் பார்க்கும் போது திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்கள் சமூகத்தின் தேவைகளை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்றால் போல் தன் சேவைகளை ஆற்றுவதனை காணக் கூடியதாக உள்ளது.

எவனொருவனுக்கு உதவி தேவைப்படுகின்றதோ அவனுக்கு தேவையான உதவிகளை விரைந்து செய்வதுதான் உன்மையான உதவி, அதுதான் சமூகப் பணியும்கூட. என்னைப் பொறுத்தளவில் குறி, சாஸ்திரம், மூடநம்பிக்கை இவைகளுக்கு மதிப்பளித்து முன்னுரிமை கொடுத்து சமூகப் பணி என்று கூறிக்கொண்டு பெருவாரியாக நிதியை செலவழித்து சமூகப்பணி செய்வதாக காட்டிக்கொள்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. எந்த ஒரு சமூக விஞ்ஞானமும் இதை சொல்லவுமில்லை ஊக்குவிக்கவுமில்லை. இவற்றுக்கு விரயம் செய்யும் பணத்தை உணவு, உடை, மருத்துவப்பொருட்கள் அற்று வாழும் அனாதைச்சிறுவர்களுக்கோ அல்லது ஏழைகளுக்கோ செலவிட்டால் அது தருமம். இந்த வகையில் திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்களும் தேவையானவற்றை கண்டறிந்து அவசியமானவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை நிறைவேற்றுவதில் திறமை-வாய்ந்தவர். அவர் பணி தொடர வேண்டும்.

ஒரு சமூகக்கட்டமைப்பு சீராக அமைய சமூகத் தொடர்புகள் சீர்பெற வேண்டும். இந்த வகையில் எங்கள் சமூகத்தவர் அல்லது கிராமத்தவர் எமது கிராமம் இராணுவ பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டமையினால் இன்று உலகில் பல பாகங்களிலும் சிதைந்து வாழவேண்டிய நிர்க்கதிக்குள்ளான போதும் திருவாளர் ஜெகதீஸ்வரன் போன்ற ஒரு சிலரின் முயற்சியினால் எங்கள் கிராமத்து குடும்பங்களுக்கு மத்தியிலே ஓர் சீரான தொடர்பாடல் இருப்பதைக்காணலாம். இப்படி இருந்தமையினால்தான் இன்று எம் கிராமத்தின் மேம்பாட்டிற்கான மீள் கட்டுமானப் பணிகளை இலகுவாக கொண்டு செல்ல கூடியதாகவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்தை பார்க்கும் போது எங்கள் கிராமத்து அல்லது சமூகத்து பிள்ளைகளை கல்வியில் முன் னேற்றுவது, அவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பது, இதன் மூலம் அவர்களது பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்வது இவை இன்றைய முக்கிய தேவைகளாகக் காணப்படுகின்றன.

இதற்காக உதவக்கூடியவர்கள் தானாக உதவ முன்வர வேண்டும். அப்பொழுது தான் உறவை வளப்படுத்த லாம், கிராமத்தை மேம்படுத்தலாம். யுத்த அனர்த்தத் தினால் இனி இழப்பதற்கெதுவுமில்லை என்றளவுக்கு நிர்க்கதியாகி இருக்கும் எம்மவர் சிலருக்கு உதவிகள் தேவைப்படலாம் அப்படி உதவிகள் தேவைப்பட்டவர் களுக்கு உதவி வழங்க வேண்டும் அப்படி உதவி வழங்கும் போது யாருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை சரிவரத் தீர்மானித்து உதவ வேண்டும். இந்த வகையில் திருவாளர் ஜெகதீஸ்வரன் போன்றோரின் அர்ப்பணிப்புடனான பங்களிப்பென்பது அவசியமானதாகக் காணப்படுகின்றது. என்னைப் பொறுத்த மட்டில் திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்கள் இன்று எம் மக்களுடன் நிற்க வேண்டிய ஒருவராகவே நான் பார்க்கின்றேன்.

சேவை மனப்பான்மை என்பதும், சமூகப்பார்வை என்பதும் அனைவருக்கும் அத்தனை சுலபமாக கை கூடுவதில்லை. சமூகத்தின் மீது அக்கறை கொண்டு அச் சமூகத்தை ஒரு சிறந்த, உயர்ந்த சமூகமாக மாற்றிட பலரின் மனதில் எண்ணமிருந்தாலும் ஒரு சிலராலேயே அதில் அர்ப்பணிப்புடன் இணைந்து கொள்ள முடியும். சமூக நல மேம்பாட்டுத் திட்டங் களுக்காக கடினமாக உழைக்கும் ஒரு மனிதனாகவே திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்களை நான் காண் கின்றேன். இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றே.

நேர்மையும், நியாயமும் கேலிப்பொருளாகி விட்ட இன்றைய காலகட்டத்தில் பிறருக்குதவும் மனப் பாங்கோடு சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதென்பது அத் தகைய சுலபமான காரியமல்ல. திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு அப்பப்போ சில வேளை களில் இரத்த கொதிப்பேறுவதை அவதானிக்க முடிந்தாலும் அது நிமிடக்கணக்கில் இருப்பதில்லை சமூக நலனை முக்கியத்துவப்படுத்தி ஏனையவர் களுடன் ஒத்துப்போவதற்கு தயாராகி விடுவார், இது அவரின் நேர்மைத்தன்மையை பறைசாற்றி நிற்பதாக உணர்கின்றேன்.

எது எப்படி இருப்பினும் இன்றைய சூழலில் எமது கிராம மக்களுக்கு விழிப்புணர்வையும், கூரிய அறிவினையும் உண்டாக்கி உலக விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி யின் தார்ப்பரியங்களை உள்வாங்கி மேன்மையடையக் கூடிய ஒரு சமூகமாக எம்மவரை கொண்டு வருவதற்கு சமூக ஆர்வலர் திருவாளர் ஜெகதீஸ்வரன் போன் றோருடன் நாமும் கை கோர்த்து நிற்பதற்கு இன்றைய நாளில் உறுதி பூணுவோம்.

திருவாளர் ஜெகதீஸ்வரன் அவர்களின் 60 வது பிறந்த தினத்தில் அவரது சமூகப் பணி தொடர மனமார வாழ்த்துகின்றேன்.



*குரும்பசிட்டிக் கிராமம் 1990 இலிருந்து எதிர்கொண்ட அழிவுகளின் விளைவாக முற்றாக அழிக்கப்பட்டிருந்த நிலையில் 2011இல் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அயராத முயற்சியினால் மீள அமைக்கப்பட்ட கிராமசேவகர் அலுவலகம் (2012)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தகை

யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகத் தொன்மையான கல்லூரிகளில் ஒன்றாக விளங்குவதும், வெகு விரைவில் தனது இரு நூறு வயதினைப் பூர்த்தி செய்யவிருப்பதுமான யூனியன் கல்லூரியில் எனது காலத்தில் கல்வி பயின்ற எனது பள்ளித் தோழனான குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனின் 60 ஆவது வயது பூர்த்தியானதையொட்டி தொகுக்கப்படும் இம்மலருக்கு நானும் சில வார்த்தைகள் எழுதக் கிடைத்ததை எண்ணி மகிழ்வடைகின்றேன்.



*1816இல் ஆரம்பிக்கப்பட்ட யூனியன் கல்லூரி பிரதான மண்டபமான சாண்டேர்ஸ் மண்டபத் தோற்றம்*

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பதற்கிணங்க குரும்பசிட்டியில் இருந்து தோன்றிய பல்வேறு அறிஞர்கள், திறமைசாலிகள், வரிசையில் எனது பள்ளித் தோழன் ஜெகதீஸ்வரனும் வைத்து எண்ணப்படும் அளவிற்கு உயர்ந்திருப்பதை நினைத்துப் புளகாங்கிதம் அடைகிறேன். யாழ் மாவட்டத்திலேயே தொடர்ச்சியாகத் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்ற யூனியன் கல்லூரியில் 1962இலிருந்து 1968 வரை ஜெகதீஸ்வரன் கல்வி கற்றிருக்கிறார்.

1962இல் பாடசாலையில் சேர்ந்த எனது நண்பன் அதே ஆண்டிலேயே தனது ஆளுமையைக் காண்பிக்க ஆரம்பித்தார். கிராமப்புறத்து ஆரம்பப் பாடசாலையொன்றிலிருந்து ஓரளவிற்கு நகர்ப்புறமாக வளர்ந்து விட்ட தெல்லிப்பளை கல்லூரியில் சேர்ந்த அதே வருடத்திலேயே ஒரு மாணவன் தனது ஆற்றலை வெளிப்படுத்துவது என்பது அரிதாகவே காணக் கிடைக்கின்ற ஒரு விடயமாகும்.

இதுமட்டுமன்றி இதே ஆண்டிலேயே தந்தை செல்வா அவர்கள் தலைமையில் தமிழரசுக் கட்சியினர் நடத்திய பாதயாத்திரை ஒன்று தெல்லிப்பளைச் சந்தியைக் கடந்து ஜெகதீஸ்வரனின் கிராமமான குரும்பசிட்டி நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. ஜெகதீஸ்வரன் பாடசாலையிலிருந்து செல்லும் கார் அப்போதுதான் தெல்லிப்பளைச் சந்தியில் திரும்பிக் கொண்டிருந்தது. ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த இந்தச் சிறுவன் தனது புத்தகப்பையை கார்ச்சாரதியிடம் கொடுத்து விட்டு தானும் அந்தப் பாதயாத்திரையில் பங்கு கொண்டு தனது ஊர்வரை நடந்தே சென்றார் என நினைக்க இப்போதும் எனக்கு வியப்பாகவே இருக்கிறது. ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போதே, கீழ் வகுப்பு மாணவர் மன்றமான பாரதி மன்றத்தில் எழுந்தமானமாக கதை சொல் வதில் படு கில்லாடியாக விளங்கினார்.

யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் முன்னாள் தலைவரும், தற்போதைய பொருளாளருமாகச் செயற்படுகின்ற நான் எனது சகபாடியான குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் குறித்து பழைய நினைவுகளை மீட்டுப் பார்ப்பதில் புளகாங்கிதம் அடைகிறேன். கல்லூரி நாட்களிலே நடைபெற்ற பேச்சு, கவிதைப் போட்டிகளிலும் நாடக மேடைகளிலும் தவறாது தோன்றி கல்லூரி மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் பரிசில்களைத் தட்டிச் சென்ற ஜெகா அவர்களை என்றும் என் மனத்திரையிலிருந்து அகற்ற முடியாது. சமய நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் இவருடைய தலை அங்கே நிமிர்ந்திருக்கும். கல்லூரி மாணவர் மன்றத் தலைவராகவும், செயலாளராகவும் பணியாற்றி ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்ற பெருந்தகை இந்த ஜெகதீஸ்வரன் என்பதை பெருமகிழ்ச்சியோடு அறியத் தருகிறேன்.

**திரு. சுப்பிரமணியம் முருகேசு**
**பொருளாளர்**
**யூனியன் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**கனடா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியுடன் நிற்காது வெளியே வந்த பின்னால் தனது கிராமத்துப் பொது பணிகளிலும், புலம் பெயர்ந்த பின்பு புகுந்த நாடுகளிலும் தனது எழுத்து வல்லமையைக் காட்டி சிறுகதை, கவிதை போன்றவற்றைத் தொகுத்து நூல்களாக்கிப் படைத்த வண்ணம் தமது வாழ்க்கையை ஒரு பயனுள்ள வாழ்க்கையாக வாழ்ந்த இந்தப் பெருந்தகையின் 60 ஆவது பிறந்த நாளில் மனமகிழ்ச்சியோடு வாழ்த்தி, மென்மேலும் நலமுற, பயனுற வாழ்ந்து நூறாவது பிறந்த நாளையும் ஆரோக்கியத்துடன் கொண்டாட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.




யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளர் R. இராஜேஸ்வரன், திருமதி. ஜெகதீஸ்வரனிடமிருந்து நூற் பிரதி பெறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவர்

1985ஆம் ஆண்டு மொன்றியலின் குளிர்கால மாலைப்பொழுதைக் கழிக்க தமிழர் ஒளியின் வாசிகசாலைக்குச் சென்றேன். நிமிர்ந்த நோக்கு, நேரிய பார்வை, பிரகாசமான கண்களுடன் ஒரு வாலிபன் சிந்தனையில் ஆழ்ந் திருந்தான்.

நூலகத்தின் அப்போதைய பொறுப்பாளர் செபஸ்ரிதாசனிடம் அந்தப் புதிய வாலிபனைப் பற்றி வினவுகிறேன். இவர் தான் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன். கறுப்புப் பால் என்னும் பிரபலமான சிறுகதையின் ஆசிரியர் என எனக்கு அறிமுகம் கிடைக்கின்றது.

அன்றிலிருந்து நானும் ஜெகதீஸ்வரனும் இலக்கிய உணர்வை பரிமாறும் நண்பர்களானோம். கவிதைத் துறையில் நான் காலடி எடுத்து வைத்த ஆரம்பகாலம் அது. எனது கையெழுத்துப் பிரதியிலான கவிதைத் தொகுதி விழிப்பூ விற்கான வெளியீட்டு வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தேன். நூல் விமரிசனத்திற்காக நண்பன் ஜெகதீஸ்வரனை நாடியபோது அந்தப் பொறுப்பை இன்முகத்துடன் ஏற்றார்.



ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் இயக்குநர் வசந்தராஜா, கலாநிதி செனிவிரட்ன ஆகியோருடன் ஜெகா 1990களில்

முற்றிலும் வித்தியாசமான கோணத்தில் கவிதைகளைப் பற்றிய விமர்சனத்தை அளித்து என்னையும் விழாவிற்கு வருகை தந்தவர்களையும் வியப்பில் ஆழ்த்தினார் ஜெகதீஸ்வரன்.

எந்த ஒரு சமுதாயப் பிரச்சினையையும் நுண்மையாகவும், ஆழமாகவும் நோக்குவது ஜெகதீஸ்வரனின் இயல்பு. இலக்கியவாதி எழுத்து இலக்கியத்தால் மட்டுமன்றி தனது வாழ்க்கையாலும் தனது சமூகத்தை சீர்ப்படுத்த வேண்டும் என்ற வலுவான எண்ணம் கொண்டவர். அந்தக் கோடை காலத்தில் ஒருநாள் மாலை நேரம், நானும் ஜெகதீஸ்வரனும் இலக்கியச் சம்பாஷணையை தொலைபேசியில் தொடர்ந்தோம்.

கோடை காலத்து இருமல் என்னை வாட்டி எடுத்தது. ரவி என்னப்பா இருமுகிறீர். மருந்து எடுத்தீரா?" என ஜெகதீஸ் வினவ, நான் ஏதோ சாக்குப் போக்குச் சொல்கிறேன். நீர் போனை வையும் நான் இந்தா வாறன் எனச் சொல்லித் தொலைபேசி அழைப்பைத் துண்டித்தார்.
அப்போது நேரம் இரவு 11ஐ தாண்டி விட்டிருந்தது. Mason Avenue இல் இருக்கும் நான் எங்கே Park Avenue இல் இருக்கும் ஜெகதீஸ்வரன் எங்கே, இது எல்லாம் சாத்தியமா என எண்ணியபடி சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்று இரவு நேரம் 11.40 எனது வீட்டின் முன்னால் ஜெகதீஸ்வரன் மருந்துப் போத்தலுடன் நின்றார். அன்பு கலந்த கண்டிப்புடன் எனக்கு மருந்து அளிக்கப்பட்டது. ஓர் மனிதாபிமானம் நிறைந்த இலக்கியவாதியை நண்பனாகக் கொண்டது பற்றி நான் பெருமகிழ்வு கொண்டேன்.

1985ஆம், 1986ஆம் ஆண்டுகளில் தமிழர் ஒளி நடாத்திய தியாகிகள் தினக்கவியரங்கத்தில் ஜெகதீஸ்வரனுடன் கவிதை வாசித்தது இன்னமும் பசுமரத்து ஆணியாக நினைவில் நிற்கிறது. காலச்சக்கரம் உருண்டோடி யது. வாழ்க்கையின் வசதிகளைத் தேடி நான் ரொரன்ரோ நகருக்கு வந்தேன். கலை உலக நிகழ்வுகளும் செயற்பாடுகளும் ரொரன்ரோவிலும் தொடர்ந்தன.

திரு. ரவி அமிர்தவாசகம்
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன் மணிவிழா குழு உறுப்பினர்
ரொரன்ரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண்டு நண்பர் ஜெகதீஸ்வரனின் இங்கேயும் மனிதர்கள் என்னும் சிறுகதைத் தொகுதி வெளியிடப் பட்டது. ITBC வானொலியில் நண்பரைப் பேட்டி காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வானலையில் வானொலி நேயர்களின் பாராட்டுக்கள் ஜெகதீஸ்வரனுக் குக் கிடைக்கப் பெற்றன.

2009ஆம் ஆண்டு கொலுவீற்றிருந்த குரும்பை நகர் எனும் சமூக வரலாற்று நூல் நண்பரால் எழுதி வெளியிடப்பட்டது. குரும்பசிட்டி நகரின் கலை, கலாச்சார வரலாற்று நிகழ்வுகளை விளக்கும் ஒரு அருமையான நூல். இது தமிழ்ச் சமுதாய ஆய்வு இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு முனை.

மாணிக்கப் பரல்கள் என்னும் கவிதைத் தொகுதியும் 2008ஆம் ஆண்டு நண்பரால் வெளியிடப்பட்டது.
அமைதியாக வாழ்ந்து, அமைதியாக இலக்கியம் படைத்து, அமைதியாக சாதிப்பவர் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் என்றால் அது மிகையாகாது.

இவ்வருட ஆரம்பத்தில் நண்பருக்கு மணிவிழா எடுக்க இருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டதும் மிகவும் மகிழ்ந்தேன். இலக்கியத்தால் சமூக மாற்றத்தை நிகழ்த்தப் பாடுபட்ட ஒரு இலக்கிய வாதி கௌரவிக்கப் படுவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

அரும்பாய் உதித்து
ஆய கலைகளை அறிந்தும்
கரும்பைப் பழிக்கும் பேச்சும்
கனிவும், கனவில் நோக்கும்
இரும்பை ஒத்த உடலும்
இளகிய இதய நினைவும் - கொண்ட
குரும்பை நகரின் குணவான்
ஜெகதீஸ்வரன் வாழ்க வாழ்கவே!



“தமிழர் ஒளி”யில் 1985 - “விழிப்பூ” ரவி அமிர்தவாசகம் அவர்களின் முதல் தமிழ் கவிதைத் தொகுப்பு கையெழுத்துப் பிரதியாக வெளி வந்த போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லுளத்தோன்

1983இல் இலங்கையில் எழுந்த சிங்களப் பேரினவாதச் சூறாவளியில் தமிழினம் திக்குத்திசை தெரியாத வகையில் சிதறுண்டது. அங்ஙனம் சிதறுண்டோருள் பெருந்தொகையினரான நம் தமிழர் இக் கனடா நாட்டின் மொன்றியல் நகரில் தான் எமது புலம் பெயர் வாழ்க்கையைத் தொடங்கி னோம். அங்ஙனம் மொன்றியலில் வாழ நேர்ந்த காலத்தில்தான் அன்பர் குரும்பசிட்டி திரு. ஜெகதீஸ்வரனின் தொடர்பு எனக்குக் கிடைத்தது.

கனடா மொன்றியலில் வாழ்ந்த எம் இனத்தவரின் மொழி, கலை, பண் பாட்டுக் கதிர்களைத் தாங்கிய வண்ணம் அந்நகரில் எழுந்ததே தமிழர் ஒளி நிறுவனம். இனமொழி, பண்பாடு ஆகியவற்றின் தாகத்தில் விஞ்சி நின்ற இனமானத் தமிழர்களால் இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இன்று கனடா வாழ் தமிழினத்தில் முன்னணியில் நிற்கும் பலர் இத் தமிழர் ஒளி நிறுவனத்தோடு கலந்து உயர்ந்தவர்கள் என்பதும் உண்மையே. 1985 86ஆம் ஆண்டுகளில் தமிழர் ஒளி நிறுவனத்தை வழிநடத்திய நிர்வாகிகளுள் திரு. ஜெகதீஸ்வரன் அவர்களும் ஒருவராக விளங்கினார். அவ்வேளை அந்நிர்வாக உறுப்பினர்களுள் நானும் ஒருவனாக இருந்து பணியாற்றும் பெரும் வாய்ப்புக் கிடைத்தது.



*கனடா -குரும்பசிட்டி நலன்புரி சபை ஆண்டு விழாவில் பரிசளிப்பின் போது ஜெகா*

மிகவீரியமான இனப்பற்று, தமிழ்மொழி ஆர்வம், இலக்கியப் படைப்பாற்றல் என்பன இவரிடம் காணப்பட்டதன் காரணத்தால் விரைவில் என்னை மிக ஆழமாகக் கவர்ந்தவரானார். இவற்றுடன் தமிழர் ஒளி நிறுவனத்தைப் பொறுப்பேற்று நடத்தியோருள் நிர்வாகத்திறமையும் சிறப்பாக இவரிடம் பளிச்சிட்டதையும் கண்டேன். தாயகத்தை விட்டு நீங்கிய தவிப்பிலும் அதனைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய செயற்பாடுகளிலும் உணர்ச்சிக் கொந்தளிப்புடனான துடிப்பிலும் காணப்பட்ட இளைஞர்களை ஒன்று சேர்ப்பதிலும், அதற்கான பயனுள்ள செயல்திட்டங்களைத் தயாரித்து நெறிப்படுத்துவதிலும் திரு. ஜெகதீஸ்வரன் முன்னணியிலேயே நின்று தீவிரமாகப் பணியாற்றினார்.

கீதவாணி ஒலிபரப்பில் தற்போது நிகழ்ச்சித் தயாரிப்பாளராக விளங்கும் திருமதி. லீலா சிவானந்தன், மற்றும் சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் போன்றோரும் தமிழர் ஒளி நிர்வாகப் பொறுப்பில் இருந்து பணியாற்றிய அந்நாட்களில் தமிழில் சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளும் நடாத் தப்பட்டன. ஓர் ஆண்டில் அப்போட்டிகள் நடாத்தப்பட்ட வேளை, மூன்றி லும் திரு. ஜெகதீஸ்வரனின் ஆக்கங்களே முதலிடத்தைப் பெற்றமையை இதில் குறிப்பிடுவது அவரது இலக்கியப் படைப்பாற்றலுக்கான உறுதியான சான்றாகும்.

எமது சேவைகளுக்கேற்ப வாழ்விடங்களை மாற்றிக்கொள்ள காலமாற்றக் கட்டளை கிடைக்கின்றது. மொன்றியல் நகரவாழ்க்கையை விட்டு பின்னர் குடும்பத்தோடு ஒன்ராறியோ, ஸ்காபரோ நகரை நிரந்தர வாழ்விடமாகக் கொண்டுள்ளேன். ஒருநாள் ஸ்காபரோ நகர வீதியொன்றினூடே எனது வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அவ்வேளை இன்னொரு வாகனம் நான் சென்ற திசைக்கு எதிர்ப்புறமாகச் சென்றதை தற்செயலாக - இல்லை அன்புத்தொடர்பின் வலிமையின் காரணமாக காண நேர்ந்தது. அவ் வாகனத்தைச் செலுத்திச் சென்றவர் திரு. ஜெகதீஸ்வரனேதான். வாய்ப்பை விட்டு விடாது எனது வாகனத்தைத் திருப்பி, அவரது வாகனம் சென்ற திசையில் விரைந்து சென்று சந்தித்து, ஸ்காபரோவிலும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடிந்ததையிட்டு மகிழ்கின்றேன்.

**யூஜின் டோமினிக்**
**வீடு விற்பனை முகவர்,**
**இதயத்தில் இடம் பிடித்த**
**25 ஆண்டுகளுக்கு மேலான**
**நண்பர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வந்த பின்னரும் எழுத்தாக்க ஆற்றலுக்குத் தடைபோடாது 'இங்கேயும் மனிதர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்புடன் 'மாணிக்கப் பரல்கள்', 'கொலுவீற்றிருந்த குரும்பைநகர்' எனும் நூல்களையும் வெளியிட்டமையை அறிந்து மகிழ்கின்றேன். 2012ஆம் ஆண்டில் தனது அறுபதாவது அகவையின் நிறைவைக் கண்டு களிக்கும் நண்பர் திரு. ஜெகதீஸ்வரன் உடல், உள நலங்களோடும் தம் குடும்பச் சிறப்புடனும் மேலும் பல பிறந்த நாட்களைக் கண்டு மகிழ இறைவரங்கள் இவர்மீதும், இவரது நற்குடும்பத்தினர் மீதும் வேண்டி வாழ்த்துகின்றேன்.



இளவாலை எஸ். இராசநாயகம் அவர்களின் "மறை(த்) தேன் மலர்கள்" நூல் வெளியீட்டு விழாவில் வீடு விற்பனை முகவர் யூஜின் டொமினிக் அவர்களுடன் ஜெகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்

கரும்பின் சுவை தோற்றுவிடும்
தமிழ்ச் சுவையை வளர்த்துவிட்ட
நற்றமிழறிஞர்கள் மலிந்துவிட்ட நல்லூராம்
குரும்பசிட்டி புகழ் கூறும் புலமை மிகு தமிழர்களுள்
விருப்புடனே தமிழ் எழுதும்
கனடிய தமிழ் எழுத்தர்
குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் காண்கிறார்
மணி விழா!
பருவத்தில் இளமையாய் என்றென்றும் வாழுகின்ற
தமிழ் பாடி வாழ்த்திடுவோம்!



அடுத்தடுத்த அறுவைச்
சிகிச்சைகளின் பின்னால் ஆதரவு
தந்த ஓய்வு இல்லத்தில்
1984 ஏப்பிரல்-பிரான்ஸ்

தமிழன் நிறம் கறுப்பென்றால்
மணிவிழா நாயகனும் மாலழகன் தான்,
தமிழ்ச்சிரிப்பு வெண்மையென்றால்
இவர் சிரிப்பு அழகின் சிரிப்பு!
தமிழனுக்கு கோபம் வரும்,
தமிழுக்குக் கோபம் வருமா?
அரங்கத்தில் யாராவது அடாவடியாய்ப் பேசினால்
பேச்சை நிறுத்து உரத்துக் கூவும் கோபத்தமிழர் இவர்.

கருத்துக்கள் நியாயம் தான் காலங்கடந்து உணர்ந்து விட்டால்
கனிவான பேச்சுடனே நட்புணர்வைத் தொடர்ந்திடுவார்
தமிழுணர்வாளர்கள் கோபம் கொள்வதும் தனிச் சிறப்புத்தான்!

நற்பணி மன்றம் - நல்லதமிழ் எழுத்து நயமான கற்பனை
நாவினிக்கும் மென் பேச்சு நாட்டு நலன் பேணும்
நற்றமிழ் முயற்சிகள் - நாவலரைப் போற்றுதல் -
கற்றதமிழ் காற்றினிலே கரையாமல்
கட்டுரை கதை வரலாறென
கற்சிலைப் பதிவுபோல் கணனி அச்சு வெளியீடு
கனடிய தமிழ் எழுத்தர் சங்கத்தில் காரசார விவாதிப்பு
இவ்வாறு இவர்பற்றி அறிந்தவைகள் ஏராளம்.

மொன்றியல் நகரோடும் இவருக்குறவுண்டு
தமிழர் ஒளி உதயத்தின் உறுப்பினராய்ப்
பணி புரிந்த பங்காளி, யாப்பு எழுதி வைத்த
பெருமையும் இவருக்குண்டு!

மொன்றியல் தமிழர் ஒளி பங்காளர்
ரொரன்ரோ நகர் மணிவிழா நாயகராய்
விழாக் காணும் இந்நாள் இரு மாநிலங்களுக்கும்
தமிழ் உறவை வளர்க்கட்டும்!

மணி கட்டிய மாடுகள் தான் மரியாதைக்குரியன
என்ற மேட்டுக்குடிக் கலாச்சாரம் மண்மூடிப்
போகும் வண்ணம் - கட்டாக்காலி மாடுகளுக்
கிடையேயும் தமிழ் வலிமை மிக்க மாடுகள்

**வீணைமைந்தன்**
**திரு. கே.ரி. சண்முகராசா**
**கனடா தமிழ் எழுத்தாளர்**
**இணைய ஆரம்பகாலத்**
**தலைவர், மொன்றியல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மண் மீதும் - புலம் பெயர் நாடுகளிலும்
உலா வருகின்றன தமிழுக்காகத் தங்களை
வருத்திக் கொண்டு உழைக்கின்றார்கள்.
உயர்ந்து விளங்குகின்றார்கள் என்ற
உன்னதமான உண்மையை நிரூபிக்கும்
வண்ணம் தமிழ் அன்பர் குரும்பசிட்டியூர்
ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு அவரது
தாய்மொழிப் பற்றுக்குக் கிடைத்த
அங்கீகாரமாக அவரது மணிவிழா
சிறக்கட்டும் பெருமை சேர்க்கட்டும்!
வாழிய தமிழ்!
வாழிய மணிவிழா நாயகன்!




குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்களுக்கு நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில்
கவிஞர் திருமாவளவன் அவர்கள் உரையாற்றுகிறார்.
ஈழத்துப்புலவர் எஸ். சிவானந்தன் அவர்கள் தலைமை தாங்குகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க மைந்தன்



மனமுள்ளவன் எவனோ அவன் தான் மனிதரில் மாணிக்கம், நல்ல குணம் உள்ளவன் எவனோ அவன் தான் உண்மையிலே மனிதன்.

இவை இரண்டும் இணைந்தவனே அகவை அறுபதைத் தொடும் அண்ணன் ஜெகதீஸ்.

எண்ணிக்கையில் மிகச் சிறிய ஒரு மக்கள் கூட்டத்தைக்கொண்டு விவசாயத்தை நம்பி வாழ்ந்த குரும்பசிட்டியில் கல்வி அறிவை ஊக்குவித்து பொருளாதாரத்தை மட்டுமல்லாது நல்ல மனித நேயத்தையும் வளர்க்கலாம் என்ற எண்ணக்கருவை தோற்றுவித்து வெற்றி கண்ட வித்தியாசமான மனிதர்களைக் கொண்ட கிராமத்தில், புதிய துறைகளைத் தேர்ந்தெடுத்து தளராத மனமும், ஓயாத உழைப்பும் இருந்தால் எடுத்த காரியத்தில் வெற்றி பெறலாம் என நிருபணமாக்கிக்காட்டிய சாதனையாளர்களைத் தந்த கிராமம் குரும்பசிட்டி என்பது யாவரும் அறிந்ததே.

எந்த பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்க்கையிலே. என்ற பாடல் வரிகளை நினைவூட்டி எங்கள் ஊரின் வாழ்க்கையை சில காலம் பின் நோக்கிப்பார்த்தால், பெற்றோரின் வளர்ப்புக்கும் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும் பக்க துணையாக சுற்று சூழல் காத்திரமான பாத்திரத்தை வகித்திருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை.

அறிவூட்டலுக்கும், நல் ஒழுக்கத்திற்கும் கல்விக் கூடங்களும், நற்பண்புகளைப் புரிய வைக்கும் பெரியவர்களின் வழிகாட்டல்களும், இறை பக்தியுடன் இதய சுத்தியைத்தரும் தெய்வ வழிபாட்டு தலங்களும் சுற்றுஞ் சூழ அமைந்த அமைதிப் பூங்காவில் வாழ்ந்ததன் பலனாகவே மனித நேயம் கொண்டு, நாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதாது மற்றவரையும் வாழ வைக்க வேண்டும், வீழ்ந்தவரையும் தூக்கிவிட வேண்டுமென்ற பரந்த உள்ளங் கொண்டவர்களாக நம்மவர் இன்று தேசங்கள் எங்கும் வாழ்கின்றனர். இந்த பலநூறு மனிதர்களிலே தனித்துவமான ஒருவர் அண்ணன் ஜெகதீஸ்.

பல நூறு வருடங்களின் முன்பே நாகரீகமடைந்து சமூக சிந்தனை கொண்ட சமுதாயமாக உருப் பெற்று கடுகதியான வாழ்வுக்குள் நகர்ந்துள்ள மேற்குலகத்தில் சுற்றத்தவர் சுகம் என்ன என்றே அறியாது வாழும் இன்றைய காலத்தில், அயலவர் அவலத்தை நிறுத்த அடுத்தவருக்காக உயிர் கொடுத்த ஒரு அற்புத மனிதரின் மைந்தன் அண்ணன் ஜெகதீஸ்.

ஆயிரம் சோதனை வந்தாலும் தளராத மனதோடு, உறுதி கொண்ட உள்ளத்தோடு, கௌரவமாக தன் மைந்தரை மனிதம் நிறைந்த மனிதர்களாக்கிய மாணிக்கம் என்னும் அமைதிப்புறாவின் மகன் அண்ணன் ஜெகதீஸ்.

ஒரு மனிதன் தான் கற்ற அறிவைக் கொண்டு ஒரு முற்போக்காளனாகவோ அல்லது வலது சாரியாகவோ வாழலாம், சுயவிருப்பின் மூலம் தெய்வீக சிந்தனை கொண்டவனாகவோ அல்லது கடவுள் நம்பிக்கை அற்றவனாகவோ வாழலாம்.

திரு. புலந்திரன் மகேசன்,
அயர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவதில் தனது உறவு என்ற வட்டத்துடன் நிற்கலாம் அல்லது ஊருக்கே எல்லாம் என அள்ளிக் கொடுக்கலாம். ஆனால் இவற்றில் எல்லாம் சம நிலை பேணி தான் வாழும் சமூக நீரோட்டத்தில் பயணிக்க தெரிந்த சிந்தனை கொண்ட மனிதன் அண்ணன் ஜெகதீஸ்.

இடைவிடாத முயற்சியும், அதீத சிந்தனையும், எடுத்த காரியத்தில் முழுமையான இலக்கை அடைய வேண்டும் என்ற வேட்கையும், அழைக்காமலே உதவிக்கு செல்லும் உள்ளமும், சமூக சேவையே தன் தலைய-ாய கடமை என வாழும் சிலரில் ஒருவரே அண்ணன் ஜெகதீஸ்.

கனிவான கதையும், கள்ளமில்லா உள்ளமும், மமதை இல்லா மனமும், மற்றவரை மதிக்கும் குணமும், வாழ்த்தி உயர்த்திவிடும் சிறப்பும் கொண்ட ஆயிரத்தில் ஒருவர் அண்ணன் ஜெகதீஸ்.

அறுபது வயதில் அடி எடுத்து வைக்கும் இந்த நல்நாளில் அண்ணன் ஜெகதீஸ் கரம்பிடித்த இல்லாள் மோகனாவுடன் அமைத்த குடும்பம் என்னும் கோவிலில் தன் குழந்தைகளுடன் பல்லாண்டு வாழ நல்லாசி அருள வேண்டி எல்லாம் வல்ல குரும்பைநகர் சித்தி விநாயகப் பொருமானின் பாதார விந்தங்களை பணி கின்றேன்.



"கொலுவீற்றிருந்த குரும்பைநகர்" நூல் வெளியீட்டு விழாவிற்கென
அயர்லாந்திலிருந்து வந்திருந்த எமது ஊரவர் திரு. புலந்திரன் மகேசன் குடும்பத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவன்மை மிக்கவர்



அகவை அறுபதில் கால்பதிக்கும் அண்ணா ஜெகதீஸ்வரனுக்கு வாழ்த்துக்கள்!

நான் எனது சிறுவயதிலே ஜெகதீஸ்வரன் அண்ணாவை எங்கள் ஊரில் முதன் முதலில் கண்டது ஒரு மேடைப் பேச்சாளராகவே. குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத்தின் தலைவராகச் செயற்பட்டபோது, ஆண்டு விழா மேடையிலே உரையாற்றிய அந்தக் காட்சி இன்னமும் நினைவில் இருக்கிறது.

தன்னலம் கருதாது பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்குடைய, மிகவும் கண்ணியமான குடும்பத்தில் பிறந்த இவர், படிக்கும் காலத்திலேயே கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதில் திறமைகளை வெளிப்படுத்தினார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்றவாறு இன்று வரை இவரது எழுத்து, பேச்சு ஆற்றல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

ஜெகதீஸ்வரன் அண்ணா தான் பிறந்த குரும்பசிட்டிக் கிராமத்தின் மீது அதீத பற்றுடையவர். எங்கள் ஊரைப் பற்றி அதன் தொன்மையான காலத்திலிருந்தே பல்வேறு நிகழ்வுகளையும் அக்குவேறு, ஆணி வேறாக அறிந்தும் கற்றும் வைத்திருக்கின்றார். எமது கிராமம் எவ்வாறு உரு வாகியது என்பது முதற்கொண்டு அங்கு வாழ்ந்த சான்றோர்கள், ஆசான் களின் விபரங்களையும், விவசாயம். கைத்தொழில்கள், வர்த்தக முயற்சிகள் போன்ற சகல தகவல்களையும் உள்ளடக்கி ஆலயங்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றின் வரலாறுகளோடு கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற பெயரில் அவர் ஆக்கிய நூல் இவரது பணிகளுள் எல்லாம் தலை சிறந்ததொன்றாகும்.

மேலைத்தேய நாடுகளில் வாழும் எங்கள் ஊர் சிறார்களுக்கும், இங்கேயே பிறந்து வளரும் குழந்தைகளுக்கும் எங்கள் கிராமத்தை அடையாளங் காட்டக் கூடியதாக இன்று எம்மிடம் உள்ள ஒரே ஆவணமாக இருப்பது ஜெகதீஸ்வரன் அண்ணா எழுதித் தந்துள்ள கொலுவீற்றிருந்த குரும்பை நகர் நூற் தொகுப்பே. இந்நூலை 2008 ஜூன் மாதத்தில் கனடாவிலும், ஓகஸ்ற் மாதத்தில் ஜெர்மனியிலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் நிறைந்த மன்றங்களில் அனைவரின் பேராதரவுடனும் வெளியிட்டு வைத்தார்.

எமது கிராமம் பற்றிச் சதா சிந்திக்கும் இவர் கனடா குரும்பசிட்டி நலன் புரிச்சபையின் முக்கிய பொறுப்புக்களில் இருந்த போதும், அவ்வாறன்றி வெளியே இருந்த போதும் இங்கிருந்து அடிக்கடி தொலைபேசி மூலம் ஊரில் உள்ளவர்களோடு தொடர்பு கொண்டு அங்குள்ள நிலைமைகளை உடனுக்குடன் அறிந்து இங்குள்ள ஏனையோருடன் கதைத்து வேண்டிய தேவைகளை நிறைவேற்ற முன்னிற்பார்.

போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளைகளில் இடம் பெயர்ந்த எமது மக்களின் தகவல்களை உடனுக்குடன் அறிந்து தனிப்பட்ட முறையிலும் ஏனையோருடன் சேர்ந்தும் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்கம், நலிவுற்றோர் நலனோம்பு நிலையம் என்பவற்றி னூடாகப் பல்வேறு உதவிகளைச் செய்து வந்திருக்கிறார். இப்போதும் செய்து வருகின்றார்.

திருமதி. பாலேஸ்வரி இரவீந்திரன்
குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா
முன்னாள் பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக பள்ளிக்கூட மாணவர்களின் அடிப்படைத் தேவைகள், மக்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து மற்றைய நாடுகளிலுள்ள எமதூர் மக்களோடும் தொடர்புகளை ஏற்படுத்திப் பல செயற்திட்டங்கள் உருவாக வழி செய்திருக்கிறார்.

ஜெகதீஸ்வரன் அண்ணா இங்கு வசித்தாலும். இவரின் உள்ளம் அந்த மண்ணிலேயே சஞ்சரிக்கிறது. இவரு டைய செயற்பாடுகளைப் பார்க்கும் தோறும் இவர் இங்கு வாழ்வதன் நோக்கமே அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் உறவுகளுக்கு உதவுவதற்குத் தானோ என்றே நினைக்கத் தோன்றுகிறது.

மிகுந்த நிர்வாகத்திறமையும், மன உறுதியும், எண்ணித் துணிகின்ற ஆற்றலும் மிகுந்த இவர், குரும்பசிட்டி நலன்புரிசபை - கனடா தலைவராகச் செயற்பட்ட காலங்களை எமதூர் மக்களால் அவ்வளவு எளிதாக மறந்து விட முடியாது. இவரது கண்டிப்பும் கறாரான பேச்சும் சில சமயங்களில் மனங்களைச் சிறிது நோக வைத்தாலும் பொதுவிடயங்களுக்காகவே இவ்வாறு நடந்து கொள்வதை எண்ணும்போது மீண்டும் இவர் மீதுள்ள மதிப்பை அதிகரிக்கவே செய்கிறது.

2010 இல் ரொறொன்ரோ மாநகரில் ஊர்க்காற்று நிகழ்வினை இணைப்பாளராக இருந்து நடாத்தி வெற்றியும் சிறப்பும் பெற வழிவகுத்த வெற்றிமாறன் ஜெகதீஸ்வரன் அவர்கள்.

ஊர்ப்பற்று நிறைந்த உத்தமரும், தலைசிறந்த சமூக சேவையாளரும், துணிவு, மனஉறுதி படைத்தவரும், அன்பு, பண்பு, ஆற்றல் நிறைந்தவருமான ஜெகதீஸ் வரன் அண்ணா அவர்களின் சேவைகள் தொடர இறைவன் வழிவிடுவாராக.

ஜெகதீஸ்வரன் அண்ணாவும் அவரது குடும்பமும் நோய், நொடி ஏதுமின்றி சகல செல்வங்களும் பெற்று குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் துணையுடன் நீடுழி வாழ்கவென மனமார வாழ்த்துகிறேன்.



*1960களில் வலி. வடக்குப் பிரதேசத்தில் மிகப்பெரிய அம்பாள் ஆலயமாக விளங்கிய குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம் போர்க்காலச் சூழ்நிலையில் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் 2011இல் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் தற்காலிகக் கொட்டகை ஒன்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வருடாந்த திருவெம்பாவை உற்சவம் மார்கழித் திங்களில் நடைபெற்ற காட்சி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கம் பெற்ற மாணிக்கமே



அம்மா, தங்கை, தம்பியுடன் மொன்றியல் சென்றிருந்த வேளை


மணிவிழா நாயகன் ஜெகா அண்ணா
பெற்ற தாய் ஆசி கூற
மனைவி மக்கள் வாழ்த்தி நிற்க
நாமும் உங்களை வாழ்த்த வந்தோம்
அழகிய குரும்பை நகரில் பிறந்தவனே
ஐயாத்துரை மாணிக்கம் பெற்ற மாணிக்கமே
அகவை அறுபதை அடையும் நீங்கள்
நலம்வாழ எந்நாளும் எம் வாழ்த்துக்கள்
நல்மனம் கொண்டீர் நெடுங்காலம் வாழ்கவென
இரத்த உறவுகள் இதயத்தால் வாழ்த்துகிறோம்
அன்பு, கனிவு, கள்ளமில்லாச் சிரிப்பு
நீங்கள் தாயிடம் பெற்ற வரம்
பொறுமை, பணிவு, பிறருக்கு உதவுதல்
நீங்கள் தந்தையிடம் கற்ற சுரம்
ஊர்மீது நீங்கள் கொண்ட பற்று
"கொழுவீற்றிருந்த குரும்பைநகர்" ஆகியது
நீங்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும்
எங்கள் உறவெனக் காட்டியது
தமிழுக்காய் நீங்கள் செய்யும் பணிகள்
நீங்கள் நோய் நொடியின்றி வாழ
முத்துமாரி அம்மன் துணை இருப்பார்
நீங்கள் நினைத்தவை எல்லாம் நிறைவேற
சித்திவிநாயகர் என்றும் சித்தம் செய்வார்
வாழ்க நீங்கள் இன்னும் பல்லாண்டு
நாம் வாழ்த்துகின்றோம் உங்களை நல்மனதோடு
எங்கள் அன்பான மணிவிழா வாழ்த்துக்கள்!

அன்னறாஜி சுரேஸ்குமார்
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிநேயம் உள்ளவர்



*1900இல் பெரிய உபாத்தியாயர் பொன். பரமானந்தர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு மகாவித்தியாலயமாக தரம் உயர்ந்து நிமிர்ந்து நின்ற பாடசாலை*

ஜெகம் எங்கும் நல்லது செய்திடுக என்றே
ஜெகதீசன் என்று பெயரிட்டனரோ உம் பெற்றோர்
அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்
உங்கள் பண்பையும் அறிவையும்
போற்றிட வார்த்தையுண்டோ
தமிழினை நெஞ்சத்தில் நேசித்தீர்
தமிழ் அன்னை வாழ்த்திட நீர் வாழ்ந்திட்டீர்
மனிதநேயத்தை மனதில் தினம் நேசித்தீர்
நல்ல மனிதனாய் வாழ்ந்து நல் அன்பு வேர் விட்டீர்
குடும்பக் கோட்டைக்குள் அரசனாய் கொலுவிருந்தீர்
உம் குடும்பம் தளைத்தோங்கி விழுப்பம் தர வைத்தீர்
அன்பு கணவனாய் தந்தையாய் மாமனாய் தாத்தாவாய்
உறவுகளுக்கு அன்புப் பாலம் வைத்தீர்
அகவை அறுபது ஆனது இன்று உமக்கு
அகவை ஆயிரம் வாழ்ந்திடுவீர் எம்முடன் இங்கு.

திரு. நாகதாசன் நவரத்தினம்
தமிழ் ஆசிரியர்,
ஒஸ்லோ, நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வீரர்

கிராமத்தின் மீது அடங்காத பற்றையும், தியாக சிந்தனையையும் உடைய திரு. கைலாயபிள்ளை ஐயாத்துரையின் வழித்தோன்றலாக திரு ஜெகதீஸ்வரன் அவர்கள் தோன்றி தமது ஊர்ப்பற்றை பறைசாற்றுவதோடு, பணியாற்றியும் வருகிறார்.

அத்துடன் இவர் தனது முயற்சியால் முன்னேற்றம் கண்ட எழுத்தாளன். பழகுவதற்கு சிறந்தவர். ஊரின் உயர்வுக்கு உத்வேகத்துடன் உழைத்தவர். மற்றவரின் நியாயமற்ற செய்கைகளையும் துணிவோடு கண்டிப்பவர். அத்துடன் தானும் கண்டிப்போடு செயலாற்றுபவர்.

குரும்பசிட்டி நலன்புரி சபைத்தலைவராக பதவி வகித்த வேளை பல புதுமைகளை புகுத்தி எங்கள் சங்கத்தை ஒரு புரட்சிகரமான திசையில் இயக்கியவர் என்றால் அது மிகையாகாது. இரவு பகலாக சங்க அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு முன்னின்று உழைத்தவர். அச்சமயங்களில் தான் அவரின் தமிழ் ஆற்றலை மட்டுமல்ல, எதையும் இயக்கும் ஆற்றலையும் கண்டு நான் பெருமைப்பட்டதுண்டு.



அதுவரை அவர் தான் எழுத்துத்துறையில் கொண்டிருந்த ஈடுபாட்டை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. எதையும் ஒழுங்காகவும், சிந்தனைத் திறனுடனும் பூரணமாகவும் மிகைப்படுத்தாது அலட்டிக்கொள்ளாமல் துணிவுடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர் என்பதை அவரின் திடீர் முடிவுகளும், திடமான நம்பிக்கையும் எடுத்து காட்டின.

ஜெகதீஸ்வரன் அவர்கள் மிகவும் சிறு வயதில் என்னிடம் கல்வி கற்றதை இன்றும் நினைவூட்டி பெருமைப்படுத்துவார். அந்நிகழ்வுகள் இன்றும் பசுமையாக என் நினைவில் உள்ளது. அவரின் தமிழ் அறிவு பல சந்தர்ப்பங்களில் எனக்கு பேருதவியாக இருந்தது என்பதனை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

கனடாவில் பல்வேறு காரணங்களால் அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் ஒவ்வொன்றும் முத்துக்களாக காணப்படுகின்றன. அவரின் சிறுகதைகள், கட்டுரைகள், தான் பிறந்த குரும்பசிட்டி மண்ணின் வாசனைகளை வெளிக்காட்டி நிற்கின்றன. அத்துடன் அவரின் தமிழ் பற்றும், தாய்நிலப்பற்றும் சமய சமூக சீர்திருத்தச் சிந்தனைகளும் குரும்பசிட்டி மக்களின் முகங்களையும் உள்ளங்களையும் வெளிஉலகுக்குக் காட்டி நிற்கின்றன.

"பொன்வயல்" மலரின் தோற்றத்திற்குக் காரணமான வரும், "இங்கேயும் மனிதர்கள்" போன்ற முற்போக்கு சிறுகதைத்தொகுதியை ஆக்கியவரும், "கொலுவீற்றிருந்த குரும்பை நகர்" எனும் நூல்வழியாக, கிடைப்பதற்கரிய பல தகவல்கள் தாங்கிய ஆய்வுக் கட்டுரைமூலமாக, குரும்பைநகரை அடையாளம் காட்டிய ஆவணப் பதிவினை யாத்தவரும் இவரே. இந்த வகையில் அவருக்கு மணிவிழா எடுக்கப்படுவது பொருத்தமானதே.

60ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் ஜெகதீஸ்வரனும், அவரது குடும்பத்தினரும் சீரான செல்வங்களைப் பெற்று வாழவும், அவரின் இது போன்ற செயற்பாடுகள் மென்மேலும் தொடரவும், உடல் உள ஆரோக்கியத்துடன் நீடு வாழவும், நானும் எனது குடும்பத்தினரும் மனமார வாழ்த்துகின்றோம்.

திரு. த. சிவலிங்கம்
ஓய்வுநிலைஆசிரியர்
குரும்பசிட்டி நலன்புரிசபை
கனடா ~ முன்னாள் தலைவர்
குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்
மணிவிழா குழு உறுப்பினர்
ரொரன்ரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகன்




அகவை 60ஐ அடையும் உன்னை
அகம் மகிழ்ந்து வாழ்த்த வந்தோம்
எங்கள் அருமை நண்பா ஜெகா
குரும்பை ஊரின் குடி மகனே
ஐயாத்துரை மாணிக்கத்தின் தலைமகனே
கனடிய நாட்டின் தமிழ் மகனே
பூமாலை சூடினால் வாடிவிடும் என்று
பாமாலை சூடுகிறோம் பவ்வியமாயுனக்கு
நூறு ஆண்டுகாலம் நீ வாழ வேண்டும்
ஆண்டாண்டு தோறும் நாம் வாழ்த்தவேண்டும்
நோய் நொடியின்றி நீ வாழவேண்டும்
தமிழுக்காய் சேவைகள் பல செய்யவேண்டும்
தமிழ் மகன் நீயென தரணி பாட வேண்டும்
எல்லோரும் மனதார உன்னை போற்றவேண்டும்
நல்லோர்கள் மனதினில் நீ வாழவேணடும்
வாழி நீ நண்பா வாழி பல்லாண்டு
வாழ்க வளமுடன் வளர்க தமிழுடன்!

திரு. செல்வராஜா இளையப்பு
&
திருமதி. சாந்தி செல்வராஜா
ஜேர்மனி
ஐம்பது ஆண்டுகளாய்
தொடர்ச்சியாக நட்புப் பாராட்டி
வருபவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்தவப் புதல்வன்



கலைஞர் தயாநிதி தம்பையா
"நையாண்டி மேளம்" புகழ்,
பிரான்ஸ்

நிறைவான நம் வாழ்த்து
ஊர் கூடி ஜெகதீஸ்வரன்
பேர் போற்றும் பெரு விழா.
குரும்பை நகரின் அரும்
தவப் புதல்வன் தன்
திறனால் கொலுவீற்றிருந்த
குரும்பை நகர் என்ற
அரும் பொக்கிசத்தினை
ஆவலுடன் ஆவணப் படுத்திய
ஊர்க் காவலன்.
வைர விழாவிற்கும் வாழ்த்தும்
வாய்ப்பினை வழங்கிட வல்லோனை
வேண்டி தேடுகின்றேன்
எங்கே என் தேசம்
உலவிய என் ஊரில்
நிலவிய அமைதி எங்கே
தழுவிய உறவுகள் எங்கே
குலவிய குடும்பம் எங்கே
பழகிய தோழமை எங்கே
குளித்த கிணறு எங்கே
கும்பிட்ட கோவில் எங்கே
படித்த பள்ளி எங்கே
பாடிய பாடல் எங்கே
பேசிய மொழி எங்கே
எம்மை வாழ வைத்த
தோட்டம் எங்கே? துரவுமெங்கே
தேடிய தேட்டங்கள் எங்கே
கூடி வாழ்ந்த மனைவி எங்கே
கட்டி அணைத்த கணவனெங்கே
பெற்றெடுத்த பிள்ளைகள் எங்கே
எல்லாமே இன்று எம்முன்
கேள்விகளாய் நீள்கையில்
பதிலைத் தேடுவதா
படும் துயர் கலைத்திட
பலனைப் பங்கிடுவதா
பட்ட துயர் போக்கிட
தொட்டணைக்க விளைவதா
எட்டப்பர் கூடி
சுட்டெரித்த புண்ணிய பூமியை
கட்டிக் காத்திடக் கூடுவோம்.
தொலைந்த தேசம்
கலைந்த உறவுகளோடு
விடியலைத் தொட்டிட
உழைப்போம் உறுதியாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரிவார்



முற்றாகச் சிதைக்கப்பட்ட குரும்பசிட்டிக் கிராமம் மீள்குடியேற்றத்திற்கு ஒரு பகுதி அனுமதிக்கப்பட்ட போது கிராம முன்னேற்றச் சங்கத்தின் கடுமையான முயற்சியினால் மிகக் குறுகிய காலத்தில் செப்பனிடப்பட்ட பொன். பராமானந்தர் மகாவித்தியாலயத்தில் 2012 ஜனவரியில் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போது....

திரு. ஐ. ஜெகதீஸ்வரன் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் கனடா குரும்பசிட்டி நலன்புரி சபை மிகவே மகழ்ச்சியடைகின்றது.

அவர் நலன்புரி சபைக்கு ஆற்றிய பணிகள் வலுவானவை. அவர் தலைவராக இருந்த காலத்தில் குரும்பசிட்டி நலன்புரி சபையின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி ஈடுபாட்டுடன் உழைத்ததை யாவரும் அறிவர்.

சபையின் முயற்சிகளிலன்றி ஊரின் பெயரை நிலைநிறுத்துவதிலும் திரு. ஜெகதீஸ்வரன் முயன்றுவருகின்றார். அவரது கொலுவீற்றிருந்த குரும்பைநகர் என்ற தொகுப்பு எமது பிறந்த பதியின் மறைந்த அல்லது மறந்த வரலாறுகளுக்குப் புத்துயிரளித்திருக்கின்றது. குரும்பசிட்டியின் வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருப்பதோடு அதனை எம்மவருக்கு அடிக்கடி நினைவுபடுத்துவதிலும் முனைந்து நிற்கின்றார்.

எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், நடிகர் என்று பன்முக ஆற்றல் படைத்த திரு. ஜெகதீஸ்வரனின் ஆளுமைக் கூறுகளை யாவருக்கும் அடையாளம் காட்டும் வகையில் மணிவிழா மலர் அமையும் என்று நம்புகின்றேன்.

அவரது மணிவிழா சிறப்பாக நடக்க வாழ்த்துகிறோம். மணிவிழா நாயகன் வாழவேண்டும், நீண்ட காலம் வாழ வேண்டும்!

நோய்நொடிகள் இன்றிச் சீர்சிறப்புகளுடன் அவரும் அவரது குடும்பமும் வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல குரும்பசிட்டிச் சித்தி விநாயகப் பெருமானையும் முத்துமாரி அம்மனையும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு. திலீபன் யோகநாதன்
முன்னாள் தலைவர்
கனடா குரும்பசிட்டி
நலன்புரி சபை ~ கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து வடமுனை நோக்கிச் சென்றால் வருவது தெல்லிப்பளை. அதனை அண்டிய ஊர் குரும்பசிட்டி எனும் தேனாமிர்தம் கொண்ட தண்ணீரும், செந்நிற மண்ணும் கொண்ட பொன்விளையும் பூமி. இங்கே பிறந்தவர்தான் ஐயாத்துரை ஜெகதீஸ்வரன்.

எனது மாமாவின் நீண்ட கால நண்பர்தான் இவர். நான் எனது விடுமுறைநாட்களில் மாமா வீட்டிற்குச் செல்லும்போது தான் இவரை எனக்குத் தெரியும். இவரையும் "மாமா" என்றே அழைப்பேன். அறிவும், ஆற்றலும் கொண்ட இவர் இளமைக்காலத்திலிருந்தே பிரசங்கம் மேடைப்பேச்சு, நாடகங்கள் போன்றவற்றில் பங்குபற்றியதை எனது மாமா கூறிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இவரை எமது குடும்பத்தில் ஒருவராக எண்ணிப் பழகுகிறோம்.



சிறுவயதிலேயே நான் தாய்நாட்டில் இருக்கும்போது எங்களது குடும்பத்தில் ஏற்பட்ட சிறுபிரச்சனையை எனது மாமாவுடன் இணைந்து அவர் தீர்த்து வைத்தவிதம் இன்றும் என் மனதில் பசுமரத்தாணிபோல் பசுமையாக இருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் நண்பனுக்கு கைகொடுத்து நட்புக்கு ஒரு இலக்கணமாக இருந்தார்.

தாய் நாட்டில் என்றில்லாமல் அவருடைய நட்பு கனடாவிலும் தொடர்ந்தது. தாய்நாட்டிலிருந்து மொன்றியலுக்கு வந்தவுடன் தேவையறிந்து உதவி செய்தார். அதிலிருந்து அவரின் உதவி மனப்பான்மையை அறிந்து கொண்டேன். எங்களுக்கு ஏதாவது ஆலோசனை தேவையென்றாலும் அவரிடம் கேட்டு அறிந்து கொள்வோம். அச்சமயத்தில் நல்ல ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். நாங்கள் மொன்றியலில் இருக்கும் போது எங்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பித்துத்தந்த ஆசிரியனாகவும் இருந்திருக்கிறார். தனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்க்கு சொல்லிக் கொடுக்கும் நற்பண்பாளர்தான் எங்கள் ஜெகதீஸ் மாமா.

ஜெகதீஸ் மாமா அவர்கள் முதல் முறையாக நூல் வெளியீடு செய்தபோது என்னால் செய்ய முடிந்த ஒரு சிறு உதவியைச் செய்தேன். அந்த உதவி அவர் மனதில் எவ்வளவு உயர்ந்த இடத்தைப் பெற்றதென்பதற்கு சான்றாக இரண்டாவது நூல் வெளியீட்டு விழாவின் போது என்னைக் கௌரவப்படுத்திய போதுதான் உணர்ந்தேன். அன்று அவர் என்னை கௌரவப்படுத்தியதற்கு இத்தருணத்தில் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதற்கமைய கனடாவிலும் அவர் புகழ் வளர்கிறது. ஜெகதீஸ் மாமா அகவை 60 ஆனாலும் அவரின் எழுத்து ஆற்றல் இன்னும் தொடர எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பல்லாண்டு காலம் நோயின்றி நலமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி. சியாமளா விஸ்வகுமார்
மில்ரன்
40 ஆண்டுகளுக்கு மேலான
உறவைப் பேணி வருபவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத நண்பர்



*1984 தொடக்கத்தில் பாரிஸ் நகரத்து வைத்தியசாலையில*
*உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளை,*
*ஆறுதல் சொல்லி உணவூட்டி பராமரித்த பிரெஞ்சுக் குடும்பத்தினருடன்*

மாமழையில் நனைந்தாலும்
நிறம் மாறாது கிளி.

நீரிலே பிறந்தாலும்
குணம் மாறாது தாமரை

மண்ணிலே மறைந்தாலும் என்றும்
மாறாது எம் நட்பு

துன்பத்தில் தோள் கொடுக்கும்
தோழியல்ல நான்.

துன்பத்தையே தோற்கடிக்கும்
காலன் நீ

எத்தனை நாட்சொல்வது
அவ்வை - அதியமான் நட்பை

இனி மேலும் சொல்லட்டும்
எங்கள் நட்பை

இதயத்தால் வாழ்த்துகிறேன்
இன்பமாய் நீடு வாழி.

திருமதி. மங்களேஸ்வரி
அரியகுலநாதன்
மொன்றியல்
நாற்பது ஆண்டுகால
நட்பினைக் கொண்டிருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டுள்ளம் கொண்டவர்



*1984இல் உடன்பிறவாச் சகோதரர் இளையதம்பி சிவலிங்கம் அவர்களுடன் ஜெகா - பிரான்ஸ்*

காலத்தால் வரையறுக்க முடியாத மிகத் தொன்மை வாய்ந்தவை தமிழ் மொழியும், தமிழ் இனமும். இவை சிதைந்து அழிந்து ஒழிந்து போகாமல் பாதுக்காக்கப்பட வேண்டியது எமது தலையாய கடமையாகும். பற்பல பெரிய தாக்குதல்களுக்கும் இடையிலே எதிர்நீச்சல் போட்டு வளர்ச்சி பெற் றிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் காலத்திற்குக் காலம் தோன்றும் அறிஞர் பெருமக்களேயாவார்.

இலங்கை வாழ் தமிழ் அறிஞர்கள் தமிழ் மொழிக்கும் எமது தமிழ் இன சமூகத்திற்கும் ஆற்றி வரும் தொண்டுகள் அளவிடற்கரியன. இவர்கள் வரிசையில் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய எனது நண்பர் திருவாளர் ஜெகதீஸ்வரன் ஐயாத்துரை அவர்களும் ஒருவர் என்று கூறுவதில் பெருமிதம் அடைகிறேன். இவர் நெடுங்காலமாக நம் சமூகத்திற்கு ஆற்றி வரும் அளப்பெருந் தொண்டுகள் பாராட்டுதற்கும் போற்றுதற்குமுரியன.

"ஒருமையும் வாய்மையும் தூய்மையும் சுத்த ஆன்ம நேய உறவும் பொதுநலத் தொண்டுள்ளமும் கொண்டவர்" மன ஒருமைப்பாட்டுடன், எப் போதும் உண்மை பேசும் நிலையும் அகத் தூய்மையும், புறத்தூய்மையும், உண்மையான தெய்வீகத் தன்மை கூடிய நட்பும் கொண்டு எந்தப் பிரதி பலனையும் எதிர்பாராத சமூகநலத் தொண்டும் கொண்டு வாழ்பவர்.

இவரது படைப்புகளில் ஒன்றான "இங்கேயும் மனிதர்கள்" என்ற சிறுகதை நூலில் இவரது சமூகநலச்சிந்தனை வேட்கை நன்றாகப் புலப்படுகின்றது. இங்கு பிரான்சில் இருந்த பொழுது இவரது கவிதைகள், கதைகளின் சமூக நல விழிப்புணர்வைப் பார்த்து வியந்தும் பிரமித்தும் இருக்கிறேன். இவர் கூறியது போல், 'மனிதம் எமக்குள் வாழ்வதனால் எம்மை மனிதர் என்று சொல்லிக் கொள்கிறோம்' என்பதனை எத்தனை பேர் மனிதநேயத்துடன் உணர்ந்திருக்கின்றோம்?

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?" அகவை அறுபது காணும் 'மணிவிழா நாயகர்' எனது அருமை நண்பர் திருவாளர் ஜெகதீஸ்வரன் ஐயாத்துரை அவர்கள் வாழ்க! அவரது சமூகப் பணிகள் மேன்மேலும் வாழ்க! வாழ்க!! என எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டி வாழ்த்துகிறேன்.

திரு. சிவலிங்கம் இளையதம்பி
பிரான்ஸ்
நட்புக்கும், நயம்பட
உரைத்தலுக்கும்
உதாரணமானவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிக்கவர்

மண்ணுக்கு மரம் பாரமா
மரத்துக்கு இலை பாரமா
கொடிக்குக் காய் பாரமா - பெற்றெடுத்த
குழந்தை தாய்க்குப் பாரமா.

எங்கள் வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்துக் கிளையில் கட்டியிருந்த ஊஞ்சலில் அண்ணாவை இருத்தி வைத்து ஆட்டுகின்ற வேளைகளிலே அம்மா இராகத்தோடு பாடுகின்ற பாடல் இதுதானாம். நான் பிறப்பதற்கு முன்னாலேயே நிகழ்ந்த இது போன்ற விடயங்களை அண்ணாதான் பின்னாளில் என்னோடு பகிர்ந்து கொண்டார்.



1980களின் நடுப்பகுதியில்
ஜெகாவின் தாயாரும்,
தங்கை, தம்பியும்
தமிழகத்தில் தங்கியிருந்த வேளை

எங்கள் கிராமத்து பரமானந்தர் மகாவித்தியாலயம் அப்போ மகாதேவ வித்தியாசாலையாக இருந்தது. இங்கு பாலர் வகுப்பு படித்த காலங்களில் எமது தந்தையாரின் தகப்பனார் - பாட்டனார் கைலாயபிள்ளையின் அரவணைப்பிலே அண்ணா வசப்பட்டிருந்தவர். காலையில் பாடசாலைக்கு தனது தோளிலேயே தூக்கிச் சென்று பாடசாலை முடிந்து வரும் வரை காவல் இருந்து பின்னர் திரும்பவும் வீட்டிற்குத்தன் தோளிலேயே சுமந்து செல்வார்.

எங்கள் பெற்றோருக்கு நாங்கள் நான்கு பிள்ளைகள். அண்ணா - நான் - எனக்குப் பின்னால் தங்கை ஜெயபவானி - தம்பி ஜெயசீலன். எங்கள் நால்வருள்ளும் அபரிதமான வசதிகளையும், அளவில்லாத துன்பங்களையும் அனுபவித்தவர் அண்ணாவே.

பண்டாரவளையில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த எமது தந்தையாரின் முற்று முழுதான ஆகர்ஷிப்பில் வளர்ந்தவர் அண்ணா. மூன்றாம் வகுப்புப் படிக்கும் போதே பள்ளிக்கூட யூனிபோம், கைக்குட்டை, சப்பாத்துக்களோடு பெரும் பந்தாவாகத்தான் பாடசாலை சென்று வந்தார். ஆனால் க.பொ.த. உயர்தர வகுப்புப் படிக்கும் வேளையில் இரண்டு Pants, மூன்று Shirts உடனுமே காலத்தை ஓட்டியவர். இவர் பிறந்த போது, எங்கள் கிராமத்திற்கே முதன் முதலில் வந்த BigBen மணிக்கூடு இவர் இலங்கையை விட்டுச் செல்லும் வரை இவருடனேயே ஒட்டியிருந்தது.

நானும் அண்ணாவும் அன்புப் பாசத்தில் ஒரு கூட்டுப் பறவைகளாகவே வளர்ந்து வந்தோம். அண்ணா என்னைப் பாசத்துடனும், அதனை மீறிய கண்டிப்புடனும் வளர்த்தார். பாடசாலையில் கற்ற காலத்திலும், பின்பும், அண்ணாவே உற்சாகம் ஊட்டி, அறிவுரை கூறி வழி நடத்தினார். இவர் எனக்கு அண்ணனுக்கு அண்ணனாகவும், நண்பனுக்கு நண்பனாகவும், பின்பு எனது தந்தையாரை இழந்த போது தந்தையாகவும் இருந்து என்னையும், எங்கள் குடும்பத்தாரையும் வழிநடத்தினார்.

நான் எனது அருமைத் தந்தையாரை என் 19 ஆவது வயதிலேயே, எதிர்பாராத கொடிய சூழ்நிலையில் இழந்தேன். அவ்வேளை எனது தங்கைக்கு வயது 8. கடைசித் தம்பிக்கு வயது 5. அச்சமயத்தில் எங்கள் பாச அண்ணரே தந்தையின் நிலையில் இருந்து எம் எல்லோரையும் பொறுப்புடன் காப்பாற்றினார். அத்தோடு அம்மாவுக்கும் ஆறுதல் கூறி கிடைத்தற்கரிய ஆதரவாகவும் விளங்கினார்.

அன்புச் சகோதரி
ஜெயகௌரி தவராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குடும்ப சூழ்நிலை காரணமாக அண்ணாவின் திருமணம் தாமதமாகியது. எங்கள் அம்மாவும், நானும் அண்ணாவிற்குத் திருமணம் செய்து வைக்க முயன்ற வேளையில் தங்கையான நான் பார்த்து முடிவு செய்யின் தானும் ஏற்றுக் கொள்வதாகக் கூறிச் சம்மதம் தெரிவித்தார். அம்மாவும், நானும் தமிழகத்தில் தங்கியிருந்த காலத்திலே, அங்கேயே அண்ணாவின் திருமணமும் நடந்தேறியது.

அண்ணா தான் திருமணம் செய்த வேளை, எனக்கும் ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடி, நிச்சயித்து சிறந்த வாழ்வைப் பெறச் செய்தார். அவர் கனடாவுக்கு வந்த வேளையில், என்னையும் அழைத்து வந்து எனது திருமணத்தையும் சிறப்பாக நடாத்தினார்.

அண்ணாவின் வாழ்க்கை முழுவதும் சவால்களும் போராட்டங்களும் நிறைந்தே இருக்கிறது. என் அண்ணாவின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்த சில விடயங்களை அவர் என்னோடு பல்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடும் போது குறிப்பிட்டிருந்தார். இவற்றில் ஒரிரண்டினை உங்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் கிராமத்துப் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் தவணைப் பரீட்சை ஒன்றில் அண்ணா தனது சக மாணவரை விட அதிகம் புள்ளிகளைப் பெற்றிருந்தார். அந்த மாணவர் அழுது கொண்டே, தமது உறவினராகவிருந்த வகுப்பாசிரியரிடம் சென்று தம்பிக்கு மாக்ஸ் கூடப் போட்டிருக்கு என்று முறையிட்டார். உடனே ஆசிரியர் எதுவித சங்கடமுமின்றி அண்ணாவின் புள்ளிகளை அந்த மாணவருக்கும், அந்த மாணவரின் புள்ளிகளை அண்ணாவுக்கும் மாற்றிக் கொடுத்து அனுப்பி வைத்தாராம். இதே போன்று ஏழாம், எட்டாம் வகுப்புப் படிக்கும் போது கிராமத்து தனியார் ரியூசன்களிலும் பரீட்சைகளின் போது இவ்வாறு செய்யப்பட்டதாகச் சொன்னார். சமூக அந்தஸ்தும், செல்வாக்கும் இல்லாத தன்னைப் போன்ற சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு அநீதிகளைக் கண்டு எதிர்ப்புத்தெரிவிக்காமல் எப்படிச் சகித்துக் கொள்வது என்றே ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள் என்று வேதனைப் படுவார்.

எங்கள் கிராமத்து ஆலயத்தில் சமயப் பிரசங்கங்களை ஒழுங்கு செய்வதற்காக அண்ணா முயற்சி செய்த வேளைகளில் இவற்றுக்குக் கூட முட்டுக்கட்டை போடு வதற்காக சம்பந்தப்பட்ட சொற்பொழிவாளர் களையே சந்தித்து தடுத்து நிறுத்திய பிரபலமான பல "நல்ல உள்ளங்களை" எங்கள் ஊரில் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இத்தனை தடைகளையும் மீறி சில இளைஞர்களோடு இவற்றை வெற்றி கொண்டார். மூன்றா வது தடவை இந்நிகழ்வு இடம்பெற்ற போது முட்டுக் கட்டை போட்ட பெரியவர்களே அண்ணாவைச் சிலா கித்துப் பேசியதையும் அறிவேன்.

அங்கு மட்டுமின்றி இங்கும் கூட சில விழாக்களை ஒழுங்கு செய்வதில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கினார். பல முதுகில் குத்தும் சம்பவங் களை சமாளித்துச் சம்பந்தப்பட்ட விழாக்களைத் திறப்பட நடாத்தி முடித்திருக்கிறார். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற வள்ளுவரின் வரிகளே ஞாபகத்திற்கு வரும்.

எட்டு வயதிலே கடுமையான நோயால் பாதிக்கப்பட்டார். பதினேழு வயதில் நரம்புத் தளர்ச்சி நோயால் அவதிப்பட்டார். பிரான்சிற்குச் சென்றிருந்த வேளையில் உயிருக்குப் போராடிய நிலையில் அடுத்தடுத்த அறுவைச் சிகிச்சைகளின் பின் மீண்டு வந்தார். இப்போதும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் பல்வேறு பாதிப்புக்களுக்கு ஆளாகினார். ஆனாலும் இத்தனை துன்பங்களுக்கும், நோய்களுக்கும் மத்தியிலும் எப்படி என் அண்ணாவால் தைரியமாக எழுந்து நிற்க முடிகிறதெனப் பல தடவைகளில் நான் ஆச்சரியப் பட்டதுண்டு.

அவரது தன்னம்பிக்கையும் விடா முயற்சியுமே அண் ணாவை தற்போதய நிலைக்கு உயர்த்தியுள்ளன. அவரது மனத்துணிவை நினைத்து நான் பெருமைப் படுகிறேன்.

அண்ணாவோடு எமக்குக் கிடைத்த அன்பான அண்ணியும் ஒன்றாக ஒத்துழைத்து இன்ப துன்பங்களில் சோராது பங்கு கொண்டு யாவற்றிற்கும் பக்கபலமாக இருப்பதைக் கண்டு மனம் மகிழ்கிறேன். அண்ணிக்கும் நன்றி கூறுவதோடு அகவை அறுபதை அடையும் எனது உடன்பிறப்பு, உடல், உள, குடும்ப நலங்களோடு இன்னும் பல நூலாக்கங்களைப் படைத்துப் புகழுடன் கூடிய நீடிய ஆயுளுடன் விளங்க அப்பாவின் ஆசிகளையும் அம்பாளின் அருளையும் வேண்டி நிற்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Amazing Uncle



*Jega, and his wife with sister-in-law and her kids*

I have had the great pleasure of calling you my uncle for many years now. And while I do not have the opportunity to see you as often as I'd like when I do visit I thoroughly enjoy my time with you. I am always pleased to see you and you are always sure to engage in interesting discussions.

Your caring nature is always on display through your concern for me and my family and most especially through the care you have provided for my grandma and grandpa for the past few years. As an uncle to both my brother and I you have always shown yourself to be interested and caring about our schooling and life's ambitions. This kind hearted display is also shared with your children as well who are always willing to help me with my work when needed and I am grateful to have such a loving and caring extended family that is always more than willing to help my family when needed.

Aside from being a devoted uncle I also know you to be a gifted writer and poet and I have thoroughly enjoyed hearing you speak at many different events. It is always a pleasure to hear you on stage and I am always happy to see you at regular family functions. Despite your busy life and your various commitments I truly appreciate you making the time to attend many different family events, get-togethers, and parties. Your presence is very much felt and your joyful demeanour is much appreciated.

As you approach your 60th birthday I hope you continue to enjoy your life to the fullest and wish you a fun-filled day.

"Live as if you were to die tomorrow. Learn as if you were to live forever." This quote spoken by Mahatma Gandhi reminds me of you not only because it sums up your attitude towards life and learning but also because much like him I find you to be an extraordinary person and a wonderful presence in my life.

**Ms. Keshaani Uthayakumaran**
**Grade 12 Student**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Advisor



*Jega with his wife at his sister's special occasion in Montreal (1985)*

**Although my earliest memories of Jegathees Mama are from only about 25 years ago, my history with him goes back much farther.**

**Jegathees Mama features prominently in my parents' wonderful stories of the past, as he was there to help arrange their marriage, and also travelled with my mother, brother, aunt, and uncle when they first came to Canada.**

**I've enjoyed hearing about how he and my uncle were best friends, the things they used to do together, and how our families interacted. These stories are from a former time and place that is an important connection to my roots, and Jegathees Mama is a central figure in these roots.**

**My earliest memories of Jegathees Mama are of him with his big hair, being playful, cracking jokes and letting out his very distinct laugh.**

**I've also considered Jegathees Mama to be an advisor of sorts; he is very scholarly and I've always been in awe of his knowledge, ability to learn and write. I know I have had many conversations with him where I've learned something new, and his desire to spread knowledge is admirable.**

**When he knows something, he knows it thoroughly, and when he teaches something, he will make sure you've learned it well.**

**Jegathees Mama, I wish you a very happy 60th birthday and continued good fortune going forward.**

**Ms. Gobhina Nagarajah**
**B.A**
**Law College Final Year,**
**Ontario**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Enchantor

*Happiness is when what you think, what you say, and what you do are in harmony*

*-- Mahatma Ghandi*



**People come in and out of our lives in such a short period of time. Some inspire us to make the best of ourselves while others are forgotten just as quickly as they come. One person's influence that has inspired both of us is our uncle, Jega Iyathurai.**

**He has been part of our lives since we were children and has made great effort to stay in our lives and encourage us to go beyond ourselves. Our uncle is like no other as his abilities exceed those of most people. He can enchant you through his words and is known for his many poems. His political and personal beliefs make for interesting debates and the depth of his knowledge is more so than many others.**

**He does not hesitate to help others and his drive to assist strangers in need is admirable. The most inspirational characteristic of our uncle is his ability to set his mind on something and being able to carry forward. He does not allow anyone to tell him that he cannot do something. He has had his ups and downs, but has proven that life is not all about success but about values and beliefs.**

**With all these talents, Uncle has never been selfish. While working and taking care of the family, he made time to help children in his neighbourhood. He tutored children of all ages and encouraged them to strive for the best. He treated these children as his own and gave each child the necessary time and attention to give them the help they needed. Uncle has gone through a tough childhood to get to where he is today and his willingness to share his story has surly inspired many of his students.**

**Uncle is also a family man. Despite his hectic schedule, he is always making time to attend birthdays, weddings and anniversary parties. He makes sure he is aware of what is going on in our lives. If we have doubts, he always encourages us to strive further. He has embraced the concept that you will never have time to do anything unless you make time.**

**We are proud to say he is our uncle. His motivation and strength is what has allowed him to be where he is today. We love you and Happy Birthday!**

**Mr. Aji Thavarajah**
**Senior Financial Analyst, CRA**
**Ms. Ansha Thavarajah,**
**University of Ottawa, MSc Student**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The World to Me

*"One father is more than a hundred schoolmasters."*
*- George Herbert*

As a child, I had no doubt that this quote held true. My father would spend endless hours with us helping us with our homework and encouraging us to always, always aim for success. He seemed to have all the answers and I remember sitting in awe of his seemingly endless intellect. When I was puzzled by a particularly challenging math problem he would patiently help. When I was studying for my spelling test he would sit and quiz me. When I was curious about life's little intricacies such as why the moon seemed to be following us during our car ride he would smile and explain it to me. In this and so many ways he has served to be patient, encouraging, and kind teacher throughout the past 23 years.



*Jega was playing with his kids at the beach in early part of 1990's*

As I've grown older however this quote has taken on a new light altogether. While I still can count on my dad's uncanny ability with numbers and quick wit, I've come to appreciate the numerous life lessons that he has shared with us as well. Knowingly or not his behaviour, character, and views has had an undeniable effect on both my brother and I growing up. His enviable zeal for life has always been an encouraging and inspired example of how to go through life. He has always had a wild passion for life and adventure, and as most of his friends and family will agree, while he approaches 60 this has only grown. His seemingly endless energy has shown little sign of diminishing even now that he is nearing his 60th birthday and at times his energy seems to even outlast me at 23. He approaches life in such a positive, optimistic manner that intentionally or not it serves to cast a light on those on around him and serve as an inspiration to others as well.

My dad has always been incredibly altruistic and service oriented and he continues to seek out opportunities requiring his talents. This sense of community and engagement has taken the form of numerous volunteer opportunities extending from his hometown of Kurumbasiddy to right here in our neighbourhood in Toronto. His keen engagement is both infectious and a welcome reminder to those around him of the importance of global citizenship and the duty to serve others.

And while most of his friends and colleagues too would agree with this characterization of my father I would also like to take this opportunity to highlight another side of him that is perhaps less evident to some- his kind, loving performance as a father.

**Ms. Ashley Jegatheeswaran, MA**
**Law Student**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

While I've observed and been so very proud of his various accomplishments both in his professional life and personal life, through his commitment to service, his spirit of volunteerism, his inspiring abilities as an orator, his innate way with words as an accomplished poet and author, to me and my brother he is all those things but more importantly he is the backbone of our family, the glue that holds us together, and the tree trunk supporting the four of us. As a father he has excelled in so many ways and has undertaken a great number of responsibilities all in the hopes of providing the best for me and my family.

In our family my dad plays a number of different roles that as he gets older I can only hope to do for him in turn. He's played the role of a nurse expertly in the past; I remember being sick and being comforted by my dad who having returned from a long midnight shift was all too willing to offer a tired shoulder as a well padded pillow while I nursed my various ailments.

He's perfected the role of the patient teacher whenever my brother or I required additional help during our years of schooling. Here, his emphasis on the importance of education has imparted a strong love for learning as he not only spoke highly of the value of education but also lived it firsthand through his own commitment to education and his voracious appetite for reading. And perhaps most appreciated is his unwavering support and encouragement - a most welcome trait in any good teacher. He has always been the most supportive of voices - always uplifting, encouraging and loving - and leaving my brother and I with the distinct impression that we can achieve anything.

It is often said that the best thing a father can do for his children is love their mother and here too my dad has excelled in this role. The two of them together complement each other nicely and my dad's devotion to my mother and his marriage has left both my brother and I with a firm idea of what a happy family and married life should aspire to be.

And perhaps most known to his friends and family is his role as the comedian. As a child, I remember distinctly many a time when I, feeling down or saddened, was brought to smiles and laughter when my dad would work to cheer me up through his well timed jokes and his beaming smile. This smile (especially when paired with his infectious laugh) has an uncanny ability to make the most disheartened child light up as well.


Lastly, he has also succeeded in the role of an incredibly grateful and well intentioned son. Seeing him with my grandmother his love and devotion to her is evident and hearing him speak of his late father always brings a smile to my face. He always speaks fondly of him and the lasting impression he has had on him even now is quite apparent. And from everything he has told me I am sure that my late grandfather would be so very proud of the person that he is today and I can only extend my belated thanks to him as well as my grandmother for raising him to be the person he is today as I have reaped all the benefits of his loving upbringing.

All in all, my dad has happily taken on all these roles and more. Always happily and with love. Never begrudgingly or annoyed. And throughout it all he has demonstrated an enviable grace and well honed sense of humour. I am truly so very proud to be able to claim him as my dad. As a daughter I feel incredibly blessed to have had such a presence in my life and as I grow older one of my most heartfelt ambitions in life is to repay him for all that he has done for me. He has shown himself to be the most giving, selfless, and loving person that I know and as he reaches the later part of his life I hope to simply take care of him with the same kindness and respect he has shown to my brother and I while raising us for the past 20 odd years. As he nears this milestone I am reminded of something I told him at his 50th birthday but that still rings as true if not more today: If I, at the end of this journey, am half the person he is I will be incredibly lucky and proud.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரும்பசிட்டி

ஐயாத்துரை ஜெகதீஸ்வரனின்

அகவை அறுபதின் அகமகிழ் விழா

# ஜெக ஜீவிதம்

08.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்ச

## அரங்க முகப்பில்

5:30 மணி மலர் மாலை
திரு.திருமதி இராசநாயகம்
நாதஸ்வரம்

5:40 மணி மங்கல விளக்கு
திரு.திருமதி திகம்பரலிங்கம்
திரு.திருமதி சிவதாசன்
திரு.திருமதி திவ்யராஜன்
திரு.திருமதி பிரான்சிஸ் தம்பிநாயகம்

## அரங்கில் முதல் அமர்வு

5:45 மணி இறை வணக்கம்
திருமதி. சரோஜா ஜெயரத்தினம்
கனடிய தேசியகீதம்
செல்வி. அனுஷ்கா முரளிதரன்
தமிழ்த்தாய் வாழ்த்து
செல்வி. நிஷானி ரகுவரன்

5:50 மணி பூச்செண்டு
திரு.திருமதி குகநேசன்

5:55 மணி வரவேற்பு நடனம்
செல்வி. நிருஷிகா யசோக்குமார்

6:00 மணி வரவேற்புரை
திருமதி. யசோதா அரவிந்தன்

6:05 மணி ஆசியுரை
திரு. செ.இராசநாயகம்
திரு. இ.பாலசுந்தரம்

6:15 மணி தலைமையுரை
திரு. வி.கந்தவனம்

6:25 மணி வாழ்த்துரை
திரு. க.நவம்
திருமதி. கோதை அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி நிரல்

## அரங்கில் அடுத்த அமர்வு

6:35 மணி விருந்தினர் உரை

திரு. லோகன் கணபதி

திரு. ரேமணட் சோ

திரு. பாஸ் பாஸ்கிரூன்

7:00 மணி பிரதம உரை

செல்வி. ராதிகா சிற்சபைஈசன்

7:15 மணி சிறப்பு உரை

திரு. எஸ்.திருச்செல்வம்

திரு. ஏ.ஜே.சந்திரகாந்தன்

## அரங்கில் அதற்கும் அடுத்த அமர்வு

7:35 மணி. வெளியீட்டு உரை

திரு. எஸ்.ஜெகதீசன்

முதற்பிரதி

திருமதி. மாணிக்கம் ஐயாத்துரை

சிறப்பு பிரதி

திரு. எஸ்.நாகராஜா

திரு. ஏ.சதாசிவம்

திரு. எஸ்.சிவகுமார்

திரு. கே.வைத்தியநாதன்

திரு. மனோ அன்ரனி

திரு. ரி.கே.பரமேஸ்வரன்

வீரகேசரி மூர்த்தி

காலம் செல்வம்

திரு. நாராயணமூர்த்தி

7:45 மணி பாராட்டு உரை

திருமதி. லங்கா மகேந்திரன் - ஊரவராக

திரு. அ.கணபதிப்பிள்ளை - உறவினராக

திரு. எஸ்.பத்மநாதன் - புலத்தவராக

திரு. குரு அரவிந்தன் - கலைஞராக

திரு. திருமாவளவன் - நண்பராக

திரு. கே.அன்பழகன் - சகஊழியராக

8:10 மணி ஏற்புரை

திரு. ஐ.ஜெகதீஸ்வரன்

8:30 மணி நன்றி உரை

திருமதி. ஜெயகௌரி தவராஜா

8:35 மணி பாராட்டு கேடயங்கள்

8:45 மணி இரவு விருந்து

10:15 மணி மண்டப வாசலில் விழா நாயகர் மலர் வழங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழா வடிவம்

தலைவர்
எஸ். இராசநாயகம்

செயலர்
யசோதா அரவிந்தன்

பொருளர்
தி. தவராஜா

நிர்வாகக் குழு
ச.வே. பஞ்சாட்சரம்
எஸ். பத்மநாதன்
ரவி அமிர்தவாசகம்
இரா. சம்பந்தன்
த. சிவலிங்கம்
அகல்யா கோபால்
சண். துரைசிங்கம்
மனோ. விஜே ராமலிங்கம்

மலராசிரியர்
இளவாலை எஸ். ஜெகதீசன்

## அரங்க வடிவம்

நிர்வாக அமைப்பாளர்:
இளவாலை எஸ். ஜெகதீசன்

நிகழ்ச்சித் தொகுப்பாளர்:
குயின்ரஸ் துரைசிங்கம்

விழா தலைவர்:
பாவரசர் வி. கந்தவனம்

அரங்க நிர்வாகம்:
யசோதா
கௌரி
மதி

வரவேற்பும், உபசரிப்பும்:
இரா. சம்பந்தன்
அகல்யா
பாலேஸ்
கணேஷ்
மீரா
சண்
ஆஷ்லி
ஆதி
ஆரணி

உங்கள் வருகை
மகிழ்ச்சியைத் தந்தது

உங்கள் வாழ்த்து
மலர்ச்சியைத் தந்தது

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரும்பசிட்டி ஜெகதீஸ்வரன் மணி விழா 2012

87 Mourning Dove Crescent, Scarborough, Ontario M1B 6A8
E-mail: jmanivizha2012@hotmail.com

தலைவர்
எஸ். இராசநாயகம்
செயலர்
யசோதா அரவிந்தன்
பொருளர்
தி. தவராஜா


செயற்குழு
ச.வே.பஞ்சாட்சரம்
எஸ். பத்மநாதன்
ரவி அமிர்தவாசகம்
இரா. சம்பந்தன்
த. சிவலிங்கம்
அகல்யா கோபால்
சண். துரைசிங்கம்
மனோ. விஜே ராமலிங்கம்

மலராசிரியர்
எஸ்.ஜெகதீசன்

## நன்றி!

மனசுடன் மனசுலாவி
மகிழ்வுறு கதைகள்பேசி
மயங்கிடு மாலைவேளை
மனப் பெருவெளி நிரப்பியிம்
மணிவிழா விளங்கச்செய்த
மனங்களே மிகுந்த நன்றி
மணிவிழாக் குழுவின் நன்றி

குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ்வரன் மணி விழா குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலுவீற்றிருந்த குரும்பைநகர்

வரலாற்றுப்பதிவு

குரும்பசிட்டி ஐயாத்துரை ஜெகதீஸ்வரன்

கொலுவீற்றிருந்த குரும்பைநகர்

Art by: Kavitha Ravikumar



கொலுவீற்றிருந்த குரும்பை நகர் பற்றி...

தமிழ்ப்பற்றும், தாய்நிலப்பற்றும் நிறையவே கொண்டுவிளங்கும் திரு ஜெகதீஸ்வரன் அவர்கள் இதயசுத்தியுள்ளவொரு சமய- சமூக சீர்திருத்தச் சிந்தனையாளர். இதுவரை அவர் எழுதி வெளியிட்டுள்ள அவரது சிறுகதைகள், கட்டுரைகளில் இந்த எண்ணக்கரு என்றுமே இழையோடுவதனை அவதானிக்கலாம்.

கொலுவீற்றிருக்கும் குரும்பை நகர் எனும் இந்நூல் வழியாக தான் பிறந்து தவழ்ந்து எழுந்து வளர்ந்த மண்ணின் கல்விவளம், கலைவளம், பொருள்வளம், அரசியல் அறவளம் போன்றவை பற்றியும் தன் தாய்நிலத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரசுருதியாகவமைந்த இம்மண்பெற்றெடுத்த பேராசான்கள், சான்றோர்கள் பற்றியும் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் ஓர் ஆவணப்பதிகையினை யாத்திருக்கின்றார்.

எமது உயிரையும் உடலையும் உறவுகளையும் ஆற்றுப்படுத்தித் தாங்கி வளர்த்து உருவாக்கிய எமது ஊர்களின் முகங்களும், முகவரிகளும் தடயம் ஏதுமின்றி முழுமையாகவே மூண்டெரியும் இக்கால கட்டத்தில் இவ்வாறான வரலாற்றுப் பதிகைகள் மிகவும் அவசியமானவையாகும். கிடைப்பதற்கரிய பல தரவுகளையும் தகவல்களையும் தனது முன்னோரின் வாய்வழிப்பாரம்பரியமாகவும், நூல்கள், கட்டுரைகள் வாயிலாகவும் தேடிப் பெற்றுத் தொகுத்து ஆக்கப்பட்டுள்ள இந்நூல் எம்மவர் பலருக்கும் ஓர் முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் விளங்க வேண்டுமென ஆசிக்கின்றேன்.



பேராசிரியர் அமுது யோசப் சந்திரகாந்தன்
ரொரன்ரோ பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா, அப்பா



மாமா, மாமி



தங்கை கௌரி - ராஜன் குடும்பம்



மைத்துனி ரேவதி - சீலன் குடும்பம்



தங்கை பவானி - தயா குடும்பம்





மைத்துனர் குகதாஸ் - கோசலா குடும்பம்



தம்பி ரூபன் - தீபா குடும்பம்



மைத்துனி பிரேமா - சதா குடும்பம்



மைத்துனர் நந்தன் - யோகா குடும்பம்



மைத்துனி விமலா - சிவா குடும்பம்



மைத்துனி சாந்தி - சந்துரு குடும்பம்



[illegible] குடும்பம்



மைத்துனி விஜயா - குமார் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fine Print 416-264-1557